
# அல்ஹஸனாத்


الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்:27 இதழ்:2 பெப்ரவரி 2001 (துல்க:. தா–துல்ஹஜ் 1421)

S.A. Ilyas
125, 5/6 Common Rd
A. patta-05









20/- இஸ்லாமிய இலட்சியக் குரல் ALHASANATH ISLAMIC MONTHLY

Registered at Tertiary and Vocational Education Commission
Affiliated with University of Management & Technology - Pakistan
Accredited by Council for Information Technology (CINTEC)

National Diploma in Applied Computing

# கம்பியூட்டர் டிப்ளோமா பயிற்சி நெறி

காலம் : 30 நாட்கள்
கட்டணம் : 6500/=

அடுத்த பயிற்சிநெறி ஆரம்பமாகும் திகதி:
02-04-2001

- Introduction to Information Technology
- Operating System (Win98)
- Microsoft Word 2000
- Microsoft Excel 2000
- Microsoft PowerPoint 2000
- Microsoft Access 2000
- Introduction to Visual Basic
- Hardware Fundamentals and Internet & E-mail
- English for Information Technology

**Islamic Institute of Information Technology**
**Madampe - 61230**
**Tel : 032 - 47561 Fax : 032 - 47134 E-mail : islah@slt.lk**

**தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான பாலர் வகுப்பு முதல் ஆண்டு 13 வரையான பாடப் புத்தகங்கள் மற்றும் பள்ளிக்கூட உபகரணங்கள்**

பல்கலைக்கழக பாடங்களுக்கான உசாத்துணை நூல்கள்

யூனானி, சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி, மருத்துவ நூல்கள், மனோவியல், மனையியல், கம்பியூட்டர் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள்

அத்தர் வகைகள்

தொப்பி வகைகள்

கிறாஅத், தர்ஜுமா, கஸீதா, பிரபல உலமாக்களின் Bயான்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள்

இவை அனைத்தும் விசாலமான இடத்தில் பார்வைக்கும், கொள்வனவுக்கும் இலகுவான அமைப்பில் உள்ளன.

ஹிஸ்புல் இஸ்லாம் ட்ரஸ்ட்

**இஸ்லாமிக் Bுக் ஹவுஸ்**
77, வஜிரஞான மாவத்த, (தெமடகொட ரோட்) மருதானை, கொழும்பு 00900
தொலைபேசி : 684851, பெக்ஸ் : 686030

بسم الله الرحمن الرحيم

அருளாளன் அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்

"எவர்களுக்கு எதிராகப் போர் புரியப்படுகிறதோ அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. ஏனெனில் அவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறவர்கள். மேலும் திண்ணமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவிசெய்ய ஆற்றல் பெற்றவனாக இருக்கிறான். தங்களின் வீடுகளைவிட்டு அவர்கள் நியாயமின்றி வெளியேற்றப்பட்டார்கள். 'அல்லாஹ்தான் எங்கள் இறைவன்' என்று அவர்கள் கூறியதுதான் அவர்கள் செய்த குற்றம்."

(அல்ஹஜ் 39:40)

# அல்ஹஸனாத்

மலர் 27 இதழ் 02 பெப்ரவரி 2001
துல்க.்.தா-துல்ஹஜ் 1421

ISSN : 1391 - 460 X

**வெளியீடு:**
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
Sri Lanka Jama-ath-e-Islami
77, Dematagoda Road,
Colombo 09
Phone : 687091
Fax : 686030
email : islambks@slt.lk

## விலை விபரம்

**உள்நாடு**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூபா 20.00 |
| வருட சந்தா | : | ரூபா 250.00 |

**வெளிநாடு**

வருட சந்தா


| | | |
|---|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, சிங்கப்பூர், மலேஷியா | : | 10$ |
| மத்திய கிழக்கு நாடுகள் | : | 10$ |
| ஏனைய நாடுகள் | : | 10$ |

## உள்ளே உள்ளவை

அநீதி இழைக்கப்பட்டவர்கள் ஆயுதபாணிகளாகலாம்!
(அல்குர்ஆன் விளக்கம்) 03
ஷுஹதாக்கள் (அல்ஹதீஸ் விளக்கம்) 05
காஷ்மீர் போராட்டம்; சில நிஜங்கள் 07
த.்.வா களம்:
அன்றைய முஸ்லிமுக்கு இரண்டு பிறப்புகள் 09
குற்றச் செயல்களைத் தூண்டும் நுகர்வோரியலும்.. 11
கடமையான ஹஜ்ஜும் சுன்னத்தான ஹஜ்ஜுகளும் 13
முஸ்லிம்கள் விழித்தெழுவது எப்போது? 2 15
இலங்கை முஸ்லிம் சமுகம் 17
பதாவா முஆஸிரா 19
கவிதா பவனம் 26
ஹஜ்ஜின்போது ஏற்படும் தவறுகள் 31
இஸ்லாம் (உயர்தரம்) 33
புனிதப் பயணம் ஏற்படுத்திய மாற்றம் 35
இஸ்லாமிய ஷரீஆவில் விரிவும் நெகிழ்வும் -4 37
ஜம்இய்யா பக்கம் 40
சிறுவர் பூங்கா 42
தவறிழைக்கின்ற முன்னேற்றி (விஞ்ஞானம்) 44
முஸ்லிமின் அடிப்படைக் கடமை: 'ஷஹாதத்' 45
கேள்வி - பதில் 47
உலகச் செய்திகள் 48
ஹபாயா சஊதிக் கலாச்சாரமா? 29
இன்னும் பல....

## அந்நிஸா

வதந்தி ஒரு சமூக நோய் 21
வீடு தீப்பிடித்து எரியும் போது -2 23
ஸஹாபிப் பெண்மணிகள் வாழ்வினிலே
கன்ஸா பின்த் அம்ர் 25
ஆரோக்கிய சந்திப்பு: இரைப்பை அழற்சி 28
பதாவா அந்நிஸா 30




# மக்களின் சாட்சியம் எமக்கும்

குஜ்ராத்தில் அழிவு குறித்து நாட்டின் தலைவர் வாஜ்பாயி குறிப்பிடும் போது, 'மனிதர்களால் வரக்கூடிய அழிவுகளுக்கு முகம்கொடுக்க நாம் தயாராகவே இருக்கிறோம். ஆனால் இயற்கையின் சீற்றம், இன்னும் எமக்கொரு சவாலாகவே இருக்கிறது' என்றார். இறைவனுக்கு இணை கற்பித்து, அவனது அடியார்களைத் (காஷ்மீரில்) துன்புறுத்துபவனுக்கு அல்லாஹுத் தஆலா தண்டனைகளை வழங்கி நேர்வழிப்படுத்த முற்படுகிறான். ஆனால் மனிதனோ தன் பலஹீனத்தை விளங்க மறந்து, தன்னால் இறைவனையும் ஒரு நாளைக்கு வெல்ல முடியுமென இறுமாப்புப் பேசுகிறான். அது அவனை மேலும் இருளின்பால் இட்டுச் செல்வதாகவே இருக்கிறது. நம்ரூதுகளும் பிர்அவ்ன்களும் இவ்வாறுதான் பேசினார்கள்.

இந்த அறியாமை எனும் இருளிலிருந்து மக்களை வெளியேற்றி ஒளியின்பால் செலுத்த வந்த ரஸுலுல்லாஹ், தம் கடமையை மிக நேர்த்தியாகச் செய்து முடித்தார்கள். அதனைச் சாதிப்பதற்கு தம்மையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட முஹாஜிரீன்களும் அதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கிய அன்சாரிகளும் தத்தம் கடமைகளில் வெற்றி கண்டு சுவனவாதிகளானார்கள். ஆனால் இன்று அவர்களின் 'வாரிசுகள் நாம்' எனக் கூறிக் கொள்ளும் 'முஸ்லிம் உம்மத்'திடம் அந்த உயிரோட்டம் இல்லை. இதனால் இஸ்லாத்தின் தூது எவருக்கும் சென்றடைவதாக இல்லை; நிலைபெறுவதாயுமில்லை.

ரஸுலுல்லாஹ் தம் இறுதி ஹஜ்ஜின் போது ஆற்றிய உரையில் அன்றிருந்த முஸ்லிம் உம்மத்தை விளித்துக் கேட்டார்கள், 'நான் இறைவழிகாட்டலை பூரணமாக சமர்ப்பித்து விட்டேனா?' 'ஆம் அதற்கு நாங்கள் சாட்சி பகர்கிறோம்' என ஸஹாபிகள் ஏகோபித்த குரலில் கூறினார்கள். 'இறைவா இதற்கு நீயே சாட்சி' என வானை நோக்கி கையேந்தினார்கள் நபிகளார். பணி அத்தோடு நிறைவுபெற்றது.

அவர்கள் இப்பணியை எவ்வாறு நிறைவேற்றினார்கள்...?

இறைவசனங்களை, அல்குர்ஆனை, மக்களுக்கு முன் சமர்ப்பித்து விளக்கமளித்தார்கள். அதன் வழியில் தம் வாழ்வை அணுவளவும் பிசகின்றி அமைத்துக் காட்டினார்கள். அதே அடிச்சுவட்டில், தம்மைப் பூரணமாக அர்ப்பணிக்கக்கூடிய முஹாஜிர்களை உருவாக்கினார்கள். இறைவேதத்தை நிலைநாட்ட அவசியமான வளமான அன்சாரிகளையும் அவர்களது பூமியையும் தேடிப் பெற்றார்கள். பத்தே வருடங்களில் இறை ஆட்சியை இவ்வுலகில் நிலைநிறுத்தினார்கள். இதில் பூரண பங்கு கொண்ட ஸஹாபிப் பெருமக்கள் தயக்கமின்றித் தம் நபிக்குச் சான்றிதழை வழங்கினார்கள். இத்துடன் அப்பணி முடிந்து விட்டதா? இல்லை!

நபியவர்களைத் தொடர்ந்து தமக்களிக்கப்பட்ட அமானிதமான இறைஆட்சியை மெருகூட்டி வளர்த்தார்கள் நபிவழிவந்த ஸஹாபிகள். இதனை உலகின் எட்டுத் திக்குகளும் எடுத்துச் சென்றார்கள். அன்றிருந்த உலகின் மூன்றிலொரு பகுதி இறையாட்சிக்குட்பட்டது. இதன் மூலம் அந்த நல்லவர்களும் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்கள்.

நபியவர்களும் தோழர்களும், சாதிக்கக் கூடிய அத்தனையையும் அன்று சாதித்து விட்டுச் சென்றார்கள். அவர்கள் நிலைநிறுத்திய இறைஆட்சி முழு உலகுக்கும் வியாபிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அன்று இருக்கவில்லை. ஆனால் 1400 ஆண்டுகளுக்குப் பின் இன்று அதற்கான காலம் கனிந்துள்ளது. விஞ்ஞான அறிவு, தொழில்நுட்பம், விதம்விதமான கண்டுபிடிப்புக்கள், நாடுகளுக்கிடையிலான பிரயாண வசதிகள், உலகின் மூலைமுடுக்குகளில் இடம்பெறும் அனைத்தையும் ஒரே நொடியில அறிந்து கொள்ளக்கூடிய தொலைத் தொடர்பு சாதனங்கள், முழு உலகையும் கட்டியாளக கூடிய அறிவும் ஆற்றலும், அவசியமான உபகரணங்களும் என அனைத்தையுமே அல்லாஹ் தஆலா மனித குலத்துக்கு இன்று வழங்கியுள்ளான். அன்று நபியவர்களுக்கு வழங்கப்பட்ட இறைவேதம் இன்றும் தூய்மையாக இருப்பதோடு மக்களை வழிநடாத்தக்கூடிய வாழ்க்கைத் திட்டமாக -இறைவேதமாக- அது இறுதிவரை இருக்கும். எனினும், இங்கு இல்லாதிருப்பது ஒன்றுதான். அது- இறைஆட்சியை தூக்கி நிறுத்தக கூடிய உயிரோட்டமுள்ள ஒரு சமூகம். கொண்ட கொள்கையை மறந்துவிட்ட அந்த முஸ்லிம் சமூகத்திடம் இன்று விஞ்ஞான அறிவும் இல்லை; அதை கை நழுவவிட்டு இன்று அரை நூற்றாண்டு ஆகிறது. தொழில்நுட்ப அறிவு மருந்துக்குக் கூட அதனிடம் இல்லை. ஆட்சிசெய்யும கலையையும் அது மறந்துவிட்டது. அதனிடம எஞ்சியிருப்பது இறைவேதம் மட்டுமே. அதற்கும் கூடப் பல விளக்கங்களைக் கற்பித்து தமக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருக்கிறது அச்சமூகம். விரலசைப்பதற்கும் ஆதாரம் தேடிக் கொண்டிருக்கிறது. ஆன்மிகம் என்ற பெயரில் சூனியத்தைத் தேடியலைகிறது. இந்த சமூகத்தைப் பார்த்து நபியவர்கள் 'சருகுகள்' என்று எவ்வளவு அழகாக வர்ணித்துச் சென்றார்கள்.

இந்த சமூகம் இறைவனின் சான்றாளர்களாக மாறவேண்டுமானால் இறை சட்டத்தை ஆட்சிபீடத்தில் அமரச் செய்வதே தமக்கிடப்பட்டுள்ள கட்டளை என்பதை முதலில் அது புரிந்துகொள்ள வேண்டும். நபிகளாரின் வாரிசுகளான இஸ்லாமிய அறிஞர்கள் ஓரணிநின்று நபிகளாரின் இடத்தில் அமர வேண்டும். இஸ்லாம் ஆட்சிபீடம் ஏறும்வரை தம்மை முழுமையாக அர்ப்பணிக்கக் கூடியவர்களை அணிதிரட்டி, அவசியமான கல்வியை அளித்துப் பயிற்றுவிக்க வேண்டும். முழு முஸ்லிம் சமூகமும் அறப்போராளிகளினதும் அனுசரணையாளர்களினதும் அந்தஸ்த்தைப் பெறவேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆட்சிக்கலை அனைத்தும் எமதாக வேண்டும். இவற்றிற்கேற்ப சமூகத்தின் கல்வித்திட்டம் இடப்பட வேண்டும். முஸ்லிம்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்த காலை எழுதப்பட்ட நூல்களும் ஏற்படுத்தப்பட்ட கல்வித்திட்டங்களும் இன்று வீழ்ச்சிப் பாதையின் விளிம்பு வரை வந்துவிட்ட சமூகத்தைத் தூக்கி நிமிர்த்த உதவக் கூடியவையாக புனரமைக்கப்பட வேண்டும். சோம்பிக்கிடந்த சூபிகளால் 'தக்வா'வுக்கு அளிக்கப்பட்ட வரைவிலக்கணத்தை மாற்றி நவீன அறிவியலில் தடம்பதிப்பவர்களுக்கு அது வழங்கப்பட வேண்டும். கடும் உழைப்பாளிகள் சமூகத்தின் கண்ணெனப் போற்றப்பட வேண்டும் தீனை மேலோங்கச் செய்யும்பணி இவர்களைச் சென்றடைய வேண்டும். அதுவரை இச்சமூகத்திற்கு மனித குலத்திடமிருந்து சான்றிதழ் கிடைக்கப் போவதில்லை. 'இறைஆட்சியை இவ்வுலகில் மீண்டும் நிலைநிறுத்தப் போராடினார்கள்' என எந்த மனிதனாவது இன்றைய முஸ்லிமுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்குவானா? இந்தச் சிபாரிசுக் கடிதமின்றி நாளை இறைசந்நிதியில் எவ்வாறு முகம்கொடுக்கப் போகிறோம்? இறைவேதத்தை மறைத்ததனால் பாதிப்புக்குள்ளான மக்கள் இறைவனிடம் நீதி கேட்டு நிற்பார்களே! சிந்தியுங்கள். ■

"எவர்களுக்கு எதிராகப் போர் புரியப்படுகிறதோ அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. ஏனெனில் அவர்கள் கொடுமைப்படுத்தப் படுகிறவர்கள். மேலும் திண்ணமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்ய ஆற்றல் பெற்றவனாக இருக்கிறான். தங்களின் வீடுகளைவிட்டு அவர்கள் நியாயமின்றி வெளியேற்றப்பட்டார்கள். 'அல்லாஹ்தான் எங்கள் இறைவன்' என்று அவர்கள் கூறியதுதான் அவர்கள் செய்த குற்றம். அல்லாஹ் மக்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுத்துக் கொண்டிராவிடில் கிறிஸ்தவ ஆலயங்கள், யூத ஆலயங்கள் அல்லாஹ்வின் பெயர் அதிகளவில் கூறப்படும் மஸ்ஜிதுகள் ஆகியவை தகர்க்கப்பட்டிருக்கும். திண்ணமாக தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வல்லமை வாய்ந்தவனும் யாவற்றையும் மிகைத்தவனுமாவான்." (சூரா அல்ஹஜ் 39:40)

**அல்குர்ஆன் விளக்கம்**

மௌலவி
M.H.M. முனீர் (முஹம்மதி)

# அநீதி இழைக்கப்பட்டோர் ஆயுதபாணிகளாகலாம்!

ஸூரா அல்ஹஜ்ஜின 39,40ம் வசனங்களாகிய இவை ஆயுதப் போராட்டத்துக்கான அனுமதியையும் அதன் தேவைப்பாட்டையும் அதன் சீர்திருத்தம் பற்றியும் விபரிக்கிறது. ரஸூல் (ஸல்) அவர்களது அழைப்புக்கு விடையளித்த மக்கத்து முஸ்லிம்கள் பத்து வருடங்களுக்கு மேலாக ஆக்கிரமிப்பாளர்களின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தார்கள். தூற்றல், இழிந்துரைத்தல் என ஆரம்பித்து பொருளாதாரத்தடை, கொலை எனத் தொடர்ந்தது. இவை அனைத்தையும் அவர்கள் இறைதிருப் திக்காக சகித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வேளைதான் ஹிஜ்ரி முதலாம் வருடம் துல்ஹஜ் மாதம் ஆயுதப் போராட்டத்துக்கான அனுமதி அளிக்கப்பட்டது.

மனிதன் மீது மனிதன் ஆட்சிபுரிவதை ஒழித்து ஒரே இறைவனின் ஆட்சியை நிலைநிறுத்துவதே இஸ்லாத்தின் குறிக்கோள். அந்தக் குறிக்கோளை அடைவதற்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடுவதற்கும் முயற்சிப்ப தற்கும் பெயர்தான் இறைவழிப் போராட்டம். முழுமனித சமுதாயத்தை யும் வாழவைப்பதற்கான இப்போராட் டத்தை தீமையின் காவலர்கள், தீமைகளி லேயே இன்பம காணும் சமுகங்கள், தீமைகளை கட்டிக்காக்கும் தீய அரசுகள எதிரணி திரண்டு போர் புரியத் தயாராகி விடுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது என பொதுவாக 'ஜிஹாத்' பற்றிய எண்ணக்கருவை விளக்கப் படுத்துவோம்.

முஸ்லிம்கள் தமது வாழ்விடங்களில் தமது இருப்பை உறுதிப்படுத்தி, தனித் துவப் பேணுதல்களுடன் கலாச்சார அடையாளங்களைப் பாதுகாத்து வாழும் சூழலில் தமது பிரதேசங்கள் எதிரி களின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக் கப்படின் அப்போது மேற்கொள்ளப்படும் தற்காப்பு யுத்தம் பற்றிய எண்ணக் கருவை இவ்வல்குர்ஆன் வசனம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

அதிகமான அல்குர்ஆன் விரிவுரை யாளர்கள் நாம் விளக்கத்துக்கு எடுத்துக் கொண்ட ஸூரத்துல் ஹஜ்ஜின் 39,40ம் வசனத்தை முதலாவது ஜிஹாத் பற்றிய வசனம் எனக் குறிப்பிடும் அதேவேளை இப்னு ஜரீர் (ரஹ்) போன்ற சில விரிவுரையாளர்கள் அல்பகராவின் 190,191ம் வசனங்க ளைக் குறிப்பிடுகின்றனர்.

**"உங்களை எதிர்த்துப் போர் புரிபவருடன் நீங்களும் அல்லாஹ்வின பாதையில் போரிடுங்கள். ஆனால் வரம்புமீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்புமீறுவோரை நேசிப்ப தில்லை. அவர்கள் எங்கே காணக் கிடைப்பினும் வெட்டுங்கள். இன்னும் உங்களை அவர்கள் வெளியேற்றிய வாறே அவர்களையும் வெளியேற்றுங் கள். ஏனெனில் பித்னா (குழப்பம்) கொலையைவிட கொடியதாகும்..."**
**(அல்பகரா 190-191)**

இவ்விரண்டு ஸூராக்களின் ஜிஹாத் பற்றிய வசனங்களிலிருந்து இமாம் ஸெய்யித் மௌதூதி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு சட்டங்கள் கிடைக்கப் பெறுவதாக கூறுகிறார்:

1) முஸ்லிம்கள், தமக்கு எதிராக எதிரிகளால் அநியாயம் கட்டவிழ்த்து விடப்படும்போது தம்மை தற்காத்துக் கொள்வதற்காக யுத்தம் செய்யலாம்.

2) தமது வீடுவாசல்களிலிருந்து வெளி யேற்றப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப் படும்போது உரிமைகளை வென்றெடுப் பதற்காக யுத்தம் புரிய வேண்டும்.

3) தமது அகீதாவுக்கு (நம்பிக்கை கோட் பாடுகள்) எதிராக கடும்போக்குகள் கையாளப்படுகிறதோ அப்போதும், முஸ்லிம்கள் என்ற காரணத்தால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார் களோ அப்போதும் தமக்காகவும் தமது மத சுதந்திரத்திற்காகவும் யுத்தம் செய்ய அனுமதியுண்டு.

4) எதிரிகள் முஸ்லிம்களின் பூர்வீக பூமியை ஆக்கிரமித்து அங்கிருந்து முஸ்லிம்களை வெளியேற்றும்போது அல்லது முஸ்லிம்களது பலத்தை நிர்மூலமாக்கும்போது முஸ்லிம்கள் தமது பலத்தைப் பயன்படுத்தி, தம்மை எங்கிருந்தெல்லாம் வெளியேற்றினார்களோ அங்கிருந்தெல்லாம் அவர்களை வெளியேற்ற வேண்டும்.

வசனத்தின் அடுத்த பகுதி இறை வழியில் ஆயுதப் போராட்டம் செய்வதன் விளைவைக் கூறுகிறது. தீமைகள் அதிகரிக்கும் போது, அதன் அச்சாணியாகிய தீயஅரசு நிலைத்திருக்கும் போது பூமியில் அநியாயமும் அக்கிரமும் அதிகரித்துவிடும். அரச நிறுவன இயந்திரங்கள் முதல் வியாபார ஸ்தாபனங்கள் வரை அநியாயம் அதிகரித்து மத வழிபாட்டுத் தலங்களையும் பாழ்படுத்தி விடும். ஒரு சமூகத்தின் பூரண அமைதியும், பாதுகாப்பும் நிறைந்த இடங்கள் தான் வழிப்பாட்டுத்தலங்கள். அநியாயத்தின் உச்சநிலையையே இத்தொடர் குறித்துக் காட்டுகிறது. இறைவழிப் போராட்டத்தின் விளைவாக பூமியில் அமைதி தோன்றுகிறது.

**“அல்லாஹ் மக்களில் சிலரைக் கொண்டு சிலரைத் தடுக்காவிட்டால் மத ஆலயங்கள் தகர்க்கப்பட்டிருக்கும்”**

இங்கு முஸ்லிம்களின் பள்ளிவாயல்கள் மாத்திரம் கூறப்படவில்லை. மாறாக, கிறிஸ்தவ, யூத, மஜூஸிய, ஸப்ஈக்களின் துறவு மடங்களும், வணக்கஸ்தலங்களும் கூறப்படுகிறது. எனவே, இதிலிருந்து பாதுகாப்பை வழங்க யுத்தம் புரிதல் ஒரு நீதமான ஏற்பாடாகும். அநியாயத்தில் மிகவும் வெறுக்கத்தக்க தோற்றம்தான் ஒரு சமூகத்தின்மீது கொண்ட பகைமை உணர்வை அவர்களது மதவழிபாட்டுத் தலங்கள்மீது காட்டுவதாகும். இப்படியான ஒரு நிலை தோன்றி விட்டால் இன்னோர் சமூகத்தின் ஊடாக இவற்றை முடிவுக்குக் கொண்டு வருதல் தவிர்க்க முடியாததாக ஆகிவிடும். ஸூரதுல் பகறாவின் 251வது வசனமும் அல்மாயிதாவின் 64வது வசனமும் மேலும் இதனை வலுப்படுத்துகின்றன.

**“அல்லாஹ் மக்களில் (நன்மை செய்யும்) ஒரு கூட்டத்தினரைக் கொண்டு (தீமை செய்யும்) மற்றொரு கூட்டத்தினரைத் தடுக்காவிட்டால் (உலகம் சீர்கெட்டிருக்கும்.) ஆயினும் அல்லாஹ் உலகத்தார் மீது பெருங்கருணையுடையவனாக இருக்கிறான்.” (அல்பகரா :251)**

**“இவர்கள் யுத்த நெருப்பை மூட்டும் போதெல்லாம் அதனை அல்லாஹ் அணைத்து வருகிறான். (ஆயினும்) அவர்கள் பூமியில் குழப்பம் செய்து கொண்டே வருகின்றனர். அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிக்க மாட்டான்.” (அல்மாயிதா :64)**

**“மேலும் திண்ணமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்ய ஆற்றல் பெற்றவனாக இருக்கிறான்.”** என்ற தொடர் முஸ்லிம்கள் கொண்டிருக்க வேண்டிய ஓர் அடிப்படைக் கருத்தைக் கூறுகிறது. அதாவது, அல்லாஹ் மனிதர்களது பௌதீகத் தேவைகளை நிறைவுசெய்து வைப்பது போல் அவர்களது கடமைகளை நிறைவு செய்து வைப்பதில்லை.

ஒரு விடயம் உலகத்தில் நடைபெற வேண்டுமென்றால் மனிதர்கள் எதனையெல்லாம் செய்ய வேண்டுமோ அவை அனைத்து முயற்சிகளையும் செய்தாக வேண்டும் என்பதாகும். முஸ்லிம்கள் தமது உயிர்களை தத்தம் செய்து போராடாமலேயே அவர்களுக்கு உதவி செய்யும் பேராற்றல் உடையவன்தான் அல்லாஹ். ஆனால் மனிதர்கள் முயற்சிக்க வேண்டும் என்பதே அவனது எதிர்பார்ப்பாகும். அதுபோல இந்தப் புனிதமான இபாதத்தின் ஊடாக உண்மையாளர்களையும் பொய்யர்களையும் அல்லாஹ் தேர்வு செய்கிறான்.

**“திண்ணமாக தனக்கு உதவி செய்வோருக்கு அல்லாஹ் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வல்லமை வாய்ந்தவனும் யாவற்றையும் மிகைத்தவனுமாவான்.”**

என வசனம் முடிவுறுகிறது. இது இறைவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒரு முஸ்லிம் உள்ளத்தில் ஆழமாக பதித்திருக்க வேண்டிய கருத்தாகும்.

“அல்லாஹ்வின் உதவி” என்பதை அறிஞர் அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

‘அல்லாஹ்வுடைய தீனுக்காகவும், தீனின் அடையாளங்களை பாதுகாப்பதற்காகவும் போராடுகிறவர்கள் அல்லாஹ்வுக்கே உதவுகிறார்கள். எனவே அவன் தனது அடியார்களுக்கு உதவுவது கடமையாகி விடுகிறது. அதுபோல் யார் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுகிறார்களோ அவர்களை அவன் எப்போதும் மிகைக்கச் செய்து விடுவான்.’

முடிவாக, முஸ்லிம்கள் எப்போதும் போராட்ட உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் மனிதர்களுக்கு அடிமைகளாக இருக்கவோ அல்லது மனிதர்களை அடிமைப்படுத்தவோ வந்தவர்கள் அல்ல; மனிதனையும், மனித சமுதாயத்தையும் வாழவைக்க வந்தவர்கள் என்ற கௌரவ உணர்வோடு எப்போதும் இருக்க வேண்டும். அகதி வாழ்க்கை நமக்கு தகுமானதல்ல. சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் இழந்தவற்றை மீட்டெடுக்க வேண்டும். அது ஒரு மார்க்கக் கடமை. இப்போராட்ட வழியில் இறைவன் எப்போதும் துணைநிற்பான். அவன் யாவரையும் மிகைத்தோனும், ஞானமுடையோனும் ஆவான்.

**மூலங்கள்**


1. அழ்வாவுல் பயான்
2. தப்ஹீமுல் குர்ஆன்
3. ததப்புருல் குர்ஆன்
4. ஜிஹாத் பில் இஸ்லாம்


**தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா போட்டிப் பரீட்சைகள்**

திட்டமிட்டபடி தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 24ம் திகதி சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்ட, பாடசாலை மற்றும் மதரஸா மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டு விட்டன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக (01-687091) என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்:

**பணிப்பாளர்**
தஃவதுல் குர்ஆன் வஸ்ஸுன்னா பகுதி

## அல்ஹதீஸ் விளக்கம்

அஷ்ஷெய்க்
H.M. மின்ஹாஜ் இஸ்லாஹி

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

“சுவர்க்கத்தில் நுழைகின்ற ஒருவருக்கு பூமியில் சிறிதளவு அருள் வளங்கள் கிடைப்பதாக இருந்தாலும் உலகுக்கு திரும்பி வருவதற்கு விரும்பமாட்டார்; ஷஹீதைத் தவிர. (ஏனெனில்,) ஷஹீத் தனக்குரிய கண்ணியத்தை காண்பதன் காரணமாக உலகுக்குத் திரும்பி வந்து பலமுறை தான் கொல்லப்பட வேண்டும் என்று விரும்புவார்.”

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

# ஷுஹதாக்கள்

சுவனத்தில் தடம்பதித்த இருவேறு மனிதர்களின் மனோநிலை இந்த ஹதீஸில விளக்கப்படுகிறது. சுவனத்திற்காகவே வாழ்ந்து மறைந்த ஒரு நல்லடியான் தனது தாயகமாகிய சுவனத்தை அடைந்தவுடன் மீண்டும் ஒருமுறை உலகிற்குத் திரும்பி வருவதற்கு விரும்புவதில்லை. ஆனால், ஒரு வீரத்தியாகியின் மனோநிலை சற்று வித்தியாசமாக அமைகிறது. அவர் அனுபவித்த இன்பங்கள், ஷஹாதத் என்ற உயர் விருதை பலமுறை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையை அவரது மனதில் தோற்றுவிக்கிறது.

சுவனம் ஒவ்வொரு முஸ்லிமினதும் இறுதி இலக்காகும். அந்த இறுதி இலக்கை அடைந்து கொள்வதற்கான மிகவும் சுலபமான வழி ஷஹாதத்தாகும். இது குறித்து நபி (ﷺ) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“நன்றாக அறிந்துகொள்ளுங்கள்! சுவனம் வாளின் நிழலின்கீழ் இருக்கிறது”

(புகாரி, முஸ்லிம்)

சுவனம் என்னும் தாயகத்தில் இடம் பிடித்த வீரத்தியாகி தனக்காக அல்லாஹ் ஏலவே தயார்படுத்தி வைத்திருந்த பேறுகளையும், இன்பங்களையும், கண்ணியத்தையும், மரியாதையையும் காணுகின்ற வேளை மீண்டும் பலமுறை ஷஹாதத்தை ஆரத்தழுவ வேண்டும் என்ற பேரவா அவனுக்குள் தோன்றுகிறது. ஆனால், இன்னுமொருவர் உலக வாழ்வில் நீண்ட தூர பயணத்தின் முடிவாக சுவனத்தை அடைகிறார். ஷஹாதத் என்னும் அருளைப் பெற்றுக் கொள்ளாத மனிதர் அவர், தான் நடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்க்கிறார். அதிலே தனது ஈமானையும், இறையச்சத்தையும், கொள்கையையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர் பிரயோகித்த முயற்சிகள், செய்த தியாகங்கள், அனுபவித்த கஷ்டங்கள், சிரமங்கள் அனைத்தையும் தனது மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தி ஏக்கப் பெருமூச்சுடன் ஒரு முறை நினைத்துப் பார்க்கிறார். அப்போது அவர் தனது மனதில் இனி ஒருமுறை சுவனத தேடலுக்காகக் கால்பதிப்பது ஊசிக் காதில் ஒட்டகம் நுழையும் வரை நடந்தேறா காரியம் என்று முடிவுக்கு வந்து உலக இன்பங்கள் கிடைப்பதாக இருந்தாலும் உலகை நோக்கி வருவதை வெறுக்கிறார்.

ஆனால் ஷஹீதின் மனோநிலை வித்தியாசமானது. அவர் ஷஹாதத் எனும் இலகு வழியில் சுவனம் வந்தவர். அவரது வழியில் வெளிப்பார்வைக்கு சிரமங்கள் அதிகமாகக் காணப்பட்டாலும் அவரைப் பொறுத்தமட்டில அருட்பாக்கியங்கள் நிரம்பியிருந்தன. உயிராலும், சொத்து செல்வத்தாலும் அல்லாஹ்வின் பாதையில் போராடுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டபோது முழு ஆர்வத்துடன் களம் குதித்துப் போராடி உயிர்நீத்தார். களத்தில் அவர் உயிர்விடும் போது அவர் சந்திக்க இருக்கும் வேதனை பன்மடங்காக இருக்கும் என்று எண்ணினாலும் கூட யதார்த்தத்தில் அவர் அனுபவித்த சிறு வேதனையை நினைத்துப் பார்த்து மென்மேலும் ஷஹாதத்தைப் பெறவேண்டும் என்ற ஆவல் பிறக்கிறது. நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**“உங்களில் ஒருவருக்கு எறும்பு கடித்தால் அவர் உணருகின்ற வேதனையைப் போலவே ஒரு ஷஹீத் கொலை செய்யப்படுகின்ற போது வேதனையை உணருகிறார்.” (திர்மிதி)**

அல்லாஹ்வின் பாதையில் போராடி உயிரிழந்த ஷஹீத் தனது முதல் சொட்டு இரத்தத்துடன் பாவங்கள் மன்னிக்கப்படுவது கண்டு இன்புறுகிறார். நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**“ஷஹீதின் கடனைத் தவிர அனைத்துப் பாவங்களையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான்” (முஸ்லிம்)**

ஒரு முஸ்லிம் பாவங்களை விட்டும் தூய்மையான நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்கிறானென்றால் அதனை விட பெரிய அதிஷ்டம் வேறொன்றும் இல்லை. ஷஹீத் தனது உயிர் பிரிந்த உடனேயே இந்தப் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்கிறார். ஷஹாதத் எனும் பேறு கிடைக்கப் பெறாதவர்கள் தமது நீண்ட ஆயுளில் தங்களால் விளைகின்ற பாவங்களுக்கான மன்னிப்பு இறைவனிடமிருந்து கிடைத்து விட வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்புடனும், ஏக்கப் பெருமூச்சுடனும் வாழ்வை கழிக்க நேரிடுகிறது.

ஷஹீதுக்கான சுவனப் பேற்றை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஏனெனில், எந்தவொரு கண்ணும் பார்த்திராத, எந்தவொரு காதும் கேட்டிராத, எந்தவொரு மனித உள்ளத்திலும் உதித்திராத சுவனத்தையல்லவா அல்லாஹ் படைத்திருக்கிறான்! அதில் ஷுஹதாக்களுக்குரிய இன்பம் அலாதியானது. நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**“இன்றிரவு நான் (கனவிலே) இருவர் என்னிடம் வந்ததைக் கண்டேன். அவ்விருவரும் என்னை ஒரு மரத்தில் ஏற்றினர். பின்னர் ஒரு இல்லத்தில் என்னை நுழைவித்தனர். அது மிகவும் சிறந்த அழகானதொரு இல்லமாகும். அதனைவிட அழகானதொரு இல்லத்தை நான் ஒருபோதும் கண்டதில்லை. அவ்விருவரும் என்னை நோக்கி, ‘இந்த இல்லம் ஷுஹதாக்களின் இல்லம்’ என்றனர்.” (புகாரி)**

ஷுஹதாக்கள் வேறு மனிதர்களை விட்டும் வித்தியாசமாக நோக்கப்படல் வேண்டும். ஏனென்றால் அல்லாஹ்

அவர்களுக்கு கொடுத்த மிகவும் பெறுமதி வாய்ந்த உயிரை அவனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்-கொடுக்க முன்வந்தனர். உலகில் மனிதர்கள் முழுக்கவனம் செலுத்தி பேணிப் பாதுகாத்திட விழைகின்ற ஒரு பொருள்தான் உயிர். அந்த உயிருக்கு ஈடாக எதுவுமே இல்லை. அது இழக்கப்படும் போது மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது. உயிரோடு வாழ்ந்தபோது உருவாக்கப்பட்ட ஒரு மனிதனின் மனக்கோட்டைகள் உயிர் பிரியும்போது சரிந்து விழுந்து விடுகின்றன; அவனது ஆசைகள், அபிலாஷைகள் எதிர்பார்ப்புகள், உடலியல் இன்பங்கள் எல்லாம் அழிந்துவிடுகின்றன.

அப்படியானால், ஒரு வாலிபன் தனது உயிரை இறைபாதையில் இழக்க முன்வருகிறானென்றால் அவனின் தியாகம் எத்துணை பெரியது?! வசந்தம் கொழிக்கும் வாலிபத்தை, உச்சநிலையில் இருக்கும் வேட்கைகளை உடலியல் இன்பங்களை, தனது எதிர்கால எதிர்பார்ப்புகளை, தனது பெற்றோரின் கனவுகளையெல்லாம் பொருட்படுத்தாது களம் குதித்து உயிர் நீத்தான். அவன்தான் மிகப் பெரிய தியாகி! அவன் மரணித்தாலும் உண்மையில் உயிர்வாழுகிறான். அவனால் இஸ்லாமும், முஸ்லிம்களும் உயிர்வாழுகின்றனர். மஸ்ரூக் (ரஹ்) அறிவிக்கிறார்கள்:

''நாங்கள் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களிடத்தில், **"அல்லாஹ்வின் பாதையில் கொலை செய்யப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று கருதாதீர்கள். மாறாக அவர்கள் உயிருடன் இருக்கின்றனர். அவர்களின் இறைவனிடத்தில் அவர்களுக்கு ரிஸ்க் வழங்கப்படுகிறது'' (ஸூரா ஆல இம்ரான்: 169)** என்ற திருமறை வசனம் பற்றி வினவினோம். அதற்கவர்கள், 'நாங்களும் அண்ணலாரிடம் இது குறித்து வினவினோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் **''அவர்களது உயிர்கள் (ஷுஹதாக்களின் உயிர்கள்) பச்சைப் பறவைகளின் வயிற்றில் இருக்கும். அந்த உயிர்களுக்காக அர்ஷுடன் கொழுவப்பட்டிருக்கும் மாடங்களும் உண்டு. அந்தப் பறவைகள் சுவனத்தில் தாம் விரும்பிய இடங்களுக்கெல்லாம் பறந்து திரிந்து விட்டு அந்த மாடங்களில் வந்து புகுந்து கொள்கின்றன. அப்போது ஷுஹதாக்களின் இறைவன் அவர்களுக்கு காட்சி தந்து, 'நீங்கள் எதை விரும்புகிறீர்கள்?' என்று கேட்பான். 'நாங்கள் எதை விரும்புவது? நாங்கள் சுவனத்தில் விரும்பிய இடமெல்லாம் பறந்து சுற்றித் திரிகிறோமே! (இதை விட பெரிய அருள் எது இருக்க முடியும்)' என்று கூறுவர். ஆனாலும் அல்லாஹ் அவர்களிடம் மூன்று முறை இவ்வாறு கேட்பான். அல்லாஹ்விடம் எதையாவது தாங்கள் கேட்காது விட்டு விடப்படமாட்டோம் என அவர்கள் கருதிய பொழுது '(எங்களது) இறைவனே! நாங்கள் மீண்டும் ஒருமுறை உனது பாதையில் கொலைசெய்யப்படும் அளவுக்கு எமது உயிர்களை நீ எமது உடல்களுக்குள் மீள அனுப்ப வேண்டும்' என்பர். அப்போது வேறு தேவைகள் அவர்களுக்கு இல்லை என்று அல்லாஹ் கருதிய பொழுது அவர்கள் (சுவனத்திலேயே) விட்டு விடப்படுவார்கள்''** எனக் கூறினார்கள். **(முஸ்லிம்)**

இறைபாதையில் போரிட்டவர் இஸ்லாத்தை வாழவைத்தவர்; 'அவர் வாழாது பிறரை வாழவைத்தவர். அவர் வன்முறையாளருமல்ல; பயங்கரவாதியும் அல்ல. மாறாக ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களின விடிவுக்காக ஆயுதம் தரித்து களம் நோக்கி விரைந்தவர்; மதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த தனது சுதந்திரத்தை விட்டுக் கொடுத்தவர்; இஸ்லாமியப் பிரச்சாரத்தின் தடைக் கற்களை அகற்றிவிடுவதற்காக தடைதாண்டி களம் புகுந்தவர்; சிவந்து போன பூமியை தனது குருதிச் சொட்டுக்களால் சுத்திகரித்து சமாதான பூமியாய் மாற்றிவிட விழைந்தவர். மண், பெண், பொன் எனும் பேராசைகளால் ஆட்கொள்ளப்பட்டு, கீழ்த்தரமான உணர்வுகளுக்கு அடிமையாகி உலக வாழ்வை தங்களது இறுதி இலட்சியமாக மாற்றிக் கொண்ட இளவல்களுக்கு மத்தியில், ஷஹீத், சுவன மண்ணில் தடம் பதிக்கும் நோக்குடன் சுவனப் பெண்ணாகிய ஹுருல் ஈனை காதலித்து, சுவன பொற்கடகங்களை ஆசித்து ஜிஹாதிய நிலம் நோக்கிப் புறப்பட்டவர். எனவேதான் நபி (ஸல்) அவர்கள் ஷுஹதாக்கள் பற்றி இவ்வாறு கூறினார்கள்:

**"எழுபத்து இரண்டு ஹுருல் ஈன் மனைவிமார் ஷஹீதுக்கு மணம் முடித்து வைக்கப்படும்'' (அஹ்மத்)**

ஷஹீத் உலகை நோக்கி வருவதற்கு விரும்புவது உலக இன்பங்களை சுவைப்பதற்காக அல்ல. ஏனெனில், உலக இன்பங்களை சுவைக்க விரும்புகிறவன் உயிரைக் கொடுக்க முன்வரமாட்டான். ஷஹீத், ஷஹாதத்தின் பேறுகளைக் கண்டு கொண்டதன் காரணமாக மீண்டும் மீண்டும் தான் கொலைசெய்யப்பட வேண்டும் என்று நினைக்கிறான். எனவே உலகின் போராட்டக் களம் நோக்கி வருகை தர விரும்புகிறான். அவனது அறப்பணி உலகோடு முடிவடைந்து விடுவதில்லை. மறு உலகிலும் கூட தனது நெருங்கிய உறவினர்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்கிறான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**''(ஷஹீத்) தனது நெருங்கிய உறவினர்கள் எழுபது பேருக்காக பரிந்துரைப்பார்.'' (திர்மிதி)**

ஆகவே, உலகில் வாழும் முஸ்லிம்களில் மிகவும் சிறந்து, போற்றத்தக்க குழுவினராக வீரத் தியாகிகள் கருதப்படுகின்றனர். ஆயுதம் தரித்துப் போராடி அவர்கள் உயிர்விடலாம்; அல்லது நெஞ்சில் குண்டு தரித்து எதிரியின் முன் பாய்ந்து உயிர் விடலாம். உயிர் எவ்வடிவத்தில் இழக்கப்பட்டாலும் அவரது உள்ளத்தில் நன்னோக்கமும், இஹ்லாஸும குடிகொண்டிருந்தால் அவர்கள் உண்மையான ஷஹீதுகளாகும். ஷுஹதாக்களாலேயே இன்று இஸ்லாத்திற்கொரு மதிப்பச்சம் உருவாகியுள்ளது. அத்தகைய ஷுஹதாக்களின் சுவனத் தேடல்தான் எமது மனப்பதிவாக அமையுமென்றால் நாமும் அவர்களின் அந்தஸ்த்தில் இன்ஷா அல்லாஹ் மறுமையில் இருக்க முடியும். இன்றேல் நயவஞ்சகத்தனத்தின் ஒரு பகுதியோடு மரணித்தவர்களாக நாம் ஆகிவிடுவோம். (நஊதுபில்லாஹி மின்ஹா)

**துணை நின்றவை:**

பத்ஹுல் பாரி
ஷர்ஹு ஸஹீஹ் முஸ்லிம்
இபருன் வபஸாஇருன் லில் ஜிஹாத்
ஷஹீத் அப்துல்லாஹ் அஸ்ஸாம்

**"இஸ்லாம் என்பது ஒரு மரம். அது இரத்தத்தினாலன்றி வளராது என்பதை அல்ஜிஹாத் எனக்குக் கற்றுத் தந்தது"**

**-ஷஹீத் அப்துல்லாஹ் அஸ்ஸாம்-**

அட்டைப்படக் கட்டுரை

# காஷ்மீர் போராட்டம்: சில நிஜங்கள்

ஏ.அஸ்மின்

**பெப்ரவரி 5ம் திகதி காஷ்மீர் ஒருமைப்பாட்டு தினமாகும். காஷ்மீரின் போராட்டத்தை நினைவுகூரு முகமாக சர்வதேச ரீதியில் கருத்தரங்குகள், ஊர்வலங்கள், கண்காட்சிகள் இத்தினத்தில் நடாத்தப்படுகின்றன. காஷ்மீரின் போராட்ட வரலாற்றை சுருக்கமாக அல்ஹஸனாத் தருகிறது.**

காஷ்மீர்- பூலோக சுவனம் என வர்ணிக்கப்படுகின்ற உன்னத பூமி. முஸ்லிம்களாலும். இஸ்லாத்தினாலும் மேலும் வனப்புப் பெற்றிருந்த அந்த அமைதிப்பூமி இன்று வன்முறைகளுக்குள் சிக்கி சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருப்பதையும் முஸ்லிமகள் தமக்கென சுயநிர்ணயப் போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. முஸ்லிம்களின் தாயக மீட்புப் போராட்டம் பற்றியும் காஷ்மீரின் வரலாற்றுப் பின்னணி பற்றியும் சற்று நோக்குவோம்.

இயற்கை வனப்பு மிகுந்த பிரதேசமாக இது விளங்குவது இதன் இன்னொரு சிறப்பம்சமாகும். உலகின் பல்வேறு நாட்டு மக்களின் கவனத்தையும் இது ஈர்த்துக் கொண்டுள்ளது. ஓர் உருதுக் கவிஞர் காஷ்மீரின் இயற்கை எழிலை தன் கவி வரிகளில் இவ்வாறு வர்ணிக்கிறார்.

**அந்த மலைமுகடுகள்**
**குளிர் தாங்காமல்**
**பச்சைக் கம்பளத்தை**
**எடுத்துப் போர்த்திக் கொண்டனவோ!**
**என்ன அது மஞ்சள் நிறத்தில்..?**
**ஓ! நேற்றிரவு எறித்த நிலவில்**
**தவறி விழுந்த தூள்களோ!**

இத்தனை வனப்புமிக்க பூமிதான் காஷ்மீர். இதன் வரலாற்றுப் பக்கங்களை நோக்குகையில் 9ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் பௌத்தம். இந்து மதங்களின் செல்வாக்கை இங்கு காணமுடிகிறது. எனினும் 1220 ம் ஆண்டு காஷ்மீரை ஆட்சி செய்த மன்னன் 'ரின்ஜன்ஸாபி' இஸ்லாத்தை தழுவிக் கொண்டார். தனது பெயரை 'ஸத்ருத்தீன்' என மாற்றிக் கொண்டதுடன் தனது நாட்டு மக்களையும் இஸ்லாத்தின் பால் வழிநடாத்தத் தொடங்கினார்.



சொந்த மண்ணில்
சோதனைக்குள்ளாக்கப்படும் காஷ்மீரி

இந்திய ரூபாய்க்கு விற்கப்பட்டது. 'தோக்ரா'வின் ஆட்சியாளனாக ராஜா குலாப்சிங் 1846-03-16 ம் திகதியன்று ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டான் பிரித்தானியர்களால் ஆப்கானிஸ்தான் காஷ்மீரிலிருந்து பிரிக்கப்பட்டமை இவ் அடக்குமுறைகளுக்கு மேலும் வாய்ப்பாக அமைந்து விட்டது.

இதன் எல்லைப் பிரதேசங்களாக சீனாவின் சின்காங் பிரதேசம், திபெத். இந்தியா. பாகிஸ்தான். ஆப்கானிஸ்தான் என்பன அமைந்துள்ளன. இதன் மொத்தப் பரப்பளவு 222.798 சதுர கிலோ மீட்டர். மொத்த சனத்தொகை 15 மில்லியன். இதில் 85% மானோர் முஸ்லிம்கள். உலகின் மிகஉயரமான மலைத்தொடரின் அண்மையில் இப்பிரதேசம் அமைந்திருப்பதால் நால்வகைக் காலநிலையையும் அனுபவிக்கத்தக்க வாய்ப்பு உண்டு. உலகின் இரண்டாவது உயரமான மலைத தொடராகிய K2 'காடிவின் அஸ்டின்' (11811m) இங்குதான் அமைந்துள்ளது. அத்தோடு உலகின் 7வது உயரமான மலைத்தொடரான 'ருங்கா பிராபட்' (8126m) மலைத்தொடரும் இங்குதான் அமைந்திருக்கின்றது. மிகவளமான பூமியாக இது காணப்படுகின்றமையால் விவசாய உற்பத்திகள். மரத்தளபாட உற்பத்த் என பல்வேறு துறைகள் இங்கு விருத்தியடைநது காணப்படுகின்றன.

கி.பி. 1552 வரை காஷ்மீர் மக்களின் பிரதிநிதிகளே ஆட்சிக்கூடத்தை அலங்கரித்தனர். எனினும் இந்தியத் துணைக் கண்டத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை நிறுவிய முகலாயர்களின் ஆட்சி 1552ல் இங்கு ஏற்பட்டது. அந்தக் காலங்களில் காஷ்மீரின் எல்லைப் பரப்பானது இன்றைய ஆப்கானிஸ்தானையும் உள்ளடக்கியதாகவே இருந்தது. 18ம் நூற்றாண்டுடன் முகலாயப் பேரரசு வீழ்ச்சி அடைய ஆரம்பிக்கின்ற வேளைகளில் 1819ம் ஆண்டு சீக்கியர்கள் காஷ்மீரை ஆக்கிரமிக்க எத்தனித்தனர். இந்த ஆண்டில்தான் காஷ்மீரில் இஸ்லாமிய ஆட்சியும் முற்றுப் பெறுகிறது. 1846ல் ஆங்கிலேயர் இந்தியத் துணைக்கண்டத்தை ஆக்கிரமித்த வேளையில் காஷ்மீரின் ஆட்சியாளர்களையும் துரத்தியடித்து அந்த பூமியையும் தம்வசப் படுத்தினர். இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர் 'அமிர்த்தார்' உடன்படிக்கையின் மூலம் 'தோக்ரா' (DOGRA) என்னும் நிலச்சுவாந்தர்களுக்கு 7 1/2 மில்லியன்

முஸ்லிம்களின் பொருளாதார. மத. கலாச்சார. வாழிட உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகளாக அவர்கள் வழிநடாத்தப்பட்டனர்.

இவ்வாறு பல்வேறு விதத்திலும் ஒடுக்கப்பட்ட முஸ்லிம்கள் அப்துல் காதர், ஷெய்க் அப்துல்லாஹ். குலாம் அப்பாஸ் ஆகியோரின் தலைமையில் 1929ம் ஆண்டு தமது அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தில் குதித்தனர். 1931 ஜுலை 13ல் இஸ்லாமியப் பிரச்சாரகர்களையும் தலைவர்களையும் 'தோக்ரா' பொலிசார் கைதுசெய்தனர். அத்தோடு 27 முஸ்லிம்களையும் சுட்டுக்கொன்றனர். இத்தோடு அடக்குமுறைக்கெதிரான போராட்டம் மேலும் பன்மடங்கு அதிகரித்தது. 1933ல் ஸ்ரீநகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காஷ்மீர் முஸ்லிம்களின் மாநாட்டுடன் காஷ்மீரின் பல பாகங்களிலுமிருந்தும் எழுச்சியலைகள் எழத் தொடங்கின. இதனைக் கண்டு

| விபரம் | இழப்புகள் தொகை |
|---|---|
| ஆண், பெண் உள்பட ஷுஹதாக்கள் | 65,000 |
| காயமடைந்தோர் | 54335 |
| உயிருடன் எரிக்கப்பட்டோர் | 1000 |
| உயிருடன் எரிக்கப்பட்ட மாணவர்கள் | 455 |
| அகதிகளானோர் | 50,000 |
| சிறையிலிடப்பட்டோர் (ராஜஸ்தான்) | 48551 |
| சிறையிலிடப்பட்டோர் (காஷ்மீர்) | 53545 |
| வீடுகளோடு உயிருடன் எரிக்கப்பட்டோர் | 673 |
| அகதிகளாக்கப்பட்டோர் | 50,000 |
| பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்கள் | 7339 |
| கொல்லப்பட்ட கர்ப்பிணிகள் | 371 |
| இறந்த சிறுவர்கள் | 345 |
| எரிக்கப்பட்ட வைத்தியசாலைகள், பாடசாலைகள் | 1335 |
| எரிக்கப்பட்ட வீடுகள் | 22125 |
| எரிக்கப்பட்ட தோட்டங்களின் பெறுமதி | 1115m/ Dollar |
| தானியங்கள் | 1215m/Dollar |



இந்தியச் சிப்பாயால் துன்புறுத்தப்படும் காஷ்மீர் சிறுவன்

விழிப்படைந்த 'தோக்ரா' ஆட்சியாளர்கள் RSS எனும் இராணுவ அமைப்பொன்றை காஷ்மீரின் பல பாகங்களிலும் நிறுவினர். இதனூடாக கஷ்மீர் மக்களின் எழுச்சியினைத் தடைசெய்ய முனைந்தனர். என்றாலும் இது சாத்தியமற்றுப் போயிற்று.

காஷ்மீரில் முஸ்லிம்களின் எழுச்சியைக் கண்டு பிரிட்டிஷ் இந்தியா கலவரமடைந்தது. என்றாலும் மூக்கை நுழைத்துக் கொள்வதற்கு சந்தர்ப்பமொன்றை எதிர் பார்த்திருந்தது. 1932ல் காஷ்மீர் போராட்டத்தை முன்னின்று நடாத்திய ஷேய்க் அப்துல்லாவை பிரிட்டிஷ் இந்தியா விலைக்கு வாங்கியது. 1945 ஒக்டோபரில் காஷ்மீரில் இடம்பெற்ற தேர்தலில் குலாம் அப்பாஸ் தலைமையிலான அணி பெரு வெற்றியடைந்தது. இதனைத் தொடர்ந்து 'தோக்ரா' இந்தியாவிடம் அரசியல் உதவி கோரவே தருணம் பார்த்துக் கொண்டிருந்த இந்தியா காஷ்மீர் விவகாரத்தில் தன்னை உட்படுத்திக் கொண்டது. இவ்வாறு 3ம் மனிதனாகவே காஷ்மீரின் விவகாரத்தில் தன்னை நுழைத்தது பிரிட்டிஷ் இந்தியா.

1947ல் இந்திய உபகண்டத்திற்கு சுதந்திரத்தை வழங்கும்போது, பிரித்தானியர்கள் ஒரு தீர்வை முன்வைத்தனர்: 'முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகள் பாகிஸ்தான் எனவும், ஹிந்துக்கள் அதிகமாக வாழும் பகுதி இந்தியா எனவும் பிரிக்கப்படல் வேண்டும்" இதனடிப்படையில் 85% முஸ்லிம்களைக் கொண்ட காஷ்மீர் பாகிஸ்தானாக இணைந்திருக்க வேண்டும். ஆனால், தந்திரமாக இந்தியா தனது படையை அனுப்பி காஷ்மீரின் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது.

1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்த கையோடு காஷ்மீரில் தனது ஈடுபாட்டை மேலும் அதிகரித்தது. 1947ம் ஆண்டு ஒக்டோபர் 24ம் திகதி காஷ்மீர் மக்கள் தனிநாட்டுப் பிரகடனம் செய்தனர். இதனை மறுத்த இந்தியா தனது படைகளை காஷ்மீரை நோக்கி நகர்த்தியது; கடுமையான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இவ்வாறு பல அடாவடித்தனங்களை மேற்கொண்ட போதும் இந்தியா படு தோல்வியையே கண்டது. தோல்வியிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கென ஐ.நாவின் உதவியை நாடியது.

1949 ஜனவரியில் ஆரம்பித்த ஐ.நா.வின் தலையீடு 2001ஐ கடந்த பின்பும் கூட இன்னும் தீர்வற்றுத் தொடர்கிறது. ஐ.நாவின் கருத்துப்படி காஷ்மீர் மக்கள் தமது சுயநிர்ணயப் போராட்டத்தின் 3 நிலைப்பாடுகளை உடையவர்களாக இனம் காட்டப்படுகின்றனர்.

1. சுதந்திர காஷ்மீர் குடியரசு
2. இந்தியாவுடன் இணைவது
3. பாகிஸ்தானுடன் இணைவது

காஷ்மீர் மக்கள் தமது சுயநிர்ணயத்தில் பூரண சுதந்திரமுடையவர்கள். அவர்களின் நிர்ணயம் வாக்கெடுப்பினூடாகத் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்ற தீர்வை ஐ.நா முன்வைத்தது.

ஆனாலும் இன்று வரை இந்த நிலை ஏற்படுத்தப்படவில்லை. வெறும் கண்துடைப் பாகவும் இந்தியாவின் வன்முறைகளை மூடிமறைக்கும் திரையாகவுமே ஐ.நா.வின் தலையீடு தொடர்கிறது.

இவ்வாறு கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட அடக்குமுறை வாழ்வை அனுபவித்து வருகின்ற காஷ்மீர் மக்கள் தமது சுயநிர்ணயப் போராட்டத்தில் பல படித்தரங்களைத் தாண்டி வந்து கொண்டிருக்கின்றனர். எனினும் இந்தியாவின் அராஜகங்கள் சர்வதேச சமூகத்தின் கண்களை விட்டும் மறைக்கப்பட்டும், முஜாஹிதுகளின் அர்ப்பணிப்புகள் 'பயங்கரவாதம்' என தவறாக முத்திரை குத்தப்பட்டும் கொண்டிருக்கின்றன. முஸ்லிம்களை அடக்குவதற்கு அவர்கள் கையாண்ட மிக மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை மேலுள்ள பட்டியல் தெளிவாக எமக்கு அறியத் தருகிறது.

இந்நிலையில் அங்கு வாழ்கின்ற எம் சகோதரர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான ஏக வழியாக ஜிஹாதைத் தேர்ந்தெடுத்திருப்பது காலத்தின் தேவையும், எதிரிகளுக்கான சரியான பதிலடியாகவும் அமைந்திருக்கிறது. காஷ்மீர் மக்கள் பற்றிய தெளிவான நிலைப்பாட்டினை நாமும் கொள்ள வேண்டும்; அவர்களின் வெற்றிக்காகப் பிரார்த்திக்க வேண்டும். சத்தியம் ஒரு போதும் அசத்தியவாதிகளின் மிரட்டல்களால் மறைந்து விடுவதில்லை என்ற உண்மை இவ்வுலகில் நிலைநாட்டப்பட வேண்டும். இந்தியாவின் 'அரச பயங்கரவாதம்' உலக மக்களுக்கு எடுத்துரைக்கப்பட வேண்டும். இது முஸ்லிம் உம்மத்தின் தலையாய கடமையாகும்.

## த:வா களம்

# அன்றைய முஸ்லிமுக்கு இரண்டு பிறப்புக்கள்

உஸ்தாத்
ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**"வானம் பூமியிலுள்ள அனைத்துப் படைப்பினங்களும் (இஸ்லாமாகி)[1] அவனுக்கே அடிபணிகின்றன."**

என்று அல்குர்ஆன் கூறுகிறது.[1] வானம் பூமியையும் அவற்றில் இருக்கும் எண்ணற்ற படைப்பினங்களையும் படைத்த அல்லாஹ் அவற்றிற்கான வாழ்க்கை நியதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறான். அவை 'பௌதீக நியதிகள்' எனப்படுகின்றன. பௌதீக நியதிகள் அல்லாஹ்வினால் வகுக்கப்பட்டு இருப்பதன் காரணத்தினால் அந்நியதிகளுக்குக் கட்டுப்படுவதை 'இஸ்லாம்' என்ற பதத்தின் மூலம் குர்ஆன் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறது.

இந்தவகையில் இஸ்லாம் இயற்கையின் மார்க்கமாகத் திகழ்கிறது. வானமும் பூமியும் ஏற்றுக் கொண்ட மார்க்கமாக அது விளங்குகிறது.

பௌதீக நியதிகளை அல்லாஹ் வகுத்தது போலவே மனித வாழ்க்கைக்கான நியதிகளையும் அவன் வகுத்தளித்திருக்கிறான். ஆனால் இரண்டுக்குமிடையில் ஒரு வித்தியாசம்-

மனிதன் தவிர்ந்த ஏனைய படைப்புக்கள் தமது வாழ்க்கைக்காக வகுக்கப்பட்ட நியதிகளை மீறிச்செல்ல முடியாதவாறு அல்லாஹ்வின் ஏற்பாடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றன. அதேவேளை, மனித வாழ்க்கைக்காக அல்லாஹ் வகுத்த நியதிகளை மனிதன் மீறிச் செல்லவும் முடியும்; மீறாதிருக்கவும் முடியும். இரண்டிற்குமான தகைமைகளை அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியிருக்கிறான்.

முதல் மனிதன் இந்தப் பூமியில் அடி எடுத்து வைக்கும் போதே அல்லாஹ் இந்த உண்மையை அவனுக்கு உணர்த்தி விட்டான்.

**"...என்னிடமிருந்து ஒரு வழிகாட்டல் நிச்சயமாக உங்களிடம் வரும் (அந்த) எனது வழிகாட்டலை பின்பற்றுவோருக்கு தங்கள் மீதான அச்சமும் இருக்காது. அவர்கள் கவலை கொள்ளவும் மாட்டார்கள்" (02:38)**

இதன்படி மனிதனின் வருகையோடு இந்த மண்ணுலகிற்கு இஸ்லாமும் வந்துவிட்டது.

அந்த இஸ்லாம் உலகம் அழியும் வரை இருக்கத்தான் போகிறது. இது இஸ்லாத்தின் சாராம்சமும் சரித்திரமுமாகும்.

இதேபோன்று முஸ்லிம்களுக்கும் ஒரு சரித்திரம் இருக்கிறது. இஸ்லாம் என்றுமே மாறியதில்லை. ஆனால் முஸ்லிம்கள் மாறியிருக்கிறார்கள். அந்த மாற்றத்தை அளந்து பார்க்கும் ஒரு முயற்சிதான் இவ்வாக்கம்.

14 நூற்றாண்டுக்கு முற்பட்ட முஸ்லிம்களின் வரலாற்றையும் அந்த வரலாற்றுக்குரிய மனிதர்களையும் படித்துப் பார்த்தால் முஸ்லிம்கள் யார் என்பதைத் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

அன்று ஒரு மனிதர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்பதன் பொருளும், இன்று ஒரு மனிதர் இஸ்லாத்தை தனது மார்க்கமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதன் பொருளும் ஒன்றல்ல! அன்றைய மனிதன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது...

**வணக்கம் மாறியது:** கல்லையும் மண்ணையும், சூரியனையும், நெருப்பையும் தெய்வமாகக் கருதி வழிபட்டவர்கள் இப்போது அவற்றின் படைப்பாளனாகிய ஏகன் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டார்கள்.

**பழக்கம் மாறியது:** மூதாதையர்களின் பழக்கவழக்கங்களை சம்பிரதாயமாகக் கருதிப் பின்பற்றியவர்கள், அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் ஏவல் விலக்கல்களை தமது பழக்கவழக்கங்களாக மாற்றிக் கொண்டார்கள்.

**உணர்ச்சிகள் மாறின:** குலப் பெருமையும் கோத்திர வெறியும் வரட்டு கௌரவங்களும் அவர்களை விட்டகன்று கொள்கைப் பிடிப்பும், சத்திய வேட்கையும் அவர்களை ஆட்கொண்டன.

**இயல்பு மாறியது:** தனது பசியையும், தனது தேவைகளையும் முதன்மைப் படுத்தி வாழ்ந்தவர்கள் தனது சகோதரனின் பசியையும் அவனது தேவைகளையும் முதன்மைப்படுத்தினார்கள்.

**அடிமைத்தனம் மாறியது:** அற்பமான உலக ஆசைகளுக்கு அடிமையாகிச் சீரழிந்தவர்கள் அல்லாஹ்வின் அடிமைகளாகிக் கண்ணியம் பெற்றார்கள்.

**சிந்தனை மாறியது:** வாழ்க்கையின் இலாப-நட்டங்களை அழிந்து போகும் அற்ப சுகங்களால் அளந்து பார்த்தவர்கள் மரணத்தையே முதலீட்டும் வியாபாரமாகக் கருதினார்கள்.

**பண்புகள் மாறின:** பழிக்குப்பழி தீர்க்காமல் ஆத்மா சாந்தியடையாது என நினைத்தவர்கள் பழிதீர்க்கும் பாவங்களையும் பெருமனதோடு மன்னித்தார்கள்.

**ஆடை மாறியது:** அழகை வெளிக் காட்டித்திரிந்த அணங்குகள் தம்மை மறைத்து அழகுபடுத்தித் திருப்தியுற்றனர். (ஆண்களுக்கு ஒரு பிரத்தியேகமான ஆடை குர்ஆனிலோ சுன்னாவிலோ வலியுறுத்தப்படவில்லை. தொப்புள் முதல் முழங்கால் வரையான பகுதி மறைக்கப்பட வேண்டிய அவ்றத் எனும் வரையறையைத் தவிர. ஒரு முஸ்லிம் தன்னை இனங்காட்டும் ஒரு தோற்றத்தைப் பேணிக் கொள்வது வரவேற்கத்தக்கது)

**நாகரிகம் மாறியது:** கவிதைகளால் ஆ(சா)பாசம் பேசிப் போட்டி நடத்திய வர்கள் தமக்கு எதிரான வாதங்களுக்கு மறுவாதம் புரியாமல் குற்றங்களை ஒப்புக் கொண்டார்கள்.

**ரசனை மாறியது:** கவிதை வரிகளால் பெண்களை அளந்து பார்த்தவர்கள் குர்ஆனின் வரிகளில் லயித்துப் போனார்கள்.

**மொழியும் மொழிவழக்கும் மாறியது:** கறுப்பு இனத்தைச் சேர்ந்த ஒருவரை 'கறுப்பியின் மகனே!' என்று

விழிப்பதும், குற்றம் செய்து தண்டனை பெறும் ஒருவரை நோக்கி ''அல்லாஹ் உன்னை இழிவுபடுத்துவானாக'' என்று சபிப்பதும் முஸ்லிம்களின் அகராதியி லிருந்து நீக்கப்பட்டது.

**அறிவு மாறியது:** உலகிலிருந்து உலகைப் பார்க்கும் அறிவு மங்கி, மறுமையிலிருந்து உலகைப் பார்க்கும் அறிவு உதயமானது.

**இலட்சியம் மாறியது:** எண்ணம் போல் வாழ்ந்த வாழ்க்கையை அல்லாஹ் வின் அன்பையும் சுவனத்தையும் பெறும் வாழ்க்கையாக அவர்கள் மாற்றினார்கள்.

**பணி மாறியது:** தாம் வாழ்வதற்காக பிறர் வாழ்வை அழித்தவர்கள், பிறர் வாழ் வதற்காக தம் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அந்த அர்ப்பணத்தில் இஸ்லாம் 'இகாமத்' செய்யப்பட்டது.

**ஆட்சி மாறியது:** மனிதர்களை உலகம் ஆட்சி செய்த நிலை மாறி உலகை மனிதர்கள் ஆட்சி செய்தார்கள்.

**அதிகாரம் மாறியது:** எப்போதும் பலவானை சார்ந்திருக்கும் அதிகாரம் இப்போது பலவீனத்துக்கு ஆதரவாக செயல்படத் துவங்கியது.

**போராட்டம் மாறியது:** மனிதர்களை அழித்தொழித்த போராட்டம் அநீதிகளைத் தகர்த்தெறியும் போராட்டமாகியது.

**மனிதனே மாறிவிட்டான்:** தாபத்தையும் தாகத்தையும் கொண்ட ஜதையாக இருந்த மனிதன் ஆன்ம சுகத்தை அனுபவிக்கப் பிறந்த மனிதனாக மாறிவிட்டான்.

மொத்தத்தில் அன்றைய மனிதனை இஸ்லாம் முழுமையாக மாற்றியது. அவனை இஸ்லாம் ஒரு புதிய மனிதனாக் கியது, ஏற்கனவே பிறந்தவனை இன்னு மொரு முறை அது பிறக்க வைத்தது. அதனால் அன்றைய முஸ்லிமுக்கு இரண்டு பிறப்புக்கள்.

இன்றைய முஸ்லிம்...!?
இவரும் அதே இஸ்லாத்தை தனது மார்க்கமாகக் கொண்டவர்தாம். ஆனால்...

இவரை இஸ்லாம் முழுமையாக மாற்றவில்லை. புதிய மனிதனாகும் பாக்கியத்தையும் அது இவருக்கு வழங்கவில்லை. கண்ணுக்குத் தெரியும் சில மாற்றங்களைச் செய்வதோடு இஸ்லாம் இவரை விட்டுவிட்டது.

இன்றைய முஸ்லிம்கள் கண்ட இஸ்லாம் அவர்களை என்ன செய்திருக் கிறது? அவர்கள் எப்படி மாறியிருக்கிறார்கள்?

✡ வணக்கத்தைக் கற்றுக் கொண்டார்கள்; பழக்கத்தை மாற்றவில்லை. மூதாதையர் கள் எதை செய்தார்களோ, அது இவர் களின் வேதமாக இருக்கிறது.

✡ ஒரு சராசரி மனிதன் அடித்தால் அடிப்பான், வெட்டினால் வெட்டுவான். இன்றைய முஸ்லிமும் அப்படியே! உணர்ச்சிகளில் மாற்றமில்லை.

✡ ஒரு சராசரி மனிதனுக்கு இந்த உலகில் தன்னைவிட, தன்து தேவைகளைவிட முக்கியமானது வேறெதுவும் இல்லை. இன்றைய முஸ்லிமும் அப்படியே! இயல்புகளில் மாற்றமில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் அல்லாஹ்வை மறந்து உலகத்திற்கும் உலக ஆசைக ளுக்கும் அடிமையாகிவிடுகிறான். இன்றைய முஸ்லிமும் அப்படியே! அடிமைத்தனம் மாறவில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் மரணத்திற்குப் பயப்படுகிறான்; உலக செல்வங்களை வைத்து மனிதனின் உயர்வு தாழ்வுகளை அளந்து பார்க்கிறான். முஸ்லிமும் அப்படியே! சிந்தனை மாறவில்லை.

✡ ஒரு சராசரி மனிதனை தோற்றத்தில் அடையாளம் காண முடியாது. ஆனால் இன்றைய முஸ்லிம்களில் அநேகரை அவர்களது உடைகளாலும் தோற்றத்தாலும் இனங்காண முடிகிறது! ஆடையும் தோற்றமும் நல்லதொரு மாற்றமாகும்.

✡ ஒரு சராசரி மனிதன் மற்றொரு மனிதனின் சுதந்திரத்தை மதிப்பதில்லை என்பது சரியாக இருக்கலாம். முஸ்லிமும் அப்படி இருந்தால்...? இன்றைய முஸ்லிமும் அப்படித்தான்! நாகரிகம் மாறவில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் நடிக - நடிகை களினதும், விளையாட்டு வீரர்களினதும் ரசிகனாக இருக்கிறான். முஸ்லிமும் அவ்வாறே! ரசனை மாறவில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் உணர்ச்சிவசப் பட்டால் இழிசொற்களைப் பயன்படுத்து கிறான். முஸ்லிமும் அவ்வாறே! மொழி மாறவில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் கண்டதையும் கேட்டதையும் அறிவாகக் கொள்கிறான். அனுபவத்துக்கு அப்பால் ஓர் அறிவு இருப்பதாக அவன் கருதுவதில்லை. முஸ்லிம் அவ்வாறெனின்... அறிவில் மாற்றமில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் தன்னைச் சூழ ஒரு சுவர்க்கம் அமைக்க விரும்புகிறான். முஸ்லிமும் அவ்வாறே! இலட்சியம் மாறவில்லை.

✡ ஒரு சராசரி மனிதன் வாழ்வின் நோக்கம் தெரியாமல், வாழ்வதையே நோக்கமாக்கிக் கொள்கிறான். முஸ்லிமும் அவ்வாறே! பணியில் மாற்றமில்லை.

மனிதனைப் பற்றி குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

**''மனிதன் பதட்டக்காரனாகப் படைக்கப்பட்டான். அவனுக்கு தீங்கு ஏற்பட்டால் நம்பிக்கையிழந்து விடுகி றான்; நன்மை கிடைத்தால் பிறருக்குக் கொடுக்காது தடுத்து வைத்துக் கொள்கிறான். தொழுபவர்களைத் தவிர'' (70:19-22)**

இன்று தொழுகின்ற மனிதனும் பதட்டக்காரனாகவே இருக்கிறான். மனிதனே மாறவில்லை. உடம்பு வளர்ந் திருக்கிறது; உள்ளம் வளரவில்லை.

அனைத்திலும் மாறினார்கள் அன்றைய முஸ்லிம்கள்; சில வெளிப்படைகளில் மட்டும் மாறினார்கள் இன்றைய முஸ்லிம்கள்.

அனைத்திலும் மாறியவர்களே 'ஸலபுஸ் ஸாலிஹீன்கள்'. அந்த மாற்றங்களை முழுமையாக பின்பற்று வோரே ஸலபிகள்.

இந்த முழுமையான மாற்றத்தை அடைவதற்கு வழி த஼வாவும் தர்பியாவுமாகும்.

ஆனால் இன்றைய த஼வாவும் தர்பியாவும குறைப் பிரசவங்களையே தருகின்றன. செல்லரித்த பலகைக்கு வர்ணம் தீட்டுவது போல உள்ளே ஓட்டைகளும் வெளியே சில வேலைப் பாடுகளும் இன்றைய த஼வாவில் பிரதிபலன்களாக இருக்கின்றன.

முதலில் த஼வாவும், தர்பியாவும் மாற வேண்டியிருக்கிறது. சிறந்த தர்பியா எம்மு டையதே என்று பெருமிதம் அடையாமல் நியாயமாய் பரிசீலனை செய்வார்களா தாஇகள்?

---

(1) இஸ்லாம் என்ற சொல்லுக்கு அடிபணிதல், சரணடைதல் எனும் இரு பொருள்கள் உண்டு.

# குற்றச் செயல்களைத் தூண்டும் நுகர்வோரியலும் இஸ்லாமிய இயக்கத்தின் செய்தியும்

-ஆஸிம் அலவி-

கண்டதையெல்லாம் வாரிவாரி நுகரும் கலாச்சாரமானது மனித உணர்வுகளை முழுமையாகவே நிர்வாணமாக்கியுள்ளது. செல்வம் தேடுவதில் வெறி, கண்டதை எல்லாம் வாங்கித் தள்ளுவதில் பேராசை, அதிகாரத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வதில் தீவிர வேட்கை ஆகியன வெட்க உணர்வுகளை சிதறடிக்கச் செய்துள்ளதோடு, *''இவற்றை அடைந்து கொள்வதற்காக எதனையும் செய்வதில் தவறில்லை.''* என்ற மனோநிலையை மனிதனுள் தோற்றுவித்துள்ளது; உணர்வுகள் முழுமையாக நிர்வாணமாகி விட்டன.

அழகான இலங்கைத் தீவை ஒருபுறத்தில் கடல் வேகமாக அரித்துக் கொண்டிருக்கும் வேளை, மறுபுறத்தில் அமெரிக்க மற்றும் மேலை நாட்டு நகரங்களிலிருந்து 'இறக்கியருளப்பட்ட' கலாச்சாரக் கறையான்கள் எமது நாட்டுப்புறப் பண்பாடுகளை அரித்துக் கொண்டிருக்கின்றன. இப்போதுள்ள நிலைமையை கூர்மையாக அவதானிக்கும்போது ஒரு விடயம் தெளிவாக விளங்குகிறது. அதாவது, லண்டனையும், பாரிஸையும், நிவ்யோர்க்கையும் போன்று எமது நகரங்களும் பாரிய குற்றச் செயல்களும், ஒழுக்கச் சீர்கேடுகளும், உயிர்கொல்லிப் பாலியல் நோய்களும் மலிந்தவைகளாக காலப்போக்கில் மாறிவிடும். உண்மையில் அல்லாஹ் மனிதர்களுக்கு தீங்கிழைக்க நாடுவதில்லை; ஆனால் நாம்தான் எமது செயல்களினூடாக எமக்கே அநியாயம் இழைத்துக் கொள்கிறோம். ஈற்றில் இருந்ததற்கான அடிச்சுவடுகள்கூட தெரியாதளவு எமது பண்பாடுகளும் விழுமியங்களும் பூமியின் மேற்பரப்பிலிருந்து அழிந்து போய்விடும். இவ்விதம் தான் பல பிரபல்யமிக்க நாகரிகங்கள் அழிந்து போயின.

**''நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு ஓர் அணுவளவும் தீங்கிழைப்பதில்லை; எனினும் மனிதர்கள் (தீவினைகளைச் செய்து) தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்''**

**(ஸூரா யூனுஸ் :44)**

இலங்கை மக்களுக்கும் இவ்விதமான ஒரு அபாயகரமான சூழ்நிலைதான் தோன்றி உள்ளது. எமது நாட்டு மக்கள், குறிப்பாக பெரும்பான்மைச் சிங்கள சமூகம் மேலை நாடுகளிலிருந்து இங்கே அறிமுகமாகும் அனைத்துப் பழக்கவழக்கங்களையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதன விளைவாக இந்நாட்டு கலாச்சார விழுமியங்கள் ஆபத்தில் சிக்கியுள்ளன. மேற்கு நாடுகளில் பின்பற்றத்தக்க பல்வேறு நல்லம்சங்களும், மனிதகுலத்துக்கு நன்மை பயக்கக் கூடிய ஆக்கபூர்வமான விடயங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவைதான், அவர்கள் கண்டுபிடித்துள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப ரீதியான அடைவுகள்.

மேற்கு நாடுகள் இவற்றைத் ''தெரிவு செய்தே'' எம்போன்ற பின்தங்கிய நாடுகளுக்கு வழங்குகின்றன. தமது இரகசியங்களை, யாருக்கு, எப்போது, எந்தளவு சொல்லிக் கொடுக்க வேண்டுமென அவர்கள் கருதுகிறார்களோ அவ்விதமே கொடுக்கின்றனர். அதேவேளை, அடுத்தவரின் கலாச்சாரப் பண்பாடுகளை அழித்தொழிக்கும் பழக்க வழக்கங்களை எவ்விதத் தடையுமின்றி, தமது செல்வாக்கில் உள்ள பொதுசனத் தொடர்பூடகங்கள் வாயிலாக கொட்டி வருகின்றனர். இதில் நகைப்புக்குரிய விடயம் யாதெனில், எமது நாட்டவர் தமது சுபீட்சத்துக்காக மேலை நாடுகளிலிருந்து எதை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றைப் பெற்றுக் கொள்வதைப் பிற்போட்டுவிட்டு, அங்கிருந்து தருவிக்கப்பட்ட சேறுகளை தமது உடம்பில் அப்பிப் பூசிக் கொண்டுள்ளனர்.

இவ்விதம் இலங்கையர் தமக்குத்தாமே பூசிக்கொண்டுள்ள சேறுதான் இங்கே வேகமாக வளர்ச்சியடைந்து வரும் *''நுகர்வோரியல்''* என்பதாகும். இப்பழக்கமானது சமூகக் கட்டுக்கோப்பு உடைப்புக்கும், பாரிய குற்றச்செயல்கள் மலிந்து விடுவதற்கும் காரணமாக அமைந்துள்ளதென ஆய்வாளர்கள் தெரிவிப்பதைக் கேட்டு அதிர்ச்சியடைவீர்கள்; ஆனால் அது ஒரு கசப்பான உண்மை!!

நுகர்வோரியலின் அடிப்படைத் தன்மை, பொருட்களில் கவர்ச்சியை ஏற்படுத்தி மனிதர்களின் ''கொள்வனவு செய்வதற்கான'' பேராசையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. இந்நோக்கத்திற்காக பாரிய தொகைச் செல்வத்தை முடக்கி விளம்பரம் செய்வதிலும், நாளுக்கு நாள் புதுப்புது வடிவில் கவர்ச்சிகரமாக பொருட்களைத் தயாரிப்பதிலும் தீவிர கரிசனை செலுத்தபபடுகிறது. இதில் அடங்கியுள்ள இன்னொரு அம்சம்தான், மனிதனின் பேராசையையும் தேவைகளையும் வானளாவ அதிகரிக்கச் செய்ததாகும்.

இன்று மனித உடலின் ஒவ்வொரு அங்கத்துக்குமென பிரசித்தமான அலங்காரப் பொருட்களும் அவற்றை கவர்ச்சியாக வைப்பதற்கான உபகரணங்களும், அழகுசாதனப் பொருட்களும் சந்தையில் குவிந்துள்ளன; மட்டுமல்லாது, அவற்றை மக்கள் நுகர்வதற்கு இணங்க வைப்பதறகாக ஆய்வுகள் நடாத்தல், தொலைக்காட்சி, வானொலி சம்பாஷணைகளை நடாத்தல் மற்றும் போட்டிகளை நடாத்தல் ஆகியவையும் நடைபெறுகின்றன. இவற்றினூடாக மனிதன் உயிர்வாழ்வதற்கு உதவாத தீங்கான பொருட்கள் கூட சட்டபூர்வ அந்தஸ்து பெறுவதை அவதானிக்கலாம்.

அது தோற்றுவித்த மூன்றாவது அம்சம்தான், பெருமையையும் கர்வத்தையும் மனித உள்ளங்களில் வளர்த்து விடுவதாகும். பல்தேசிய உணவகங்களில் குடும்பத்துடன் *ஹாயாக* அமர்ந்து மேலை நாட்டுப் பெயர்களைக் கொண்ட உணவு வகைகளை சுவைத்து மகிழ்வது பெருமைக்குரிய விடயம் என்ற பிரமையை அது வளர்த்து விட்டுள்ளது. வீட்டின் ஒவ்வொரு சிறு சிறு தேவைகளுக்கும் உபயோகிப்பதற்காக கருவிகளும் உபகரணங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன; மட்டுமல்லாது, அவற்றை பாவிப்பது வாழ்க்கையை இலகுபடுத்திக் கொள்வதற்கு அவசியமானது என்ற மனப்பதிவையும் வளர்த்து விட்டுள்ளது. இவற்றைப் பாவிப்பதும் பெருமைக்குரிய விடயமாகி விட்டது.

பாரியளவு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும், அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் ஊழல் மோசடிகளால் சீரழிந்தும் போயுள்ள இலங்கை போன்ற ஒரு நாட்டில் இந்நுகர்வோரியல பாதகமான விளைவுகளை உண்டு பண்ணி உள்ளதானது இயல்பானதே.

மேற்படி பொருளாதார ஏற்றத்தாழ்வுடன் கூடவே, இந்நாட்டு மக்கள் உலக வாழ்க்கை பற்றி கொண்டுள்ள பிழையான கண்ணோட்டமும் இத்தகைய சீர்கேடுகளுக்கு காரணமாக அமைந்துள்ளதும் நோக்கத்தக்கது. இஸ்லாமல்லாத ஏனைய மதங்கள் இவ்வுலக வாழ்க்கை பற்றி கொண்டுள்ள கண்ணோட்டம், அத்தோடு மரணத்துக்குப் பின்னால் உள்ள வாழ்வு பற்றிய கண்ணோட்டம் ஆகியன மக்கள் சந்தேகம் இல்லாது ஏற்றுக் கொள்ளக் கூடிய விதமாக அமைந்ததாக இல்லை. இதுவும் உலகைத் தேடும் தீவிர வேட்கையை மனிதனுள் வளர்த்து விட்டுள்ளது.

அத்துடன், மனிதனை குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்குத் தூண்டியுமுள்ளது என்பதை தயக்கமின்றிக் கூறலாம்.

வெளிச்சத்திற்கு வந்துள்ள தகவல்களின் படி, சென்ற ஒரு மாதத்தில் (டிஸம்பர்) மாத்திரம் வட-கிழக்குப் பகுதிக்கு வெளியில் 25 கொலைகளும், 20 பாரிய கொள்ளைச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. கடந்த வருடத்தின் முதல் ஆறுமாத காலத்துக்குள் மாத்திரம் இவ்விதமான 608 மனிதக கொலைகள் நடைபெற்றுள்ளன. அக்காலப் பகுதியில் மொத்தமாக நடைபெற்ற பாரிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை 4400 ஆகும். அதில் வீடுகளை உடைத்து 5000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகை திருடப்பட்ட சம்பவங்கள் மாத்திரம் 1722 முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு 10,000 ரூபாவுக்கு மேற்பட்ட திருட்டுக்கள் 756, வீடுகளிலிருந்தும் வியாபார நிறுவனங்களிலிருந்தும் கொள்ளையிடப்பட்ட சம்பவங்கள் 604, வழிப்பறிக் கொள்ளைகள் 283, வாகனங்களை கொள்ளையடித்தல் சம்பவங்கள் 426 ஆகியன குறிப்பிடத்தக்கதாகும்.

(Police Hq. Statistics)

உண்மையில் பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைத்த தரவுகளைக் கொண்டே மேற்படி தகவல் பெறப்பட்டுள்ளது. ஆனால், பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பொலிஸ் உயர் அதிகாரியின் கருத்துப்படி,

''கிடைக்கக் கூடிய புள்ளிவிபரங்கள் நாட்டில் நடைபெறும் குற்றச்செயல்கள் பற்றிய உண்மையான தொகையையோ அளவையோ படம்பிடித்துக் காட்டுவதில்லை. ஏனெனில், பல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தமது பொலிஸ் பிரிவு குற்றச்செயல்கள் அற்ற பிரதேசம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக உண்மைத் தகவல்களை மறைத்து விடுகின்றனர்....''

(THE SUNDAY TIMES 26-11-2000)

நாட்டில் அபாய மணி ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நாட்டு மக்கள் நல்லுணர்ச்சி பெறுவதாகத் தெரியவில்லை. அண்மைக் காலத்தில் நடைபெற்ற சில பிரபல்யமான கொலைச் சம்பவங்களை மாத்திரம் சற்று எடுத்து, அவற்றை செய்வதற்கான தூண்டுதல்களை அலசிப் பார்த்தால் வெள்ளிடைமலை போன்று தெளிவாகும் விடயங்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்:

சதீப லக்ஷான் எனும் 8 வயதுச் சிறுவன கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டான். இதுபற்றி கொலையாளியே கூறிய விடயம், தனக்கு ஒரு பந்தயரக மோட்டார் சைக்கிள் வாங்குவதற்குப் பணம் தேவை; அதைக் கொண்டு தனது சாகசங்களை காதலிக்குக் காட்டி பீற்ற வேண்டும்; உலகை அனுபவிக்க வேண்டும் என்ற மிருக ஆசைதான் இது!!

ரீட்டா ஜோன்ஸ் கொலை. அழகும் கவர்ச்சியும் நிரம்பிய இள நங்கைகளை அனுபவிக்கும் சந்தர்ப்பம் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மாத்திரமே கிடைக்கிறது. எமக்கு அந்நிலையை அடைந்து கொள்வதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. எனவே அத்தகைய ஒரு நங்கையை அனுபவிப்பதற்கான வழி அவளைக் கடத்திச் சென்று வல்லுறவுக்குள்ளாக்குவது என அவளைக் கொலை செய்தவர்கள் கருதியுள்ளனர். அத்தோடு தம்மால் அனுபவிக்க முடியாத பெண்கள் உலகில் வாழக் கூடாது என்ற மிருகப் பொறாமையால் தூண்டப்பட்டு, அவளை வல்லுறவுக் குட்படுத்தியதோடு கொலையும் செய்து விட்டனர்.

தினமுரசு ஆசிரியர் அற்புதராஜா, சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், சபாநாயகர் அனுர பண்டாரநாயகாவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அஜித் ஜயஸிங்ஹ ஆகியோர் அதிகார வெறி காரணமாக கொலை செய்யப்பட்டுள்ளனர். தமது அதிகாரத்துக்கும் செல்வாக்குக்கும் இவர்களால் ஆபத்து என கொலையாளிகள் கருதியுள்ளனர். எனவே, சட்டத்தை தமது கையில் எடுத்தவர்களாக இவர்களுக்கு வேட்டு வைத்துள்ளனர். அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களையும் இந்தப் பட்டியலில் சேர்க்கலாமா என்பதை காலம்தான் எடுத்துக் கூற வேண்டும்.

பொருளாசை, காமவெறி, அதிகாரவெறி ஆகியன இரத்ததாகமாக மாறியுள்ளன. ஒரேவிதமான குற்றத்தைச் செய்வதற்கு வித்தியாசமான உணர்வுகள் தூண்டியுள்ளன என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டோரது வயதெல்லை மற்றுமொரு அதிர்ச்சி தரும் தகவலாகும். அதாவது நடத்தேறிய படுபாதகச் செயல்களைப் புரிந்தோரில் 90% வீதமானோர் 25 வயதையும் எட்டாதவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது. நாட்டில் ராணுவத்திலிருந்தும் பொலிஸிலிருந்தும் விரக்தியுற்று தப்பியோடியோர் தொகை சுமார் 35,000 ஆகும். இவர்களுக்கு மிக இலகுவாக ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அதேபோன்று இன்று கறுப்புச் சந்தையில் ஒரு கைக்குண்டு 2000 ரூபா, கைத் துப்பாக்கி 25,000 ரூபா, AK 47 ரக துப்பாக்கி 35,000 ரூபா என விலை போகிறது. இதற்கு முன் இந்நாட்டில் இப்படியான ஒரு சூழல் இருக்கவில்லை. இதற்கான முழுப் பொறுப்பையும் நடைபெறும் சிவில் யுத்தத்தின்மேல் போட்டுவிட முடியாது. பதிலாக, நாம் மேலைநாட்டு கலாச்சாரத்தை நோக்கி எந்தளவு வேகமாக நகர்கிறோமோ அதேயளவு வேகமாக சமூகக் சீர்கேடுகள் எம்மை நோக்கி வருமென்ற உண்மையை உணர வேண்டும். பாரிய குற்றச் செயல்கள் இத்தகைய சீர்கேடுகளின் ஒரு அங்கமே தவிர, முழுச் சீர்கேடுகளும் அவை மாத்திரம்தான் என்ற கருத்துக்கு வரக்கூடாது. ஏனைய சீர்கேடுகளும் இருக்கின்றன. அவற்றை வேறொரு சந்தர்ப்பத்தில் நோக்குவோம், இன்ஷா அல்லாஹ்.

''மேற்குநாடுகளில் இவ்வளவு குற்றச் செயல்கள் மலிந்து காணப்பட்ட போதும் அங்கே மனிதர்கள் செழிப்பாக வாழ்கின்றனரே!'' என ஒரு சாரார் வாதாடுவதைப் பார்க்கிறோம். உண்மையில் அங்கே ஒரு அலாதியான கவர்ச்சி இருப்பதை மறுக்க முடியாது. ஆனால் அந்தக் கவர்ச்சி வெறும் வெளிரங்கமான கவர்ச்சியே. மேலை நாட்டு சமூகக் கட்டமைப்பு, வேர்கள் அழுகிக் கொண்டிருக்கும் ஒரு விருட்சத்துக்கு ஒப்பானது. அதன் அடித்தளம் நாளுக்கு நாள் பலவீனமடைந்து செல்கிறது; அவை முழுமையாக பலவீனமடைந்து பாரசீக, கிரேக்க நாகரிகங்கள் இருந்த சுவடுகள் தெரியாதவாறு அழிந்து போனது போன்று அழிந்து போய்விடும். குர்ஆன் கூறும் நிலைப்பாடும் இதுதான்.

அதாவது நாகரீகங்களின் அழிவு திடுகூறாக ஏற்படுவதில்லை, மாறாக அது சிறுகச் சிறுகவே ஏற்படுகிறது. ஒரு நாகரீகத்தின் எழுச்சி எவ்விதம் ஒரு தொடர்ச்சியான செயல்முறையில் ஏற்படுகிறதோ, அதன் வீழ்ச்சியும் அதேவிதம் தான் ஏற்படுகிறது என்பதை அல்குர்ஆன் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது:

**''ஏதாவது ஓர் ஊரை நாம் அழித்துவிடக் கருதினால், அதில் சுகமாக வாழ்வோரை நாம் ஏவுகிறோம். அவர்கள் அதில் விஷமம் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். பின்னர் அவர்கள் மீது நம்முடைய வாக்கு ஏற்பட்டு, அவ்வூரை நாம் அடியோடு அழித்து விடுகிறோம்.''**

(பனூ இஸ்ராயீல் :17)

மேற்படி இறைவாக்கின் வெளிச்சத்தில் நோக்குகையில் ஒருநாள் மேலைத்தேய நாகரீகமும் அதனைக் கண்ணைமூடிக் கொண்டு பின்பற்றும் ஏனைய சமூகங்களின் நாகரிகங்களும் அழிந்தே போகும் என்பதை தயக்கமின்றிக் குறிப்பிடலாம்.

சமூகங்களில் குற்றச் செயல்களும் குற்றச்செயல்களில் ஈடுபடும் மனிதர்களும் வியாபிக்கும்போது அவற்றின் அழிவு ஆரம்பித்து விடுகிறது. இவ்வாறான குற்றச் செயல்கள் பெருகுவதற்கு பல காரணிகள் தூண்டுகோல்களாக அமைகின்றன. அவற்றுள் மிகவும் அடிப்படையான காரணி இறைவன் தன்னை எந்நேரமும் அவதானித்துக் கொண்டிருக்கின்றான் என்ற அச்ச உணர்வு உள்ளத்திலிருந்து அற்றுப் போவதும், மரணத்துக்குப் பின் ஒரு வாழ்வு உண்டு

(50ம் பக்கம் பார்க்க)

இக்கட்டுரை இந்திய ஜமாஅத்தின் வெளியீடான சமரசம் (1-15, 2000) இதழில் பிரசுரிக்கப்பட்டது. கட்டுரையின் முக்கியத்துவம் கருதி கட்டுரையாளரின் அனுமதியுடன் அவர் மேற்கொண்ட சில திருத்தங்களுடன் மீள்பிரசுரம் செய்யப்படுகிறது.

# கடமையான ஹஜ்ஜும் சுன்னத்தான ஹஜ்ஜுகளும்

அஷ்ஷெய்க் எஸ்.எச். பளீல் நளீமி

இந்த வருட ஹஜ்ஜுக்காக எம்மில் பலர் தயாராகிக் கொண்டிருக்கும் காலம் இது. ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான ஹஜ் முஸ்லிமான, பருவமெய்திய, சித்தசுவாதீனமுள்ள, அடிமையல்லாத, உடலியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் தகுதி நிலையிலுள்ள ஒவ்வொருவர் மீதும் வாழ்நாளில் ஒரு தடவை கடமையாகிறது. ஆனால் ஹஜ் ஒன்றைச் செய்வதாக நேர்ச்சை வைக்கும் பட்சத்தில் அதுவும் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாகிறது. நிர்ப்பந்தமான நிலையில் சிலர் ஒரு தடவைக்கு மேலதிகமாக ஹஜ் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக வழிகாட்டிகளாக, மருத்துவராக, சமையல்காரராக, மஹ்ரம் ஒருவருக்கு துணையாகவும் செல்ல முடியும். அவ்வாறு செல்வதில் தவறு கிடையாது. இவை தவிர நிறைவேற்றப்படும் மேலதிக ஹஜ்ஜுகள் அனைத்தும் சுன்னத்தானவையாகும் என்பதில் கருத்து பேதமில்லை.

உரிய விதத்தில் ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டு வீடு திரும்புபவர் அன்று பிறந்த பாலகனைப் போல் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில் வருகிறார்; முறையாக நிறைவேற்றப்படும் ஹஜ்ஜுக்கு சுவர்க்கமே கூலி போன்ற இன்னோரன்ன கருத்துக்களை ஹஜ்ஜின் சிறப்புப்பற்றி நபி (ஸல்) குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே, வருடாவருடம் லட்சோபலட்சம் மக்கள் புனித மக்காவை நோக்கி யாத்திரை மேற்கொண்டு ஆன்மீகப் பக்குவத்தை அடைய முயற்சிக்கிறார்கள். ஹஜ்ஜுக்காக மட்டுமன்றி ரமழானிலும் ஏனைய மாதங்களிலும் உம்ராவுக்காக வருடாவருடம் செல்வோரின் தொகை அதிகரித்து வருவதை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், தற்கால இஸ்லாமிய உலகின் சிந்தனையாளர்களில் சிலர், சுன்னத்தான ஹஜ்ஜுக்காக வருவோரின் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவது பற்றி சில கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இந்த அம்சம் ஒரு வித்தியாசமான நோக்கிலிருந்து அணுகப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர். கடமையான ஹஜ்ஜை அதாவது முதல் தடவையாக ஹஜ்ஜை நிறைவேற்ற வருவோர் மொத்த ஹஜ்ஜாஜிகளில் 15% மாத்திரமே என்று கலாநிதி யூசுப் அல்கர்ளாவீ தெரிவிக்கிறார். அப்படியாயின் இரண்டு மில்லியன் ஹஜ்ஜாஜிகளில் மூன்று லட்சம் பேர் மாத்திரமே முதல் தடவையாக ஹஜ் செய்கின்றனர் என்பது அவரது கணிப்பீடாகும். அப்படியாயின் 17 லட்சம் பேர் இரண்டாவது தடவையாக அல்லது பத்தாவது, முப்பதாவது தடவையாக ஹஜ் செய்கின்றனர். சிலர் 40ஆவது தடவையாகவும் செல்கின்றனர். சிலர் வருடந்தோறும் செல்கின்றனர்.

ஆனால், இந்த அம்சத்தை நவீன கால முஸ்லிம் சமூகத்தின் பாரிய தேவைகள், பிரச்சினைகள், சவால்களோடு ஒப்பு நோக்கியே ஆராய வேண்டியிருக்கிறது. ஒரு தடவை கத்தார் நாட்டிலிருந்து வருடா வருடம் ஹஜ் செய்யும் ஒரு குழுவினரைச் சந்தித்த கலாநிதி கர்ளாவி பின்வருமாறு கேட்டார்: ''முஸ்லிம்களை மதமாற்றம் செய்ய கிறிஸ்தவ மிஷனரிகள் இந்தோனேஷியாவில் பாரிய திட்டங்களைத் தீட்டி செயலில் இறங்கியிருக்கின்றன. எனவே, இந்த முஸ்லிம்களைப் பாதுகாக்க தரமான இஸ்லாமிய நிறுவனங்கள் உருவாக வேண்டியிருக்கிறது. கல்விப் போதனை, மருத்துவம், சமூக சேவைகள் போன்றவற்றை முஸ்லிம்கள் மத்தியில் மேற்கொண்டு சமூகத்தில் இஸ்லாமிய நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் இஸ்லாம் பாதுகாக்கப்படும். எனவே, இவ்வருடம் நீங்கள் ஹஜ்ஜுக்குச் செல்லாது அதற்குச் செலவாகும் பணத்தை, முஸ்லிம்களை கிறிஸ்தவ பிரசாரத்திலிருந்து காப்பாற்றச் செலவிடுங்கள்'' என்று கூற, அவர்கள், ''துல்ஹஜ் மாதமாகிவிட்டால் ஹஜ் செய்ய வேண்டும் என்ற வேட்கை உருவாகி விடுகிறது. எமது ஆத்மாக்கள் மக்காவில் சிறகடிப்பது போன்ற உணர்வை நாம் பெறுகிறோம். அங்கு சென்றால்தான் நிம்மதி ஏற்படுகிறது'' என்று கூறினர்.

உண்மையில் இவர்கள் பாரிய பணத் தொகையைச் செலவுசெய்து ஆன்மீக நிம்மதி கண்டு வாழும் அதேவேளை முஸ்லிம் சமூகத்தில் பல கோடிப் பேர் பசியாலும் பட்டினியாலும் வாடிக் கொண்டிருப்பதும் பாரிய உண்மையாகும். லட்சோப லட்சம் குழந்தைகள் கவனிப்பாரற்ற அநாதைகளாக, வானமே கூரையாக, தரையே விரிப்பாக நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கிக் கைகளை நீட்டிக் கொண்டிருக்கிறார்கள். திணிக்கப்பட்ட யுத்தங்களால் சிதறுண்டு போய், சொந்த வாழ்விடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, அகதி நாமம் சூட்டப்பட்டு அல்லலுறுகின்றனர். கோடிக்கணக்கான நோயாளிகள் ஒரு சிறு மருத்துவ உதவி கூட இல்லாத நிலையில் ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அறியாமை, மூடநம்பிக்கை, வேலையின்மை போன்றவற்றாலும் எண்ணற்ற பல பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன.

ஆகவே, முஸ்லிம் உம்மத்தின் இது போன்ற பல்துறைசார் சீர்கேடுகளை களைந்தெறியும் தேவை இருக்கையில், அவற்றுக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்பட வேண்டிய கடமையை முஸ்லிம்கள் சுமந்திருக்கையில் ஆத்மானந்தத்துக்காக பல தடவை சுன்னத்தான ஹஜ்ஜுகள் செய்யப்படுவது முறைதானா என இஸ்லாமிய சிந்தனையாளர்கள் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

மஸ்ஜிதுல் அக்ஸாவை கபளீகரம் செய்து, அங்கு காட்டு தர்பார் நடத்தும் யூதர்களை எதிர்த்துப் போராடவும், கொஸோவோவிலும் செச்னியாவிலும் செர்பியர்களும் ரஷ்யர்களும் முஸ்லிம்களின் குற்றமறியாக் குழந்தைகளைக் கூட கொன்று குவித்திருக்கையில், உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் தமக்காக வாயைத் திறந்து ஒரு வார்த்தையை யாவது உதிர்க்கமாட்டார்களா என அங்கு வாழும் முஸ்லிம்கள் ஏங்கும்போது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும், பங்களாதேஷ் இந்தோனேஷியா போன்ற ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இடம்பெறும்

கிறிஸ்தவ சிந்தனைப் படையெடுப்பை எதிர்கொள்ளவும் நாம் தயாராக வேண்டி யிருக்கிறது; த.்.வா நிலையங்களை அமைத்து தாஈக்களை உருவாக்க வேண்டியுள்ளது; இஸ்லாமிய வெளியீடுகளைச் செய்ய பதிப்பகங்கள் மென்மேலும் தேவைப்படுகின்றன. இவை உடனடியானதும் அவசியமானதுமான் தேவைகளாக இருக்கும் நிலையில் சுன்னத்தான ஹஜ்ஜுகளுக்காக பெருந்தொகைப் பணம் உலக முஸ்லிம் களால் செலவிடப்படுவது நியாயமாகுமா?

சில வருடங்களுக்கு முன்னர் பிரபல இஸ்லாமிய சிந்தனையாளரும் எழுத்தாளரு மான **பஹ்மீ ஹுவைதி** அவர்கள்,

''பர்ழான ஹஜ் செய்வதைவிட பொஸ்னியாவை மீட்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்'' என்ற தீவிரமான கருத்தை வெளியிட்டார். இவரது கருத்தை வாசித்த பலர் தடுமாறிப் போயினர். கலாநிதி கர்ளாவி அவர்களிடம் இதுபற்றி வினவப்பட்டது. அதற்கவர், ''பிக்ஹ் அடிப்படையில் நோக்கும்போது அவர் கூறியது ஒருவகையில் சரியானதுதான். காரணம், காலம் தாழ்த்தி நிறைவேற்ற முடியுமான கடமைகளைவிட உடனடியாகச் செய்யப்பட வேண்டிய கடமைகள் முற்படுத்தப்பட வேண்டும் என்பது ஷரீஅத் தால் அங்கீகரிக்கப்பட்ட விடயமாகும். பர்ழான ஹஜ்ஜை காலம் தாழ்த்தியும் நிறைவேற்றலாம் என்பது சில இமாம் களது கருத்தாகும். ஆனால், பட்டினி, கடும் குளிர், நோய் என்பவற்றின் அழிவி லிருந்து பொஸ்னிய முஸ்லிம்களைப் பாதுகாப்பது உடனடியான கடமையாகும். அதனை எவ்வகையிலும் பிற்படுத்த முடியாது. அது காலத்தின் தேவையாகும். ஆனால், மக்காவுக்கு அருகாமையில் இருப்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஹஜ் செய்ய அதிகம் பணச் செலவு ஏற்பட மாட்டாது. அவர்கள் முதல் தடவையாக ஹஜ் செய்வதாயின் காலம் தாழ்த்தாமல் அதனை நிறைவேற்ற வேண்டும்'' என பதிலளித்தார்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை செயல்கள் அனைத்தும் சமதரத்தினவையாக இல்லை. சுன்னத், முஸ்தஹப், பர்ழு கிபாயா, பர்ழு ஐன் என அவை பலதரப்பட்டவையாகும். பர்ழுகள் பல கவனிப்பாரற்று, உதாசீனப் படுத்தப்படும் சூழலில் சுன்னத்துக்களில் கூடிய கரிசனை எடுப்பதை இஸ்லாம் வரவேற்பதில்லை. அவ்ரத்தை திறந்து கொண்டு தலையில் தொப்பி அணிய முயற்சிக்கப்படுவதற்கு இதனை உவமிக்க முடியும். ''பக்கத்து வீட்டான் பசித்திருக்க வயிறு நிரம்ப உண்பவன் உண்மை மு.்.மின் அல்ல'' என இஸ்லாம் கூறும்போது சமூகத்தில் நிலவும் பல அடிப்படையான பிரச்சினைகளை புறந்தள்ளிவிட்டு சுன்னத் தான ஹஜ் செய்வது முறையாகுமா?

கட்டாயக் கடமைகள் பல பாழ்படுத்தப் பட்ட நிலையில் சுன்னத்தான ஹஜ்ஜு செய்வது கூடாது என்பது நவீன கால அறிஞர்களது கருத்துமட்டுமல்ல. இமாம் கஸ்ஸாலி (ரஹ்) தனது இஹ்யாஉ உலூமித் தீனின் 'கிதாபுல் குரூர்' என்ற பகுதியில் இக்கருத்தைக் குறிப்பிட்டு அதற்கான நியாயங்களை உதாரணங்கள் மற்றும் சம்பவங்கள் மூலம் முன்வைக்கிறார்கள். அவற்றிற் சில வருமாறு:

இப்னு அப்பாஸ் (ﷺ) அவர்கள் பின் வருமாறு கூறுகிறார்கள், ''ஹஜ்ஜாஜிகளது எண்ணிக்கை கடைசி காலத்தில் காரண மின்றி அதிகரிக்கும்; அவர்களுக்கு ஹஜ்ஜுப பயணம் மிக இலகுவாக இருக்கும்; ஜீவ னோபாயம் தாராளமாகக் காணப்படும்; ஹஜ்ஜிலிருந்து திரும்பும்போது அவர்கள் எதனையும் கொண்டு வரமாட்டார்கள். ஆனால், அவர்களது பக்கத்து வீட்டான் கைதியாக இருப்பான். அந்த ஹாஜி அவனுக்கு உதவி செய்து அவனை சந்தோசப்படுத்தமாட்டான்'' என்றார்கள்.

ஒரு தடவை பிஸ்ர் இப்னு ஹாரித் என்பாரிடம் வந்த ஒருவர் தான் ஹஜ் செய்ய நாடியிருப்பதாகவும் தனக்கு உப தேசிக்கும்படியும் வேண்டிக் கொண்டார். அதற்கு பிஸ்ர் அவர்கள், 'உம்மிடம் எவ்வ ளவு பணம் இருக்கிறது?' எனக் கேட்டார் கள். அதற்கவர் 'இரண்டாயிரம்' எனக் கூறவே, 'உமது ஹஜ்ஜின் மூலம் நீர் அடைய விரும்புவது என்ன?' என பிஸ்ர் வினவினார். அதற்கவர் "உலகப் பற்றற்ற மனோநிலை அல்லது க.்.பாவின் மீதான வேட்கை அல்லது அல்லாஹ்வின் திருப் பொருத்தம்' எனப் பதிலளித்தார். அதற்கு பிஸ்ர், 'நீர் உமது வீட்டில் இருந்து கொண்டே இரண்டாயிரம் திர்ஹம்களை செலவழித்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வழி சொல்லவா?'' என்று கேட்கவே, அதற்கவர் 'ஆம்' என்றார். 'நீர் சென்று, அந்த 2000 திர்ஹம்களை பத்துப் பேருக்குப் பங்கிட்டுக் கொடுப்பீராக! கடனை அடைப்பதற்காக கடனாளிக்குக் கொடு; ஓர் ஏழைக்குக் கொடு; அவன் தான் இழந்த செழுமையை மீண்டும் பெறட்டும். ஏழ்மையைப் போக்க ஒரு குடும்பஸ்தனுக்குக் கொடு; ஓர் அநாதையைப் பராமரிக்கும் ஒருவருக்குக் கொடு; அநாதை அதனால் மகிழ்வடையக் கூடும். இப்பணத் தொகை அனைத்தையும் ஒரு நபருக்கு உன்னால் கொடுக்க முடியு மாயின் அவ்வாறு செய். ஏனெனில் ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் சந்தோஷத்தை உன்னால் தோற்றுவிக்க முடியுமாயின், ஒருவரது துக்கத்தைப் போக்க முடியு மாயின், துயரத்தை விரட்ட முடியுமாயின், பலவீனனுக்கு கைகொடுத்து உதவ முடியு மாயின் முதல் தடவையாக செய்யப்படும் கடமையான ஹஜ்ஜுக்குப் பிறகு செய்யப் படும் 100 ஹஜ்ஜுகளைவிட சிறந்ததாகும். எனவே, எழுந்து சென்று, நான் கூறியது போல் அப்பணத்தைச் செலவு செய்வீராக! அல்லது உமது உள்ளத்தில் உள்ள எண்ணம் யாது என்று சொல்'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், ''ஹஜ்ஜுப் பயணம்தான் எனது உள்ளத்துக்கு மிகவும் விருப்பமாக இருக்கிறது'' என்றார். இதனைக் கேட்டு புன்னகை பூத்த பிஸர், ''செல்வமானது அழுக்கான வியாபாரம் மூலம் அல்லது சந்தேகத்திற்கிடமான வழிகள் மூலம் திரட்டப்படுமானால் அச் செல்வங்கள் மனோ இச்சைப்படியே செலவிடப்பட வேண்டும் என உள்ளம் ஆசைப்படும்'' என்று கூறி முடித்தார்கள்.

(3ம் பாகம் 409ம் பக்கம்)

எனவே, இத்தகைய மனிதர்கள் வரலாறு நெடுகிலும் இருந்து வந்துள்ளனர் என்பதையே இமாம் கஸ்ஸாலியின் கருத்துக்கள் உணர்த்துகின்றன. பொஸ்னிய மக்களை அழிவிலிருந்து காக்க கடமையான ஹஜ்ஜைக் கூட பிற்படுத்த லாம் என தற்கால உலமாக்கள் சிலர் கருதுவதாயின் வருடாவருடம் ஹஜ்ஜுக் காகவும் வருடத்தில் பல தடவை உம்ராவுக் காகவும் போகிறவர்கள் பற்றிய தீர்ப்பு எப்படி அமையும் என ஊகிக்க முடியும்.

இன்று ஹஜ் முகவர் அமைப்புக்கள் சில, ஹஜ்ஜுக்காக மக்களை ஊக்கப் படுத்துவது வரவேற்கத்தக்கது, ஆனால், சுன்னத்தான ஹஜ் செய்ய விழைவோர் விடயத்தில் மேற்கூறிய உண்மைகளை யாவரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இவ்வுண்மையை உலக முஸ்லிம்கள் சரிவர உணர்வார்களாயின் ஹஜ்ஜில் அளவுக்கு மீறிய சனநெருக்கடியைத் தவிர்க்கலாம். சன நெரிசல் இருப்பதால் முதல் தடவையாக ஹஜ் செய்வோருக் குக் கூட திருப்திகரமாக தமது ஹஜ்ஜை நிறைவேற்ற முடியாதிருக்கிறது. மேலும் சுன்னத்தான ஹஜ்ஜுகளுக்காகவும் பல உம்ராக்களுக்காகவும் செலவிடப்படும் பணத்தை அத்தியாவசியமான த.்.வாப் பணிக்காகவும், யுத்த அனர்த்தங்கள், அரசியல் அராஜகங்கள், பட்டினிச் சாவுகள் என்பவற்றிலிருந்து முஸ்லிம் களைப் பாதுகாக்கவும் செலவழிக்கும் ஒருவர் தனது எண்ணத்தின் தூய்மைக் கேற்ப அல்லாஹ்விடம் பல மடங்கு அதிகமான நன்மைகளைப் பெறக்கூடும். மேலதிக ஹஜ்ஜுகளில் நாட்டம் கொள்வோர் ஹஜ்ஜுக்கு முந்திய கடமையான சகாத் விடயத்திலும், **"சகாத்தைவிட செல்வத்தில் வேறு பல கடமைகள் உள்ளன"** என்ற ஹதீஸிலும் கவனம் செலுத்துவார்களாக.

முஸ்லிம் உம்மத்திற்கு எதிராக மேற்குலகம் மேற்கொள்ளும் சதித்திட்டங்களைச் சென்ற இதழில் விபரித்தோம். பாகிஸ்தான் பற்றி இன்று ஆராய்வோம்.

இன்று அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் அரசியல் வட்டாரங்களில் அலையலையாக வந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி அறிக்கைகள், அரசியல் ஆய்வுகள், எதிர்காலம் பற்றிய முன் கூறல்கள் போன்றவற்றை அலசி ஆராய்வது இவ்விடத்தில் அவசியமாகிறது. மேலைத்தேய நாடுகளின் மனப்போக்கினதும், திட்டங்களினதும், பிரதிபலிப்பாகவே இவை காணப்படுகின்றன. மெய்யும்-பொய்யும் கலந்த, நிகழ்வுகளும்-மாயைகளும் கலந்த, ஆய்வுகளும்-நூலின் மூலமும் இவ்வாய்வுகளுக்கான புதிய பாதைகளையும், பரிமாணங்களையும், கதாபாத்திரங்களையும் வரைந்தார். தற்போது இவ்விடயம் முழுமூச்சாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இந்த விருப்புக்குரிய தலைப்பில் முக்கிய கட்டுரைகளும், புத்தகங்களும் வெளிவராத மாதமே இல்லை எனலாம். கடந்த சில மாதங்களாக இது தொடர்பான விடயங்களில் பாகிஸ்தான் முன்னுரிமை பெற்றுத் திகழ்கிறது. இது சில உண்மைகளை சூசகமாக உணர்த்துகிறது. இது விடயத்தில் பென்டகன், வெள்ளை மாளிகை, அமெரிக்க காங்கிரஸ், செனட்டின் பல்வேறு குழுக்கள் என்பன உற்சாகமாகச் செயற்படுகின்றன. முன்னாள் செனட்டர்களான கெரி ஹார்ட், ரென்ரொட்டன ஆகியோரின்

இவ்வறிக்கை 1999ல் தயாரிக்கப்பட்டது. இவ்வருட ஆரம்பத்திலிருந்து கொள்கை வகுப்பு வட்டாரங்களில் இது கலந்துரையாடப்படுகிறது.

"ஆசியா 2025" எனும் தலைப்பிலான 147 பக்கங்களைக் கொண்ட மற்றுமொரு அறிக்கையைப் பென்டகன் தயாரித்துள்ளது. மிக அண்மையிலேயே இது வெளியிடப்பட்டுள்ளது. Rand Corporation னுடன் தொடர்பான 'அஷ்லி தபிஸ்' எனும் நேட்டோ அங்கத்தவர் ஒருவர் இதனைத் தெரிவித்து, இந்தியப் பத்திரிகையான Outlook (செப்'18, 2000) இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின பிரிவினை, அதன் தோல்வி, இந்தியாவுடனான இணைப்பு (அல்லாஹ் பாதுகாப்பானாக) எனும மூன்று தலைப்புக்களில் சூழல்கள் விபரிக்கப்

# முஸ்லிம்கள் விழித்தெழுவது எப்போது? - 2

**பேராசிரியர் குர்ஷித் அஹ்மத்**
**நாயிப் அமீர்–**
**ஜமாஅதே இஸ்லாமி, பாகிஸ்தான்**

கற்பனைகளும் கலந்த, எதிர்ப்புக்களும்-கவலைகளும் கலந்தவையாய் இவை இருக்கின்றன. இது அவர்களிடம் மறைந்து காணப்படும் குரோத உணர்வுகளின் வெளிப்பாடாய் இருக்கக் கூடுமாயினும் எதிரிப் படைகளின் திட்டங்களை விளங்கிக் கொள்வதற்கும் எமது பலஹீனங்களையும், குறைபாடுகளையும் கணிப்பிட்டு, அவற்றை திருத்திக் கொள்வதற்கும் எதிரிகளின் சட்ட திட்டங்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக ஆயத்தமாவதற்கும் அவற்றைப் படித்து ஆய்வது அவசியமாகிறது.

1985ல் ரீகன்-கொர்பசேவ் கலந்து கொண்ட முதலாவது உச்சி மகாநாட்டின் போது, முன்னை நாள் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன், வெளியுறவு தொடர்பாக செய்தி வெளியிடும் பத்திரிகையில் 'இஸ்லாமிய தீவிரவாதத்தின் ஆபத்துக்கள்' எனும் தலைப்பில் எழுதினார். அதே ஆண்டில், 'சிகப்பு அச்சுறுத்தல்' களுக்கு பதிலாக 'பச்சை அச்சுறுத்தல்' (Green Threat) பற்றி நேட்டோவின் செயலாளர் நாயகம் எழுதினார். இவைதான் இன்று மடைதிறந்தாற் போல் வெளிவந்து கொண்டிருக்கும் ஆய்வுகளை தூண்டி விட்டவைகளாகும்.

1994ல் பேராசிரியர் 'சாமுவல் ஹன்டிங்டன்' என்பவர் முதலில் அமெரிக்க வெளியுறவு பகுதியிலும், பின்னர் 'நாகரிகங்களின் மோதல்கள்' எனும்

கீழ் இயங்கிய 28 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினால் குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ள சில விடயங்களாவன:

01 பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு, ஆப்கானிஸ்தானில் நிலவும் நிலைமை ஆபத்தாய் அமையலாம்.

02 எதிர்வரும் 25 ஆண்டுகள் பாகிஸ்தானுக்கு ஆபத்தானவை. இக்கால கட்டத்தில் பாகிஸ்தானில் கிரமமான அழிவு இடம்பெறும். முழு உலகின் உடனடிக் கவனத்தை ஈர்க்கும் சூடுபிடித்த விடயமாக இது மாறலாம்.

03 தாலிபான், இந்தியா, ஈரான், சீனா ஆகியவற்றிற்கிடையில் போர் மூள்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன.

04 பஞ்சாப், சிந்த், பலூசிஸ்தான் ஆகிய பாகிஸ்தான் மாகாணங்களில் பாரிய இரத்தம் சிந்தல் இடம்பெறும். பாலூச், பஸ்தூன் முஹாஜிர்கள் தனிநாடு கோருவார்கள். இது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும்.

05 பாகிஸ்தான் பொருளாதாரத்தில் பலஹீனமடையும்; அரசியலில் ஊனமுற்று ஸ்தம்பிதமாகிவிடும்.

பட்டுள்ளன. அத்தோடு இந்தோனேஷியாவின் அழிவு, ஆசியாவில் சீனாவினதும், இந்தியாவினதும் மேலாதிக்கம் நிலை பெறுதல், கிழக்காசியாவில் சீனாவின் வெற்றி, தைவானைத் திரும்ப அடைதல் என்பன முக்கிய தலைப்புக்களாக வரையப்பட்டுள்ளன. பாகிஸ்தான் பற்றிய முக்கிய பகுதிகள் இதோ:

01 பாகிஸ்தானின் நிதர்சனமான வீழ்ச்சியுடன் 2010ம் ஆண்டில் 'புதிய தெற்காசிய ஒழுங்கு நிகழ்வுகள்' கட்டவிழும். பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் பொருளாதார வீழ்ச்சியும், இனப் போராட்டங்களும், சட்டம் ஒழுங்கு பேண முடியாத அரசின் இயலாமையும் அதனை ஆட்டம் காணச் செய்துள்ளது.

02 பாகிஸ்தானில் பஞ்சாபிகளின் மேலாதிக்கத்தை நீண்டகாலமாகத் தீவிரமாக ஆட்சேபித்துவரும் சிந்திகளும், பலூச்சிகளும், பட்டாணியர்களும் கலகம் செய்வார்கள், முஹாஜிர்கள் வீதியில் இறங்குவார்கள். இஸ்லாமியத் தீவிரவாதம் இருவழிகளில் இந்த ஸ்திரமின்மைக்கு மெருகூட்டும்:

அ) ஸ்திரநிலையை சீர்குலைக்கும் தாலிபானின் முயற்சிகள்

ஆ) ஜமாஅதே இஸ்லாமி கட்சியின் வளர்ந்து வரும் சக்தி

03 2012ல் பாகிஸ்தான் நாடு முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடையும் காஷ்மீருக்குள் ஊடுருவும் இஸ்லாமியத் தீவிரவாதிகளினால், அது தன் கட்டுப்பாட்டை இழக்கும்.

இவ்வேளை இஸ்லாமியப் படையெடுப்பை நிறுத்துமாறு இந்தியா பாகிஸ்தானை கேட்டுக் கொள்ளும். பாகிஸ்தான் இதனைச் செய்ய இயலாத நிலையில் ஆஸாத் காஷ்மீருக்குள் இந்தியா புகும். ஆஸாத் காஷ்மீரிலிருந்து படை வாபஸ் பெறாவிட்டால் அணு ஆயுதத்தை உப யோகிப்பதற்கான இறுதி எச்சரிக்கையை பாகிஸ்தான் விடுக்கும். பாகிஸ்தான் அதனைச் செய்துவிடும் எனும் அச்சத்தில் பாகிஸ்தானின் அணு ஆயுத நிலைகள் மீது இந்தியா வெற்றியளிக்காத சம்பிர தாயமான ஒரு தாக்குதலை மேற் கொள்ளும். இதனைத் தொடர்ந்து, அணு ஆயுதத்தைப் பயன்படுத்தாவிட்டால் அதனை இழக்க நேரிடும் எனும் அச்ச உணர்வினால் எல்லைப்புற இந்திய இராணுவ இலக்குகள் மீது அணுஆயுதத் தாக்குதலை பாகிஸ்தான் மேற்கொள்ளும்.

04 மீதமுள்ள பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை இஸ்லாமியவாதிகள் கைப்பற்றுகிறார்கள் என அமெரிக்க உளவு அறிக்கை காட்டும். பாகிஸ்தானின் அணுவாயுத நிலைகள் மீது சம்பிரதாய பூர்வமாக தாக்குதலை மேற்கொள்ள இது அமெரிக்காவை தூண்டும்.

05 பாகிஸ்தானில் பூரண அராஜகம் குடிகொள்ளும். அங்கு ஒழுங்கை நிலைநாட்ட இந்திய இராணுவம் உட்புகும். நாடு சீர்குலையும்போது, அதன் பிராந்தியங்கள் இந்தியாவுடன் இணைந்து கொள்ளும். சிந்த், பலூசிஸ் தான், வடமேல் எல்லைப் பிராந்தியம் ஆகியவற்றின் பாராளுமன்றங்கள் இந்தியாவின் தலைமையிலான கூட்டுறவு (Confederation) க்கு ஆதரவான தீர்மானத் திற்கு வாக்களிக்கும். 'இந்தியக் கூட்டுறவு' ஒன்று பிறக்கும். தனிமைப்படுத்தப்பட்ட பஞ்சாப் மாகாணம் கூட்டுறவுடன் இணைந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படும். இந்திய பஞ்சாபுடன் அது இணைந்து ஒரு பரந்த பஞ்சாப் மாநிலத்தை கூட்டுறவுடன் நிறுவும்.

இந்த ஆய்வுகள் 2020ம் ஆண்டில் பாகிஸ்தான் மறைந்துவிடும் எனவும், இந்தியக் கூட்டுறவு தெற்காசியப் பிராந்தி யத்தில் ஒரு வல்லரசாக (Super State) மாறும் எனவும் கூறுகின்றன. இவை இந்தி யாவை ஒரு பிராந்திய ஏகாதிபத்தியமாக காணுவதால் அமெரிக்க திட்டமிடல் அதி காரிகள், அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக் களத்தை இந்தியாவுடன் ஒரு மேம்பட்ட பொருளாதார, யுத்த தந்திர முறையை கையாள முந்திக் கொள்ள வேண்டும் என இப்போது வலியுறுத்துகின்றனர்.

(அடுத்த இதழில் Dragonfire எனும் நாவல் பற்றிய விமர்சனம் இடம்பெறும்)

# நந்தவனமும் - அதன் வானம்பாடியும்

காஷ்மீரத்து தோப்புக்களில் எனக்கு மிகை பிரியம்
ஆத்மபரவச வனங்களில் வானம்பாடி நேசம்
ஆதாமின் ஆதனங்களைப் பெற்றோம் நாம் தாயம்
சுவனத்துச் சோலைகளைப் போன்றது நம் தேசம்

ஏடன் முத்தும் யெமெனின் ரத்தினங்களும் இன்னும்
கவரிமான் கஸ்தூரியும் சிதறிப்போயின தூரம்
காஷ்மீர்விட்டு இந்தியாவில் வாழுமெமைப் போலும்
பறந்ததுவே வானம்பாடி கூடுவிட்டுத் தூரம்

காஷ்மீரின் நந்தவன மலரன்றோ என்தேசம்
ஷீராஸினது என்குரல் ஹிஜாஸினதோ என்னிதயம்
பனிக்காலக் குளிரிரவில் நடுநடுங்கி ஏழை யாகம்
அவன் கலையோ குபேரன்தோள் போர்வை எனப் போகும்

பூங்காற்றே நேர்ந்திட்டால் ஜெனீவாவை தாண்டிச் செல்ல
மறக்காதே அமையத்திடம் எம்சேதியை எடுத்துச் சொல்ல
உழவனோடு உழுநிலமும் அருவியுஞ்சேர் தேசம் நல்ல
காஷ்மீரம் மொத்தமுமாய் கிரயமானதுயர் விலையிலல்ல

எங்கள் இராச்சியம் குமிழியிலும் மென்மையாகும்
சுவாசக் காற்றுமெல்ல பட்டாலுமது உடைந்து போகும்
காஷ்மீரச் சுதந்திரத்தின் ஆன்மாவைக் கசக்கிப்போடும்
கோரமிகு கரங்களை இறைவாநீ உடைத்துப்போடு

உருது மூலம்:
கவிஞர் அல்லாமா இக்பால்
ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு:
ஆகில் அஹ்மத்

(கவிதைக்கான தலைப்பு மொழிபெயர்த்தோனால் இடப்பட்டது)

இலங்கை முஸ்லிம் சமூகம் :

# பிரச்சினைகளும் சவால்களும் -9

M.I.M. ஷபீக்
வாழைச்சேனை

## 05. பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலை

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பரந்து வாழும் முஸ்லிம்கள் விவசாயம் வியாபாரம், மீன்பிடி, கைத்தொழில், அரச உத்தியோகம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு என பலவாறான தொழில் முயற்சி களிலும் ஈடுபட்டு தமது வாழ்வுக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இருப்பினும் அநேக முஸ்லிம் குடும்பங்க ளின் பொருளாதாரம் ஸ்திரமற்ற நிலையி லேயே உள்ளது. இதற்கான காரணங் களை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

### i) திட்டமிட்ட பொருளாதார நெருக்குதல்கள்

உலகின் பல பாகங்களிலும் இஸ்லாம் பரவிய காலம் முதல் வாணிபத் துறையில் முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கான சூழலும், சந்தர்ப்பமும் கிடைத்தது. இலங்கையில் குடியேறிய முஸ்லிம்களும் பொருளாதார ரீதியில் சிறந்து விளங்கினர். எனினும், இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான பெரும்பான்மையின மக்களின் அரசியல் மற்றும் அதிகார நடவடிக்கைகள் முஸ்லிம சமூகத்தின் சுதந்திரமான பொருளாதார செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தன. தொழில் முயற்சி ஒன்றுக்கான இடத்தைப் பெறுதல், தொழில் முயற்சியை ஆரம்பித்தல், மூலதனத்தைப் பெறுதல், உற்பத்தியை சந்தைப்படுத்தல் போன்றவற்றில் சட்ட ரீதியான நெருக்குதல்கள் கொடுக்கப்பட்ட தோடு சூறையாடல், கொள்ளை, வழிப்பறி, இனரீதியான வன்செயல் போன்றனவும் இதற்காகத் தூண்டிவிடப்பட்டன.

இன்று பொதுவாக நாட்டிலும் குறிப்பாக வடகிழக்கு பிரதேசங்களிலும் நிலவும் அசா தாரண சூழலானது எந்தவொரு தொழில் முயற்சியையும் சுதந்திரமாக செய்வதற்கு பெரும் தடையாக உள்ளது. இதனால் ஒரு சமூகத்தின் பொருளாதார உரிமை மறுக்கப்படுவதோடு அவர்களால் பயன் படுத்தப்பட வேண்டிய வளங்கள் வீண் விரயம் செய்யப்படுகின்றன.

### ii. செல்வாக்குச் செலுத்தும் நவீன பொருளாதார எண்ணக்கருக்கள்

வாழ்க்கைக்கு ஆதாரமாக பொருள் அமைகிறது. பொருளைத் தேடுகின்ற பணி மனிதன் படைக்கப்பட்ட நாள் முதல் தொடருகிறது. அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**“உங்கள் வாழ்க்கையின் ஆதாரமாக இருக்கும் செல்வத்தை அதனைப் பயன்படுத்தத் தெரியாத மூடர்களிடம் கொடுத்து விடாதீர்கள்”**

மனித வாழ்வின் ஒவ்வொரு துறையும் கூறுபோட்டு நோக்கப்பட்ட நவீன ஐரோப் பாவிலேயே பொருளியலும் தனியாக நோக்கப்பட்டு வரைவிலக்கணங்கள் முன் வைக்கப்பட்டன. இத்துறையில் முன்னோடி யாகக் கருதப்படுபவர் ‘அடம் ‘ஸ்மித்’ என்பவராகும். ‘‘பொருளியல் என்பது செல்வத்தினை ஆராயும் இயல்” என்பது இவரது கருத்து. மத நம்பிக்கையும், ஒழுக்கப் பண்பாடுகளும் நிறைந்த அன்றைய கிறிஸ்தவ ஐரோப்பாவில் இக்கருத்து பலவாறாக விமர்சிக்கப்பட்டது.

- சுயநலத்தின் மூலமும் நேர்மையற்ற வழிகளின் மூலமும் செல்வத்தினைத் தேடத் தூண்டுகிறது.
- மக்களிடம் காணப்படும் தெய்வ நம்பிக்கையை இல்லாமற் செய்து பணத்தை தெய்வமாகக் கொண்டு வழிபடத் தூண்டும்.
- மனிதனை விட செல்வத்துக்கு முன்னு ரிமை கொடுக்கிறது.

ஆம்! மேற்கூறிய எல்லா நிலைகளும் இன்றைய உலகில் நிதர்சனமாகவே காணப் படுகின்றன. அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**“உன்னிடம் இருக்கும் பொருள்களை எல்லாம் அல்லாஹ்வே உனக்குக் கொடுத்தான். ஆகவே உனக்களித்திருப் பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக்கொள். இம்மையில் தானம் செய்து நீ தேடிக் கொண்டதுதான் உன்னுடைய பாகம் என்பதை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு பொருளைக் கொடுத்து நன்மை செய்த பிரகாரம் அதனைக் கொண்டு நீயும் (பிறருக்குக் கொடுத்து) நன்மை செய். பூமியில் நீ விஷமம் செய்ய விரும்பாதே! ஏனென்றால் விஷமிகளை நிச்சயமாக அல்லாஹ் விரும்புவதில்லை.”**

**(28:77)**

உண்மையில் மனித சிந்தனையில் உதித்த பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்ட, மனித நலனைக் கருத்திற் கொள்ளாத மனிதனது ஆன்மாவின் தேவைகளைப் புறக்கணித்த பொருளியல் தத்துவங்களே இன்றைய உலகின் பொருளாதாரத்தை இயக்குவிக்கும் சக்தியாக இருக்கின்றன. இதனால் வறுமையும் பட்டினிச்சாவும் சில நாடுகளின் அல்லது சில சமூகங்களின் தலைவிதியாக மாறியிருக்கின்றன.

இக்கருத்துக்களின் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்பட்ட வளர்முக நாடுகளது பொருளாதார இலட்சணம் எவ்வாறிருக் கிறது எனில், மூன்றாம் மண்டல நாடுக ளின் அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கத் தேவையான 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஐரோப்பாவில் பிராணிகளின் உணவுக்காக செலவாகிறது.

பின்தங்கிய நாடுகளிலுள்ள பெண்களின் நல்வாழ்வுக்காக தேவைப்படும் 13 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அங்கு நறுமணத்துக்காக செலவிடப்படுகிறது.

சுத்தமான குடிநீர், கழிவகற்றல் என்ப வற்றுக்காக தேவைப்படும் 11 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஐரோப்பிய நாடுகளில் ஐஸ்கிறீமுக்காக செலவிடப் படுகிறது.

பொதுவாக மனிதனின் பௌதீக ரீதியான தேவைகளை மாத்திரம் கருத்திற் கொண்டு மனிதனது ஆன்மாவின் தேவைகளை புறக்கணித்து விடுகின்ற இக்கருத்துக்க ளானது, மனிதன் அவன் யார்? படைக்கப் பட்ட நோக்கமென்ன? வாழ்வு எதற்காக தரப் பட்டுள்ளது? பிரபஞ்சம் ஏன் படைக்கப்பட் டுள்ளது? போன்றவை தொடர்பான கருத்தி யலை புறக்கணித்து விடுகிறது. விளைவு மனிதன் வெறுமனே ஒரு பொருளாதாரப் பிராணியாக மட்டுமே நோக்கப்படுகிறான்.

### III. மூலதனப் பற்றாக்குறை

இன்று எம் சமூகத்தில் உழைப்பதற்கு ஆற்றலும் தகுதியும் உள்ளவர்கள் காணப பட்ட போதிலும், அவர்களது தொழில் முயற்சிக்குத் தேவையான மூலதனத்தை வழங்கும் தாபனரீதியான ஏற்பாடுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. எந்த வொரு தொழில் முயற்சியைப் பொறுத்த வரை இன்று பெருமளவு நிதி மூலதனம் தேவைப்படுகிறது. சிலபோது இந்நிதி மூலதனம் வழங்கப்பட்ட போதிலும் அவற்றுக் கான சட்ட ஏற்பாடுகள் மிகவும் குறைவு என்பதால் அவை அலட்சியப்படுத்தப் படுவதும் உண்டு. இதனால் வங்கிகளை நாடி வட்டிக்கு கடன் பெறுவதையும் பொருளை அடகுவைப்பதையும் சேமிப்பை மேற்கொள்வதையும் காணமுடிகிறது. அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**“அல்லாஹ் வட்டியை ஒழித்துக்கட்டி தான தர்மங்களைப் பெருக்குகிறான்”**

**(2:276)**

**"அல்லாஹ்வுக்காக அழகிய கடன் வழங்குபவர் யார்? அதை அவன் அவருக்கு அனேக மடங்கு அதிகரிக்கச் செய்வான்" (2:245)**

இஸ்லாமிய அடிப்படையிலான பொருளாதார முயற்சிகள் இன்று பரவலாக இஸ்லாமிய உலகில் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும் மிகவும் நம்பிக்கையூன உறுதியான சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலும் காலதாமதமின்றி மூலதனத்தை வழங்குவதற்கான முயற்சி ஒவ்வொரு கிராமத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவது மிகவும் இன்றியமையாத தேவையாகும். மஸ்ஜிதை மையமாக வைத்து இப்பணி தொடங்கப்படலாம். ஸகாத் வசூலித்தல் விநியோகம் செய்தல் ஆகியன தொடங்கி முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குதல், மூலதனத்தை வழங்குதல், அடகுபிடித்தல், சேமிப்பைத் தூண்டுதல் போன்ற அனைத்து பொருளாதார முயற்சிகளும் முன்னெடுக்கப்படலாம். மஸ்ஜிதை மையமாகக் கொண்டு தொடங்கப்படுகின்ற இப்பணிகளில் ஏனைய சமூக நிறுவனங்கள், அமைப்புகள கணிசமான பங்கினை வகிக்க முடியும்.

இலங்கையில் காணப்படுகின்ற அல் அமானா முதலீட்டு நிறுவனம், அக்குறனை இஸ்லாமிய வங்கி, புத்தளம் மாவனல்லை போன்ற இடங்களில் இயங்குகின்ற இஸ்லாமிய வங்கிகள் யாவும் தமது அனுபவங்களை பிறருக்கும் பகிர்ந்து கொள்வது இத்துறை மேலும் சிறப்பாக வளர்ச்சியடைய உதவியாக இருக்கும். அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"நீங்கள் நன்மைக்கும் பரோபகாரத்துக்கும் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். அன்றி தீமைக்கும் அநியாயத்துக்கும் உதவியாக இருக்க வேண்டாம்."**

### IV. உழைப்பில் அக்கறையின்மை

இலங்கை முஸ்லிம் சமூகத்திலே வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் அநேகம். ஒருவரது உழைப்பில் பலர் வாழ வேண்டிய நிலை. உழைக்க வேண்டுமென்ற சிந்தனை பலரிடம் மிகக் குறைவு. சிறிதளவு சம்பாத்தியமானாலும் அதைப் பெறுவது நல்லது என்று கருதாமல் சோம்பிக் கிடக்கின்ற நிலையை நாம் காணலாம். எத்தகைய உழைப்பானாலும் அதுபற்றிய நுணுக்கமும் சந்தை நிலவரங்களும் பலருக்குத் தெரிந்திருப்பதில்லை. நவீன பொருளாதாரத்தில் சந்தை நிலவரங்களை அவதானித்தல் மிகவும் இன்றிமையாததவையாகும்.

பெண்கள் வெளிநாடு செல்லத் தொடங்கியதால் ஆண்கள் உழைப்பது தேவையற்ற ஒன்றாக மாறிவிட்டது. குறிப்பிட்ட காலம் உழைக்காதிருந்து விடுவதால் சோம்பல் ஏற்பட்டு விடுகிறது. பின்னர் பெண்கள் தொடர்ந்து வெளிநாடு செல்லத் தொடங்கி விடுகின்றனர். உற்பத்திக்கு உழைப்பு இன்றியமையாதது. உழைப்பின் போதுதான் வருமானத்தைப் பெறலாம். உழைக்காமல் யாசகம் கேட்பது இழிவானது.

இஸ்லாம் கூறும் ஒழுக்கவிதிகளுக்கு முரணாகாத எந்தத் தொழிலில் ஈடுபடுவதையும் இஸ்லாம் தடுக்கவில்லை.

**"உங்களில் ஒருவர் ஒரு கயிற்றை எடுத்துச் சென்று ஒருகட்டு விறகைத் தனது முதுகில் சுமந்து கொண்டு வந்து விற்பனை செய்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விட மேலான காரியம்."**

**(புகாரி, முஸ்லிம்)**

உழைக்காமல் சோம்பிக் கிடப்பதை இஸ்லாம் விரும்புவதில்லை உழைக்கக் கூடிய சக்தியுள்ள ஒருவர் எவ்வித தொழிலும் செய்யாமல் இருப்பது ஹராமானதாகும். அத்தகையோருக்கு ஸகாத்தில் பங்கு கொடுக்கப்படவும் முடியாது. அதனை நபியவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.

**"செல்வந்தனுக்கும் (ஏழையாக இருந்தாலும் உழைக்கும்) சக்தியுள்ளவனுக்கும் ஸகாத் ஹலாலாக மாட்டாது."**

**(திர்மதி)**

மேற்கூறிய நபிமொழிகள் உழைப்பின் உயர்வை உணர்த்தப் போதுமானவை.

### V. நவீன சமூக அமைப்பு தோற்றுவித்துள்ள ஆடம்பர மோகம்

வாழ்க்கைத் தேவைகள் நாளுக்கு நாள் விதம்விதமாக பூர்த்திசெய்யப்படத் தொடங்கியதால் எதிலும் ஆடம்பர மோகம் ஏற்பட்டுள்ளது. வீடுகட்டுவது முதல் வீட்டுத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வது வரை பெருத்த செலவுடனான நடவடிக்கையே இடம்பெறுகிறது. வாழ்வதற்கு சில சாதனங்கள் தேவை என்பதைவிட சாதனங்கள் தேடுவதே வாழ்க்கையின் நோக்கமாகி விட்டதையும் அத்தகைய மனோநிலையே எங்கும் வளர்க்கப்படுவதையும் காணமுடிகிறது. சில பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பை அதிகம் நாடுவதும் இதற்காகவே. எளிமையான வாழ்வுதான் இனிமையானது; மறுமையில் விமோசனத்தைத் தரவல்லது என்பதை முஸ்லிம்கள் உணர்ந்து வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் வரையறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**"அவர்கள் இவ்வுலக வாழ்வையிட்டுச் சந்தோசமடைகிறார்கள். இவ்வுலக வாழ்வோ அற்ப சுகமேயன்றி வேறு எதுவுமில்லை" (சூரத்துர் ரஃத்: 26)**

**"அவன்தான் மரணத்தையும் வாழ்வையும் உங்களில் எவர் செயல்களில் சிறந்தவர் என்பதைப் பரீட்சிப்பதற்காகப் படைத்தான்" (சூரதுல் முல்க் :2)**

### VI ஸகாத் சரிவர சேகரித்து வழங்கப்படாமை

செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படாது அவை சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரையும் சென்றடைய வேண்டும்; நீதியும் சமத்துவமும் பேணப்பட வேண்டும்; மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் பொருளாதார தத்துவங்களாகும். இவை மேற்கத்தைய பொருளாதார முறைமைகளின் சுலோகங்களாக இருந்தபோதும் அவை நடைமுறையில் காணப்பிக்கப்படுவதில்லை.

எந்தவொரு அம்சத்தையும் கூறுபோட்டு நோக்காத இஸ்லாம், பொருள், அது கையாளப்பட வேண்டிய விதம் என்பவற்றையும் ஒரேவித கண்ணோட்டத்திலேயே நோக்குகிறது. செல்வத்தின் சொந்தக்காரன் அல்லாஹ். இச்செல்வம் மனிதனுக்கு அமானிதமாக கொடுக்கப்பட்டுள்ளது. இப்பின்னணியிலேயே இஸ்லாம் ஸகாத்தையும் ஏனைய தான தருமங்களையும் கடமையாக்கியுள்ளது.

முஸ்லிம்கள் செறிந்து வாழுகின்ற ஒவ்வொரு கிராமத்திலும் நீண்டகால திட்டமிடலின் அடிப்படையில் ஸகாத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு, மிகச் சிறந்த முடிவுகளை எடுத்து ஸகாத்தை வசூலித்து விநியோகம் செய்யலாம். ஸகாத் வசூலித்து விநியோகம் செய்கின்ற செயற்பாடு ஓரளவாவது முஸ்லிம் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படுமாயின் எமது சமூகம் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வினைக் காணமுடியும். எமது சமூகத்திலே ஸகாத்தை வழங்குவதற்கு தகுதியான பலர் இருக்கின்றனர். அவர்களை அணுகி ஸகாத் தொடர்பான கூட்டுமுயற்சி பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்படுமாயின் அவற்றை இலகுவாக முன்னெடுக்கலாம். இதற்காக ஒரு குழுவினர் தியாகத்துடன் செயற்பட வேண்டியுள்ளது. அல்குர்ஆன் கூறுகிறது:

**"விசுவாசிகளே! தொழுகையை கடைப்பிடித்து தொழுது, ஸகாத்தும் கொடுத்து (அவனுடைய) தூதரை (முற்றிலும்) பின்பற்றி வாருங்கள். நீங்கள் (இறைவனுடைய) அருளை அடைவீர்கள்." (24:56)**

ஸகாத் மட்டுமன்றி ஏனைய தான தர்மங்களாக இஸ்லாம் கடமையாக்கியுள்ள ஸகாத்துல் பித்ர், ஸதகா, உழ்ஹிய்யா, அகீகா, விருந்தோம்பல், பெற்றோருக்கு உபகாரம் செய்தல், அண்டை வீட்டானை நேசித்தல், அனாதைகளை ஆதரித்தல், விதவைக்கு வாழ்வளித்தல், போன்ற இன்னோரன்ன அம்சங்களும் சரிவர நடைமுறைப்படுத்தப்படுமாயின் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதார நிலை ஸ்திரமாவதற்கான சூழல் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: (மீதி 51ம் பக்கம்)

# மஹ்ரம் துணையின்றி ஒரு பெண் ஹஜ்ஜில் பங்கேற்றல்

பதாவா முஆஸிரா

மூலம் : கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி  தமிழில் : அஷ்ஷெய்க் A.A. கியாஸ் முஹம்மத் (நளீமி)

**கேள்வி:**
உடல் ஆரோக்கியமும், ஹஜ்ஜுக்கான பண வசதியும் படைத்த ஒரு பெண் கணவனோ மஹ்ரமோ உடன்வரும் வாய்ப்பின்றி இருக்கிறாள். இந்நிலையில் அவள், இன்றைய பயணங்கள் முன்னர்போல் ஆபத்துக்கள் இன்றி பாதுகாப்பு நிறைந்ததாக இருக்கிறது என்ற வகையில் ஏனைய முஸ்லிம் ஆண் பெண்களோடு சேர்ந்து ஹஜ்ஜில் பங்கேற்கலாமா? அல்லது மஹ்ரம் கிடைக்கும் வரை ஹஜ்ஜைப் பிற்படுத்த வேண்டுமா?

**பதில்:**

ஒரு பெண் தனியாகவன்றி கணவன் அல்லது மஹ்ரம் உடன்தான் பிரயாணம் செய்ய வேண்டும் என்பது இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையாகும்.

இமாம் புகாரியும் ஏனையவர்களும் இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்கள் வாயிலாக அறிவிக்கும் நபிமொழி இதற்கு ஆதாரமாக அமைகிறது.

**“ஒரு பெண் மஹ்ரம் இன்றி பயணம் செய்யக் கூடாது. அவள் மஹ்ரம் இன்றி இருக்கையில் அவளிடம் யாரும் செல்லக் கூடாது.”**

**“அல்லாஹ்வையும் மறுமையையும் விசுவாசிக்கின்ற ஒரு பெண் மஹ்ரம் இன்றி ஒரு பகல் ஒரு இரவு அளவான தூரம் பயணம் செய்யக் கூடாது.”**
அறிவிப்பவர் : அபூஹுரைரா (رضي الله عنه)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம், மாலிக், அபூதாவுத், திர்மிதி, இப்னு மாஜா.

**“ஒரு பெண் கணவன் அல்லது மஹ்ரம் துணையின்றி ஒரு நாள் தூரமான பயணங்கள் மேற் கொள்ளக் கூடாது”**
அறிவிப்பவர்: அபூ ஸயீத் (رضي الله عنه)
ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

**“மஹ்ரம் இன்றி மூன்று இரவுகள் ஒரு பெண் பயணிக்கக் கூடாது”**
அறிவிப்பாளர் : இப்னு உமர் (رضي الله عنه)
ஆதாரம் : புகாரி, முஸ்லிம்

இவ்வாறு வித்தியாசமான அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளமை கேள்வி கேட்டவர்களின் வித்தியாசங்களுக்கு ஏற்ப அமைந்தவை யாகும். இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் கூட இறுதி அறிவிப்பான இப்னு உமர் (رضي الله عنه) அவர்களின் ஹதீஸை உறுதிப்படுத்தி கஸ்ர் தொழுகை அளவான பயணங்களி லேயே மஹ்ரம் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் எனக் கூறுகிறார். இமாம் அஹ்மதும் இத்தகைய ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஹதீஸ்கள் கடமையான பயணங் களாக அமையும் வியாபாரம், கல்வி தேடல், உறவினர்களைத் தரிசித்தல் போன்றவற்றையும் அவை அல்லாத வற்றையும் உள்ளடக்கும்.

சிலர் நினைப்பது போன்று இந்த சட்டத் திற்கான அடிப்படை பெண்கள் குறித்த தப்பபிப்பிராயமோ அவளது பண்பாடுகளில் ஏற்படும் சந்தேகமோ அல்ல. மாறாக அவளது கற்புக்கும் கௌரவத்துக்குமான பாதுகாப்பு முன்னேற்பாடும் உளநோய் பிடித்தலையும் ஆண்களின் இச்சைகளிலி ருந்து அவளைக் காப்பதும், பாதுகாப்பும் மனித நடமாட்டமும் குறைந்த பாலைவனப் பகுதிகளில் வழிப்பறிக் கொள்ளைக்காரர் கள், அத்துமீறக்கூடியவர்களிலிருந்து பெண்ணைப் பாதுகாப்பதுமே இதன் நோக்கமாகும்.

எனினும், அனுமதிக்கப்பட்ட வாஜிபான அல்லது முஸ்தஹப்பான அல்லது முபாஹான ஒரு பயணத்திற்கு ஒரு பெண்ணுக்கு மஹ்ரம் இல்லாத வேளை யிலும் நம்பிக்கைக்குரிய ஆண்களோ பெண்களோ இருந்து அல்லது பயணப் பாதை பாதுகாப்பானதாக இருந்தால் என்ன செய்வது?

பெண்களுக்கு ஹஜ் கடமையாவது பற்றிப் பேசவந்த சட்ட அறிஞர்கள் இவ்விடயம் குறித்தும் ஆய்ந்துள்ளனர். மஹ்ரமின்றி பெண் பயணம் செய்வதைத் தடுத்த அந்த ஹதீஸ்களுக்கு மத்தியில் அவர்கள் பின்வரும் நிலைப்பாடுகளைப் பெற்றனர்:

(அ) ஹதீஸ்களின் வெளிப்படையான கருத்தை நோக்கிய சில அறிஞர்கள் மஹ்ரம் இன்றி ஹஜ் போன்ற கடமை யான பயணங்களைக்கூட பெண்கள் மேற்கொள்ளக் கூடாது. இதில் எந்தவித விதிவிலக்கும் இல்லை என்பர்.

(ஆ) மற்றும் சிலர், இச்சைகளுக்கு அப்பாற்பட்ட வயது முதிர்ந்த பெண்களை விதிவிலக்காகக் கருதுகின்றனர். பொது வான சட்டத்தைக் குறிப்பானதாக ஆக்கு வதன் மூலம் இக்கருத்துக்கு மாலிக் மத்ஹபைச் சார்ந்த அறிஞர் பாயாஜி உடன்படுகிறார். மேலும், பெரும்பான்மை நிலைமையினைக் கருத்திற் கொண்டு இப்னு தகீக் அல்ஈத் அவர்களும் இக்கருத்துடன் உடன்படுகிறார்.

(இ) நம்பிக்கைக்குரிய பெண்களோடு ஒரு பெண் பயணம் செய்கின்றபோது, இதிலி ருந்து விதிவிலக்குப் பெறுவதாக சில அறிஞர்களும்; ஒரு சுதந்திரமான, முஸ்லிமான, நம்பிக்கைக்குரிய பெண் மாத்திரம் இருந்தாலும் போதுமானது என வேறு சிலரும் கருதுகின்றனர்.

(ஈ) பாதை பாதுகாப்பானதாக இருந்தாலே போதுமானது எனவும் சிலர் கூறுகின்றனர். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்களும் இக்கருத்தைக் கொண்டுள்ளார். ‘அல்பு(f)ரூஹ்’ எனும் நூலில் இப்னு முப்லிஹ் இப்னு தைமியா வின் கருத்தைப் பதிந்துள்ளார். பாதுகாப் புள்ள ஒவ்வொரு பெண்ணும் மஹ்ரம் இன்றிப் பயணம் செய்யலாம். இது அனைத்து பயணங்களுக்கும் பொருந்துவ தாகும். சுன்னத்தான ஹஜ்ஜுகளில் இது ஆகுமானது என்ற இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் கருத்தை அல்கராபீஸி (ரஹ்) குறிப்பிடுகிறார். இமாமவர்களின் மத்ஹபைச் சார்ந்த சிலர் சுன்னத்தான ஹஜ் போலவே கடமையல்லாத வியாபார மற்றும் ஸியாரத் போன்ற பயணங்களிலும் இது ஆகுமானது என்கின்றனர்.

இமாம் அஹ்மதின், ``கடமையான ஹஜ்ஜின்போது ஒரு பெண் சக பெண்களோடும் இதர நம்பகமான பலரோடும் இணைந்து செல்வதால் மஹ்ரம் இருக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக அமையாது'' என்ற கருத்தை இமாம் அல்-அஸ்ரம் (ரஹ்) குறிப்பிடுகிறார்.

சுருக்கமாகக் கூறின்,

❁இப்னு ஸீரீன்- ஒரு முஸ்லிமுடனும்
❁அல்அவ்ஸாஈ- நம்பகமான ஒரு குழுவுடனும்
❁மாலிக்- பெண்கள் குழுவுடனும்
❁ஷாபிஈ- சுதந்திரமான, நம்பகமான முஸ்லிம் பெண்ணுடனும்
❁ஷாபிஈ மத்ஹபின் சிலர்- பாதுகாப்பு இருந்தால் தனியாகச் செல்லலாம் என்றும் கூறுவர்.

இமாம் இப்னு ஹஜ்ர் (ரஹ்) இது குறித்து, ``ஷாபிஈக்களின் பிரபலமான கருத்து கணவன், அல்லது மஹ்ரம் அல்லது நம்பகமான பெண்கள் இருத்தல் வேண்டும் என்பதாகும். அவர்களின் மற்றுமொரு கருத்துப்படி நம்பகமான ஒரு பெண் போதுமாகும். இமாம் அல்கராபீஸி தனது `முஹத்த'பில் ஸஹீஹான ரிவாயத்தாக பதியும் ஷாபிஈக்களின் பிறிதொரு கருத்துப்படி பாதை பாதுகாப்பாக அமைந்தால் பெண் தனியாக பயணம் செய்யலாம்'' என்று தொகுத்துக் கூறுகிறார்.

இக்கருத்துகள் ஹஜ் உம்ராவுக்கான பயணம் குறித்துக் கூறப்பட்டிருப்பினும் கூட அனைத்துப் பயணங்களுக்கும் ஏற்புடையதாகும். இக்கருத்தை சில அறிஞர்களும் தெளிவாகக் கூறியுள்ளனர். காரணம் இங்கு பெண்ணின் பாதுகாப்பே பிரதானமானதாகும். இந்நோக்கம் பாதுகாப்பான பாதை, நம்பகமான ஆண் பெண்கள் காணப்படல் என்பன மூலம் எல்லாப் பயணங்களிலும் அடையப் பெறலாம்.

ஒரு பெண் பாதுகாப்பும் நம்பகமானவர்களும் இருக்கையில் மஹ்ரம் இன்றி பயணம் செய்யலாம் என்பதற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:

1. இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் பதிவு செய்யும் ஓர் அறிவிப்பில், உமர் (ரழி) அவர்கள் பெருமானாரின் மனைவியருக்கு அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது உடன் செல்வதற்கு அனுமதி வழங்கினார்கள். அவர்களோடு உஸ்மான் பின் அப்பான் (ரழி) அப்துர் ரஹ்மான் (ரழி) ஆகியோரையும் அனுப்பி வைத்தார்கள். இந்த நிகழ்வில் உமர் (ரழி) அவர்களுடன் குறிப்பிட்ட இரு சஹாபாக்களும் உம்முஹாதுல் முஃமினீன்களும் உடன்பட்டிருப்பதோடு, ஏனைய சஹாபிகள் யாருமே அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமையும் நோக்கத்தக்கதாகும். இது இஜ்மாவாக கொள்ளப்படும் ஓர் அம்சமாகும்.

2. இஸ்லாத்தின் எதிர்காலம், அது உலகில் பரவி நிலை பெறுவது குறித்த நபி (ஸல்) அவர்களின் ஹதீஸை அதி பின் ஹாதிம் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**``ஒரு பெண் தனது கணவன் துணையின்றி ஈராக்கின் அல்-ஹைராப் பகுதியிலிருந்து கஃபாவை நோக்கிப் பயணிக்கின்ற காலம் தோன்றும். அவளுக்கு அல்லாஹ்வின் அச்சத்தைத் தவிர வேறு எந்தப் பயமும் இருக்காது''**
**(புகாரி, முஸ்லிம்)**

இந்நபிமொழி குறிப்பிட்ட விடயம் நிகழும் என்பதை மட்டுமன்றி, அவ்விதம் இடம்பெறுவது கூடும் என்பதையும் காட்டுகிறது. காரணம் இது இஸ்லாம் விரிவடைந்து அதன் பாதுகாப்பு வியாபிப்பதைப் புகழ்ந்துரைக்கும் தோரணையில் கூறப்பட்டதாகும்.

இவற்றோடு சேர்த்து பின்வரும் இரு காயிதாக்களையும் (அடிப்படைகள்) இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

(அ) முஆமலாத் விடயங்களில் சட்டங்களுக்கான நோக்கங்களைக் கருத்திற் கொள்வதே அடிப்படையாகும். இது இபாதத்களிலிருந்து வித்தியாசப்பட்டு அமைகிறது. காரணம், இபாதாக்களில் நோக்கங்களைப் பார்க்காது ஏற்று கட்டுப்படுவதே அடிப்படையாகும். இந்தக் காயிதாவை இமாம் ஷாதிபி (ரஹ்) ஆதாரங்களோடு விளக்கியிருக்கிறார்.

(ஆ) அடிப்படையிலேயே ஹராமாக்கப்பட்ட ஒரு விடயம் நிர்ப்பந்த நிலையின் போது மாத்திரமே அனுமதிக்கப்படும். ஆனால், `சத்துத் தரீஆ' (அடிப்படையில் ஆகுமான ஒன்று தீமைக்கான வழிகளை அடைக்கும் வகையில் தடுக்கப்படல்) என்ற வகையில், ஹராமாக்கப்பட்டவை நிர்ப்பந்தம் மாத்திரமன்றி சாதாரண தேவைகளுக்காகவும் அனுமதிக்கப்படும். இவ்வடிப்படையில் பார்க்கின்ற போது ஒரு பெண் மஹ்ரம் இன்றி பயணம் செய்யக் கூடாது என்பதுவும் `சத்துத் தரீஆ' வகையில் தடுக்கப்பட்டதாகும்.

இவை போக இன்றைய பயணங்கள் முன்பை விடவும் வித்தியாசப்பட்டமைவதும் நோக்கத்தக்கதாகும். முன்னர் வழிப்பறிக் கொள்ளை, திருடர்கள், பாலைவனங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தமை காரணமாக ஆபத்துகள் நிறைந்ததாகவே பிரயாணங்கள் அமைந்தன. இன்றைய போக்குவரத்து சாதனங்களாக அமையும் விமானங்கள், கப்பல்கள் மற்றும் வாகனங்கள் பெருந்தொகையான பயணிகளைச் சுமக்கும் வகையில் அமைகின்றன. இந்நிலை நம்பிக்கைக்கு உத்தரவாதம் அளிப்பதோடு, பெண்கள் எவ்விடத்திலும் தனித்திருக்க வாய்ப்பளிக்காததால் அவள் தொடர்பான அச்சத்தையும் போக்கி விடுகின்றன.

எனவே இத்தகைய பாதுகாப்பு நிறைந்த சூழலில் ஒரு பெண் மஹ்ரம் இன்றி ஹஜ்ஜுக்கு செல்வது பிரச்சினைக்குரிய விடயமாக அமையாது.

### தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த இதழில், `எமது சமூகம் பக்குவப்பட வேண்டும்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கட்டுரையில் ஹதீஸின் அரபுப் பகுதி அச்சகத் தவறு காரணமாக இட - வலம் மாறி இடம்பெற்றுவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம். அதன் சரியான வடிவம் இதோ:

اللَّهُمَّ أَهِلَّهُ عَلَيْنَا بِالأَمْنِ وَالإِيْمَانِ
وَالسَّلَامَةِ وَالإِسْلَامِ رَبِّي وَرَبُّكَ اللهُ
هِلَالُ رُشْدٍ وَخَيْرٍ


### விற்பனை முகவர்கள் தேவை

அல்ஹஸனாத்தின் விற்பனை முகவராகி இஸ்லாமிய சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் அல்லாஹ்வின் நற்கூலியையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு:**

**CIRCULATION MANAGER,**
**'ALHASANATH,'**
**77, DEMATAGODA ROAD,**
**COLOMBO 00900 (TP : 687091)**



# வதந்தி ஒரு சமூகநோய்

அஷ்ஷெய்க் எம்.ஐ. ஹுஸைன், சங்கட்டிக்குளம்

'வதந்தி' என்ற சொற்பிரயோகம் இன்று நேற்று உருவானதொன்றல்ல. இது மிகவும் பழமை வாய்ந்த ஒரு சொல். என்று மனிதவர்க்கம் தோற்றம் பெற்றதோ அன்றிலிருந்தே இதன் வரலாறு ஆரம்பிக்கிறது. ஆதம் நபியின் சுவர்க்க வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்ததே வதந்திதான். வதந்தி ஒரு சமூக நோய். ஒரு மனிதனை புதைகுழி வரை கொண்டு செல்ல நோய் காரணமாக அமைவது போல இவ்வதந்தி நோய் ஒரு சமூகத்தை ஆட்கொள்ளுமாயின் அதுவே அச்சமூகத்தினை அழிவிற்கு இட்டுச் செல்லப் போதுமானதாகும்.

இவ்வதந்தி நபிமார்கள், ரஸூல்மார்கள், ஸாலிஹீன்கள் எவரையும் விட்டுவைக்கவில்லை. அதனது பிடிக்குள் சிக்கிய ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பாதுகாப்பதில் பெரும்பாடுபட்டுள்ளான். ஒரு சமூகத்தின் வரலாற்றுப் பாதையையே திருப்பிவிடும் வல்லமை இதற்குண்டு. ஒரு சமூகத்தின் வீழ்ச்சிக்கும் இவ்வதந்திகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்ததனை வரலாற்றில் நாம் காண முடியும்.

உண்மையில் அவ்வதந்திகளின் காரண கர்த்தாக்கள் யார்? இவர்கள் இதனைப் பரப்ப பயன்படுத்திய ஊடகங்கள் எந்தத் தன்மை வாய்ந்தவை? இதனை எதிர்கொள்வதற்கான வழிமுறை எவ்வாறானது? என்பன பற்றிய தெளிவைப் பெறுதல் அவசியமாகும்.

வதந்திகள் பரவுவதற்கான காரணிகள், ஊடகங்கள் என்பன கால மாற்றத்திற்கேற்ப வித்தியாசப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் நபிமார்களின் காலத்தில் வதந்தியைப் பரப்புவதற்காக முன்னின்றவர்களின் பண்புகளும், அவர்களின் நோக்கமும், ஊடகங்களும் தற்போதய காலத்தில் இருப்பதை விட வித்தியாசப்பட்டிருப்பதை காணலாம்.

வதந்தி ஒரு சமூக நோய் என இனங்காணப்பட்ட அதேவேளை, அதனை எதிர்ப்பது சமூகக் கடமை என்பதையும் மறக்கலாகாது. எந்த சமூகத்தில் வதந்தி பரவுமோ அச்சமூகத்தின் சீரான தன்மை குலைந்து போகும்; அச்சமூக பிரஜைகளிடையே உறவுகள் பலமிழந்து போகும். அச்சமூகத்தின் மரணத்திற்குக் காரணமாகவும் அது அமைந்துவிடும். தலைமைத்துவக் கட்டுக்கோப்பு செயலிழந்து, அல்லாஹ்வின் நி'மத்துகள், அருள்கள் யாவும் மறைந்து விடும்.

முஹம்மத் தன்தாவி சொல்வது போல, ''கெட்ட எண்ணங்கள், வதந்திகள் உருவாவதெல்லாம் எவ்வித அடிப்படையும் அற்ற யூகிப்புகளில் இருந்துதான். மாறாக, யதார்த்தபூர்வமான உண்மைகளில் ஒரு போதும் கெட்ட எண்ணமோ, வதந்திகளோ உருவாவதில்லை. எனவே ஒரு வதந்தியின் உருவாக்கம் இடம்பெற வேண்டுமென்றிருந்தால், அதனது மூலஊற்று ஊகிப்பாகவோ, அல்லது ஒரு பொய்யாகவோதான் இருக்க முடியும்.''

எந்த ஒரு சமூகத்திலேனும் வதந்தி பரவிக்காணப்படும் என்றிருந்தால் அங்கே அச்சமூகத்தினரிடையே பிறரைப் பற்றிய தீயஎண்ணம் வலுவடைந்திருக்கும் என்பது இதிலிருந்து புலனாகிறது.

அறிஞர்கள், புத்திஜீவிகள், சீரிய தன்மையுடையவர்கள் வாழும் ஒரு சமூகத்தில் ஒருபோதும் வதந்திகள் பரவுவதில்லை. ஒரு பிரஜையிடமிருந்து இன்னொரு உள்ளத்துக்கு இவ்வதந்தி பரவுமுன் அது இறந்து விடும். ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனிடம் செல்ல அதற்கு உயிர் இருக்காது. ஏனெனில் இப்புத்திஜீவிகள், சீரிய தன்மையுடையவர்கள்- இவர்களுக்கு ஏதாவது ஒரு செய்தி கிடைத்து விட்டால் அதனது அமைப்பினைக் கண்டு அச்செய்தி பற்றிய தெளிவினைப் பெற முயல்வார்கள். அச்செய்தியின் கருப்பொருளை, உள்ளகத்தை வைத்தே அதனது இயல்பை அறியும் ஆற்றலைப் பெற்றிருப்பார்கள். சொல்லப்பட்டவற்றில் மிகச் சரியானதையே அடுத்தவர்களுக்கு அறிவிப்பார்கள். அதே நேரம் அதனைப் பரப்பும்போது செவியேற்றதில் உண்மை எனத் தெளிந்தவற்றையே உண்மைப்படுத்துவர். இது ஒளிபொருந்திய புத்தியையும், உணர்வுள்ள செவிகளையும், அமைதியடைந்த உள்ளத்தினையும் கொண்ட சமூகத்தின் இயல்பாகும்.

ஆனால் இதற்கு முன்பின் முரணான சமூகத்தில்தான் வதந்தி தலைநிமிர்ந்து வாழும். இச்சமூகப் பிரஜைகளின் மாற்றமான பண்புகள் இவ்வதந்திகளின் காப்புகள். இச்சமூகம் எந்த வித உண்மையையும் அடிப்படையாகக் கொள்ளாது. இவர்கள் புத்தியின் சாயலையே காணாதவர்கள். நேர்மை, சீர்மை என்பது இவர்களின் எதிர் ஆவணங்கள். சிலபோது ஆச்சரியம், அதிசயம் பொதிந்த கூற்றுக்களை இன்னும் இன்னும் ஆச்சரியத்தின் அளவை அதிகப்படுத்தி அடுத்தவர்களிடம் சொல்வதில் இன்பமடைவர். தெரிவிக்கும் விடயம் கேட்போருக்கு சற்றேனும் தெரியாது என்றிருந்தால் சொல்பவர்கள் அடையும் ஆனந்தம் பாரியது. அல்லது அடுத்த மனிதன் சம்பந்தப்பட்ட ஒரு செய்தியாயின் தான் எத்தகைய குறைகளை விட்டும் பூரணமானவன் என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்த முயற்சிப்பார். உண்மையில இவர்களுக்கு கிடைக்கும் செய்தியின் உண்மை நிலையைப் பிரித்தெடுக்கும் அறிவு அறவே இல்லாதிருக்கும். அவ்வாறு இவ்வாற்றல் கொண்டவர்களாக இவர்கள் இருந்தாலும் அடுத்தவர்களை தாழ்த்துவதில் இன்பம் கிடைக்கும் என்பதால் அச்செய்தியை திரிபுபடுத்தவே முயற்சிப்பர். அதனது அடிப்படைத் தன்மையை மாற்றி விடுவர். அதிலே உள்ள உண்மைத் தன்மையை மறைத்து பொய்யையே அதனது கருப்பொருளாகக் கொள்வர்.

வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்தே மோசடிக்காரர்களின் வதந்திகளில் இருந்து நபிமார்களோ, ரஸூல்மார்களோ, ஸாலிஹீன்களோ தப்பிக்கவில்லை. இவ்வதந்திகளுக்கு அடிப்படைக் காரணிகளாக பொறாமை, குரோதம், சுயநலம், பிடிவாதம் போன்றவையே அமைந்திருந்தன. இத்தகைய பாதகப் பண்புகள் இவர்களை தொடர்ந்தும் வதந்திகளின்பால் தூண்டிக் கொண்டிருந்தன.

ஆதம் (عليه السلام) அவர்களை அல்லாஹ் சுவர்க்கத்தில் குறிப்பிட்ட காலத்துக்கு வாழவைத்தான். இப்லீஸின் பொய்யான வதந்தி ஒன்றினால் அவர் அந்த சுவர்க்க வாழ்வையே இழக்க நேர்ந்தது. ஆதம் (عليه السلام) அவர்களுக்கு சுவனத்தில் அனைத்தையும் உட்கொள்ள அனுமதித்திருந்த அல்லாஹ் ஒரு மரத்தின் கனியை மட்டும் அணுக வேண்டாம் என தடுத்திருந்தான். இப்லீஸோ ஆதமின் எதிரி. ஆதமின் சுகபோக வாழ்வை இப்லீஸால் தாங்க முடியவில்லை. அவனது பொறாமை, வஞ்சகம் என்பன அவனைத் தூண்டிக் கொண்டே இருந்தன. எனவே ஒரு பொய்யான கதையினை ஆதம் (عليه السلام) அவர்களுக்கு சொன்னான். ''அல்லாஹ் தடுத்த கனி, பல சிறப்பம்சங்களைக் கொண்டது; அது நிரந்தரத்தை ஏற்படுத்தும்; அதனை உட்கொண்டால் சுவன வாழ்வு நிரந்தரமாகிவிடும்'' எனக் கூறினான்.

இதனைக் குர்ஆன் இவ்வாறு கூறிக் காட்டுகிறது:

**''நாம் சொன்னோம். ஆதமே நீயும் உனது மனைவியும் சுவர்க்கத்தில்**



வசியுங்கள். நீங்கள் நாடியவாறு சுவனத்திலிருந்து போசனங்களை சுகியுங்கள். எனினும் இம்மரத்தினை நெருங்காதீர்கள். அவ்வாறு செய்வீர்களாயின் நீங்கள் அநியாயக்காரர்களாகி விடுவீர்கள்"

(அல்அஃராப் : 19)

"அவர்கள் இருவரையும் ஷைத்தான் வழிபிறழச் செய்துவிட்டான்"

ஷைத்தான் அவர்களை வழிகெடுத்த முறையினை அல்லாஹ் ஸூரதுல் அஃ.ராபில் இவ்வாறு சொல்கிறான்:

"நீங்கள் இருவரும் மலக்குகளாக ஆகிவிடக் கூடாது; அல்லது நிரந்தரமாக இருப்பவர்களாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகவேயன்றி உங்கள் இரட்சகன் இந்த மரத்தினை விட்டும் உங்களைத் தடுக்கவில்லை. நிச்சயமாக நான் உங்கள் இருவருக்கும் உபதேசம் செய்பவனாகவே உள்ளேன் என்று கூறி சத்தியமும் செய்தான்."

(அல்அஃராப் : 20-21)

இதே கருத்தினை சூரத்துத் தாஹாவிலேயும் அல்லாஹ் குறிப்பிட்டுக் காட்டுகிறான், ஷைத்தான் ஆதமைப் பார்த்து இவ்வாறு கேட்டான்:

"ஆனால் ஷைத்தான் அவர் மனதில் ஊசாட்டத்தை உண்டாக்கி விட்டான். 'நித்திய வாழ்வளிக்கும் மரத்தையும், முடிவில்லா அரசாங்கத்தையும் உமக்கு நான் அறிவித்துத் தரட்டுமா?' என்று கேட்டான்" (தாஹா : 120)

இந்த ஊசலாட்டத்திற்கு ஆதம் (عليه السلام) அவர்கள் உட்பட்டதால் அவர் அக்கனியை உண்ணவே அவரும், அவரது மனைவியும் சுவனத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். எனவே, ஒரு வதந்தி நிஃ.மத்தை விட்டும் அப்புறப்படுத்தக் கூடியது. பிழையின்பால் இட்டுச் செல்லக் கூடியது.

இவ்வாறே நூஹ் (عليه السلام) அவர்களும் அவரின் சமூகத்தினால் பரப்பப்பட்ட பல வதந்திகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மக்கள் மத்தியில் அவர்கள் நூஹ் (عليه السلام) பற்றிய பல பொய்யான வதந்திகளைப் பரப்பி விட்டனர். பைத்தியம், வழிகேடன், அவரைப் பின்பற்றுபவர்கள் பொய்யர்கள் என்றெல்லாம் அவரை வர்ணித்துக் கூறினர். அவர் வாதிட்டுக் கொண்டிருப்பவை ஒரு சீர்திருத்தப் பணிக்காகவல்ல; மாறாக பிரபல்யமும், ஆட்சியுமே அவரின் நோக்கம் என்றெல்லாம் கூறித் திரிந்தனர். நூஹ் நபியின் சமூகத்தின் முக்கியஸ்தர்கள் இவ்வாறு கூறியதாக ஸூரதுல் முஃ.மினீனில் அல்லாஹ் கூறுகிறான்:

"இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதரேயன்றி வேறில்லை. உங்களை விட மேன்மையடையவே அவர் விரும்புகிறார். அல்லாஹ் நாடியிருந்தால் ஒரு மலக்கை இறக்கியிருக்கலாம். இவை எம் முதல் முன்னோரிடத்தில் நாம் செவியேற்கவில்லை. நிச்சயமாக இவர் பைத்தியக்காரரேயன்றி வேறில்லை. இவருடைய நேரம் வரும் வரை காத்திருங்கள்."

நபி (ﷺ) அவர்களையும் வதந்தி விட்டு வைக்கவில்லை. இதனை அல்லாஹ் தஆலா சூரத்துல் 'ஸாத்' இல் இவ்வாறு குறிப்பிடுகிறான்:

"மேலும் எச்சரிப்பவராகிய (நீர்) ஒரு தூதர் அவர்களிலிருந்தே அவர்களிடம் வந்ததைப் பற்றி அவர்கள் ஆச்சரியப்பட்டு, 'இவர் பொய்யரான சூனியக்காரர்' என்று நிராகரிப்போர் கூறினர்." (38:4)

"அவர்களில் உள்ள தலைவர்கள் இவரை விட்டு நீங்கள் சென்று விடுங்கள். இன்னும் உங்கள் தெய்வங்கள் மீது நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக இது ஏதோ ஒன்றை நாடப்பட்டதாக இருக்கிறது என்று கூறிச் சென்றனர்." (38 : 6)

முஹம்மத் நபி (ﷺ) அவர்களின் மீது வதந்தியை பரப்புவதுடன் அவர்கள் நின்று விடவில்லை; நபியின் குடும்பத்தினர் மீதும் பொய்யாக வதந்தியை பரப்பி தஃ.வாவிற்கு ஒரு இழிவை ஏற்படுத்த அவர்கள் நாடினர். இதில் ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா மீது பரப்பிய வதந்தி முக்கியமானதாகும். இது புகாரி, முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இவ்வாறு அறிவிக்கிறார்கள்:

''நபியவர்கள் எங்காவது பிரயாணம் போக நாடினால் தமது மனைவியருள் எவரை கூட்டிச் செல்வது என்பதற்கு சீட்டுப் போட்டுப் பார்ப்பார்கள். அச்சீட்டில் யாருடைய அம்பு தெரிவாகிறதோ அவரே நபியவர்களுடன் பயணம் செய்வார்கள். பனூ முஸ்தலக் செல்ல ஆயத்தமானபோது நபியவர்கள் சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள். அதில் எனது அம்பே தெரிவானது. எனவே நான் நபி (ﷺ) அவர்களுடன் போகத் தயாரானேன். பெண்களின் மறைப்பு சம்பந்தமான வசனம் இறங்கிய பின்னரே இது நடந்தது. எனவே நான் மறைவான அம்பாரியில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டேன். எல்லா விடயங்களையும் முடித்து விட்ட பின்னர் நாங்கள் நகரத்திற்கு வந்தோம். இரவிலே பிரயாணம் செய்ய வேண்டியதாக இருந்தது. படை தயாராகும் வரை எனது தேவையை நிறைவேற்றுவதற்காக எழுந்து சென்று விட்டேன். தேவையை நிறைவேற்றிவிட்டு வருகின்றபோது எனது மாலை தொலைந்திருந்ததை உணர்ந்தேன். அதனைப் பெறவேண்டும் என்ற ஆவல் எனக்கிருந்ததனால் நான் அதனைத் தேடிச் சென்றேன். பின்னர் என்னை அழைத்து வந்த பிரயாணக் குழுவை நோக்கிச் சென்றேன். அப்போது அது அவ்விடத்தை விட்டுச் சென்றிருந்தது. நான் அம்பாரியில் இருப்பதாக அவர்கள் எண்ணியிருக்கின்றனர். அங்கே இருந்த என்னைப் போன்ற பெண்களும் இதனைக் கவனிக்கவில்லை. அவர்கள் அவ்வம்பாரியின் மறைவை மூடும்போதும் அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்கள் அவ்விடத்தை விட்டு நகர்ந்த பின்னரே எனது மாலையை கண்டுபிடித்தேன். அப்போது அவர்கள் இருந்த இடத்தை அடைந்தபோது அவர்கள் சென்றிருந்தனர். நான் இருந்த இடத்திற்கே சென்றேன். அவர்கள் மீண்டும் என்னைத் தேடி வருவார்கள் என்றெண்ணி நான் அவ்விடத்திலே அமர்ந்து கொண்டேன். நான் அமர்ந்து கொண்டிருக்கும்போது என்னையறியாமலே நித்திரை வந்து நான் தூங்கி விட்டேன். ஸப்வான் இப்னு மிஃ.தல் அஸ்ஸலமி படையை விட்டும் பிந்தி இருந்ததனால் அவர் அங்கு வந்தடைந்தார். என்னைக் கண்டு என்னை அவர் நெருங்கி வந்தார். நான் கறுப்பு நிற ஆடை அணிந்திருந்தேன். பின்னர் நான் யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டார். அவர் என்னுடன் எந்தப் பேச்சும் பேசவில்லை. அவர் திரும்பிச் செல்லப் போகிறார் என்பதைத் தவிர வேறெதையும் என்னிடம் அறிவிக்கவில்லை. அவருடைய ஒட்டகம் மண்டியிட்ட போது நான் அதன் மீது ஏறிக்கொண்டேன். படையை அடையும் வரை நான் அந்த ஒட்டகத்திலே பயணம் செய்தேன். நான் அங்கு சென்றதும் எனது விடயம் மோசமாக திரிவுபடுத்தப்பட்டிருந்ததைக் கண்டேன். நான் தீயசெயலில் ஈடுபட்டதாக என்மீது அவதூறு கூறப்பட்டிருந்தது. இதனை முனாபிக்குகளின் தலைவனான அப்துல்லாஹ் இப்னு ஸலூலே முன்னின்று செய்திருந்தான்."

முனாபிக்குகள் நபியவர்களின் குடும்பத்தினை இழிவுபடுத்தி தஃ.வத்தை தடுக்க நாடினர். எனவே அல்லாஹ் தஆலா இவ்வதந்தி பொய்யானது என குர்ஆன் வசனத்தை இறக்கி தெளிவுபடுத்தினான்.

"உங்களிலே ஒரு கூட்டம் பொய்யான வதந்தி ஒன்றினை அவதூறாக இட்டுக் கட்டியது. இதனை நீங்கள் தீங்கான ஒன்று என நினைக்க வேண்டாம். மாறாக இது உங்களுக்கு நன்மையானதே. இதற்கு காரணகர்த்தாவாக முன்னின்றவனுக்கு பாரிய வேதனை உண்டு."

(50ம் பக்கம் பார்க்க)



# வீடு தீப்பிடித்து எரியும்போது...

சகோதரி ஆஇஷா முனவ்வர்

(சென்ற இதழ் தொடர்)

**'பெண்களை வலுப்படுத்தல்' (Empowering of Women) எனும் மேற்கின் சித்தாந்தத்தை தாங்கள் சரிகாண்கிறீர்களா? பாகிஸ்தானில் இதனடிப்படையிலான செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா? அல்லது இதனை நீங்கள் எதிர்க்கிறீர்களா? அவ்வாறாயின் அதன் வழிமுறைகள் யாவை?**

⊙ 'பெண்ணை வலுப்படுத்தல்' எனும் பெயரில் மேற்கத்தேய சமூகம் பெண்களை எவ்வாறு சுரண்டுகிறது, பலிகொள்கிறது என்பதை யாவருமறிவர். அமெரிக்காவிலும் சரி, இங்கிலாந்திலும் சரி பெண்ணானவள் துன்பகரமான வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். உணர்வு ரீதியாக மட்டுமன்றி, பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பற்றவளாகவே பெண் அங்கு காணப்படுகிறாள். அங்கே ஒரு தந்தைக்கு தனது மகள்மீது எந்தக் கடப்பாடும் கிடையாது. தனது சகோதரியின் கண்ணியம், கௌரவம் பற்றி அவள் சகோதரனுக்கு எவ்விதக் கரிசனையும் இல்லை. உறவு முறைகள் கிடையாது. அவர்களது பெண்களின் மீதுள்ள கடப்பாடுகளையும், உரிமைகளையும் அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதற்கு குடும்ப அமைப்பொன்று அங்கு உருவாக்கப்படவில்லை. அவள் பெண்ணுக் கேயுரிய இன்றியமையாத குடும்பம் எனும் நிறுவனத்திலிருந்து தனிமைப்படுத்தப் படுகிறாள். அமெரிக்காவில் மாத்திரம் நாளொன்றுக்குச் சராசரியாக 1000 விவாகரத்துக்கள் நடை பெறுகின்றன.

எனவே, தீவிரமான பாதுகாப்பற்ற நிலையால் இன்றைய பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைச் சற்று எண்ணிப்பாருங்கள். அவளது நிலை இஸ்லாத்திற்கு முன்னுள்ள பெண்களை ஒத்ததாக இருக்கிறது. நவீன மேற்கத்தேய சமூகத்தைச் சற்று நோக்குங்கள். அதன் வர்த்தகம் பாலியல் உணர்வின் அடிப்படையிலமைந்த வழிமுறையைக் கொண்டிருக்கின்றது. இது, மனிதகுலத்திற்கே கேவலமான, அதன் மாண்புகளைச் சீரழிக்கின்ற மிகமோசமான எல்லைக்கே வந்துவிட்டது. அங்கே ஆண்களும், பெண்களும் ஒரே தொழிலைச் செய்கின்றனர். ஆனால் அவள் சமஊதியம் பெறுவதில்லை. இந்த அநீதிக்கெதிரான கிளர்ச்சிகள் அங்கே தினசரி நிகழ்வுகளாகிவிட்டன. அங்கே உயர் பதவிகள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. அவள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆணுக்கு இரண்டாம் பட்சமாகவே நடாத்தப்படுகிறாள். தொழிற்சங்கங்களிலும், வங்கிகளிலும் ஏனைய காரியாலயங்களிலும் அவள் ஆணுக்குச் சமனாக அங்கே நடாத்தப் படுவதில்லை. ஹோட்டல்களில் மதுபானம் பரிமாறுகிறாள்; ஆண்களைக் கிளர்ச்சியூட்டுகிறாள்; ஆண்களின் அருவருப்பான கேலிக்கு ஆளாகிறாள்; அவர்களது குரூரமான உடலியல் மற்றும் பாலியல் ரீதியான சேஷ்டைகளுக்கு முகங்கொடுத்து அவற்றை ஜீரணித்துக் கொள்ள வேண்டியவளாகிறாள். இவற்றிற்கெல்லாம் ஊதியமாக அவள் பெறுவது வெறுமனே சில டொலர்களே.

சுருங்கக் கூறின், மேற்குலகு பெண்ணுக்கு எதனையும் வழங்காத நிலையில் அவளிடம் இருப்பதையெல்லாம் திட்டமிட்டு கபளீகரம் செய்து கொண்டுள்ளது என்பதற்கு நாம் ஆதாரங்களைத் தேட வேண்டியதில்லை. அவளது இல்லிடம், மனஅமைதி, சுய கௌரவம், கண்ணியம், அழகு, ஆற்றல் அனைத்தையும் அபகரித்துக் கொண்டு அவளைக் கைகழுவி விட்டிருக்கிறது. நவீன வரலாற்றில் அதிசயிக்கத்தக்க விதத்தில் அதிர்ச்சியூட்டுகின்ற மிக மோசமான அநீதியும் சுரண்டலும் இதுவேயாகும்.

**பாகிஸ்தானில் சனத்தொகைக் கட்டுப்பாட்டுக்கெதிராக பாகிஸ்தான் ஜமாஅத்தின் பெண்கள் பிரிவு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?**

⊙ ஒரு சமூகம் அதன் ஒவ்வொரு அலகும் தனித்தனியாக மறுசீரமைக்கப்படுவதன் மூலம் அது முழுமையாக சீர்செய்வது அசாத்தியமானதாகும். எனவேதான் நமது நடைமுறை ஒழுங்கை மொத்தமாக மாற்றியமைப்பதைப் பற்றிப் பேசுகிறோம். அதற்காக முயற்சிக்கிறோம். எமது பாதையில், தவறாக வழிநடாத்தப்படும் முயற்சிகளையும், நச்சுப் பிரச்சாரங்களையும் முறியடிப்பதற்காக எங்களால் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறோம். இலத்திரனியல தொடர்பூடக அனுசரணையுடனான சனத்தொகைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பதிலடியாக நாம் எங்களால் எட்டக்கூடிய தொடர்பூடகமான அச்சு ஊடகங்களைப் பயன்படுத்துகிறோம். இதன் மூலம் எமது மக்களை, உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்த அறிவூட்டுகிறோம். பொருளாதார நெருக்கடிக்கான உண்மைக் காரணி சனத்தொகைப்



சகோதரி ஆஇஷா முனவ்வர் ஊடகவியலாளர்களுக்கு பேட்டி அளிக்கிறார்.

பெருக்கமன்றி, சமூகத்தில் காணப்படும் ஊழலும், அநீதியுமே எனத் தெளிவுபடுத்துகிறோம். மறுபுறத்தில், இவ்வகையான சனத்தொகைக் கட்டுப்பாட்டுப் பிரச்சார இயக்கங்கள் முழுமையாகக் கேடானவை என்பதனையும், பரவலாக விநியோகிக்கப்படும் அதற்கான மருந்துகளும் உபகரணங்களும் இறையச்சத்தை உள்ளங்களிலிருந்து நீக்கிவிடுவதுடன் பாவமிழைக்கவும் தூண்டுகின்றன என்பதனையும் அவர்களுக்குப் புரியவைக்கிறோம். எனவே இவை அனைத்தும் அழிவைத் தரக்கூடியவை. இது நீடிக்குமானால், எமது சமூகத்தை பாவங்கள் நிறைந்த அருவருப்பான சமூகமாக மாற்றி, எமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் சிதைத்துவிடும். இந்த விழிப்புணர்வையும், அவதானத்தையும் ஏற்படுத்தும் வகையில் சாத்தியமான அனைத்து வழிமுறைகளிலும் எல்லா மட்டங்களிலும் எமது மக்களை நாம் அறிவூட்டுகிறோம்.

**எமது சகோதரிகள் அரை நிர்வாண ஆடைகளில் திரிவதையும், சந்தை சதுக்கங்களில் ஆண்களுடன் சகஜமாகக் கலந்திருப்பதையும் கண்டு உண்மையில் நான் அதிர்ச்சி அடைகிறேன். இதற்காக எவ்வாறான அடிமட்ட நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்கிறீர்கள் என்பதை விபரிப்பீர்களா?**

⊙ எமது அழைப்பு பொதுப்படையானது. சமூகத்தின் எல்லா மட்டங்களிலுமுள்ள அனைத்து சகோதரிகளையும் நாம் தொடர்பு கொள்கிறோம். அவர்களது வீடுகளுக்குச் சென்று அவர்களுடன் உரையாடுகிறோம். நீங்கள் குறிப்பிட்டது போன்ற அனைத்து தீங்குகளிலிருந்தும் எம்மைக் காக்கின்ற கேடயமான எமது மார்க்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நாம் முயற்சிக்கிறோம்.



அவர்களுக்கு அல்குர்ஆனின் போதனைகளைக் கற்றுத் தருகிறோம். மார்க்கப் போதனைக்கான எங்கள் அமைப்பு திறம்பட ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையான புதிய முஸ்லிம் பெண்களை நாம் இஸ்லாத்தை நோக்கி அழைக்கிறோம். நாம் விஞ்ஞான முறைமையான திடமான ஒழுங்கில் பணியாற்றுகிறோம். இங்கு பாகிஸ்தானில் நீங்கள் காண்பவை கவலைக்கிடமானவையாக உள்ளன; நீங்கள் அதிர்சியுறுகிறீர்கள். உங்களது விசனம் நியாயமானது. அதுவே எங்களது கவலையுமாகும். ஆனால், எம்மிடம் உரிய வளங்கள் இல்லை என்பதனைத் தாங்கள் தயவு கூர்ந்து கவனத்திற் கொள்ள வேண்டும்.

அதேவேளை, அரசிடம் அனைத்து வளங்களும் உள்ளன. எங்களிடம் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டே நாம் செயற்பட வேண்டியுள்ளோம். பாரிய மாற்றத்தைக் கொண்டு வரவேண்டியது அரசின் கடப்பாடாகும். மட்டுமன்றி அது அரசின் சக்திக்குட்பட்டதாகவே உள்ளது. ஆனால் துரதிஷ்டவசமாக அரசு இதில் போதிய கவனம் செலுத்தவில்லை. இதனால் தீமைகள் படிப்படியாக உரம் பெற்றுள்ளன. எம்மால் இயலுமானவரை கண்ணியத்தைக் கொண்டு அறிவூட்ட முயற்சிக்கிறோம். இன்னும், இறைவனருளால் நாம் வெற்றி அடைந்திருக்கிறோம். அதனாலேயே, பெரும்பாலான பெண்கள் நீங்கள் கண்ணுற்றவாறு நடந்து கொள்வதில்லை.

இங்கு நாம் வரையறுக்கப்பட்ட வளங்களை வைத்துக் கொண்டு கடினமான ஒரு போராட்டத்தையே மேற்கொள்கிறோம். இது இலத்திரனியல் யுகம். தொடர்பூடகங்கள் அனைத்து வீடுகளையும் ஆக்கிரமித்துள்ளன. நாகரிகம் எனும் பெயரில் அசூசையையும், கிட்டத்தட்ட நிர்வாணத்தையும் அவை மக்களுக்குப் போதிக்கின்றன. இது எமது சமூகத்தை, குறிப்பாக இளம் சந்ததியினரை பாரதூரமாகப் பாதிக்கும் என்பதனை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். மக்களின் நடை, உடை, பாவனை என்பன தொடர்பூடகங்களால் ஆளப்படுகின்றன. ஆனால், நாங்கள் அதற்குச் சரணடையப் போவதும் இல்லை; நம்பிக்கை இழக்கப் போவதும் இல்லை. நாம் அல்குர்ஆனின் போதனைகளுடன் வாசற்படிகள் தோறும் செல்கிறோம். விவாதங்களையும், கருத்தரங்குகளையும் நாம் நடாத்துகிறோம். அவற்றில் இந்த வாழ்க்கை இஸ்லாத்திற்கு முரணானது என்பதனை விவரிக்கிறோம். இருப்பினும் உண்மையில் ஒரு தொடர்பூடகம் கையில் இருப்பதைப்போல் நாம் ஆற்றல் பெறவில்லை என்பது யதார்த்தமாகும்.

**பாகிஸ்தானில் ஆண்-பெண் தனிப்படுத்தலுக்கான எவ்வகையான திட்டங்களை முன்வைத்துள்ளீர்கள்?**

⊙ ஆணையும், பெண்ணையும் இஸ்லாம் தனித்தனியாகவே கருதுகிறது. இஸ்லாத்தின் பார்வையில், பாதுகாப்பான சமூக வாழ்க்கையும், பண்பாட்டின் இருப்பும் அவர்களின் பிரத்தியேகமான செயற்பாட்டுப் புலத்திலேயே தங்கியிருக்கிறது. இயற்கை மார்க்கம் என்பதனால் இஸ்லாமானது இருபாலாரும் கலந்திருப்பதன் தீங்குகளை தீர்க்கதரிசனப்படுத்தியிருக்கிறது. எனவே, சமூகத்தைத் தீங்குகளிலிருந்து தூய்மையாகப் பேணுவதற்கும், தீய எண்ணங்களில் இருந்து இதயங்களையும், கண்களையும் பாதுகாப்பதற்கும், பெண்ணின் கௌரவத்தை உயிர்ப்பாக பேணுவதற்குமாக, ஒரு புறத்தில் ஆணையும் பெண்ணையும் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கட்டளையிட்டுள்ளபோது, மறுபுறத்தில் பெண்ணை உடலை மறைக்கும்படி கட்டளை இடுகிறது. ஒருபடி மேலாக அவர்கள் கூட்டாக வழிபாடு செய்வதைக்கூட தடைசெய்கிறது. பெண்மையின் கௌரவம், கண்ணியம் சம்பந்தப்பட்டமட்டில் இஸ்லாம் உணர்வுமிக்கது. முஸ்லிம்கள் தலைசிறந்து விளங்கிய காலப்பகுதியில் இஸ்லாத்தின் கட்டளைகளின் விளைவே இதுவாகும். வரலாற்றில் முஸ்லிம் சமூகத்தில் கலப்புச் சூழலின் இழையொன்றைத்தானும் காண முடியாது. அக் காலப்பகுதியில் முஸ்லிம் பெண்கள் உயர்கல்வியைப் பெற்றபோதும். இந்தக் கட்டளைகள் பண்பாட்டின் முன்னேற்றத்திலும், சமூகமயப்படுத்தலிலும் சிறப்பான பங்காற்றின.

18ம் நூற்றாண்டிலேயே மேற்கத்தேய சமூகத்தில் கலப்புச் சமூக அமைப்பு உருவாகியது. கைத்தொழிற் புரட்சியின் காரணமாக உற்பத்தியை அதிகரிப்பதற்கும், எந்திரங்களுடன் வேலை செய்வதற்குமான தொழிலாளர் தேவை அதிகரித்தது. இதனால பெண்களும் ஆண்களுடன் வேலையில் ஈடுபட்டனர். பின்னர் அதுவே, வழக்கமாகத் தொற்றிக் கொண்டது. பிற்பட்ட காலத்தில் இது சுமக்க முடியாத சுமை என்பதனைப் பெண்கள் உணர்ந்தனர். பின்னர் ஹோட்டலகளிலும், கடைகளிலும், காட்சியறைகளிலும் வேலை செய்தல் போன்ற இலகுவான தொழில்களில் அவர்கள் அமர்த்தப்பட்டனர். இதுவே அவர்களது சமூக வீழ்ச்சிக்கும், சுரண்டலுக்குமான ஆரம்பமாக அமைந்தது. தங்களது அழகை பயன்படுத்திக் கொள்ள ஆவல் கொண்ட பெண்கள் திரைப்படங்களிலும், கலை அரங்குகளிலும் முகங்காட்ட ஆரம்பித்தனர். அங்கே அவள் அவளது கண்ணியத்தை மட்டுமன்றி பெண்மையையும் சேர்த்தே இழந்தாள்.

சுதந்திரமான கலப்புச் சமூகத்தின் விளைவாக விரசம் பொதுவான ஒன்றாக மாறியிருக்கிறது. ஓர் அறிக்கையின்படி கருச்சிதைவு மிகவும் சாதாரண நடைமுறையாக மாறியுள்ளது. அமெரிக்காவில் மாத்திரம் வருடாந்தம் 1.5 மில்லியன் கருச்சிதைவுகள் பதிவு செய்யப்படுகின்றன. இவை அனைத்தும் தவறான உறவினால் உருவானவை. கலப்புச் சமூகம் மற்றும் சுதந்திர பாலியல் எனும் மரத்தின் கனிகள்தாம் இவை. இந்த ஆபத்தான விளைவையொட்டி மேற்கத்தேய சமூகமே அதிர்ந்து போயிருக்கிறது.

இதனாலேயே அல்லாஹ்வும், அவனது தூதரும் ஆண்களும் பெண்களும் ஒருவரோடு ஒருவர் கலப்பதைத் தடை செய்துள்ளார்கள். ஒரு பெண்ணானவள் பிரத்தியேகமான சூழலிலேயே அவளது ஆற்றலைக் கொண்டு திறம்படச் செயற்பட முடியும் என்பது யதார்த்தமானதாகும். அவளது கௌரவம், அவளது சூழலை வேண்டி நிற்கிறது. இதனையே நாம் எங்களுக்குள்ள வளங்களைக் கொண்டு செயற்படுத்தி வருகிறோம். இங்கே மார்க்கக் கல்வியையும் நவீன விஞ்ஞானக் கல்வியையும், கற்பதற்கென பெண்களுக்கு தனியான கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் உள்ளன. தொழில்புரியும் அனைத்துப் பெண்களுக்கும் தனியான சூழல் ஒதுக்கப்பட வேண்டுமென நாம் குரல்கொடுக்கிறோம்.

**முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்ற நாடுகளில் உள்ள முஸ்லிம் பெண்களைப் பற்றியும், அவர்களூடாக முஸ்லிம் அல்லாத பெண்களுக்கான தஃவா செயற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்வதற்கான ஏதாவது திட்டங்களை நீங்கள் கொண்டிருக்கிறீர்களா?**

⊙ வேறு தேவைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு குடியமர்ந்திருக்கும் தனிப்பட்டவர்களிலேயே இதற்காக தற்போதைக்கு நாம் தங்கியிருக்கிறோம். இவ்வாறான செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கான மனித வலுவும், வளங்களும் தற்போது எம்மிடம் இல்லை. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் இவ்விடயத்தில் சிரத்தையெடுப்போம். ●

**தமிழில்:**
**ரக்ஷானா ஷரிபுத்தீன்**



ஸஹாபிப் பெண்மணிகள்

(கடந்த இதழ் தொடர்)

# கன்ஸா பின்த் அம்ர் (ரழியல்லாஹு அன்ஹா)

கலீபா உமர் (رضي الله عنه) அவர்களின் சகோதரா ஸைத் இப்னுல் கத்தாப் (رضي الله عنه) அவர்கள் ஒரு போரில் ஷஹீதானார்கள். அவர்கள் இறையச்சமும் ஒழுக்கமும் கொண்ட உத்தமராய்த் திகழ்ந்தார்கள். தனது சகோதரர்மீது கலீபா உமர் (رضي الله عنه) அவர்கள் அளவு கடந்த அன்பு வைத்திருந்தார்கள். அவருடைய திடீர் மரணத்தால் பெரும் துக்கத்திற்கும் துயரத்திற்கும் ஆளானார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கலீபாவை சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வந்திருந்தார்கள். அவர்களிடம் தம் பாசத்திற்குரிய சகோதரர் மீது இரங்கற்பா எழுதித் தருமாறு உமர் (رضي الله عنه) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதனை ஏற்று கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கருத்தாழமிக்க இலக்கிய நயம் செறிந்த கவிதைகளைப் பாடினார்கள்.

**இறைவன் மீது சத்தியமாக**
**ஸக்ர் முஆவியா மீது**
**ஒரு போதும் நான் அழுதுகொண்டு**
**திரிந்திருக்க மாட்டேன்- அவர்கள்**
**ஜைதைப் போன்று மரணமடைந்திருந்தால்**

கன்ஸா (رضي الله عنها) அவர்கள் எத்துணை உண்மையைக் கூறினார்கள். அவர்களின் இரு சகோதரர்களான ஸக்ரும் முஆவியாவும் இறைவனை நிராகரிக்கும் நிலையில் கொல்லப்பட்டார்கள். ஆனால் ஸைத் (رضي الله عنه) அவர்கள் இறைவழியில் மரணத்தைச் சந்தித்தார்கள். ஷஹீத் எனும் மகத்தான அந்தஸ்த்தை அடைந்தார்கள்.

**பிள்ளைகளுக்கு ஊக்கமளித்தல்**

அன்னை கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் உறுதியான இறை நம்பிக்கையையும், இறைவழியில் அர்ப்பணிக்கும் தியாக மனப்பான்மையையும் எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி காதிஸிய்யா போரின் போது நிகழ்ந்தது.

கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஜிஹாதிய ஆர்வமிகுதியால் களம் நோக்கிப் புறப்பட்டார்கள். போர்த் திறனும் இளமைத் துடிப்பும்மிக்க தம்முடைய நான்கு மகன்களையும் உடன் அழைத்து வந்தார்கள்.

முதல் நாள் முன்னிரவில் அனைத்து வீரர்களும் சிந்தனை வாய்ப்பட்டிருந்தனர். மறுநாள் விடிந்ததும் நடைபெறவுள்ள பயங்கரமான காட்சியைத் தங்களின் மனத்திரையில் ஓடவிட்டுக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால் அங்கே களத்தின் ஓர் ஓரத்தில் அன்னை கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தம்முடைய நான்கு புதல்வர்களையும் அருகே அழைத்து அமர்த்தி ஓர் உணர்ச்சி மிகு உரையை ஆற்றுகிறார்கள்:

''எனதருமைப் புதல்வர்களே! நீங்கள் சுயவிருப்புடனும் மகிழ்ச்சியுடனும்தான் இஸ்லாத்தை ஏற்றிருக்கிறீர்கள். விரும்பித்தான் ஹிஜ்ரத்தை மேற்கொண்டீர்கள். எந்த இறைவனைத் தவிர வேறு இறைவன் இல்லையோ எவன் என்றென்றும் நிலைத்திருப்பானோ அந்த இறைவன் மீது சத்தியமாக, எவ்வாறு நீங்கள் ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்துள்ளீர்களோ அவ்வாறே ஒரே தந்தைக்குப் பிறந்த சகோதரர்களாய் இருக்கிறீர்கள். நான் உங்களின் தந்தைக்குத் துரோகம் செய்யவுமில்லை; உங்களின் மாமனார்களை இழிவுபடுத்தவும் இல்லை. உங்களது பரம்பரை மாசற்றது; உங்களது குலம் குற்றமற்றது.

என் அன்புச் செல்வங்களே! இறைவழியில் ஜிஹாத் செய்வதை விடவும் அதிகமான நன்மையைப் பெற்றுத் தரும் காரியம் வேறொன்றும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். மேலும் மறுமையின் நிலையான வாழ்க்கை, அழியும் இவ்வுலக வாழ்க்கையை விட எவ்வளவோ சிறந்ததாகும் என்பதையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகிறான்:

**“இறை நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையைக் கைக்கொள்வீர்களாக. அசத்தியவாதிகளுக்கு எதிரில் உறுதியாக நிலைத்து நிற்பீர்களாக. (சத்தியத்திற்காக தொண்டு புரிய) எப்பொழுதும் ஒருங்கிணைந்து முனைப்புடன் இருப்பீர்களாக. மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ்வீர்களாக. இதனால் நீங்கள் வெற்றியாளர்களாய்த் திகழக்கூடும்.''**

எனதருமைப் புதல்வர்களே! போர் சூடு பிடிக்க ஆரம்பித்து அதன் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்குவதை நீங்கள் கண்டதும் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பரித்து எதிரிகளின் அணிகளிடையே ஊடுருவிச் செல்ல வேண்டும் இறைவழியில் பித்துப் பிடித்தவர்களாக வாட்களைச் சுழற்றித் தாக்குதல் தொடுத்து விட வேண்டும் அல்லாஹ்விடம் உதவிகோரிப் பிரார்த்தனை புரிந்த வண்ணம் இருங்கள். வெற்றி கிட்டினால் அது நல்லது; ஆனால் மரணம் அடைந்திட நேர்ந்தால் மறுமையின் சிறப்பிற்குரியவர்களாய் ஆவீர்கள் என்பது அதைவிடவும் மிக உயர்வானதாகும்.''

மறுநாள் காலை போர் உச்சகட்டத்தை அடைந்தபோது அந்த நான்கு புதல்வர்களும் தங்களுடைய தாயின் அறிவுரைக்கு ஏற்ப வீராவேசத்துடன் எதிரிப் படையினர் மீது ஊடுருவி தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தார்கள். வெகுநேரம் வரை அயராமல் சுழன்று சுழன்று தீரத்துடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். இறுதியில் ஒருவர் பின் ஒருவராக ஷஹீதாக்கப்பட்டார்கள்.

தம்முடைய புதர்வர்கள் போரில் வீர மரணம் அடைந்த செய்தியை அன்னை கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கேள்விப்பட்டதும், ''என்னுடைய புதல்வர்களுக்கு ஷஹாதத் எனும் உயர்ந்த பதவியை வழங்கிய இறைவனுக்கு நன்றி உரித்தாவதாக. அல்லாஹ்வின் அர்ஷின் நிழலில் என்னுடைய பிள்ளைகளை நான் சந்திப்பேன் எனும் நம்பிக்கை அவனுடைய கருணையால் எனக்கு உள்ளது.''

அன்று தம்முடைய சகோதரர்களின் பிரிவால் அழுது புலம்பிக்கொண்டு அளவு கடந்த துக்கத்தையும் மன வேதனையையும் வெளிப்படுத்தியவாறு அலைந்து திரிந்த அதே ஹன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்தான் இப்போது தங்களின் அன்பிற்குரிய புதல்வர்கள் போரில் மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் இறைவனுக்கு நன்றி செலுத்தி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளும் அதன் அழுத்தமான அறிவுரைகளும் ஹன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை எந்நிலையிலிருந்து எந்நிலைக்கு உயர்த்திக் கொண்டு வந்துள்ளது என்பதை அறியும் எவரும் இஸ்லாத்தின் ஆற்றல் குறித்து ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

ஹன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீரமிக்க இந்நான்கு புதல்வர்களும் காதிஸிய்யாப் போரைத் தவிர அதற்கு முன் நடைபெற்ற வேறு பல போர்களிலும் கலந்து கொண்டு இஸ்லாத்துக்காக உழைத்துள்ளார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுதோறும் அரசின் சார்பில் 200 வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட்டு வந்தன. இந்தப் போரில் அவர்கள் உதவித் தொகை முழுவதையும் அவர்களின் அன்னை கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

(50ம் பக்கம் பார்க்க)


# கவிதாபவனம்

தயாரிப்பு அஷ்ஃப்

## காஷ்மீரிலிருந்து.....

இயற்கை வகையறாக்களை
வாரிவழங்கி உலகத்தாரை
மகிழ்விக்கும் பூமி இது
மண்ணின் மைந்தர்களுக்கு மட்டும்
கண்ணீர்தான் கதி
அண்டைநாட்டுக் கூலிகளால்
கண்ட நிலை இது

வாழ்க்கையின் பெறுதி
பயமும் பதட்டமும்தான்
சுதந்திரம் அங்கு
அந்நியனின் பிடியில்
கிழிந்து போகிறது.



வாழ்வை இழந்த
இளம் சகோதரிகள் துக்கத்தில்
வாய்பேச முடியாத
வயோதிகர் பக்கத்தில்
பால்கேட்டு கதறும்
பாலகர் கக்கத்தில்

கதறக் கதறக்
குதறப்படும் கற்புகள்
தோட்டாக்கள் துளைத்த
தொட்டில் நிலவுகள்
அதிர்ச்சியின் கோரத்தால்
கலைந்துவிட்ட மனங்கள்
ரத்தத்தின் சாயத்ததால்
சிவந்த பனிமலைகள்

கண்ணீருடன்-
செந்நீரும் கலந்த குளங்கள்
வற்றுவதற்கு வாய்ப்பில்லை
இன்னும் கொஞ்சம் இங்கே
மிச்சமிருக்கிறார்கள்

சோதனை எங்களுக்கு
எழுதப்படாத சாசனம்
இழந்தே பழகிய
இளகிய நெஞ்சங்கள்
சோகத்திற்கும் சோதனைக்கும்
முத்திரைகள் பல

ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டு
பல நூறு காததூரம்
படை நடாத்திய
முஸ்லிம் உம்மாவே
எங்கள் வானத்தில்
என்றும் கார் மேகங்கள்தானா?
எப்போது
எங்கள் குரல் உங்களை எட்டும்
எப்போது சுதந்திரக் காற்று
எங்கள் வாசலைத் தட்டும்?

ஹெச்.எ.ப்.கான் - சென்னை

## உறக்கம் இல்லை

ஜன்னாவின் மணம் தூரமில்லை
சொல்லித் தந்த தூதருமில்லை
வெற்றுக் கோடுகளும்
கோலங்கள் ஆகலாம்
பலஸ்தீன மண் - என்றும்
பூதமாகலாமா

வீசும் கற்களும் பாரமில்லை
எறியும் கரங்களுக்கும்
வலிமையில்லை
சக்தியைத் தந்திடும்
ஈமான் முன்னே - கனரக
ஆயுதங்கள் அற்பமாய்
ஆனதங்கே


போலிகள் எமக்கு புதியதில்லை
நடிப்புகள் எங்கள் சொந்தமில்லை
சுபீட்சமும் சமாதானமும்
அருள்பாலிக்க - எமக்கு
அமெரிக்கா ஒன்றும்
எஜமானில்லை

எமக்கினிய வாழ்வு இங்கில்லை
அழுது அலைந்தவர்கள் நாமில்லை
துர்ராக்கள் கொல்லப்படலாம்
அக்ஸாவின் விடுதலைவரை-
இங்கே
அய்யூபிகள் கண்களில்
உறக்கமில்லை

கனமூலை பாரீஸ்

## முரண் தொடை

மக்கத்து யாத்திரைக்கோ
மஹ்றமி துணை தேவையாம்
முப்பதாம் வயதில் தனியனாய்
முதல் தேடி வந்துவிட்டேன்



இறைவனன்றி கன்னியெனக்கு
இல்லையம்மா பாரில்துணை

பெண்ணை வாழ வைத்த
பெருமானைக் காணும் நாளில்
பெருமிதமாய்ச் சொல்வேன் தாயே
வாழ்ந்தேனுங்கள் சமூகத்திலென்று

அபூ ஒமர் மஹ்மூத்

## எரிகின்ற தேசம்!



ஊடகத்துறையின்
படு அநியாயத்தில் ஒன்று
கஷ்மீர் தேசத்தின்
கதையைப் புதைத்து
காணாமல் செய்தது

எரிகின்ற தேசமே!
பூலோக சொர்க்கபுரியே !!
உல்லாசத்துறையே
உன் வருவாயென்றால்
உன்னவன் இழப்பது
உடைந்த ஊர்தியைத்தான்;
புதியது வாங்க
அனுமதியில்லை

வறுமைக்கு கிடைக்கும்
நாற்ற அரிசி,
உழுத்த பருப்பு,
இங்கீடு பெறுவதிலும் அநீதி
தட்டிக் கேட்டால்
கட்டாயப் பட்டினி
இன்று நேற்றல்ல
40 வருட அல்லல்

ஜக்மோகன்,
அப்துல்லாஹ்கள் - இவை
நிம்மதி அருவி அடைத்த
பாறாங்கற்கள் - இவர்
ஆட்டிப் படைத்த உன்வரலாறு
உலகிற்குத் தெரியாதே!

நடுவீதியில் நிர்வாணப்படும்,
கற்பழிக்கப்பட்டு கதறும்-
கன்னியர்களை நீயும் ரசிக்கிறாயா
ஆப்பிள் தோட்டமே-
உன் கண்ணீர் எழுத பேனா
மை சிந்துதில்லை- துக்கம்
தொண்டையை அடைப்பதுபோல

இஸ்லாத்தின் சுவரை
அசுத்தப் படுத்த முந்திக்கொள்ளும்
ஊடகத்துறை
உன் விடயத்தில் குருடு;
தர்மப் பேச்சு
உனக்கு மட்டும் - மௌனம்

இஸ்லாத்தின்
உண்மை வாசிக்காத
பத்திரிகைகளை
நாம் வாசிப்போம்;
அவர்கள் பொய்களை
நாமும் கேட்போம் -
அவர்கள் அறியாமையை
அறிய வேண்டாமா?

பொறுத்திரு!
உன் சுதந்திரக்காற்றுக்கு நாமும
திசையமைப்போம்
இறைவனுக்கே அஞ்சும்
ஆன்மாக்களைக் கொண்டு

அஹ்ஸன் மௌலானா
மருத்துவ பீடம் - ராகம

# கவிதாவனம்

தயாரிப்பு அஷ்

## கவிதை நெய்தல் 11 முடிவுகள்



## முதலிடம் பெற்ற கவிதை

### இலட்சியம்

தாய்மையோடு தீனை தினம்
தாலாட்டாய்ப் பாடு
பண்போடு வீரம் ஊட்டும்
பள்ளியாகும் உன் கூடு
கொற்றவன் அமானிதம்
குஞ்சுகள் வளர்ந்து
கிலாபத்தின் உதயம் தேடி
கூவட்டும் பறந்து

ஸெய்னப் ஸொஹ்றஹ்
அக்கரைப்பற்று

## இடம்பிடித்த ஏனையவை

### மறக்கவில்லை

இறை மறை கற்பித்த
தாய் சேய் உறவு முறை
மறக்கவில்லை நீ இன்னும்
மனித மனங்கள்
மறந்ததனால் அல்லவா
அனாதை இல்லமும்
முதியோர் மடங்களும்
மலிந்தன இன்று

எம். பி. எம். பர்ஹான்.
கரம்பை

### இடம்பெயரும் வேளை

கை கட்டி வாய் மூடி
உன் காலடியே
எம் சுவனம் என்பார்
பக்தியுடன் - நாளை
வையகத்தில் பாரம் நீ
என்றுன்னை மடந்தனிலே
வீசிடுவார் காசாலே
ஜாக்கிரதை !

நஸீரா சித்தீக்- மாவனல்ல

### கலங்காதே

காயும் கதிரவன் தன்வரவால்
மாயும் பனியின் துளிகள் போல்
நோயும் துன்பமும் தொலைந் தோடும்
படைத்தவன் என்றும் படி அளப்பான்
கலங்காதே சிட்டே !

ஸீனத்துல் நிஸா, ஹெம்மாதகம

### வருந்தாதே

வருந்தி இனியும்
கூவி அழைக்காதே
காணாமல் போன
உன் சின்னக்குஞ்சு
ஷஹீத் பதவியுடன்
இறையன்பின் ஈரத்தால்
ஆன்மா நனைந்திருக்கும்
அக்ஸாவின் முற்றத்தில்

பர்ஹானா ஸுஹைர் - ஹெம்மாதகம

### ஆசை

மறுமையில் நானுமோர்
ஷஹீத்களின் தாயென்றே
மகுடம் சூட வேண்டுமே
அப்றஹாவைத் துரத்திய
அபாபீல் போல் நீரும்
புறப்படுவீர் சிறகடித்து
அக்ஸாவை மீட்டெடுக்க


ஏ. சி. எம். பர்ஹான், அக்குரனை

### சமாதானக் குஞ்சுகள்

அன்னையிடம் கேட்பது
அன்னம் அல்ல
பறக்கவேண்டும் நாம்
பிறந்துவிட்டதா
சமாதானம் என்று

ஸஹீரா ஷரீப்தீன் , அ/நாச்சியாதீவு

## கவிதை நெய்தல் 12



அடையவேண்டிய
இறுதித் திகதி
05 - 03 - 2001

### அன்றும் இன்றும்

இறை இல்லமாம்
கஃபாவை
மீட்டெடுத்த அபாபீலே
முஸ்லிம்களையும்
முதல் கிப்லாவையும்
மீட்டெடுக்கக் கூவி
அழைக்கின்றாயா- உன்
சகபாடிகளையும்

பாத்திமா ஷர்மிலா நாஸர்
நூர் மஹல்லா புத்தளம்

### விலை உயர்வு

தனக்கும் இன்றி
குழந்தைகளுக்கும் இன்றி
தவிக்கும் இப்பறவை போன்றே
விலை உயர்வால் தவிக்கும்
ஏழைக் குடிமகனின்
அவல நிலையும்

எஸ். எம். சுபியான்
ஹொரவொபொத்தானை

### பாவமிந்த ஜீவன்கள்

என்ன இது
வீட்டோவில் சிதைந்துபோன
பலஸ்தீனச் சிட்டுக்களா?
நேட்டோவில் தனித்துப் போன
கொஸேவொப் பெண்மைகளா?
யுனிசெப் கண்டுகொள்ளாத
சூடானியக் குழந்தைகளா?
பாவமிந்த ஜீவன்கள்

பேருவளை இல்ஹாம்



ஆரோக்கிய சந்திப்பு :

# இரைப்பை அழற்சி

Dr. எம்.எல்.எம். றயீஸ்
M.B.B.S. (SL), D.C.H. (Colombo)
லேடி றிட்ஜ்வே
சிறுவர் வைத்தியசாலை,
கொழும்பு.

**கேள்வி :**

'கேஸ்ட்ரிக்' என்ன காரணங்களால் எற்படுகிறது? இந்த நோய்க்கு அறிகுறிகள் என்ன? இந்த நோயாளி நோன்பு நோற்கக் கூடாதா? என்ன உணவு வகைகள், பானங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்? என்னென்ன அதாவது எத்தன்மையுள்ள உணவுகள், பானங்களை உட்கொள்வது நற்பயனளிக்கும்? தயவுசெய்து விளக்கம் தருவீர்களா?

எம்.ஐ.எம். மர்ஸுக்
ஜித்தா, சஊதி அரேபியா

**பதில்:**

வயிற்றில் எரிவு, நோவு, அஜீரணம், வயிறு ஊதிய நிலை, அடிக்கடி ஏப்பமிடல், வாய்க்குள் புளித்தன்மையை உணர்தல் போன்ற பல அறிகுறிகளுக்கு பலர் Gastric (கெஸ்ட்ரிக்) பிரச்சினை இருப்பதாகக் கூறுவார்கள். அநேகமான சந்தர்ப்பங்களில் இந்தச் சொல் சரியான ஒரு அறிகுறியை குறிப்பிடும் சொல்லாக இல்லை. எனவே இந்த சொல்லைப் பயன்படுத்தி தனது பிரச்சினையை சொல்வதைத் தவிர்த்து தனக்குள்ள பிரச்சினையை சரியாக வைத்தியரிடம் விளக்கிக் கூறுவது அவசியமாகும்.

Gastric (கெஸ்ரிக்) என்பதன் சரியான பொருள் 'இரைப்பை சம்பந்தப்பட்ட' என்பதாகும். எனவே இரைப்பையில் ஏற்படும் பல நோய்களுக்கு Gastric Problem என்று சாதாரண மக்கள் கூறுவார்கள். மருத்துவத்தில் இரைப்பை சம்பந்தப்பட்ட பல நோய்கள் ஏறக்குறைய ஒரே வகையான அறிகுறிகளை கொண்டிருப்பதால் அறிகுறிகளை சரியாக நுட்பமாக அலசி ஆராய்வதன் மூலம் மட்டுமே நோய்க்கான காரணம் என்ன என்பது பற்றி தீர்மானிக்க முடியும்.

கெஸ்ட்ரிக் பிரச்சினை ஏற்படக்கூடிய சில பொதுவான காரணங்களை நாம் இப்போது நோக்குவோம்.

## 01. Gastritis (கெஸ்ட்ரைடிஸ்)

இந்த நோய் உள்ளவர்களுக்கு பொதுவாக அஜீரணம், சிலவேளைகளில் வாந்தி மற்றும் வயிறு ஊதிய நிலை, வயிற்றில் அசௌகரியம் போன்ற அறிகுறிகள் இருக்கும். இதற்கான காரணம் சிலவேளை வைரசு கிருமிகளின் தாக்கமாக இருக்கலாம். காரணம் இதுவாயின், 5-6 நாட்களுக்குப் பின் அது சுகமாகி விடும். எந்த மருந்தும் பாவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

Gastritis வருவதற்கான மற்றொரு முக்கிய காரணம் Mental Stress (மன அழுத்தம்) ஆகும். இன்றைய கால கட்டத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் பல தனிப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. பொருளாதாரப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை இப்படி பலநூறு பிரச்சினைகள் இருக்கின்றன. பலர் இப்படியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். அவர்களின் வாழ்வு நிம்மதியற்றுக் கழிகிறது. ஒரு வகை குழப்பமான உணர்வுடன் பல யோசனைகளுக்கு மத்தியில் பிரச்சினைகளின் அழுத்தத்தால் பலர் நிம்மதியிழந்து இருப்பதை நாம் காண்கிறோம். இந்த நிலை Gastritis வருவதற்கான காரணிகளுள் ஒன்றாகும்.

மேலும் இப்படியானவர்கள் உரிய வேளைக்கு உண்ண மாட்டார்கள்; உரிய வேளைக்கு உறங்க மாட்டார்கள். இவையெல்லாம் Gastritis ஐ மேலும் சிக்கலாக்கும். எனவே Stress இல்லாமல் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு மருத்துவத்தில் மருந்து கிடையாது. ஆனால் இஸ்லாத்தில் இதற்கு மருந்து இருக்கிறது. உலக வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்கு நம்மால் தீர்வு கண்டுவிட முடியாது. தீர்வுகாணக் கூடிய பிரச்சினைகளாக இருந்தாலும் கூட இவற்றை தலைக்குள் போட்டுக் கொண்டு அதுபற்றி யோசித்துக் கொண்டு தன்னையே அழித்துக் கொள்ளாமல், சிறிய பெரிய பிரச்சினைகள் எல்லாவற்றையும் தலைக்குள் போட்டுக் கொள்ளாமல் நம்மால் முடியுமான வரை தீர்வுகளுக்கு முயன்று, மற்றவற்றை அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டு விடுவது. Stress ஐ குறைப்பதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும். இஸ்லாம் எதிர்பார்ப்பதும் இதுவே! Do Your best; leave the rest to Allah - உங்களால் இயலுமானதைச் செய்யுங்கள் மிகுதியை அல்லாஹ்விடம் விட்டுவிடுங்கள்.

Gastritis இற்கான இன்னுமொரு காரணம் நாம் பாவிக்கின்ற மருந்து வகைகள். சில மாத்திரைகளைப் பாவிக்கும் போது இது ஏற்பட முடியும். உதாரணம் Aspirin, Voltaran, Delbitol, Brufen, Indocid முதலான மாத்திரைகளால் இது ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்ப்பதற்கு அநாவசியமாக மாத்திரைகள் பாவிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.. தவிர்க்க முடியாதவர்கள் இந்த மாத்திரைகளை வெறும் வயிற்றில் குடிக்காமல் உணவு உட்கொண்டதன் பின்னர் குடிக்கலாம். இத்துடன் Antacids என்ற Digine போன்ற மாத்திரைகளை சேர்த்துக் குடிப்பதன் மூலம் Gastritis ஐ ஓரளவு குறைக்க முடியும்.

மேலும் புகைபிடித்தல், மதுபானங்கள் (Alcohol) மூலமாகவும் இந்த gastritis ஏற்பட முடியும். எனவே புகைபிடித்தலும் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளாமல் இருப்பதாலும் இது ஏற்படும். நாம் உணவு உட்கொள்ளும் நேரத்தில் உணவை எதிர்பார்த்து இரைப்பை ஒருவகை அமிலத்தை (Gastric acid ) சுரக்கிறது. உணவு உரிய வேளையில் உட்கொள்ளப்படா விட்டால் இந்த அமிலம் இரைப்பையில் அரிப்பை ஏற்படுத்தி Gastritis போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

நோன்பு நோற்பதால் இது ஏற்படாது. ஏனெனில், நோன்பாளி ஸஹருக்கு உண்ட பின் மஹ்ரிபில் நோன்பு துறக்கும் வரை எந்த உணவையும் உட்கொள்ள மாட்டோம் என்பதை அறிந்திருப்பதால் இரைப்பையின் தன்னியக்கச் சுரப்பிகள் இதனை மூளையினூடாக உணர்ந்து அமிலம் சுரப்பதை தற்காலிகமாக நிறுத்தி விடும். (Cephali Control on Stomach) எமது உடலை அல்லாஹ் இதற்கேற்றவாறுதான் அற்புதமாக படைத்திருக்கிறான்.

## 2. Gastric Ulcer (குடல் புண்)

இந்த நோய் உள்ளவர்களுக்கும் மேற்கூறிய அறிகுறிகளே இருக்கும்.



மேலும் மலம் கறுப்பு நிறமாக இருத்தல் மற்றும் அளவுக் கதிகமான வயிற்று எரிவு என்பனவும் சேர்ந்திருக்கக் கூடும். இதற்கும் மேற்கூறிய காரணிகள் காரணமாக அமையலாம். சில வேளைகளில் இரைப்பைப் புற்றுநோய் காரணமாகவும் இவ்வாறான அறிகுறிகள் தோன்ற முடியும். இரைப்பைப் புற்றுநோய் மிக அரிதான, பொதுவாக வயதானவர்களுக்கு ஏற்படும் ஒரு நோயாகும்.

### 3. Gastro Oesophageal Reflux

இரைப்பையில் உள்ள உணவு மற்றும் அமிலம் என்பன மீண்டும் களத்திற்குள் (Food Pipe) செல்வதால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நோயுள்ளோரிடம் கேஸ்டிரைடிஸிற்குரிய அறிகுறிகள் இருக்கும். விஷேடமாக நெஞ்சு எரிவு (Heart Burn) அதிகமாக இருக்கும். இது சாதாரணமாக பலருக்குள்ள ஒரு பிரச்சினையாகும். விசேடமாக உணவு உண்டபின் இந்த நெஞ்செரிவு ஏற்படும். இப்படியான நெஞ்செரிவு உள்ளவர்கள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றினால் எரிவு குறையும்:

1. கொழுத்தவர்கள் பாரத்தைக் குறைக்க வேண்டும். கொழுப்பு மற்றும் பொரித்த உணவு வகைகள், பட்டர், மாஜரின், கொழுப்பு கலந்த இறைச்சி என்பவற்றை தவிர்க்க வேண்டும்.

2. உணவு உண்டவுடன் மலசலகூடத்திற்கு செல்வதைத் தவிர்த்து, வயிறு வெறுமையாக இருக்கும் நேரத்தில் மலசல கூடத்திற்கு செல்ல பழகிக்கொள்ள வேண்டும்.

3. உணவு உண்டபின் தூங்கச் செல்லாமல், தூங்கச் செல்வதற்கு சில மணிநேரத்துக்கு முன் உணவு உட்கொள்ள வேண்டும்.

4. தூங்கும்போது குறைந்தது இரண்டு தலையணைகளாவது தலைக்குக் கீழ் வைத்துத் தூங்க வேண்டும். தூக்கத்தில் தலைப் பகுதி வயிற்றுப் பகுதியை விட உயர்ந்து இருக்க வேண்டும்.

5. புகைத்தல் கண்டிப்பாக தவிர்க்கப்படல் வேண்டும் .

6. சூடான, உறைப்பான உணவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். புளியான உணவுகளும் தவிர்க்கப்பட வேண்டும். அச்சாறு போன்ற உணவுகள் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

8 அவித்த வெள்ளைப்பூடு உண்பதன் மூலம் சிலவேளை எரிவைக் குறைக்கலாம். எனவே வெள்ளைப்பூண்டை அடிக்கடி உட்கொள்வதை வழக்கமாக்கிக் கொள்வது பயனளிக்கும்.

இந்த நோய் அறிகுறிகள் தொடர்ந்து சற்றும் குறையாமல் இருந்தால் ஒரு வைத்தியரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். ஏனெனில் சிலவேளைகளில் வேறுசில பாரதூரமான, அரிதான சில நோய்கள் இப்படியான அறிகுறிகளுடனேயே ஆரம்பமாகின்றன. எனவே மாதக் கணக்கில் இப்படியான நோய் அறிகுறிகள் இருந்தால் வைத்திய ஆலோசனைகள் அவசியம்.

**உங்களது பிரச்சினைகளை எழுதுங்கள்:**

**'ஆரோக்கிய சந்திப்பு'**

**அல்ஹஸனாத்,**

**77, தெமடகொட வீதி,**

**கொழும்பு 00900**

# மீடியா வொட்ச்

## ஹபாயா சஊதிக் கலாச்சாரமா?

இஸ்லாத்திற்கெதிரான நயவஞ்சகர்களின் சதி உலக மேடையில் அரங்கேறிக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களுக்குத் துணையாக முஸ்லிம் பெயர்தாங்கிகள் சிலர் செயற்பட்டு வருகின்றனர். எதிரிகளின் இந்நடவடிக்கைகளுக்கு உரமூட்டுவது போல் இவர்கள் செயற்படுவது வேதனைக்குரியதாகும். இதனை தைரியமாக வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற மீடியாக்களினூடு மேற்கொள்வது அதிர்ச்சியைத் தருகிறது.

இந்த வரிசையிலேயே, 2001 ஜனவரி 28ம் திகதி (ஞாயிறு) தினகரன் பத்திரிகையில் 'ஒலி, ஒளி மஞ்சரி' யிலே இடம்பெற்ற முஸ்லிம் வாசகி ஒருவரின் கருத்து அமைந்துள்ளது. அவர், இம்முறை நோன்புப் பெருநாளன்று ரூபவாஹினியில் ஒளிபரப்பான 'மற்றுமொரு தியாகம்' என்ற முஸ்லிம் நாடகத்தின் மையக் கருத்தினை குறைத்து விமர்சித்துள்ளார். ஹபாயாவின் முக்கியத்துவத்தை உணர்த்தி நின்ற குறித்த நாடகத்தினை ''முஸ்லிம் நாடகம் என்ற பெயரில் தேவையற்ற பிரச்சாரங்கள் செய்யப்படலாமா?'' என்று குத்திக்காட்டுகிறார். ஹபாயாவின் தேவையை உணர்த்தியதை தேவையற்ற பிரச்சாரம் என்று கூறுவது உண்மை முஸ்லிமின் சொல்லாக இருக்க முடியாது.

''இந்நாடகத்தில் வரும் அக்கா அபாயாவுக்காக கணவனையே தியாகம் செய்யக் கூடத் தயங்காத வீராங்கனை'' என்ற இவருடைய ஏளன வார்த்தைகளால், அல்லாஹ் விதியாக்கி யிருக்கும் கடமையை உறுதியாய் கடைப்பிடிக்கத் துடிக்கும் ஓர் உண்மை முஸ்லிமின் உணர்வின் வெளிப்பாட்டை கிண்டல் செய்திருக்கிறார். நிச்சயமாக, தான் ஏளனம் செய்தது அல்லாஹ்த் தஆலாவையே ஆகும் என்பதை இவர் அறிவாரா? ''ஹபாயா உடை சஊதிக் கலாச்சாரம், சேலை என்பது நமது (முஸ்லிம்களின்) கலாச்சாரம்'' என்று இவர் கொண்டுள்ள அறியாமையே இவரது கருத்துக்கு காரணமாகும்.

இஸ்லாம் என்ன கூறுகிறது என்பதை அறியாது, அதன் கருத்துக்களை விரும்பியவாறெல்லாம் பிரித்து, தங்கள் வசதிக் கேற்ப திரித்து, எழுதும் இத்தகைய வாசகர்களின் கருத்துக்கள் தன்னலத்தையே வெளிக்காட்டுகின்றன. கருத்துச் சுதந்திரம் என்று கூறி, தெளிவான உண்மையை மறுக்கும், மறைக்கப் பார்க்கும் வாசகர்களின் கருத்துக்களுக்கு இடம்கொடுப்பது தரமான பத்திரிகை ஒன்றின் இலட்சணமாக இருக்காது. அதுவும் முஸ்லிம்கள் தாராளமாக வேலைபார்க்கும் தேசிய நாளிதழ் ஒன்றில் இக்கருத்து வெளியாகியுள்ளது. இவ்விதழ் அச்சுக்குப் போகும் வரை இக்கருத்துக்கு எதிரான குறிப்புகள் எதுவும் அப்பத்திரிகையில் இடம்பெறவுமில்லை. யாரும் எழுதத் துணியவில்லையா? அல்லது எழுதி அனுப்பியும் பிரசுரிக்கப் படவில்லையா என்பது கேள்விக்குறியே.

எனவே, இத்தகைய பத்திரிகைகள், வாசகர்கள் குறித்து நாம் நிச்சயம் விழிப்புடன் இருப்பதோடு எமது தீனுக்கு எதிரான கருத்துக்களைச் சாடவேண்டிய தேவையும் உள்ளது. அப்போது தான் யதார்த்தத்திற்கு அப்பால் ஜாஹிலிய்யத்தில் மிதந்து கொண்டிருப்பவர்கள், நிதர்சனத்துக்கு நடுவிலிருந்து சிந்திக்கவும், எழுதவும், பேசவும் தலைப்படுவார்கள். இஸ்லாத்திற்கெதிராக பேனாக்களைத் தூக்க அச்சப்படுவார்கள்.

முஸ்லிம் சகோதர சகோதரிகளே! ஒலி, ஒளி, மஞ்சரியில் அபிமான எப்.எம்களுக்கும், அறிவிப்பாளர்களுக்கும் வக்காலத்து வாங்குவதை விட்டுவிட்டு இஸ்லாத்தை காப்பதற்கு உங்கள் பேனாக்களைத் தூக்குங்கள்.

**ஸுமைறாஹ் எம்.புஹாரி, அக்கரைப்பற்று**

பதாவா அந்நிஸா

# துன்ப துயரத்தின்போது மரணத்தை ஆதரவு வைத்தல்

ஒரு மனிதன் தனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்திற்காக மரணத்தை எதிர்பார்ப்பது இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விலக்கப்பட்ட ஒரு விடயமாகும். ஏனெனில் ரஸுல் (ﷺ) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

**''உங்களில் ஒருவர் தனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்திற்காக மரணத்தை ஆதரவு வைக்க வேண்டாம். அவ்வாறு செய்வது அவசியமாக இருந்தால், 'இறைவா நான் உயிர்வாழ்வது சிறப்பாக இருந்தால் உயிர்வாழச் செய்வாயாக! மரணிப்பது சிறப்பாக இருந்தால் மரணிக்கச் செய்வாயாக என்று பிரார்த்திப்பீர்களாக''** எனப் பகர்ந்துள்ளார்கள்.

ஒருவர் தனக்கு ஏற்படும் துன்பங்களுக்கெல்லாம் முடிவு அல்லது தீர்ப்பு மரணம்தான் என எண்ணிச் செயல்படுவது இஸ்லாத்துக்கு முரணான ஒரு செயலாகும். ஏனெனில் தெய்வீகமாக நிர்ணயிக்கப்பட்ட விதியின் மீது நம்பிக்கை கொண்டால் ஒரு விசுவாசி எல்லையற்ற துன்பங்களுக்கு மத்தியிலும் அமைதி கொள்வான். அவன் தனக்கு ஏற்பட்ட துன்பமோ, துயரமோ அல்லாஹ் தஆலாவின் விதிப்படியே நடக்கிறது என உறுதிகுலையாமல் இருப்பான். சகல சந்தர்ப்பங்களிலும் பொறுமை, மனத்திருப்தி ஆகிய தனது நற்பண்புகளை பிரயோகித்து சகல தீமைகளிலிருந்தும் நன்மையையே நாடுவதில் ஆர்வங்கொண்டு சகல விவகாரங்களிலும் கருணைமிக்க இறைவனிடம் கையேந்தியவனாகவும் இறைவனுடைய தயாளத்தை மட்டும் நினைப்பவனாகவும் இருப்பான். எனவே இதற்கு மாற்றமாக தனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்திலிருந்தும், துயரத்திலிருந்தும் விடுபட மரணம் ஒன்றுதான் வழி எனக் கொள்வது ஒரு விசுவாசியின் பண்பாகாது. மாற்றமாக விசுவாசி தனக்கு ஏற்பட்ட கஷ்டத்தை பொறுமையுடன் எதிர்கொண்டு அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்த்தவனாக பொறுத்திருப்பான். ரஸுல் (ﷺ) அவர்கள் கூறும்போது,

**''அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக வெற்றி பொறுமையுடன் உள்ளது. மேலும் மகிழ்ச்சி கஷ்டத்துடன் உள்ளது. இன்னும் கஷ்டத்துடனே இலகு உண்டு''**

துன்பம், துயரம் போன்றவற்றினால் பீடிக்கப்பட்டவர் தன்னைப் பீடித்துள்ள எவ்வகைத் துன்பமாக இருப்பினும் அது தன் பாவங்களுக்கு ஒரு குற்றப் பரிகாரமாக அமைந்து விடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் எந்த ஒரு மு..மினான அடியானை பீடித்துக் கொள்ளும் கவலை, நோய், துன்பம் போன்ற யாவும் அவனது பாவங்களுக்கான குற்றப் பரிகாரமாக அமைந்துவிடுகிறது. எந்தளவுக்கு அவன் துன்பப்படுகிறானோ அந்தளவு அவனது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ஒரு மு..மினான அடியானின் காலில் தைக்கும் முள்ளினால் அவன் எவ்வளவு துன்பமடைகிறானோ அந்தளவு பாவங்கள மன்னிக்கப்படும். தனக்கேற்படும் துன்பத்தை பொறுத்துக் கொண்டு அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்துக் கொண்டிருப்பவனுக்கு அல்லாஹ் தஆலா இவ்வாறு நன்மாராயம் கூறுகிறான்:

**''அவர்கள் எத்தகையோர் என்றால் தங்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் பீடித்தால், 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கென்றே உள்ளவர்கள்; நிச்சயமாக நாம் அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம்' என்று கூறுவார்கள்''**

பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு மரணம்தான் என முடிவுசெய்து கொள்கிறார்கள். ஆனால் அத்தகையதொரு முடிவு பிழையானதாகும். ஏனெனில் மரணம் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வாக ஒருபோதும் அமையாது. உண்மையில் பிரச்சினைக்கு தீர்வாக மரணத்தை நாடியவர்கள் தங்களது வாழ்வை வீணடித்துக் கொண்டவர்களாவர், அவர்கள் தங்களது பாவங்களுக்காக பச்சாதாபப்பட்டு அல்லாஹ்விடம் பாவ விமோசனம் தேடவில்லை. மாற்றமாக, தங்களுக்கான தண்டனையை விரைவுபடுத்திக் கொண்டவர்களாவர். இதனால் அவர்கள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். மாற்றமாக, எவர் தனக்கு ஏற்படும் துன்பங்களுக்கு மரணத்தை நாடாமல் இருக்கிறாரோ அவருக்கு அல்லாஹ் தஆலா பாவ மன்னிப்பு பெற்றுக் கொள்ளவும், கஷ்டத்தின்போது பொறுமையாக இருப்பதற்கும், சந்தோஷத்தை எதிர்பார்த்திருக்கவும் சந்தர்ப்பத்தை வழங்குவான். இதனால் பல்வேறுபட்ட நன்மைகளை அவர் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே எமக்கேற்படும் சகலவிதமான துன்பங்களின் போதும் பொறுமையுடனிருந்து வெற்றி பெற்றவர்களாக வாழ அல்லாஹ் தஆலா எமக்கு உதவி செய்வானாக.

**மூலம் :**
அப்துல்லாஹ் பின் பாஸ் (ரஹ்)
**தமிழில் :**
மௌலவியா உம்மு அதிய்யா
(இஸ்லாஹி)

**அந்நிஸா** பகுதிக்கு குழந்தை வளர்ப்பு, வீட்டு நிர்வாகம், கல்வி நிலையங்கள் மற்றும் தொழில் பார்க்கும் இடங்களில் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தீர்வுகளும் முதலிய தலைப்புகளில் ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. ஆக்கங்கள் நீண்ட கட்டுரைகளாக இல்லாதிருப்பது சிறந்தது. ஆ-ர்

# ஹஜ்ஜின்போது ஏற்படும் தவறுகள்

மௌலவி என்.பீ.ஜுனைத் காஸிமி, மதனி

இஸ்லாத்தின் பிரதான கடமைகளுள் ஒன்றே ஹஜ் வணக்கம். இவ்வுயரிய வணக்கத்தை நிறைவேற்றுவதன் மூலம் உளத்தூய்மை, இறைசிந்தனை, சகோதரத்துவம், பரஸ்பர அன்பு, புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல், அல்லாஹ்வின் அடையாளங்களை கண்ணியப்படுத்தல் போன்ற அரும்பண்புகளை பெற்றுக் கொள்ள முடிகிறது. இக்கடமையை நிறைவேற்றும் பொருட்டு உலகின் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்கள் அதற்கான ஆயத்தப் பணிகளில் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இறைதிருப்தியை மாத்திரம் நோக்காகக் கொண்டு உழைத்து சேர்த்து வைத்த பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து கடமையை நிறைவேற்றச் செல்லும் சகோதரர்கள் (ஹாஜிகள்) அக்கடமையை செய்கையில் தவறுகள் ஏதும் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனினும் துரதிஷ்டவசமாக சரியான வழிகாட்டலின்றி பெரும்பாலானோர் இத்தவறுகளில் வீழ்ந்து விடுவது கவலைக்குரியதாகும்.

ஹஜ்ஜின்போது ஏற்படும் தவறுகளை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்:

### இஹ்ராமின்போது நிகழும் தவறுகள்

1. இஹ்ராம் உடையை மாற்றி அணியக் கூடாது என எண்ணல். இஹ்ராம் அழுக்காகும் பட்சத்தில் வேறு இஹ்ராம் உடையை அணிந்து கொள்ளலாம்.

2. இஹ்ராமுக்கென தனியான தொழுகை இருப்பதாக எண்ணி தொழுதல்.

### கஃபாவில் நுழையும்போது நிகழும் தவறுகள்

1. குறிப்பிட்ட சில வாயில்களால்தான் பள்ளிக்குள் நுழைய வேண்டுமென நம்பிக்கை கொள்ளல். எந்த நுழை வாயிலினாலும் செல்லலாம். அதில் தவறு இல்லை. எனினும் பனூ ஷைபா என்ற வாயிலால் நுழைவது சிறப்புக் குரியது. ஏனெனில் நபி (ﷺ) அவர்கள் இவ்வாயிலால் நுழைந்ததற்கு ஹதீஸ்களில் ஆதாரம் இருக்கிறது.

2. ஹரத்திற்குள் நுழையும்போது அதற்கென பிரத்தியேகமான சில துஆக்களை ஓதுதல். இதற்கு ஹதீஸ்களில் எவ்வித ஆதாரமும் இல்லை. பொதுவாக பள்ளிவாயல்களுக்குள் நுழையும்போது ஓத வேண்டிய துஆவை ஓதுவது போதுமானதாகும்.

### தவாபில் ஏற்படும் தவறுகள்

1. தவாபுக்கான நிய்யத்தை வாயால் மொழிதல். இப்படி நபியவர்களோ ஸஹாபாக்களோ கூறியதாக எவ்வித ஆதாரமும் இல்லை.

2. ஹஜருல் அஸ்வதிலிருந்து தவாபை ஆரம்பிக்காது வேறு இடங்களில் இருந்து ஆரம்பித்தல்.

3. ஹஜருல் அஸ்வதை முத்தமிட நெருங்கி முட்டிமோதி ஏனையோருக்கு சிரமத்தை கொடுத்தல்.

4. ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவது தவாப் நிறைவேறுவதற்கான நிபந்தனை என எண்ணுதல்.

5. ஒவ்வொரு சுற்றுக்குமென குறிப்பிட்ட சில துஆக்களை ஓதுதல்.

6. கஃபாவின் எல்லா மூலைகளையும் கையால் தொட்டு முத்தமிடல்.

7. தவாபின் சுன்னத்தான இரண்டு ரக்அத்துகளையும் மகாமு இப்றாஹீமிற்கு பக்கத்திலேயேதான் நிறைவேற்ற வேண்டும் என எண்ணுவது. இதனால் பலர் சிரமங்களுக்கு உள்ளாவதை அவதானிக்கலாம்.

8. மகாமு இப்றாஹீமிற்கென பிரத்தியேகமான சில துஆக்களை தேர்ந்தெடுத்து அவற்றைக் கூட்டாகவும் தனியாகவும் ஓதுவது. இது தவிர்க்கப்பட வேண்டிய பித்அத்தாகும்.

### ஸஃயில் ஏற்படும் தவறுகள்

1 நிய்யத்தை வாயால் மொழிதல்

2 ஆண்கள் பச்சை அடையாளங்களுக் கிடையில் ஓடாமல் நடந்து செல்வது. பெண்கள் அவ்விடத்தில் ஓடாமல் நடந்து செல்வதே நபிவழியாகும்.

3. ஒவ்வொரு நடையிலும் குறிப்பிட்ட சில துஆக்களை மாத்திரம் ஓதுதல்.

4. ஸபாவிலிருந்து ஆரம்பித்து மீண்டும் ஸபாவுக்கு வருவதுதான் ஒரு முறை என நினைத்து 14 முறைகள் ஸஃயு செய்தல்.

### முடியைச் சிரைக்கும்போது அல்லது கத்தரிக்கும்போது ஏற்படும் தவறுகள்

1. தலையில் ஒரு பகுதியை மாத்திரம் சிரைத்தல்.

2. தலையின் பல பகுதிகளிலிருந்தும் சில முடிகளை மாத்திரம் வெட்டிவிடல். மாறாக, எல்லா முடிகளையும் வெட்டி விட வேண்டும். அல்லது சிரைக்க வேண்டும்.

3. இஹ்ராம் உடையைக் களைந்து சாதாரண உடை அணிந்து பின் முடியைச சிரைத்தல்; அல்லது கத்தரித்தல்.

### தர்வியா (பிறை எட்டு) நாளன்று ஏற்படும் தவறுகள்

1. இஹ்ராமின்போது இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது கடமை என்றும் இஹ்ராம் அணியப் புத்தாடை அவசியம் எனவும் எண்ணுதல்.

2. உம்ராவுக்கு செல்லும் வழியில் தல்பியாக் கூறும் போது சப்தத்தை உயர்த்தாதிருத்தல்.

3. மினாவிற்குச் செல்லாமல் நேரடியாக அரபாவுக்குச் செல்லல்

4. மினாவுக்குச் செல்லாமல் மக்காவிலே தங்கியிருத்தல்.

5. மினாவில் ழுஹர், அஸர், இஷா, ஆகிய தொழுகைகளைச் சுருக்கி இரண்டிரண்டு ரக்அத்துக்காளகத் தொழாமல் நான்கு ரக்அத்களாக தொழுதல்.

### அறபாவிற்குச் செல்லும் போதும் அங்கு தங்கியிருக்கும் போதும் ஏற்படும் தவறுகள்

1. அறபாவிற்குச் செல்லும் போது சத்தமிட்டு தல்பியா கூறாதிருத்தல்.

2. சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த பின்னா அரபாவின் எல்லையில் தரிக்காதிருத்தல்.

3. துஆக் கேட்கும் போது கிப்லாவை முன்னோக்காது மலையை முன்னோக்கி இருத்தல்.

4. மலைக்குப் பக்கத்தில் தரிப்பது கட்டாயம் என எண்ணுதல்.

5. அங்குள்ள மலைக்கு விஷேட தன்மைகள் இருப்பதாகக் கருதி அதன் மீது ஏறுதல். பக்கத்தில் தொழுதல்.

6. சூரியன் மறைவதற்கு முன்னர் அரபாவிலிருந்து வெளியேறுதல்.

7. நேரத்தை பிரயோசனமின்றி கழித்தல், வீண் பேச்சுக்களில் ஈடுபடுதல், புறம் பேசுதல், மற்றோரை நோவினை செய்தல் புகை பிடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுதல்.

**முஸ்தலிபாவுக்குச் செல்லும் போதும் தங்கியிருக்கும்போதும் ஏற்படும் தவறுகள்**

1. மிக அவசரமாகச் செல்வது

2. முஸ்தலிபாவை சென்றடைய முன் வழியில் மஃரிப், இஷா, ஆகிய தொழுகைகளை தொழுது கொள்ளல்

3. முஸ்தலிபாவில் இரவைக் கழிக்காது இரவோடு இரவாக அங்கிருந்து மினாவுக்குச் சென்றுவிடல்.

4. இரவை வீண் பேச்சுகள், தேவையற்ற வாக்குவாதங்கள் அரட்டைகளில் கழித்தல்.

5. சூரியன் உதிக்கும் வரை அங்கேயே தங்கியிருத்தல்.

6. முஸ்தலிபாவிலேயே கற்களைப் பொறுக்க வேண்டுமெனக் கருதல்.

**கல்லெறியும்போது ஏற்படும் தவறுகள்**

1. கற்களுக்கு மணம் பூசுதல். அல்லது கழுவுதல்.

2. ஜம்ராக்களை ஷைத்தான்கள் எனக் கருதுதல் இதனால்தான் பெரும்பாலானோர் மிகவும் கோபப்பட்ட நிலையில் தனது முழு பலத்தையும் பிரயோகித்து ஏனையோருக்கு இடைஞ்சல் கொடுக்கின்றனர். இத்தவறான எண்ணத்தின் வெளிப்பாடாகவே பெரும் கற்கள், பலகைகள், செருப்புக்கள் வீசப் படுகின்றன.

3. கற்கள் கட்டாயம் தூண்களில் பட வேண்டுமென நினைத்தல்.

4. கல்லெறிய தான் சக்தி பெற்றிருந்தும் அதற்காக பிறரை நியமித்தல்.

5. முஸ்தலிபாவில் பொறுக்கிய கற்களால் மாத்திரம்தான் எறிய வேண்டுமெனக் கருதுதல். நாம் எங்கிருந்தும் கற்களைப் பொறுக்கி அடிக்கலாம்.

6. கல்லெறியும் நேரம் வரமுன்னர் எறிந்து விடல்.

7. ஏழு கற்களுக்குக் குறைவான கற்களை எறிதல்.

8. முதலாம் இரண்டாம் ஜம்ராக்களுக்கு கல்லெறிந்த பின்னர் துஆச் செய்யாமல் செல்லுதல்

9. ஒரு ஜம்ராவுக்கு ஏழுக்கு மேற்பட்ட கற்களை எறிதல்.

**மினாவில் ஏற்படும் தவறுகள்**

1. முஸ்தலிபாவிலிருந்து வந்தவுடன் அல்லது அதற்கு முதல் தக்க காரணமின்றி மினாவில் தங்காதிருத்தல். நீண்ட நேரம் தேடியும் மினாவில் இடம் கிடைக்காது போனால் மக்காவிலோ அஸீஸிய்யாவிலோ தங்குவதில் தவறில்லை.

2. பன்னிரண்டாம் பிறையன்று ழுஹர் நேரம் வரும் முன்னர் மினாவை விட்டும் கிளம்புதல்.

3. கத்தம், பாத்திஹா, மௌலூத் போன்ற பித்அத்தான செயல்களில் ஈடுபடுதல்.

ஹஜ்ஜின் போது மேற்கூறப்பட்டவைகள் தவிர்ந்த இன்னும் பல தவறுகளும் நிகழலாம். அவற்றை ஹாஜிகள் தமக்கு வழிகாட்டிகளாக வரும் உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து புனித ஹஜ்ஜிற்கும் மதீனா ஸியாரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றிருந்தாலும் ஹாஜிகள் அனைவரும் புனித மதீனாவுக்கு ஸியாரத் செய்வதால் அங்கே நிகழும் தவறுகளையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

1. பலநூறு மடங்கு நன்மைகளைப் பெற்றுத் தரும் மதீனாப் பள்ளியின் பர்ழான, சுன்னத்தான தொழுகைகளில் அக்கறை காட்டாது வீண் பேச்சுக்களிலும் பொருட்களை வாங்குவதிலும் நேரத்தைக் கழித்தல்.

2. மஸ்ஜிதுந் நபவியின் குறிப்பிட்ட இடங்களில்தான் தொழவேண்டும் எனக் கருதி ஏனையோருக்கு சிரமத்தைக் கொடுத்தல்.

3. நபி (ﷺ) அவர்களின் கப்ரை ஸியாரத் செய்வது கடமை எனக் கருதி கப்ரை ஸியாரத் செய்வதற்கும் ஹஜ்ஜுக்கும் தொடர்பு இருப்பதாக எண்ணி ஸியாரத் விடுபட்டமைக்காக செய்த ஹஜ்ஜுக்கு குறைவு ஏற்பட்டு விட்டதோ என அஞ்சுதல்.

4. நபி (ﷺ) அவர்களுக்குப் பக்கத்தில் அடங்கப்பட்டிருக்கும் அபூபக்ர் (رضي الله عنه) உமர் (رضي الله عنه) ஆகியோருக்கும் ஸலாம் சொன்னவுடன் அவ்விடத்தை விட்டும் செல்லாது அங்கேயே நின்று கொண்டு தேவைகளையும் கஷ்டங்களையும் நபியவர்களிடம் முறையிட்டு உதவி செய்யும்படி வேண்டல்.

5. பரக்கத்திற்காக ரஸூலுல்லாஹ்வின் கப்று உள்ள அறையின் சுவர்களை முத்தமிடல்.

6. ஸப்உ மஸாஜித், கிப்லதைன் போன்ற பள்ளிவாயல்களுக்குச் சென்று அதற்கான சுன்னத்தான தொழுகைகள் இருப்பதாக எண்ணி தொழுதல். இதற்கு குர்ஆனிலோ ஹதீஸிலோ ஸஹாபிகளது வாழ்விலோ எந்த ஆதாரமும் இல்லை.

7. ஜன்னதுல் பகீஃ, உஹத் ஆகிய இடங்களில் அடங்கப்பட்டவர்களிடம் சென்று தமது தேவைகளை முறையிடுவதோடு அவர்களின் பொருட்டால் தமது பாவங்களை மன்னிக்கும்படி இறைவனிடம் வேண்டுதல்.

8. மதீனாவின் குறிப்பிட்டதோர் இடத்தில் உள்ள மண்ணுக்கு சிறப்புத் தன்மைகள் இருப்பதாகக் கருதி அதை எடுப்பதற்காக தமது பணத்தையும் நேரத்தையும் செலவழித்தல்.

9. நூதன அனுஷ்டானங்களை (பித்அத்துகளை) செய்தல். நபி (ﷺ) அவர்கள் பின்வருமாறு எச்சரித்தார்கள்:

**"மதீனா புனித பகுதியாகும். யார் அங்கு நூதன அனுஷ்டானங்களை உண்டாக்குகிறானோ அல்லது உண்டாக்கும் நோக்கில் ஒதுங்குகிறானோ அவனுக்கு அல்லாஹ்வினதும் மலக்குகள் மற்றும் எல்லா மனிதர்களதும் சாபம் கிடைக்கிறது" (முஸ்லிம்)**

என்வே மேற்கூறப்பட்ட தவறுகளிலிருந்து விடுபட்டு நிறைவேற்றிய ஹஜ்ஜும், ஸியாரத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அமைய வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

**துணை நின்றவை**

1. ரஸாயிலுன் லில் ஹுஜ்ஜாஜி வல் முஃதமிரீன்
(கலாநிதி யஹ்யா இப்றாஹீம்)

2. ஸியாரத்துல் மஸ்ஜிதுன்னபவி
(யூசுப் இப்னு அப்துல்லாஹ்)

# இஜ்திஹாத் வளர்ச்சியில் இமாம்களினதும் மத்ஹபுகளினதும் பங்களிப்பு 03

**இஸ்லாம் A/L**

## மாலிகி மத்ஹப்

இஸ்லாமிய வரலாற்றில் ஹதீஸ் துறையில் ஈடுபட்டோர் அதிகமாக இருந்தாலும் அல்குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் சட்டங்களைப் பெறக் கூடிய இஜ்திஹாத் துறையில் ஈடுபட்டோர் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். அனஸ் இப்னு ஸீரீன் (றஹ்) கூறுகிறார்:

"நான் கூபாவிற்குச் சென்றபோது 4000 பேர் ஹதீஸ்களைக் கற்பதையும் அவர்களுள் 400 பேர் மாத்திரமே இஜ்திஹாத் பணியில் ஈடுபட்டிருந்ததையும் கண்டேன்."

உண்மையில் இஜ்திஹாத் பணி மிகவும் கடினமானதும், பொறுப்புள்ளதுமாக இருந்ததனால்தான் பிரபலமான முஹத்திஸ்களான யஹ்யா கத்தான், வகீ., அப்துர் ரஸ்ஸாக், யஹ்யா பின் முஈன் போன்றவர்கள் கூட அப்பணியில் ஈடுபடவில்லை. என்றாலும் இலட்சிய வேட்கையோடு இத்துறையில் ஈடுபட்டு அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை சுமந்த தியாகிகளின், வரிசையில் இமாம் மாலிக் (றஹ்) அவர்களும் இடம்பெறுகிறார்கள்.

### இமாம் மாலிக் (றஹ்) அவர்களின் அறிவுதேடல்

ஹி 93ல் பிறந்து ஹி 179ல் வபாத்தான இமாம் மாலிக் இப்னு அனஸ் (றஹ்) அவர்கள் தனது 86 வருட வாழ்வில் 70 வருடத்தை கல்விக்காகத் தியாகம் செய்தார்கள். மதீனாவின் மாமேதைகளான ரபீஅதுர் ர.ஈ (ரஹ்), இமாம் ஸுஹ்ரீ (ரஹ்), நாபி. (ரஹ்) யஹ்யா பின் ஸஈத், ஸஹத் இப்னு அஸ்லம், ஷினாக் இப்னு அப்துல்லாஹ் போன்ற தாபிஈன்களிடம் கல்விகற்றார்கள்.

மதீனாவை விட்டும் வெளியே செல்லாமலேயே இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, பிக்ஹ், அரபு மொழி போன்ற துறைகளில் தேர்ச்சி அடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு ஒரு இலட்சம் ஹதீஸ்களை முதன் முதலில் திரட்டிய பெருமையும் இவரையே சாரும்.

மஸ்ஜிதுந் நபவியில் கல்வியை போதிப்பதில் ஈடுபட்டிருந்த இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், கல்வி தேடும் மனோநிலையை மாற்றிக் கொள்ளாமலே இருந்தார்கள். தனது மிகப் பிரபலமான நூலான முஅத்தாவை 40 வருட ஆராய்ச்சியின் பின் உலகுக்குத் தந்தார்கள்.

### சட்டக்கலை வளர்ச்சியில் இமாம் மாலிக் (ரஹ்)

1. நெகிழ்ச்சியான சட்ட மூலாதாரங்களை வழங்கியமை

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் சட்ட மூலாதாரங்களை அங்கீகரிக்கும் விடயத்தில் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களை விட இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களை ஒத்துள்ளார்கள். அந்த வகையில் அவர்கள் பின்வரும் சட்டமூலாதாரங்களை அங்கீகரித்தார்கள்:

அஷ்ஷெய்க்
T.M. நிலாம் இஸ்லாஹி B.A. (Cey)

1. அல்குர்ஆன் 2. அஸ்ஸுன்னா
3. அல் இஜ்மாஉ 4. அல் கியாஸ்
5. இஸ்திஹ்ஸான்
6. மஸாலிஹுல் முர்ஸலா 7. உர்ப்
8. மதீனாவாசிகளின் தொடர்ந்தேர்ச்சியான செயல்கள்.
9. சத்துத் தராஇ.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களும் அல்குர்ஆனிற்கு அடுத்ததாகவே சுன்னாவை அணுகுவார்கள். இமாமவர்களின் முக்கிய நூலான முஅத்தாவில், 'முர்ஸல்' (அறிவிப்பாளர் வரிசையில் சஹாபி விடுபட்டவை) 'முன்கதி.' (அறிவிப்பாளர் தொடரில் ஒரு ராவி விடுபட்டவை) வகை ஹதீஸ்கள் சட்டத் தீர்ப்புகளுக்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவற்றை ஆதாரமாகக் கொள்வது தவறல்ல எனும் இமாம் அவர்களின் நிலைப்பாட்டையே காட்டுகிறது.

மதீனாவாசிகளின் தொடர்ந்தேர்ச்சியான செயல்களை 'முதவாதிரா'ன ஹதீஸ்களின் தரத்தில் மதிப்பதற்கு பின்வரும் நிபந்தனைகளை இமாமவர்கள் முன்வைத்தார்கள்:

1. மதீனாவாசிகளின் செயல் நபி (ﷺ) அவர்கள் செய்ததாகவோ, அங்கீகரித்ததாகவோ இருக்க வேண்டும்.
2. அதிக தொகையினர் உளப்பூர்வமாக அதனைப் பின்பற்ற வேண்டும்
3. நபி (ﷺ) அவர்களின் காலம் முதல் அது தொடராகப் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் 'ஆஹாத்' வகை ஹதீஸ்களை விட மதீனாவாசிகளின் இத்தகைய செயலை பலமான ஆதாரமாகக் கருதுகிறார்கள். இந்த வகையில் இமாம் மாலிக் (ரஹ்) எடுக்காது விட்ட, ஆனால் முஅத்தாவிலுள்ள 70 சுன்னத்துகளை லைஸ் இப்னு ஸ.த் (ரஹ்) அவர்கள் தொகுத்துள்ளார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் இந்த வாதத்தை பல இமாம்கள் நிராகரித்துள்ளார்கள். அவர்களுள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் பிரதானமானவர். ழாஹிரீ மத்ஹபை தோற்றுவித்த இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்) அவர்களும் தனது 'அல்இஹ்காம் பீ உஸூலில் அஹ்காம்' மற்றும் 'மஹல்லி' போன்ற நூல்களிலும் கடுமையாக இதை விமர்சித்துள்ளார்கள்.

### 2. ஹதீஸ், பிக்ஹ் ஆகிய துறைகள இணைந்த 'முஅத்தா' எனும் நூலை எழுதியமை

முஅத்தா மாலிகின் சிறப்பம்சங்கள்

- அப்பாஸிய கலீபா அபூஜ.பர் அல்மன்சூரின் வேண்டுதலுக்கிணங்கி அரச உதவியுடன் இது எழுதப்பட்டது.
- இப்னு உமர் (رضي الله عنه) அவர்களின் கடினமான கருத்துகளும், இப்னு அப்பாஸ் (رضي الله عنه) அவர்களின் சலுகைகளும், இப்னு மஸ்ஊத் (رضي الله عنه) அவர்களின் பலம் குறைந்த கருத்துகளும் தவிர்க்கப்பட்டு நடுநிலை மார்க்க நூலாக இது காணப்படுகிறது.
- மதீனாவைச் சேர்ந்த 70 அறிஞர்கள் இதனை அங்கீகரித்துள்ளனர். அவர்கள் இதன் நம்பகத் தன்மையில் உடன்பட்டதால் 'அங்கீகரிக்கப்பட்ட நூல்' (அல் முஅத்தா) எனும் பெயரை சூட்டியதாக இமாம் மாலிக் (ரஹ்) அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள்.
- கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் தனது புதல்வர்களை இமாம் மாலிக் அவர்களிடம் அனுப்பி முஅத்தாவைக் கற்க வைத்தார்கள். கலீபா மஹ்தியும் தனது ஹஜ் பயணத்தின்போது இதைக் கற்றுள்ளார்கள்.

■ பேரறிஞர்களான ஷாபிஈ (ரஹ்), அவ்ஸாஈ (ரஹ்), சுயூத்தி (ரஹ்) போன்றோர் அதைக் கற்பதற்காக மதீனாவிற்கு சென்றுள்ளார்கள்.

■ 40 வருட கால ஆராய்ச்சிக்குட்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட முதல் மார்க்க நூலாக இது காணப்படுகிறது.

■ இமாம் இப்னுல் அரபி (ரஹ்) அவர்கள் உட்பட மாலிக் மத்ஹப் இமாம்கள் பலர் முஅத்தாவை புகாரி, முஸ்லிம் என்பவற்றை விட தரம் உயர்ந்ததாகக் கருதுகின்றனர். இமாம் தஹ்லவி (ரஹ்) அவர்கள் தனது 'ஹுஜ்ஜதுல்லாஹி அல்பாலிகா' எனும் நூலில் புகாரி, முஸ்லிம், முஅத்தா என்பவற்றை முதல்தர ஹதீஸ் நூல்களாகக் கருதுகின்றார்கள்.

■ இமாம் மாலிக்கிடம் முஅத்தாவைக் கற்ற அறிஞர்களுள் 30 பேர் தனித் தனியாக முஅத்தாவின் 30 பிரதிகளை வெளியிட்டுள்ளனர். அவற்றுள் பிரபலமான 20 பிரதிகளில் 5 பிரதிகள் பின்வருமாறு:

1. முஅத்தா யஹ்யா அல்லைஸீ
2. முஅத்தா இப்னு புகைர்
3. முஅத்தா அபீ முஸ்அப்
4. முஅத்தா இப்னு வஹ்ப்
5. முஅத்தா முஹம்மதிப்னுல் ஹஸன்.

(இமாம் முஹம்மதிப்னு அபூ ஹனீபாவின் மாணவர். இந்நூல் இந்தியா, இலங்கை, இராக், போன்ற பகுதிகளில் பிரபலமாக உள்ளது.)

பொதுவாக நோக்கும்போது 'முஅத்தா மாலிகை'ப் பாதுகாப்பதில் ஹிஜாஸ், இராக், ஆபிரிக்கா, ஸ்பெயினைச் சேர்ந்த இமாம்கள் முயற்சித்துள்ளார்கள் என்பது உண்மையாகும். அதற்கு விளக்கவுரைகள் எழுதியதன் மூலம் ஷாபிஈ, ஹனபி மத்ஹப் இமாம்கள் அதனைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

■ முஅத்தா மாலிக் ஏடு ஹதீஸ் நூலாகவுள்ள அதேவேளை ஒரு பிக்ஹ் நூலாகவும் காணப்படுகிறது. பிக்ஹ் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்ட தலைப்புக்கள், சட்ட விளக்கங்கள் என்பன அதில் இடம்பெற்றுள்ளமை இதற்கான சான்றாகும்.

எனவே தான் ழாஹிரி மத்ஹப் இமாம் இப்னுல் ஹஸ்ம் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

''பிக்ஹ், ஹதீஸ் ஆகிய துறைகள் இணைக்கப்பட்ட நூல்களுள் 'முஅத்தா'விற்கு நிகரானதொன்றை நான் காணவில்லை''

முஅத்தா மாலிகிற்கு முன்னர் ஹதீஸ்கள் மாத்திரம் தொகுக்கப்பட்ட 9 நூல்கள் இஸ்லாமிய உலகில் காணப்பட்டாலும் அவை பிக்ஹை மையமாகக் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

### 3) சட்டத்துறையில் பகுத்தறிவை பயன்படுத்தல்

இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களைப போல இமாம் மாலிக் (ரஹ்) அவர்களும் பகுத்தறிவுக்கு உரிய இடத்தை வழங்கியுள்ளார்கள். இமாம் லைஸ் இப்னு ஸ.'த் (ரஹ்) அவர்கள் இதுபற்றி, ''இமாம் மாலிக் (ரஹ்)அவர்களின் 70 தீர்ப்புக்கள் பகுத்தறிவின் அடிப்படையில் கூறப்பட்டவையாகும்.'' எனக் கூறுகிறார்.

இமாம் அபூஹனீபாவை (ரஹ்) விட சற்று குறைந்தளவு அவர்கள் இதற்கு முக்கியத்துவம் வழங்கினார்கள் எனும் உண்மையை இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) வின் முதல் ஆசிரியரான ரபீஅதுர் ர.'ஈ (ரஹ்) அவர்கள் பகுத்தறிவிற்கு முக்கியத்துவம் அளித்தவராவார். ஓர் இஸ்லாமிய அறிஞன் சிந்திக்க வேண்டிய திசையை இவரிடமிருந்து இமாம் மாலிக் (ரஹ்) முதலில் பெறக் கிடைத்தமை இதற்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம். இமாமவர்கள் கியாஸ், இஸ்திஹ்ஸான் போன்றவற்றை சட்ட மூலாதாரங்களாக அங்கீகரிப்பதும், சஹாபாக்கள், தாபிஈன்கள் ஆகியோரின் தனிப்பட்ட கருத்துக்களை முஅத்தாவில் பதிவு செய்துள்ளதும் அவர்களது இப்போக்கையே எடுத்துக் காட்டுகிறது.

அறிஞர் அப்துல் பத்தாஹ் (ரஹ்) அவர்கள் இமாம் மாலிக் (றஹ்) அவர்களை வர்ணிக்கும்போது,

''அவர் ஒரு ஹதீஸ்துறை அறிஞர், சட்டமேதை, முஸ்லிம்களின் தலைவர், திறமைமிகு முஜ்தஹித்'' எனக் குறிப்பிடுவதும் இந்த அடிப்படையிலே நோக்கப்பட வேண்டும்.

### இஸ்லாமிய அறிஞர்களின் வழிகாட்டி

இமாம் மாலிக் (ரஹ்) அவர்களிடம் சுமார் 1300 மாணவர்கள் கல்வி பயின்றுள்ளார்கள். அவர்களின் வகுப்பில் எகிப்து, மொரோக்கோ, ஸ்பெய்ன் போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்றனர். அந்த மாணவர்களின் முயற்சியாலேயே இன்றும் எகிப்து, மொரோக்கோ, சூடான் ஆகிய நாடுகளின் அரச மத்ஹபாக மாலிகி மத்ஹப் விளங்குகிறது.

இமாமவர்களிடம் தனது கருத்துக்களை அடுத்தவர்களுக்கு திணிக்கும் மனப்பாங்கு இருக்கவில்லை. அனைத்துத் தரப்பினரும் அவரை நாடி வந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கலீபா மன்ஸுரின் ஆலோசனையின் பின் முஅத்தாவை இமாம் மாலிக் (ரஹ்) எழுதியதும் அதனை மக்களின் ஏக வழிகாட்டி நூலாக மாற்ற விரும்புவதாக கலீபா குறிப்பிட்டார். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் தனது நூலின் நம்பகத் தன்மையில் உறுதியாக இருந்த போதும் அதை மக்களுக்குப் பலவந்தமாகத் திணிக்க விரும்பவில்லை. ஏனெனில் பிரச்சினைகளின் போது மக்கள் வஹீ (குர்ஆன், சுன்னா) வுடன்தான் இணைய வேண்டுமென்பதில் இமாமவர்கள் உறுதியாக இருந்தார்கள்.

அப்பாஸிய கலீபாக்கள் பொதுமக்களிடம் பலவந்தமாக பைஅத் பெற்றதை இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கடுமையாக விமர்சித்தார்கள். இதனால் மதீனாவின் கவர்னர் ஜ.'பர் இப்னு ஸுலைமான் இமாம் மாலிக்கை சிறையிலடைத்து கசையடிக்கும் உட்படுத்தினார். சிறையில் கடுமையாகத் தாக்கப்பட்டால், இமாமவர்களின் வலது கை முறிந்தது.

**''அநியாயக்கார ஆட்சியாளருக்கு முன்னால் சத்தியத்தை எடுத்துக் கூறுவதுதான் உயர்ந்த ஜிஹாத்''** என்ற நபிமொழியை இமாமவர்கள் தன் வாழ்வில் செயல்படுத்தினார்கள்.

'இமாமு தாரில் ஹிஜ்ரா', 'இமாமுல் மதீனா', 'ஆலிமுல் மதீனா' எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்ட இமாமவர்கள் மஸ்ஜிதுன் நபவியில் வகுப்பு நடாத்தும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தினார்கள்.

1. தனது கண்ணியத்தைப் பேணல்
2. நல்ல பண்பாட்டுடன் நடந்து கொள்ளல்.
3. வாசனைத் திரவியம் பாவித்தல்
4. அழகிய தூய ஆடை அணிதல்
5. மஸ்ஜிதுன் நபவியில் நபி (ﷺ) அவர்களுக்கு மரியாதை செலுத்துமுகமாக சப்தத்தைக் குறைத்து பாடம் நடாத்தல்.

இந்த அறிவும், பண்பாடுகளும், தூய்மையும், தியாகமும், பொதுநலனும் நிறைந்த ஆசானின் பாதையில் அல்லாஹ் எம்மையும் வழிநடாத்துவானாக.

### துணை நின்றவை:


1. மஆலிமுஷ் ஷரீஆ அல்இஸ்லாமிய்யா
2. அல்பிக்ஹுல் இஸ்லாமி
3. முஅத்தா
4. அஸ்ஸுன்னா வ மகானதுஹா பித் தஷ்ரீஇல் இஸ்லாமி
5. ஹுலாஸது தாரீகி தஷ்ரீஇல் இஸ்லாமி

**மால்கம் எக்ஸ்-** அறுபதுகளில் அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்தவர். இஸ்லாத்தை ஏற்று அல்ஹாஜ் மாலிக் அல்ஷாபாஸ் ஆக மலர்ந்த போது உலகெங்கும் இருக்கின்ற இஸ்லாமியர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்டவர். இன்று வரையில் கூட முஸ்லிம்களின் இதயங்களில் இடம்பிடித்து நிற்பவர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 'நெப்ராஸ்கா' மாகாணத்தில் 'ஒமாஹா' நகரில் பிறந்து 15 வயதிலேயே பள்ளிப் படிப்பைத் துறந்து தெருச் சிறுவர்களுடன் வளர்ந்து, அடிபட்டு, மிதிபட்டு, சிறையிலும் வெளியிலுமாக வாழ்ந்த ஆர்ப்பாட்டமான நாட்களில் வெள்ளை இனத்தையே எதிரியாகப் பாவித்து கொந்தளித்து எழுந்தவர். அவரது ஆவேசமான பேச்சு கேட்பவரை வசப்படுத்தியது.

செந்நிற முடி கொண்டவர்கள்... அப்பப்பா! அவர்கள் எல்லாருமே சகோதரர்கள்! எல்லாருக்குமே ஒரே இலக்கு! எல்லாருக்குமே ஒரே ஆசை! ஒரே இறைவனைத் தொழுகின்றவர்கள்! மற்றவர்களுக்கு சம அந்தஸ்தும் கண்ணியமும் கொடுப்பவர்கள். ஆ! அந்தக் கணம்தான்... அந்தக் கணத்திலேதான் எனக்குள் நான் 'வெள்ளையன்' குறித்து வெறுப்பாலும் ஆக்ரோஷத்தாலும் ஆத்திரத்தாலும் தீட்டியிருந்த சித்திரம் கரைந்துவிட்டது. அப்போதுதான் 'வெள்ளையன்' என்பது நிறத்தைக் குறிப்பதல்ல; குறிப்பிட்ட நடத்தைகளையும் எண்ணங்களையும் குறிக்கிறது' என உணர்ந்து கொண்டேன்."

அமெரிக்காவில் 'வெள்ளையன் White Man என்றால் குறிப்பிட்ட அகந்தையும் செருக்கும் நிரம்பிய நடத்தைகளையும்,

உணர்வுகள் ஒரு வெள்ளையனுக்கும் கறுப்பனுக்கும் இடையே ஏற்படுவதற்கான வாய்ப்பு கிஞ்சிற்றும் இல்லை என்றுதான் எனது அமெரிக்க அனுபவம் எனக்குள் விதைத்திருந்தது. அத்தகைய கருத்துக்களை துடைத்தெறிவதாக எனது ஹஜ் பயணம் அமைந்தது."

ஆக, அது ஒரு மகத்தான அனுபவமாக இருந்தது. மால்கம் எக்ஸ் இத்தகைய உணர்வுகளால் உந்தப்பட்டு ஒட்டுமொத்த தேச மக்களுக்கு பிரகடனம் செய்கிறார்: "அமெரிக்கா இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள முன்வர வேண்டும். இது மிக அவசியம். ஏனெனில், இஸ்லாம் ஒன்றால் மட்டுமே அமெரிக்கச் சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினையைத் தீர்க்க முடியும். முஸ்லிம் உலகில் நான் மேற்கொண்ட பயணங்களினூடே

# புனிதப் பயணம் ஏற்படுத்திய மாற்றம்

உலகையே விரோதிக்கும் ஆக்ரோஷமும் ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டதால் கிளர்ந்தெழுந்த ஆத்திரமுமாக உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தவரை இஸ்லாத்தின் செய்தி அடியோடு மாற்றியமைத்து விடுகிறது.

வெள்ளையர்களை முழுமூச்சாக எதிர்த்துவந்த அவர் தனது நிலையை மாற்றியமைத்துக் கொள்கிறார். அவரது வாழ்வின் போக்கையே அடியோடு மாற்றியமைத்தது 1964-ல் அவர் மேற்கொண்ட 'ஹஜ்' பயணம்தான்.

அந்தப் புனிதப் பயணம் மால்கம் எக்ஸின் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது. சத்திய இஸ்லாத்தின் சமத்துவ, சகோதரத்துவ வாசத்தை விமானத்திலே நுகர்ந்து விட்டார். அவர் கூறுகிறார், "விமானத்தில் பலதரப்பட்ட மக்கள் இருந்தனர். வெள்ளையர்கள், கறுப்பர்கள், மாநிறத்தவர்கள், சிகப்பு மஞ்சள் நிறத்தவர்கள். நீலக் கண்களும் பழுப்பு முடிகளும் கொண்டவர்கள். என்னைப் போன்று

செய்கைகளையும் குறிக்கும். குறிப்பாக கறுப்பர்களையும், பொதுவாக வெள்ளையர் அல்லாத அனைவரையும் அவர்கள் இழிவாக நடத்துகின்ற விதத்தைக் குறிக்கும். ஆனால் முஸ்லிம் உலகில் நான் கண்ட வெள்ளை நிறத்தவர்கள் முற்றிலும் மாறுபட்டவர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் மற்ற எல்லாரையும் விட உண்மையான சகோதர வாஞ்சையுடன் திகழ்ந்தார்கள். அன்றைய தினமே 'வெள்ளை' மனிதர்கள் குறித்து எனக்குள் வேர்பிடித்திருந்த ஒட்டுமொத்த கண்ணோட்டமே அதிரடியான மாற்றத்தைக் கண்டது.

ஹஜ்ஜுக்குச் சென்றதும், "லட்சக் கணக்கான மனிதர்களை ஒரே இடத்தில் பார்த்தேன். அவர்கள் உலகின் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்தார்கள். பல நிறங்களை கொண்டவர்கள். நீலக் கண்களைக் கொண்ட வெள்ளையர்களும், கறுப்பு நிற ஆபிரிக்கர்களும் இருந்தனர். ஆனால் நாம் எல்லாருமே ஒரே வகையான சடங்குகளைச் செய்து சமத்துவ சகோதரத்துவ உணர்வுகளை செயல்களில் வெளிப்படுத்தினோம். இத்தகைய சமத்துவ, சகோதரத்துவ

அமெரிக்காவின் வெள்ளையர்களாகக் கருதப்படும் எத்தனையோ மக்களைச் சந்தித்தேன். அவர்களுடன் சேர்ந்து உணவருந்தினேன்.

ஆனால் இஸ்லாம், அவர்களின் இதயங்களில் இருந்து 'வெள்ளைத்தனமான' சிந்தனைகளையும், நடத்தைகளையும் முழுமையாக அகற்றிவிட்டு தூய்மைப்படுத்தியிருந்தது. மாறுபட்ட நிறம், இனம், குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அளவுக்கு வாய்மையான சகோதர வாஞ்சையுடன் வாழ்வதை நான் வேறு எங்குமே பார்க்கவில்லை."

## ஒரே இறைவன், ஒன்றே மனிதன்

ஹஜ் பயணத்தின் ஊடே அரேபியாவிலிருந்து அமெரிக்காவில் இருந்த தமது நண்பர்களுக்கு மால்கம் எக்ஸ் எழுதிய கடிதங்கள் அவருக்குள் மெள்ள மெள்ள மலர்ந்து கொண்டிருந்த 'மாற்றத்தை' வெளிப்படுத்துகின்றன. அந்தக் கடிதங்களை பிரதியெடுத்து பத்திரிகைகளுக்குக் கொடுத்து பரப்பச் சொன்னார் அவர். இன வெறியால்

உந்தப்பட்டு நின்ற நண்பர்களுக்குள்ளே சிந்தனைப் புரட்சியை மூட்டிவிடுபவையாக அந்தக் கடிதங்கள் இருந்தன.

''எனது வாழ்வில் என்றுமே இத்தகைய அனுபவங்களை சுகித்தது கிடையாது. உலகின் மூலை முடுக்குகளிலிருந்து திரண்டிருந்த மக்களிடையே காணப்பட்ட பாசப்பிணைப்பு! அப்பப்பா! நினைத்தாலே மெய்சிலிர்க்கின்றது. இனம் வேறு, குலம் வேறு, நிறம் வேறு, பேசுகின்ற மொழி வேறு, ஆனால் எல்லாருமே பரஸ்பரம் வெளிப்படுத்திய விருந்தோம்பல் உணர்வுகள்... ஒருவர் மற்றவருக்கு முன்னுரிமை தந்த பாங்கு... இப்ராஹிம் (ﷺ), முஹம்மத் (ﷺ) போன்ற நபிமார்களின் புனித பூமியில் வேரூன்றியிருக்கும் சகோதர உணர்வுகளைக் கண்டு வாயடைத்து நிற்கிறேன். அந்த சகோதர வாஞ்சை தந்த சுகம் எனது இதயத்தை நெகிழச் செய்துவிட்டது..."

''மால்கம் எக்ஸின் வார்த்தைகளா இவை? என நீங்கள் அதிர்ச்சியடையலாம். ஆனால், நண்பர்களே! இந்தப் புனிதப் பயணம் 'இனம்' குறித்த எனது சிந்தனைகளையே அடியோடு மாற்றியமைத்துவிட்டது. எனது முந்தைய கருத்துகள் சிலவற்றை நான் கைவிட்டுவிட்டேன். இது எனக்கு கடினமாக இருக்கவில்லை. நான் எப்போதுமே எதார்த்தங்களை அணுகுபவனாக, உண்மையைத் தேடுவபனாக வாழ்வில் புதிய அனுபவங்களும், புதிய அறிவுகளும் தருகின்ற செய்திகளைக் கிரகிப்பவனாக இருந்து வந்துள்ளேன். சில மலட்டு சிந்தனைகளின் வரையறைக்குள் என்னை அடைத்துக் கொள்ளாமல் திறந்த மனதுடன் சத்தியத்தை தேடுபவனாக இருந்துள்ளேன்."

''முஸ்லிம் உலகில் கழித்த கடந்த பதினொரு நாட்களில் நான் எனது 'சகோதரர்களுடன்' ஒரே தட்டில் உணவருந்தி, ஒரே குவளையில் குடித்து, ஒரே அறையில் படுத்து வந்துள்ளேன். இனம், நிறம் ஆகிய வற்றின் அடிப்படையில் இங்கு குவளைகள் குறியிடப்படவில்லை. தட்டுக்கள் முத்திரை குத்தப்படவில்லை. 'எல்லாரும் சமம். எல்லாரும் சகோதரர்கள்' என்று இங்கு எவரும் வாய்விட்டுச் சொல்லவில்லை; செயல்படுத்திக் காட்டினார்கள்.

''நாம் எல்லோருமே ஒரே இறைவனைத் தொழுதோம். 'வெள்ளை' முஸ்லிம்களின் நடத்தைகளிலும் வார்த்தைகளிலும் இருந்த அதே உளத்தூய்மையை நானும் உணர்ந்தேன். நைஜீரியா, சூடான், கானா நாடுகளைச் சேர்ந்த கறுப்பு ஆபிரிக்க முஸ்லிம்களும் உணர்ந்தார்கள். நாம் எல்லோரும் ஒன்றாகி விட்டோம். ஏனெனில் ஒரே இறைவன் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை அவர்களது மனங்களிலிருந்து 'வெள்ளையை' நீக்கிவிட்டது.

அமெரிக்க சமூகத்தை புற்றுநோயாக அழித்துக் கொண்டிருப்பது 'இனவாதம்'தான் என்பதை மால்கம் எக்ஸ் உணர்ந்திருந்தார். ''இத்தகைய இனவாதச் சிந்தனைகளின் ஊற்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படும் வெள்ளை அமெரிக்க இதயம்தான்" என்று கூறிய அவர் ''இத்தகைய அழிவுகரமான சிந்தனைப் போக்கிலிருந்து நாம் விடுபட வேண்டும். இந்த நாசகரமான பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்திருக்கும் உன்னத தீர்வை ஏற்றுக் கொள்ள அமெரிக்கச் சமூகம் முன்வர வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

**நன்றி : சமரசம் (1-15 மார்ச் 2000)**

# ரப்பானியத் துளிகள்

## சிறுசுகளில் கவனம் செலுத்துங்கள்

அந்தப் பள்ளிவாசலில் ஒவ்வொரு ஜும்ஆ முடிந்ததும் காசு வசூலிக்கும் சிறார்கள், அணிகளுக்கிடையில் உலா வருவது வழக்கம். அந்த மனிதர் தனது நான்கு சிறார்களுடன் ஒவ்வொரு நேரத் தொழுகைக்கும் வருவார். தந்தைக்குப் பக்கத்திலேயே நால்வரும் தொழுகையில் அணிவகுத்து நிற்பர். 10, 8, 4, 2 என பாலகர்களின் வயதாக இருக்கலாம். தந்தையைப் போன்றே சுன்னத் தொழுகைகளை பேணித் தொழுவார்கள். வெள்ளிக் கிழமைகளில் தந்தையைப் போன்றே குழந்தைகளும் வசூலிப்பவர்களின் கோப்பைகளில் போட நாணயங்கள் கேட்டுத் துடிப்பார்கள். பெரியவருடன் சேர்ந்து சிறார்கள் நாணயங்கள் சத்தமிட கோப்பையில் இடுவார்கள். வெள்ளிக்கிழமை வந்தால்... இல்லையில்லை ஒவ்வொரு தொழுகை நேரம் வந்து விட்டாலும் தொழச் செல்ல வேண்டுமென்ற பேரவா அவர்களது முகங்களில் துலங்கும். பார்ப்பதற்கே கண்கொள்ளா ஆன்மாவைத் தொடும் காட்சி.

பள்ளிவாயல்களுடன் தொடர்புபடுத்துவது, அன்பாக நயமாக குழந்தைகளுக்கு இஸ்லாத்தை சின்னஞ்சிறு வயதிலிருந்து வளர்ப்பதென்பது நிச்சயமாக அவர்களின் எதிர்கால ஆளுமையில் பெரும் பங்காற்றுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நபிகளார் (ﷺ) தொழுவிக்கும் போது பேரப் பிள்ளைகள் தோள்களிலே இருந்திருக்கிறார்கள். இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களை தனது வாகனத்தில் தனக்கு பின்னால் அமர்த்திக் கொண்டு, ''அல்லாஹ்வை நினைவில் இருத்திக்கொள்; அல்லாஹ் உன்னை ஞாபகப்படுத்து வான்..." என சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

இமாம் ஹசனுல் பன்னாஹ் (ரஹ்), தனது மகன் ஸைபுல் இஸ்லாத்திற்கு சிறுபராயத்திலே பணம் வழங்கு வார்கள். பாடசாலைக்குச் செல்லும் வழியிலுள்ள பள்ளி வாயல் உண்டியலில் போடுமாறு கூறுவார்கள். நூல்கள் வாங்கிப் படிக்க செலவு செய்யுமாறு தூண்டுவார்கள்.

ஷஹீத் ஸெய்யித் குதுப் (ரஹ்) அவர்கள் ஒரு நல்ல 'காரி' ஆக வரவேண்டுமென்பதற்காக அவரது தாயார் நோன்பு காலங்களில், அல்குர்ஆனை இனிமையாக ஓதுபவர்களை வீட்டிற்கு அழைத்து இறைமறையை பாராயணம் செய்யச் செய்வார்கள். தனது ''அத்தஸ்வீருல் பன்னி" யில் செய்யித் குதுப் அவர்கள், 'உம்மா! சிறந்த முறையில் தர்தீலாக அல்குர்ஆனை ஓதக் கூடிய இனிமை யான குரல் கொண்ட 'காரி' ஆக இல்லாவிட்டாலும், இறைமறைக்கு சிறந்த விளக்கம் கொடுத்து ஓதுபவனாக ஆகியுள்ளேன்." என எழுதியுள்ளார்கள். எனவே சிறு பராயத்திலேயே நாம் விதைக்கும் இலட்சியங்கள் இருபது வருடத்திலோ, நாற்பது வருடத்திலோ நிச்சயம் நல் விளைவிக்கும் என்பதை உணர்ந்து செயற்படுவோமாக!

# இஸ்லாமிய ஷரீஆவில் விரிவும் நெகிழ்வும்

இறுதிப் பகுதி

மூலம் : கலாநிதி யூஸுப் அல்கர்ழாவி தமிழில் : அஷ்ஷெய்க். A. அப்துல் மலிக் நளீமி

**இஸ்திஸ்லாஹை ஆதாரமாகக் கொள்ளும் போது கவனத்திற் கொள்ள இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் முன்வைத்த மூன்று நிபந்தனைகள்:**

**01** அடிப்படையில் மனித சிந்தனையால் ஜீரணித்துக் கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும்; பகுத்தறிவு அங்கீகரிக் கத்தக்கதாக அமைய வேண்டும்; வணக்க வழிபாடுகளுடன் தொடர்புடைய இபாதத் விடயங்களில் 'இஸ்திஸ்லாஹு'க்கு எவ்வித தலையீடும் செய்யமுடியாது. ஏனெனில் அவற்றை வந்துள்ளவாறு ஏற்றுக்கொள் வதே அடிப்படையாகும்.

**02** ஷரீஆவின் நோக்கங்களுடன் முழுமை யாக இணங்கிச் செல்ல வேண்டும்; அடிப்படைகள் எவற்றுடனும் முரண்படக் கூடாது. அல்குர்ஆன், முதவாதிரான நபி மொழிகள் என்பன தெரிவிக்கும் ஆதாரங் கள் எவற்றுடனும் முரண்படக் கூடாது. ஷரீஆ கொண்டுவர விரும்புகிற நலன்களு டனும் இணைந்து செல்ல வேண்டும். குறிப்பிட்ட அம்சமொன்று மேற்குறிப்பிடப் பட்ட 'நலன்களில்' ஒன்றாக காணப்படலாம். அவற்றை விட்டும் வெகுதொலைவான, புத்திக்குப் படாதவையாக இருக்க கூடாது. இங்கு, இவ்விடயம் தொடர்பான குறிப்பான ஆதாரங்கள் அல்குர்ஆனிலும் ஸுன்னா விலும் வந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

**03** உயிர் போன்ற தவிர்க்க முடியாத ஒன்றைப் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கத்தை, அல்லது மார்க்கத்தில் அவசியம் தவிர்த்தே ஆகவேண்டும் என்றுள்ள ஒரு சங்கடத்தை, கஷ்டத்தை நீக்குவதை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்.

அக்கஷ்டத்தை அகற்றுவதானது உயிரைப் பாதுகாத்தல் என்பது போன்ற அத்தியாவசிய நலனின் அடுத்த தரத்தில் வந்து சேரலாம்; அல்லது அதைவிடக் குறைந்த நிலைமையாக மார்க்கத்தில் சலுகைகளை வழங்கி இலகுபடுத்திக் கொடுப்பதாக காணப்படலாம்.

அத்தியாவசியமான அம்சங்களில் மாத திரம்தான் 'இஸ்திஸ்லாஹ்' வரவேண்டு மென இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறிய நிபந்தனை கட்டாயமில்லை. அதைவிட குறைவான நிலைமைகளிலும் வரமுடியும். மக்களுக்கு மார்க்கத்தை இலகுவாக பின்பற்றுவதற்கு வழிவகை செய்து கொடுப் பதாக அமையலாம். அல்லது மார்க்கத்தில் உள்ள ஒரு கஷ்டத்தை சங்கோஜத்தை நீக்கிவிடுவதாக இருக்கலாம்.

மேலும் அனைத்து முஸ்லிம்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதும் அவசியமல்ல. தனிநபர்களின், வேறுபட்ட பிரிவினரின் நலன்களை தனித்தனியாக கவனத்திற் கொள்வது ஒன்றும் ஷரீஆவில் அனுமதிக்கப்படாத ஒன்றும் அல்ல.

அல்குர்ஆன் வசனங்கள், முதவாதிரான ஹதீஸ்கள் போன்று மிகமிக உறுதியான ஆதாரம் கொண்டவையாக இருக்க வேண்டும் என்பதுமல்ல. 'சரியாக இருக்க முடியும்' என்ற பலமான யூகம் ஷரீஆவின் கிளைச் சட்டங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட விடயங்களில் ஷரீஆ அதனைக் கொண்டு தீர்ப்பும் வழங்கியுள்ளது.

அவசியம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மிக முக்கிய விடயம் யாதெனில் 'இஸ்திஸ்லாஹ்' பேசவருகின்ற நலன், யதார்த்தபூர்வமானதாக காணப்பட வேண்டும்; வெறும் பிரமைக்குட்பட்டதாக இருக்கக் கூடாது. மனோஇச்சை, பிரமை, தீயசிந்தனை, பழக்கவழக்கங்கள் என்பன சில மனிதர்களை திருப்பி விடலாம். சில செயல்களை நலன் கள் என கருதுவார்கள்; ஆனால் அடிப் படையில் அவை தீங்கு விளைவிக்கக் கூடியவையாகவே இருக்கும். நன்மையை விட அங்கு பாதிப்பே அதிகமாயிருக்கும். தமது சுயநலன்களுக்காக வேண்டி பொது நலன்களை பொடுபோக்காக விட்டுவிடுகிறார் கள். இன்று அல்லது நாளை கிடைக்க விருக்கும் சொந்த நலனை அடைந்திருப்பார் கள். ஆனால், அவ்வற்ப பயன் கொண்டு வரும் நிரந்தரப் பாதிப்பை கணக்கெடுக்காது விட்டிருப்பார்கள். சடரீதியாக பெற்றுக் கொள்ளும் இலாபத்திற்காக மனோரீதியாக விளையும் அபாயங்களை சிந்தனைக்குக் கூட எடுக்க மாட்டார்கள். அற்ப இலாபம் ஈட்டிக் கொள்ளும் தீவிர ஆசையின் காரண மாக பாரிய சீர்கேடுகளைப் பற்றி கவலைப் பட மாட்டார்கள். 'தான்' என்ற சுயநலம், மரம் நட்டு நாளையே பழம் கிடைக்க வேண் டும் என்ற அவசரம், நிரந்தரப் பயனைவிட தற்காலிகமாக வந்தடையும் அற்ப இலாபம், பொதுமக்கள் எனப் பார்க்காது தனது 'இனம், நாடு' எனப் பார்க்கும் மனோநிலை, சடரீதியான அடைவுகளுக்கே முன்னுரிமை வழங்கல் என்பன போன்ற பல்வேறு காரணிகள் மனிதர்களின் சிந்தனையில் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. தூக்கம் விளைவிக்கின்றன. இதன் காரணமாகவே நலன்களை வைத்துத் தீர்ப்புக்களைத் தீர்மானிக்கும்போது விழிப்புடன் செயற்பட வேண்டும். அவற்றை சீரிய முறையில் மதிப்பீடு செய்வதுடன் நீதியாக அணுகவும் தெரிந்திருக்க வேண்டும்.

இமாம் இப்னு தகீக் அல்ஈத் (ரஹ்) கூறுகிறார்: ''இஸ்திஸ்லாஹை' ஆதாரமா கக் கொள்வோரை நான் மறுக்கவில்லை. மாறாக, அதனைத் தொடர்ந்தும் பயன் படுத்துவோர். அது பற்றிய ஆழ்ந்த ஆய்வில ஈடுபட்டு முடிவுகளைப் பெற்றுக் கொள் வோர் ஆகியோருக்கு சீரான ஆய்வும், கூரிய நோக்கும் மிக இன்றியமையாத தேவை ஆகும்.''

முக்கியமான ஒரு யதார்த்தத்தை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். குறிப்பிட்ட ஒரு நலனின் அடிப்படையில் எழுந்துள்ள ஒரு தீர்ப்பு உயிர்வாழ்வதற்கு ஒரு நிபந்தனை உண்டு. ''நலன் நிலைத்திருக்கும் காலம் வரையுமே குறிப் பிட்ட தீர்ப்பும் நிலைத்திருக்கும். இத்தீர்ப்பு உருவாகுவதற்கான அடிப்படைக் காரணம் குறிப்பிட்ட அந்நலனே. தீர்ப்பைப் பொறுத்த வரை காரணம் இருந்தால் மாத்திரமே நடை முறையிலிருக்கும். காரணம் அகன்றுவிடும் வேளை தீர்ப்பும் செயலிழந்து விடும்.''

உதாரணமாக கட்டாயமான தண்டனை களைவிட மேலதிகமாக, குற்றவாளியைப் பொறுத்து நீதிபதிகள் வழங்கும் தண்டனை களை குறிப்பிடலாம். இன்னும் கூறுவ தாயின் இஸ்லாமிய அரசை நடாத்திச் செல்கின்ற வேளையில் குறிப்பிட்ட வேளைகளுக்கென்றே சில தற்காலிக சட்டங்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்படும். அவ்வாறான சட்டங்கள் நேர் வழிபெற்ற கலீபாக்கள், ஏனைய ஸஹாபி கள், பிற்பட்ட காலங்களில் வந்தோர் என அனைவரின் வாழ்க்கையிலும் இடம் பெற்றுள்ளது. ஏன் நபிகளாரது வாழ்விலும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

நபி (ﷺ) அவர்கள் ஆரம்பகால கட்டங்களில், தான் கூறும் ஹதீஸ்களை எழுதிவைக்க வேண்டாமென தடைசெய்தார் கள். ஏனெனில் அல்குர்ஆனுடன் கலந்து விடுமென பயந்தார்கள். உமர் (رضي الله عنه) மேற் கொண்ட வழிமுறையைப் பாருங்கள். 'அதிகம் நபிமொழிகளை அறிவிப்பதை குறைத்துக் கொள்ளுங்கள்' என ஸஹாபி களுக்குப் பணித்தார்கள். காரணம்

அல்குர்ஆனை விட்டும் பராமுகமாக நடக்க மக்களைத் தூண்டிவிடும் என அஞ்சினார்கள்.

இன்னும் ஒரு நிலைமையில் ஹஜ் கடமையை தனித்து நிறைவேற்றுமாறு கட்டளை பிறப்பித்தார்கள். அப்போதுதான் ஹஜ் தவிர்ந்த ஏனைய மாதங்களில் உம்ராவை மேற்கொள்ள மக்கள் வருவார்கள். எனவே வருடம் முழுவதும் அல்லாஹ்வின் வீடு, அதனை தரிசிக்க வருவோரை சந்தித்துக் கொண்டேயிருக்கும்.

இரு மாதிரியான உதாரணங்களை நோக்கி இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) கூறுகிறார்: ''நலன்களை அடிப்படையாக கொண்ட இவை நிரந்தரமற்ற வழிமுறைகளாகும். நலன்கள் எப்போதும் கால மாற்றத்துக்கேற்ப வேறுபட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் சிலர் மறுமை வரை தொடரும் பொதுவான தீர்ப்புக்களாக இவற்றை எண்ணுகின்றனர். அவசியம் ஒரு குழுவினரல்ல, அனைவரும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றனர். முடிவாகக் கூறுவோமாயின் ஒவ்வொரு வருக்கும் நியாயங்கள் உண்டு. அவரது நிலைப்பாட்டிற்கான கூலியும் உண்டு. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட வேண்டுமென்பதற்காகவே ஒவ்வொருவரும் இஜ்திஹாத் ஆய்வினூடாக தீர்ப்புக்களை பெற்று இருப்பார். தவறு விட்டால் முயற்சிக்கு ஒரு கூலி உண்டு; சரியாக செய்தால் இரண்டு கூலிகள் உண்டு. காலத்தினடிப்படையில் அல்லது சூழலின அடிப்படையில் வந்துள்ள நலன்களைப் பின்னணியாகக் கொண்டு தீர்ப்புகளை உருவாக்குவதற்கு ஷரீஆவில் இடமுண்டு. <u>''காலம், இடம், சூழல் என்பவற்றின் மாற்றம், வித்தியாசமான தன்மை என்பவற்றிற்கு ஏற்ப மார்க்கத் தீர்ப்பும் மாற்றமடையும்''</u> என்ற பொதுத் தலைப்பின் கீழேயே இவ்வம்சம் இடம்பெறும். அடுத்துவரும் வரிகளில் விரிவாக நோக்கவும்.

# 04. மரபு (அல்உர்பு)

அல்குர்ஆன் ஸுன்னாவிலிருந்து போதிய வாக்கியங்கள் கூறப்படாது வெறுமையாக விடப்பட்டுள்ள இப்பகுதியில் மரபைப் பயன படுத்தும் வகையில் விசாலமான ஒரு பரப்பு உண்டு. மரபு எனும்போது மக்கள் தமது வாழ்க்கை விவகாரங்களில் பழகிப் போய்விட்ட, நன்கு இயைபாக்கம் அடைந்துள்ள அம்சங்களாகும். பரிச்சயம் மட்டுமன்றி அவற்றை திருப்தியாக ஏற்றுக் கொள்ளவும் செய்கிறார்கள். அனைவரும் அறிந்த பிரபல்யமிக்க ஒன்றாக அவ்விடயம் மாறி விடுகிறது.

அது சொல்சார்ந்த ஒரு மரபாக அமையலாம்; அல்லது செயல்சார்ந்த ஒன்றாக அமையலாம்; அல்லது அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானதாக காணப்பட முடியும். அல்லது குறிப்பிட்ட சிலருடன் மாத்திரம் தொடர்புடைய ஒரு மரபாக இருந்துவர முடியும்.

சொல் சார்ந்த மரபிற்கு உதாரணமாக, மக்கள் மீனை 'இறைச்சி' என அழைப்பதில்லை. ஆனால் மொழியில் மீனும் இறைச்சி வகையே ஆகும்.

செயல் சார்ந்த மரபிற்கு உதாரணமாக, வியாபாரத்தில் விற்பவருக்கும் வாங்குபவருக்குமிடையிலான வாய்மொழி ரீதியாக சொல்லப்படும், 'இவ்வளவு தொகைக்கு வாங்க உடன்படுகிறீர்களா?' 'ஆம் அத் தொகையை வழங்க சம்மதிக்கிறேன்.'' எனக் கூறுவதெல்லாம் வழக்கொழிந்து விட்டது. மாற்றமாக செயலில் பொருட்களை பரிமாற்றம் செய்வது மாத்திரமே மக்கள் மத்தியில் வழக்காக மரபாகி விட்டுள்ளது.

**பொதுவான மரபு:** எல்லா நாடுகளிலும் வாழுகின்ற மனிதர்கள் அனைவரும் தமது வித்தியாசங்களை மறந்து பழகிப்போன ஒரு விடயமே இங்கு நோக்கப்படுகிறது.

**குறிப்பிட்ட மரபு:** சில பிரதேசங்களில் காணப்படாது மற்றைய சில பகுதிகளில் பரவலாகவுள்ள, அல்லது சில மக்கள் குழுவினர்களுக்கு மத்தியில் மாத்திரம் பரிமாறப்படும் வழக்கே இங்கு கவனத்திற் கொள்ள வேண்டியதாகும். குறிப்பிட்ட பிரதேசங்களிலுள்ள வியாபாரிகளுக்கு மத்தியிலுள்ள வர்த்தக வழக்குகளை உதாரணமாகக் கொள்ளலாம்.

இஸ்லாம் தோற்றம் பெற்ற வேளையில் பல்வேறுபட்ட மரபுகள் அரபிகள் மத்தியில் நிலவி வந்தன. இஸ்லாத்தின் நோக்கங்கள், அடிப்படைகளுக்கு முரண்படாத, சீரான வரவேற்கத்தக்கவற்றை எமது மார்க்கம் ஏற்றுக்கொண்டது; இவற்றிற்கு முரணான வற்றை மறுத்துவிட்டது. இன்னும் சில வழக்குகளைப் பொறுத்தவரை அவற்றில் மாற்றங்களையும் திருத்தங்களையும் மேற்கொண்டது. அவை இஸ்லாத்தின் போக்கிற்கும், இலக்குகளுக்கும் இணங்கி வந்த போது அங்கீகரித்தது.

ஷரீஆ சில அம்சங்களை அசைக்க முடியாத திண்மங்களாக வரையறுத்து வைக்கவில்லை. நல்லமுறையான மரபுகள் தீர்ப்புக் கூறட்டும் என விட்டுச் சென்றுள்ளது. எனவே, வழக்கில் உள்ள முடிவுகளே குறிப்பிட்ட பிரச்சினையின் எல்லைகளை வகுத்து விளக்கவுரைகளை முன்வைக்கும். அல்லாஹ் கூறுகிறான்:

**"...தவிர வழக்காற்றின்படி (அத்தாய்மார்கள் பாலூட்டும் வரையில்) அவர்களுக்கு ஆடையும், ஆகாரமும் கொடுத்து வருவது குழந்தையின் தந்தை மீது கடமையாகும்'' (சூறா அல்பகரா :233)**

**"தவிர, விவாகரத்தான பெண்களுக்கு வழக்காற்றின்படி பரிபாலனம் பெறப் பாத்தியமுண்டு..."(சூறா அல்பகரா: 241)**

ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்பட வேண்டிய செலவைத் தீர்மானிப்பதில், விவாகரத்திற்குள்ளான பெண் இன்பங்களை அனுபவிக்கும் வரையறைகளை வகுப்பதில் மரபு நீதிபதியாக செயற்படுகிறது.

**"பிரிந்து சென்று விடாத வரைக்கும் இரு வியாபாரிகளுக்கு தேர்வுச் சுதந்திரம் உண்டு''** என்ற நபிமொழியில் வந்துள்ள 'பிரிவு' என்பதன் பொருளை மரபே முடிவுகட்டும்.

**"யார் ஒரு தரிசு நிலத்தை உயிர்ப்பிக்கிறாரோ அது அவருக்கே உரித்தானதாகும்''** என்ற ஹதீஸில் இடம் பெற்றுள்ள 'உயிர்ப்பித்தல்' என்றால் யாது என்பதை மக்களின் வழக்கே வரையறை செய்யும். களவு செய்த ஒருவன் 'எவ்வளவு தொகையை' எடுத்திருந்தால் அது களவாகக் கொள்ளப்படும் என்பதையும் மரபுதான் எல்லையிட்டுக் கூறும்.

வியாபாரம், அன்பளிப்பு ஆகியவற்றில் ''கையில் பெற்றுக் கொள்ளுதல்'' என்றால் என்ன என்பதை மரபே வகுத்து வழங்கும்.

எங்கு இது இடம்பெறுகிறது எனில் அல்லாஹ் ஒரு சட்டத்தை முன்வைத்திருப்பான். ஆனால் தெளிவான விளக்கங்களை அது தொடர்பாக கூறியிருக்க மாட்டான். மக்களின் மரபை வைத்து முடிவைப் பெற்றுக் கொள்ளட்டும் என விட்டுவிட்டான் என இமாம் இப்னு குதாமா, மற்றும் ஹன்பலி மத்ஹபின் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக பிக்ஹ் கலை அறிஞர்கள் மரபை வரவேற்றுள்ளனர். அதன்மீது அதிகமான சட்டங்களை கட்டியெழுப்பி உள்ளனர். இப்னு மஸ்ஊத் (ﷺ) அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படும் கூற்றையும் ஆதாரமாகக் கொள்கிறார்கள்.

**''முஸ்லிம்கள் நல்லவை எனக் கண்டவை அல்லாஹ்விடத்திலும் நல்லவையாகும்.''**

நபிகளார் வாயிலாக வந்த ஹதீஸ் என சிலர் இக்கருத்தை எண்ணிக் கொண்டுள்ளனர். மாற்றமாக இப்னு மஸ்ஊத் (ﷺ) அவர்களின் கூற்றாகவே இதுவுள்ளது.

''மரபு சட்டம் வகுக்கும்'' என்பது பிரபல்யமான பிக்ஹ் விதிகளுள் ஒன்றாகும். அவற்றின் பிரிவுகளை நோக்குவோமெனில்,

''மரபு என பிரபல்யம் பெற்ற ஓர் அம்சம், நிபந்தனையாக இடப்படும் ஒன்றின் தரத்திற்கு சமமாகும்.''

''மரபினடியாக ஒரு முடிவெடுப்பது அல்குர்ஆன் அஸ்ஸுன்னா ஆகியவற்றிலிருந்து பெறப்படும் முடிவை ஒத்தது.''

''வழக்கின் அடிப்படையில் மறுக்கப்படும் ஒரு செயல் யதார்த்தத்திலும் மறுக்கப்பட்ட ஒன்றாகும்.'' சில இலக்கிய அறிஞர்கள் இவ்வாறு கூறுவார்கள்:

*ஷரீஆவில் மரபிற்கு அதற்கே உரிய அந்தஸ்த்து உண்டு*
*எனவேதான் அதனைச் சுற்றி சட்டம் சுழன்று வருகிறது*

மேலே வந்த நோக்கில் மரபைப் பேணி வருவது ஒரு வகையில் நலனைக் கருத்திற் கொள்வதாகும். மனிதர்கள் பழகிப் போய் விட்ட, தங்களுக்கு மத்தியில் அறிமுக மான, காலா காலமாக, பரம்பரைகள் பலவற்றின் வாழ்க்கை விவகாரங்கள் அதன் மீது எழுந்துள்ள, வழக்கில் வந்த ஒரு நடவடிக்கையை அங்கீகரிப்பது அவர் களுக்கே நன்மையைக் கொண்டுவரும்.

ஆகவே க்ஷ்டங்களை இலகுபடுத்தி, சங்கடங்கள் தொல்லைகள் என்பவற்றுக்கு முடிவு கட்டவே நமது மார்க்கம் வந்துள்ளது. அல்லாஹ் கூறுகிறான்:

**“அவன் உங்களுக்கு இலகுவையே விரும்புகிறான். கஷ்டத்தை உங்களுக்கு ஏற்படுத்த அவன் விரும்பவில்லை”**
**(சூறா அல்பகரா :185)**

**‘‘அவன்தான் உங்களை தெரிவு செய்தான். உங்கள் மார்க்கம் தொடர்பாக தொல்லைகளை அவன் உண்டு பண்ணவில்லை.” (சூறா அல்ஹஜ் :78)**

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

**‘‘நிச்சயமாக மக்களுக்கு மார்க்கத்தை இலகுபடுத்திக் கொடுக்கக் கூடியவர்களாகவே அனுப்பப்பட்டுள்ளீர்கள். மாற்றமாக கஷ்டங்களை திணிப்பவர்களாக அல்ல.” (திர்மிதி)**

அல்குர்ஆன், ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஹதீஸ்கள், இஜ்மா என உறுதியாகவே வந்துள்ள தீர்ப்புக்கள் ஆகியவற்றுடன் முரண்படாத வரையுமே மரபு கருத்திற் கொள்ளப்படுகிறது. மேலும் அதன் பின்னால் மறைந்திருப்பது முழுமையாகவே தீங்கு அல்லது நன்மை உருவாவதை விட பாதிப்பு நிகழும் என்பதே மிகையான நிலைப்பாடு எனும் நிலைமைகள் கூட காணப்படக் கூடாது.

மரபு, அல்குர்ஆன் ஸுன்னாவுடன் முரண்படுகிறது; ஹராம் என தடுக்கப் பட்டவற்றை ஆகும் எனக் கூறுகிறது. கடமைகளை கேளிக்கை கூத்துகளாக ஆக்கிவிடுகிறது; மார்க்கம் அங்கீகரிக்காத புதிய புதிய அம்சங்களை உள்ளே புகுத்த முயற்சி செய்கிறது; சீர்கேடு, தீங்கு என்பவற்றைப் பரப்பி மக்களின் ஆரோக்கிய சூழலைப் பாழடித்து விடுகிறது போன்ற நிலைமைகளுக்கு வழிவகுக்கும் மரபை இஸ்லாமிய ஷரீஆ சிறிதேனும் கவனத்திற் கொள்வதில்லை. சட்டவாக்கம், பத்வா வழங்கல், நீதித்துறை என்பவற்றில் ஈடுபடும்போது அதனை கருத்திற் கொள்வதையும் தடுத்துள்ளது.

‘‘இடம், காலம் என்பவற்றின் மாற்றம் மரபில் மாற்றங்களை தோற்றுவிக்கும். எனவே, அதன் மீது கட்டியெழுப்பப் பட்டுள்ள சட்டங்களும் மாற்றமடையும்.”

இடமாற்றத்திற்கு இமாம் அஷ்ஷாதிபி கூறும் உதாரணத்தைப் பாருங்கள்:

‘ஓர் ஆண் தலையை மூடாமல் செல்வதை எடுத்துக் கொள்வோமானால் மனிதத் தன்மை, பண்பாடு என்பன பற்றி வலியுறுத்துகின்ற கீழைத்தேய நாடுகளில் உள்ளவர்கள் அதனை ஒழுக்க விதிகளுக்கு முரணானது எனக் கொள்கிறார்கள். மேற்கு பிரதேசங்களில் வாழ்கின்றவர்கள் அவ்வாறு கருதுவதில்லை. இங்கு இடத்திற்கேற்ப ஷரீஆவின் முடிவும் மாற்றம் பெறுகிறது. கிழக்குப் பிரதேச நாட்டு மக்கள் தொப்பி போன்ற ஒன்றினால் தலையை மறைக்காதவனின் சாட்சியை நீதியானதாகக் கருத மாட்டார்கள். ஆனால் மொரோக்கோ போன்ற மேற்குப் பகுதி மக்கள் அவனும் நீதியுடையவன் எனக் கொள்கின்றனர்.’

கால மாற்றத்திற்கு இமாம் அல்கராபி கூறும் உதாரணத்தை நோக்குவோம். அவர்களது இம்முடிவு பற்றி இமாம் மாலிக் ‘அல்அஹ்காம்’ எனும் நூலில் தெரிவிக்கிறார்.

‘‘மனைவி மஹர்த் தொகையை கையேற்காத நிலையில், கணவனும் மனைவியும் உடலுறவில் ஈடுபட்ட பின், அது தொடர்பாக சர்ச்சைகள் இடம்பெற்றால் கணவனது கூற்றே அங்கீகரிக்கப்படும்.”

மாலிக் மத்ஹபைச் சார்ந்த அல்காழி இஸ்மாயீல் இம்முடிவு பற்றி இன்னும் விளக்குகிறார்:

‘‘முன்னர் மதீனாவில் நிலவிய மரபு இதுவல்ல; மனைவி மஹர்த் தொகையை பெற்றுக் கொண்ட பின்னரே கணவன் தாம்பத்திய உறவில் ஈடுபடமுடியும். மஹர் சம்பந்தமாக பிரச்சினை ஏற்பட்டால் மனைவி கூறுவதே ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிகமாக அவளிடமிருந்து ஒரு சத்தியமும் பெற்றுக் கொள்ளப்படும். ஆனால் இன்றைய நிலைமை நேர்முரணாக மாறி அவர்களது வழக்கும் மாற்றம் பெற்றுவிட்டது. மரபுகளின் மாற்றமே இங்கு தீர்ப்பிலும் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது.”

விஷேட மரபொன்றினை கருத்திற் கொண்டு ஹனபி மத்ஹபைச் சேர்ந்த அல்லாமா இப்னு நுஜைம் கூறுகிறார்:

‘கெய்ரோ’ நகரின் சில சந்தைப் பகுதிகளில் சிலர் கடைகளை வெறுமையாக விட்டுச் சென்று விடுவர். தவிர்க்க முடியாத இந்நிலைமை கூடும் என மார்க்கத் தீர்ப்பு வழங்குவது அவசியத் தேவையாக உள்ளது. அவ்வாறு வெறுமையாக வைப்பது வாடகைக்குப் பெற்றவனின் உரிமையாக உள்ளது. கடை உரிமையாளன் அங்கிருந்து அந்த வியாபாரியை வெளியேற்றவோ அல்லது வேறு எவருக்காவது கூலிக்கு இன்னுமொரு முறை வழங்கவோ முடியாது. ‘வக்ப்’ செய்யப்பட்ட கடைகளாக இருந்தாலும் வெறுமையாக விட்டுவைப்பது என்பது வியாபாரியின் உரிமையாகும். இது எகிப்து நாட்டிற்கேயுரிய மரபாகும்.

ஹாஷியா எனும் நூல்களுக்கு மேலதிக விரிவுரைகள் எழுதும் சிலர் கீழ்வருமாறு கேட்கின்றனர்: இது ஷரீஆவின் விதிகளுக்கு முரணாக இருப்பதனால் எப்படி இவ்வாறு பத்வா வழங்க முடியும்?

(நிறைவு பெற்றது)

**உசாத்துணைகள்:**


1. தாரகுத்னி
2. புகாரி, முஸ்லிம்
3. அல்பஸ்ஸார்
4. இ.்லாமுல் முவக்கிஈன் (பாகம் :1)
5. இர்ஷாதுல் புஹுல்
6. ‘‘அல்குர்ஆன் சுன்னாவில் நேரடி வசனங்கள் வந்திராத பிரச்சினைகளில் சட்டவாக்கத்திற்கான மூலாதாரங்கள்”- அஷ்ஷெய்க் ஹல்லாப்
7. அல்மு.்னி - இப்னு குதாமா
8. மாலிக் -அபூ ஸஹ்றா
9. அல்இ.்திஸாம் - ஷாதிபி
10. அல்புரூக் - கராபி
11. தன்கீஹுல் புஸுல் வ ஷரஹுஹு
12. பிக்ஹுஸ் ஸகாத்
13. அல்இஹ்தியார் (பா:02)
14. அலமுஸ்தஸ்பா (பா:01)
15. மதாலிபு உலுந்நஹீ (பா:02)
16. அல்முஹத்தப்
17. அல்முஹல்லா
18. பிதாயதுல் முஜ்தஹித்
19. அத்துருக்குல் ஹுக்மிய்யா
20. அஸ்ஸுன்னா - இமாம் அஹ்மத்
21. கஷ்பல் கபா.். வமுஸீலுல் இல்பாஸ்
22. அல்அஷ்பாஹ் வன்னளாயிர்
23. இல்மு உஸுலில் பிக்ஹு
24. ஹாஷியதுல் அஷ்பாஹ்

**இளைஞர்களே...!**
**இறைபணியில் இணைந்திடுவோம்!**
**மறைவழிப் பாதையில் நகர்ந்திடுவோம்!**
**குறை நிறைந்த கொள்கைகளை**
**கூடிநின்று தகர்த்தெறிவோம்!!**
**இளைய சக்திகள் இணைந்தெழட்டும்!**
**இமயப் புரட்சியும் இமைப்பொழுதில் என்றாகட்டும்!!**

## எமது புதிய நாஸிமிடமிருந்து...

# வாழ்வு முடிவடைய முன்...

இஸ்லாம் இயற்கையிலேயே மேலோங்கக்கூடிய தன்மையைக் கொண்ட மார்க்கம். மனித சமூகம் எப்பொழுதுமே வேண்டி நிற்கின்ற, நிம்மதியையும், சமாதானத்தையும் தன் பெயருடனேயே இணைத்துக் கொண்ட மார்க்கம்.

உண்மையில் நிம்மதியும், சமாதானமும் இந்த பூமிக்குத் தேவை என்று கூறிக் கொண்டு, மனித சமூகம் பல்லாயிரம் குழுக்களாகப் பிரிந்து, பலவிதமான, இலக்குகளையும் வழிமுறைகளையும் ஏற்படுத்தி முயற்சி செய்து கொண்டிருக்கிறது. எனினும் எந்தவொரு வெற்றியையும் கண்டதாகத் தெரியவில்லை. மாற்றமாக தோல்விகளும் பிரச்சினைகளும்தான் இன்னும் பல மடங்குகளாக அதிகரித்துள்ளன. காரணம், அவற்றின் இலக்குகளிலும், வழிமுறைகளிலும் கோளாறுகள் இருக்கின்றன; அந்த மனிதர்களது சொந்த வாழ்க்கையிலேயே அவிழ்க்க முடியாத பல சிக்கல்கள் இருக்கின்றன.

இஸ்லாம் மனித உள்ளங்களையே தனது இலக்காகக் கொள்கிறது; மூளைகளையல்ல! உள்ளங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மட்டும்தான் மனிதன் வாழ்கின்ற சூழலிலே மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதை அது தனது போக்காகக் கொண்டிருக்கிறது. எனவே, எந்த மனிதனது உள்ளத்தில் இஸ்லாம் இடம்பிடித்து விடுகிறதோ அவன் நிம்மதியடைகிறான். அவனைச் சூழ உள்ளவையும் நிம்மதியடைகின்றன. எனவே, இவ்வுலகம் நிம்மதி பெறவேண்டுமானால் இஸ்லாம் மனித உள்ளங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டும். இந்த உயரிய பொறுப்பானது இஸ்லாத்தைச் சுமந்து கொண்ட முஸ்லிம்களுடையதாகும். இஸ்லாம் சில சடங்கு சம்பிரதாயங்களைக் கொண்டதொரு மதம் என்றும், குறிப்பிட்டதொரு இனத்துக்கு மட்டுமே உரியது என்றும் நிலவுகின்ற பிழையான விமர்சனங்களிலிருந்து மாசுதட்டி, ''சர்வதேச மார்க்கம் இஸ்லாம்'' என்ற கருத்தினையும், உளப்பதிவினையும் மனித உள்ளங்களில் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுக்கு இருக்கிறது. ஆகவே, இஸ்லாத்தை அறிமுகமான முஸ்லிம்கள், அதனை தூய்மையாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வதும், இஸ்லாம் அல்லாத வேறு எதுவாக இருப்பினும் அவற்றை வெறுத்து ஒதுக்குவதும் மேற்கொள்ள வேண்டிய முதலாவது பணியாகும். அத்துடன் இஸ்லாத்தை ஒரு சக்தியாக, சர்வதேச அரங்கில் முன்வைக்கின்ற இவ்வுத்தமப் பணிக்கு எம் சகோதரர்கள் அறிவு, ஆன்மிக ரீதியாகவும், பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெற வேண்டிய தேவையும் இருக்கிறது.

எனவே, இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தின் மாணவர்களையும், இளைஞர்களையும் நோக்கி ஜம்இய்யா ஓர் அழைப்பினை விடுக்கிறது.

அன்பின் இளைய நெஞ்சங்களே!
அல்லாஹ் உங்களை ஆரோக்கியமாகவும், பல்வேறுபட்ட திறமைகளோடும், ஆற்றல்களுடனும் இந்த நாட்டுக்கு வழங்கியிருப்பது, வேற்று சமூக இளைஞர்களைப் போல தானுண்டு தன்பாடுண்டு என்று வாழ்ந்து விட்டு மடிவதற்காகவல்ல; மாற்றமாக, மனிதகுலத்தை நரகை விட்டும் காப்பதற்காக! நீங்கள் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் வளம்; எனவே ஜம்இய்யாவின் வளம். ஜம்இய்யா உங்களது இயக்கம். உங்களது ஆற்றல்களையும் திறமைகளையும் ஜம்இய்யா வேண்டி நிற்கிறது. நீங்கள் உங்கள்பாட்டில் இருந்து கொண்டு வெறும் பார்வையாளர்களாக இருப்பது, அல்லது கருத்துக்களையும், விமர்சனங்களையும் கூறித் திரிவதானது உங்களையே குறைகாண்பதனைத் தவிர வேறு எதுவுமில்லை. எனவே, எமது வாழ்வு முடிவடையும் முன்பு... இன்ஷா அல்லாஹ், இந்த தீன் வாழ வழிசமைப்போம்! தோள்கொடுப்போம்! நிச்சயமாக, அந்த வல்ல நாயன்- அல்லாஹ் இறையச்சமுள்ள, அவனுக்காக ஊழியம் செய்யும் மக்களோடு இருக்கிறான்.

**"நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவி செய்தால், அவன் உங்களுக்கு உதவி செய்வான். உங்கள் பாதங்களை ஸ்திரப்படுத்துவான்." (அல்குர்ஆன்)**

**ஆர்.எம். நிஸ்மி**
**நாஸிம்**

# களச் செய்திகள்

ஜம்இய்யாவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜனவரி 27,28 இல் மாவனல்லை ஜமாஅத் காரியாலய கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. இதன்போது 2001/2002ம் நடப்பு ஆண்டுக்கான மத்தியசபைத் தெரிவு இடம் பெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

**நாஸிம்:** சகோதரர் R.M. நிஸ்மி
Faculty of Engineering (Civil), University of Peradeniya.

**பொதுச் செயலாளர்:** சகோதரர் ஆகில் அகமத் ஷரிபுத்தீன்.
Faculty of Medical Sciences (Medicine), University of Jayewardenapura.

**நிதிச் செயலாளர்:** சகோதரர் மக்பூல் ஜெனீபர்.
Faculty of Science (Computer), University of Colombo.

**மனிதவளச் செயலாளர்:** சகோதரர் S.K. ஷகீல் மொஹமட்
Faculty of Engineering (Mechanical), University of Moratuwa.

**சமூகசேவைச் செயலாளர்:** சகோதரர் S.I. பஹ்மி
Faculty of Management, University of Kelaniya

**பிராந்திய நாஸிம் – வடமத்தி :** சகோ: M.A.M. ஷாஜஹான்
Faculty of Agriculture, University of Peradeniya

**பிராந்திய நாஸிம்– மேற்கு:** சகோதரர் H. அஜ்மல்
Lecturer, Islamic Institute of Information Technology, Madampe

**பிராந்திய நாஸிம் – மத்தி:** சகோதரர் M.H.M. ஸியாத்
ACS

**பிராந்திய நாஸிம் – கிழக்கு:** சகோதரர் பஹ்ஜ்
Sri Lanka Law College, Colombo

## தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சி

பேராதனை பல்கலைக்கழக ஜம்இய்யா ஊழியர்களுக்கும், மாவனல்லை உப பிராந்திய ஜம்இய்யா இணை அங்கத்த வர்களுக்குமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சி, மாவனல்லை ஜமாஅத் காரியா லயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை கலாநிதி ஸுஹைர் (விரிவுரையாளர், விக்டோரியாப் பல்கலைக்கழகம்- அவுஸ்தி ரேலியா) அவர்கள் நடாத்தினார். அவர் தனது விரிவுரையை, ‘தலைமைத்துவம் என்றால் என்ன?’, ‘தலைமைப் பொறுப்பை ஏற்கின்ற ஒரு தாஇயிடம் இருக்க வேண்டிய பண்புகள் என்ன?’, ‘குழு ரீதியான செயற் பாட்டின் முக்கியத்துவம் என்ன?’ போன்ற கேள்விகளுக்கு விளக்கமாக அமைத்துக் கொண்டதோடு, இஸ்லாமிய ஊழியர்கள் களத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் பற்றிய விரிவான கலந்துரை யாடல் ஒன்றையும் நடாத்தினார். இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக அஷ்ஷெய்க் A.C அகார் முஹம்மத் சகோதரர் மக்பூல் ஜெனீபர் ஆகியோர் கலந்து கொண்டனர். 14.01.2001 ஞாயிற்றுக் கிழமை இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

## வெலம்பொடை ஜம்இய்யா நிகழ்ச்சிகள்

**பெருநாள் ஒன்று கூடல்:**

வெலம்பொடை ஜம்இய்யாவின் இவ் வருட பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சி கலீல ஹாஜியார் திருமண மண்டபத்தில் நடை பெற்றது. இருநூறுக்கும் மேற்பட்ட இளை ஞர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி வெலம்பொட முஸ்லிம் இளைஞர்களின் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்தது.

**ஈதுல் பித்ர் சுற்றுப் போட்டி**

ஈதுல் பித்ர் பெருநாளை முன்னிட்டு வெலம்பொடை ஜம்இய்யாவின் விளையாட் டுப் பிரிவினால் விளையாட்டுச் சுற்றுப் போட்டி ஒன்று வெலம்பொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 30.12.2000 அன்று நடாத்தப்பட்டது. வெற்றி பெற்ற அணிக்கான கிண்ணம் மௌலவி இஹ்ஸான் அவர்க ளால் வழங்கப்பட்டது. இச்சுற்றுப் போட்டியின் போது ஜம்இய்யாவின் வேண்டுகோளுக் கிணங்க இளைஞர்கள் முற்றிலும் இஸ்லா மிய நடைமுறையினைக் கடைப்பிடித்தமை முன்மாதியான ஓர் அம்சமாக அமைந்தது.

# ஜம்இய்யா

## பொறியியல்பீட புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சி

ஜம்இய்யாவின் பேராதனைக் கிளையின் பொறியியல் பீடத்தினால் புதிய மாணவர் களுக்கான (E/2000) வரவேற்பு நிகழ்ச்சி மாவனல்லை மஸ்ஜிதுல் ஹுதாவில் நடை பெற்றது. சகோதரர் பாஸில் அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அல்குர்ஆன் விளக்கம், இஸ்லாம் ஓர் அறிமுகம், பல்கலைக்கழக வாழ்வுக்கான வழிகாட்டல் ஆகிய உரைகள் இடம் பெற்றன. இவற்றை முறையே அஷ்ஷெய்க் இஸ்மத் ரம்ஸி, அஷ்ஷெய்க் மஃரூப், சகோதரர் R.M.நிஸ்மி ஆகியோர் நடாத்தி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, பாடநெறிக்கான கல்வி வழிகாட்டல்கள் பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தககதாகும். அதாவது, பல்கலைக் கழக கல்விசார் வாய்ப்புகளும், சவால்க ளும் பற்றி பல தலைப்புகளில் நிகழ்ச்சிக்கு சமூகமளித்திருந்த புதிய மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இக்கலந்துரை யாடலை சகோதரர்களான ஹஸன், பிஷ்ருல்லாஹ், பாஸில், ரிம்ஸான் ஆகியோர் நடாத்தினர்.

எம் சமூகத்தின் சொத்துக்களான இம்மாணவர்கள் வெறுமனே பொறியிலாளர் களாகவன்றி, அல்லாஹ்வின் தீனை நிலைநாட்டுகின்ற உயர் பணிக்குத் துணை நிற்கக் கூடியவர்களாக உருவாக வேண்டும் என்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

12.01.2001 வெள்ளிக்கிழமை மஃரிப் தொழுகையுடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சி மறுநாள் காலை 7.30 மணியளவில் நிறைவுபெற்றது.

**அஸாபீர் இப்தார்**

வெலம்பொடை ஜம்இய்யா வருடா வருடம் ரமழானில் அஸாபீர் சிறுவர்களுக் கென விஷேட இப்தார் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இவ்வகையில் சென்ற ரமழானில் அம்பகஸ்தென்ன முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் அஸாபீர்களுக் கான இப்தார் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. சுமார் 100 அஸாபீர் சிறுவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# சிறுவர் பூங்கா

## நபி இப்றாஹிம் (ﷺ) அவர்கள் வாழ்க்கை வரலாற்று கட்டுரைப் போட்டி

### நிபந்தனைகள்:

01. கட்டுரைத் தலைப்பு : ''இப்ராஹிம் (ﷺ) அவர்களின் வரலாறும், படிப்பினையும்''

02. கட்டுரைகள் 250-300 சொற்களுக்குட்பட்டவையாக இருக்க வேண்டும்.

03. மாணவனது/மாணவியினது சொந்த ஆக்கமாக, சொந்தக் கையெழுத்தில் கட்டுரை இருக்க வேண்டும்.

04. மாணவர்களது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

05. ஒருவர் ஒரு கட்டுரை மாத்திரமே அனுப்பி வைக்கலாம்

06. போட்டியாளர் 10ம் ஆண்டு அல்லது அதற்குக் கீழ் கற்பவராக இருக்க வேண்டும்.

07. கட்டுரைகள் 'புல்ஸ்கப்' தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்பட வேண்டும்.

08. கட்டுரைகள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி மார்ச் 31 ஆகும்

09. ஆக்கங்கள் யாவும் "SIRUWAR POONGA, ALHASANATH, 77, DEMATAGODA ROAD, COLOMBO 09" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

08. அல்ஹஸனாத் ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும்.

### பரிசுகள்

**1ம் பரிசு :**
750 ரூபா பெறுமதிமிக்க நூல்களுடன் ஒரு வருடத்திற்கான அல்ஹஸனாத் சந்தாவும் சான்றிதழும்.

**2ம் பரிசு :**
500 ரூபா பெறுமதிமிக்க நூல்களுடன் ஒரு வருடத்திற்கான அல்ஹஸனாத் சந்தாவும் சான்றிதழும்.

**3ம் பரிசு :**
250 ரூபா பெறுமதிமிக்க நூல்களுடன் ஒரு வருடத்திற்கான அல்ஹஸனாத் சந்தாவும் சான்றிதழும்.

**பத்து ஆறுதல் பரிசுகள்:**
ஆறுதல் பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு வருடத்திற்கான அல்ஹஸனாத் சந்தாவும் சான்றிதழும்.
40 புள்ளிகளுக்கு மேல் பெறும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

**முதலிடம் பெறும் கட்டுரை அல்ஹஸனாத்தில் பிரசுரிக்கப்படும்**

### நடைமுறைப்படுத்துவோம்

தம்பி தங்கைகளே.

😊 எந்த ஒரு முஸ்லிமைக் கண்டாலும் ஸலாம் சொல்லுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் முன்பின் அறியாதவர்கள், பெரியவர்கள், சிறியவர்கள் என்று பார்க்க வேண்டாம்.

😊 நீங்கள் விளையாடச் சென்றால் 'அதான்' ஒலி கேட்டதும் விளையாட்டை நிறுத்தி விடுங்கள். போட்டிகளுக்குச் சென்றாலும் எதிரணியினருடன் இவ்வாறான ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளுங்கள்.

😊 போட்டியொன்றில் வெற்றியீட்டினால் எதிரணியினரின் மனம் நோகும்படி இழிவான சொற்களைப் பிரயோகிக்காதீர்கள்; ஆரவாரம் செய்யாதீர்கள். அல்லாஹ்வை புகழுங்கள். எதிரணியினருக்கு உற்சாகம் ஊட்டுங்கள்.

😊 நண்பர் நண்பிகளுக்குள் ஏற்பட்ட சிறு சண்டைகளைப் பெரிதாக்கி வீட்டிலுள்ளோரிடம் சொல்லி விடாதீர்கள். உங்களுக்குள்ளே ஸலாம் சொல்லி தீர்த்துக் கொள்ளுங்கள்.

😊 பாடசாலையில் ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள், மத்ரஸாவில் மௌலவிமார்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டு நடப்பதோடு பெரியவர்களுக்கு மரியாதை செய்தும், சிறியவர்களுக்கு அன்பு காட்டுபவர்களாகவும் இருங்கள்.

😊 உங்களது உறவினர்கள், நண்பர்களது வீட்டிற்குச் சென்றாலும் வீட்டினுள் நுழைய முன் ஸலாம் சொல்லி, அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்.

😊 பாதையில் செல்லும் முதியவர்கள், பைத்தியக்காரர்களை தொந்தரவு செய்யவோ பரிகாசம் பண்ணவோ வேண்டாம். அவர்களுக்காக 'துஆ' செய்யுங்கள்.

😊 பாதையில் உள்ள நாய், மாடு போன்ற விலங்குகளுக்குத் துன்பம் இழைக்காதீர்கள்.

😊 ஏழைகள், எளியவர்கள், அநாதைகளுக்கு இரக்கம் காட்டுங்கள். அவர்களுக்கு உங்களால் முடியுமான உதவிகளைச் செய்யுங்கள்.

😊 முஸ்லிமல்லாத நண்பர்கள் அயலவர்களுக்கு மத்தியில் சிறந்த இஸ்லாமியப் பண்பாடுள்ளவர்களாக முன்மாதிரியுடன் வாழ்ந்து காட்டுங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி-07

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 த் | 07 | 08 உ |
| 09 | | 11 | 12 ர | 13 | | 15 | 16 |
| 17 | | 19 | | 21 ஸை | 22 | 23 ப் | 24 |
| 25 பா | 26 | 27 | | 29 | | | 32 ல் |
| 33 | 34 | 35 ஷி | 36 ஸ் | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 சே | 43 | | 45 | | 47 ஸா | 48 |
| 49 ரா | 50 | 51 | 52 | 53 சூ | | 55 | 56 ஹ் |
| 57 | 58 | 59 தி | 60 | 61 இ | 62 அ | 63 | 64 |

### இடமிருந்து வலம் :

1- உங்கள் அபிமான சஞ்சிகை; நல்ல செயல்கள் எனவும் பொருள்படும்.

6. தந்திரம் என்ற சொல்லுக்கு நெருக்கமான சொல் (குழம்பி வந்துள்ளது)

11. பயிர்களின் வளர்ச்சிக்கு இடப்படுவது (மாறி வந்துள்ளது)

15- துறவி என்பதற்கு ஒப்பான அரபுச் சொல். (மாறி வந்துள்ளது)

21. ஆப்கானிஸ்தான் முன்னைய ஜிஹாத் குழுவொன்றின் தலைவர்; ஒரு பேராசிரியரும் கூட

25. கிறிஸ்தவ மத போதகர்

33. ரஸூலுல்லாஹ் இந்த குலத்தைச் சேர்ந்தவர்.

36. அண்மையில் பெண்ணொருவர் ஜனாதிபதியான நாடு. (மாறி வந்துள்ளது)

57. இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களுள் ஒன்று. (மாறி வந்துள்ளது)

62. புலம்பெயர்ந்தவர்

### மேலிருந்து கீழ்:

1. வட்டி அரபியில்

3. புகழ் அரபியில்

8. சட்டக்கலையின் அடிப்படைகளைக் குறிக்கும் அரபுச் சொல்

13. அண்மையில் மறைந்த சஊதி அரேபியாவைச் சேர்ந்த சட்ட வல்லுநர்.

26. பைதுல்மால் தமிழில்

33. பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட இந்திய மாநிலம்

35. அல்லாமா இக்பாலின் நூல் ஒன்றின் பெயர்

37. இஸ்லாமிய ஆட்சி நடைமுறைப்படுத்தப்படும் ஆபிரிக்க நாடு (தலைகீழ்)

39. இஹ்யாஉ உலூமித்தீன்- என்ற நூலை எழுதிய பிரபல இமாம் (தலைகீழ்)

52. முஸ்லிம்களின் சர்வதேச மாநாடு; இஸ்லாத்தின் கடமைகளுள் ஒன்று

# சிறுவர் பூங்கா

## பாத்திஹா சூறா

எம்.எம். முஹம்மத் ஹனீபா ஓட்டமாவடி - 01

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்"

அளவற்ற அருளாளன்
நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ் அவன் பெயரால்
ஆரம்பம் செய்திடுவோம்

"அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்"

சர்வலோக ரட்சகனாம்
அல்லாஹ் ஒருவன்
சர்வ புகழும் அவனுக்கே
சொந்தமாகட்டும்

"அர்ரஹ்மானிர் ரஹீம்"

அருளுக்கும் அன்பிற்கும்
அணிகலன் அல்லாஹ்
அவனன்றி அதற்கு
வேறு யாருமில்லையே

"மாலிக்கி யவ்மித்தீன்"

இறுதியான நாளொன்று
உதயமாகும் போது அந்த
நாளின் அதிபதியாய்
பதவி வகிப்பவன்

"இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன்"

யா அல்லாஹ் உன்னையே
நாங்கள் வணங்கினோம்
உன்னிடமே உதவியும்
கேட்டு நிற்கிறோம்.

"இஹ்தினஸ் ஸிறாத்தல் முஸ்தகீம்"

எம்மை நேரான பாதையில்
நீ இட்டுச் செல்ல வேண்டும்
நீங்காத உன் நினைவை
நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

"ஸிறாதல்லதீன அன்அம்த அலைஹிம்"

எம் முன்னோர்கள் எவருக்கு
நீ அருள் புரிந்தாயோ
அவர்களின் வரிசையில் நாம்
அணி திரள வேண்டும்.

"கைரில் மஃழூபி அலைஹிம் வலழ்ழால்லீன்"

வெஞ்சினத்தைப் பெற்றவர்கள்
வழிதவறிச் சென்றவர்கள்
அவர்களோடு எம்மையும்
நீ சேர்த்து விடாதே

"ஆமீன்"

உன்னிடமே கையேந்தி
இறைஞ்சுகிறோம் அல்லாஹ்
அன்புடனே அதை ஏற்று
அருள்புரிவாய் நீ!

## விஞ்ஞானம்

# பொய்யுரைக்கின்ற, தவறிழைக்கின்ற முன்னெற்றி

நபி முஹம்மத் (ﷺ) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது அபூஜஹ்ல் அதற்கு இடைஞ்சல் செய்து வந்தான். அவனது நடத்தையைக் கண்டித்து அல்குர்ஆன் வசனங்கள் இவ்வாறு இறக்கின:

**“அவ்வாறன்று, அவன் விலகிக் கொள்ளவில்லையெனில் தவறிழைக்கின்ற, பொய்யுரைக்கின்ற (அவனது) முன்நெற்றியைப் பிடித்து இழுப்போம்”**

**(ஸூரா அலக் 15,16)**

இங்கு அல்லாஹ் முன்னெற்றியானது பொய்யுரைப்பதாகவும் தவறிழைப்பதாகவும் கூறுகிறான். முன்னெற்றி எவ்வாறு பொய்யுரைக்கும்? எவ்வாறு தவறிழைக்கும்?

எமது உடற்றொழிற்பாடுகளை மூளையும் முண்ணானும் ஒருங்கிணைக்கின்றன. மூளையானது வன்மையான மண்டை ஓட்டினுள் மென்மையாகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. இந்த மூளையின் எல்லாப் பகுதிகளும் எல்லாத் தொழிற்பாடுகளுடனும் பங்களிப்பதில்லை. மூளையின் குறித்த பகுதிகள் குறித்த தொழிற்பாட்டிற்காக விசேடப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் நாம் இங்கு நோக்கப்போவது மேற்சொன்ன அல்குர்ஆன் வசனம் குறித்து நிற்கும் முன்நெற்றியுடன் தொட்டுக் கொண்டிருக்கும் மூளையின் பாகமாகும். மூளையின் இப்பகுதி முன்நுதற்சோணை -Prefrontal lobe என அழைக்கப்படுகிறது. இம் முன்நுதற்சோணையின் தொழிற்பாடு பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

நாம் நமது புறச் சூழலை அறிந்து கொள்ளப் புலன் உறுப்புக்கள் வழி செய்கின்றன. இப்புலன் உறுப்புக்களில் புலன் வாங்கிகள்- Receptors காணப்படுகின்றன. புலன்வாங்கிகள் பெற்றுக் கொள்கின்ற தூண்டல்கள் மின்-இரசாயனச் சமிக்ஞைகளாக மூளையைச் சென்றடைகின்றன. இச்சமிக்ஞைகளைப் பெற்றுக் கொண்ட சுவர்ச்சோணை -Parietal Lobe ஆனது குறித்த புறத்தூண்டலுக்கு இயைபான துலங்கல் செயற்பாட்டுக்கு உரிய கட்டளைகளைப் பிறப்பித்து மின்-இரசாயன சமிக்ஞைகளாக உடல் அங்கங்களை நோக்கி அனுப்புகிறது. இங்கு பிறப்பிக்கப்படும் கட்டளைக்குரிய செயற்பாடானது அச்சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானது - பொருத்தமற்றது எனும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்படுவதில்லை.


ஆனால் இடம்- காலப் பொருத்தப்பாட்டுடன் தனியனின் விருப்பத்திற்கு ஏற்ப இச்செயற்பாடுகளை நெறிப்படுத்தும் பொறுப்பினை முன்நுதற்சோணையே ஏற்றுக கொள்கிறது. அதாவது சூழலுடன் இசைவான பொருத்தமான நடத்தைக் கோலத்திற்கு முன்நுதற்சோணை அவசியமாகிறது.

மேலும் பண்பாட்டு ஒழுங்கு, முதன்மை நிலை வகுப்பாக்கம் ஆகியவற்றை திட்டமிடுவதன் மூலம் ஒருவரின் ஆளுமையை முன்நுதற்சோணையே தீர்மானிக்கிறது.

முன்நுதற்சோணையின் தொழிற்பாடு அற்றுப் போகுமிடத்து ஏற்படும் விளைவுகளை அறிவோமானால் அதன் தொழிற்பாட்டின் அவசியத்தைப் புரிந்து கொள்ளலாம்.

- ஒரு பொருளைக் கண்ட மாத்திரத்தில் அதனைக் கையாள முற்படுதல்.
- தன்னிச்சையாக அடுத்தவரைப் போல் பாவனை செய்தல்
- துப்புரவு இன்மை
- இடம்-காலப் பொருத்தமின்றி நடத்தல் (உதாரணமாக, சிறுநீர் கழிக்கும் உணர்வு ஏற்பட்டதும் சபையொன்றின் மத்தியில் இருந்த போதும் அவ்விடத்திலேயே கழித்தல்)
- தனது நோய் நொம்பலம் பற்றிய உணர்வின்மை
- உஷார் அடையும் தன்மை அற்றுப் போவதால் துணுக்குறுதல், இலகுவில் ஏமாற்றமடைதல்
- கருமங்களில் கரிசனை இன்மை, எரிச்சல் உணர்வு
- தூரநோக்கு இன்மை, தருணத்துக்கு தக்க தீர்மானம் எடுக்க முடியாமை, உத்வேகம் அற்றுப்போதல்
- நுணுக்கமான, சிக்கல் நிறைந்த, சில படிமுறைகளை கொண்ட செயல் முறைகளை ஆற்ற முடியாமை
- இலக்கு ஒன்றை நோக்கிய செயற்பாடு ஒன்றைத் திட்டமிட்டு நடைமுறைப் படுத்த முடியாமை என்பன பிரதானமாக ஏற்படும் குறைபாடுகளாகும்.

இவ்வாறான உருக்குலைந்த நடத்தைக் கோலத்தைக் கொண்டவர்களை நாம் எவ்வாறு மட்டிடுவோம்? சமூகத்தில் இவர்களைப் பற்றிய சாதாரண கண்ணோட்டம் கூட இழக்கப்பட்டு பைத்தியக்காரர்களாகத் தரப்படுத்தப்பட்டு விடுவார்கள் அல்லவா?




ஆதலால் ஒருவன் சமூகத்தில் கண்ணியமானவனாக, ஆளுமைமிக்கவனாக, உந்து சக்தி கொண்டவனாகத் திகழ வேண்டுமானால், திட்டமிட்டுச் செயலாற்றும் இயக்கு ஆற்றல் உள்ளவனாக இருக்க வேண்டுமானால் முன்நுதற்சோணையின் பங்களிப்பு அவசியமாகிறது.

நன்மை-தீமை, வாய்மை-பொய்ம்மை என்பவற்றைப் பிரித்துணர்ந்து செயற்படுவதற்கு முன்நுதற்சோணை இன்றியமையாததாகி விடுகிறது.

மூளையின் முன்நுதற்சோணை திட்டமிடுவதற்கும், உந்துசக்தி வழங்குவதற்கும், நற்செயல்களை அல்லது தீய செயல்களை ஆரம்பித்து வைப்பதற்குமான பொறுப்பை ஏற்றுக் கொள்வதுடன் உண்மை உரைப்பதற்கும் பொய்யுரைப்பதற்கும் அதுவே பொறுப்பாக இருக்கிறது.

இவை அனைத்தையும் சுருக்கமாகக் குறித்துக் காட்டத்தானோ அல்குர்ஆன், **“பொய்யுரைக்கின்ற, தவறிழைக்கின்ற முன்நெற்றி”** என எளிமையாகக் கூறுவதன் மூலம் உண்மை ஒன்றைச் சொல்லித்தர முனைகிறது!?

**- ஆகில் அஹ்மத் -**

# முஸ்லிமின் அடிப்படைக் கடமை: 'ஷஹாதத்'

**-அபூ அம்மார்-**

أَشْهَدُ أَنْ لاَ إِلٰهَ إِلاَّ اللهُ وَأَشْهَدُ
أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ

இஸ்லாத்தின் நுழைவாயிலில் ஒரு மனிதன் மொழிகின்ற வார்த்தைகள் இவை. பலருக்கு இந்த வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாகத் தென்படலாம். ஆனால் 'அஷ்ஹது' எனும் பதம் இந்த வார்த்தைகளை 'வெறும் வார்த்தை' என்ற எல்லையிலிருந்து அதிக தூரம் நகர்த்திச் செல்கிறது. இந்த உண்மையை விளங்கிக் கொள்ளாது ஒருவர் 'அஷ்ஹது' என்று துவங்கி மேலே உள்ள வார்த்தைகளை முடித்து வைத்தால் அவர் பொய் கூறுவதாகவே கருதப்படும்.

உணர்த்துகின்றன. 'அஷ்ஹது' அல்லது 'நஷ்ஹது' என்ற பதில்களால் உறுதிப்படுத்தப்படும் எந்த விடயமும் வெறும் வார்த்தைகளாக இருத்தல் கூடாது; இருந்தால் அந்த வார்த்தைகளில் துளி கூட உண்மையில்லை. அந்த வார்த்தைகள் சுத்தமான பொய்யாகவே கருதப்படும். உண்மையில்லாத அந்த வார்த்தைகளை அல்லாஹ்வும் சகித்துக் கொள்வதில்லை. உடனடியாக அந்த வார்த்தைகளை அவன் நிராகரித்து விடுகிறான்.

அவ்வாறாயின் 'அஷ்ஹது' என்ற சொல்லின் மகிமை எத்தகையது? இந்தப் பத்தால் உறுதிப்படுத்தப்படும் விடயம் எவ்வாறு 'வார்த்தை' எனும் எல்லையைத் தாண்டுகிறது? என்ற விளக்கங்களை நாம் பெற்றிருக்க வேண்டும்.

ஷஹாதத் எனும் பதத்தின் பொருள்களை அவதானிக்கும்போது ஷஹாதத் வெறும் வார்த்தையாக இருக்க முடியாது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

அது வெறும் வார்த்தையல்ல; ஷஹாதத் என்பது ஒரு வாழ்க்கை. இந்த உண்மையை ஷஹாதத்தின் பொருள்கள் எடுத்துரைக்கின்றன:

**சமுகமளித்தல்:** இது இஸ்லாத்தை நோக்கிய ஒரு மனிதனின் நகர்வைக் குறிக்கிறது. ஒரு நிலையிலிருந்து பிறிதொரு நிலைக்கு ஒரு மனிதன் தன்னை முற்றாக மாற்றிக் கொள்வதற்கான ஆரம்பப்படி இதுவாகும்.

**கண்ணால் காணுதல்:** இங்கு இஸ்லாம் ஒரு புதிய காட்சியாகத்

நபி (ﷺ) அவர்களிடம் சில மனிதர்கள் வந்து 'நஷ்ஹது...' என்று துவங்கி 'நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வின் தூதரே' என நாம் சாட்சியம் கூறுகிறோம் என்றார்கள். அவர்கள் கூறிய இந்த சாட்சியத்தை (ஷஹாதத்தை) அல்லாஹ் செவிமடுத்து விட்டு ஜிப்ரில் (عليه السلام) அவர்களை தனது தூதரிடம் அனுப்பி பின்வருமாறு கூறுகிறான்:

**"நபியே உம்மிடம் (அந்த) நயவஞ்சகர்கள் வந்து, 'நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வின் தூதரே என நாம் சாட்சி (ஷஹாதத்) கூறுகிறோம்' என்கிறார்கள். நீங்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் என்பது அல்லாஹ்வுக்கு தெரியும். (அவர்கள் அதனை பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை) நிச்சயமாக அந்த நயவஞ்சர்கள் பொய்யர்களே என அல்லாஹ் சாட்சி கூறுகிறான்." (63:01)**

சூரதுல் முனாபிகூனின் இந்த ஆரம்ப வசனங்கள் ஓர் உண்மையை

'அஷ்ஹது' எனும் பதத்தின் பொருள் 'நான் சாட்சி கூறுகிறேன்' என்பதாகும். 'ஷஹாதத்' எனும் சொல்லின் அடியாகவே இது பிறக்கிறது. ஷஹாதத் என்றால் 'சாட்சி கூறுதல்' என பொதுவாக பொருள் கொள்ளப்படும். எனினும் இந்த மொழிபெயர்ப்பு ஷஹாதத்தின் முழுமையான கருத்தைத் தருவதில்லை. ஷஹாதத் எனும் பதத்தை மொழிபெயர்ப்பது சாத்தியமன்று. அதன் பொருளை விளக்கத்துக்கு உட்படுத்துவதே சாலச்சிறந்தது.

ஷஹாதத் எனும் பதம் பின்வரும் கருத்துக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது:

- சமுகமளித்தல்
- கண்ணால் காணுதல்
- அறிந்து கொள்ளுதல்
- அலங்கரித்தல்
- நம்பகமாக அறியத் தருதல் (சாட்சி கூறுதல்)
- சத்தியம் செய்தல்
- நற்சான்று வழங்குதல் (சான்றிதழ்)
- உயிரை அர்ப்பணித்தல் (வீரமரணம்)

தென்படுகிறது. இதுவரை காணாத ஒரு புதிய காட்சியைப்போல் அதனைக் கண்டு ரசிக்கும் நிலை ஷஹாதத்தின் அடுத்த கட்டமாகும்.

**அறிந்து கொள்ளுதல்:** கண்ணால் பருகிய அந்தக் காட்சியை அறிவின் துணைகொண்டு விளங்குதல் ஷஹாதத்தின் மூன்றாம் நிலை.

**அலங்கரித்தல்:** அடுத்த கட்டமாக, விளங்கியதை சரிகண்டு அலங்கரித்தல். இங்கு எதிர்மாறாக மற்றொரு விடயம் தெளிவாகிறது. இஸ்லாம் அல்லாத இதர கொள்கையொன்றை சரி காண்பதோ அலங்கரித்தலோ ஷஹாதத்திற்கு முரணானதாகும்.

**சாட்சி கூறுதல்:** இஸ்லாத்தின் நம்பகத் தன்மையையும் அதன் மகத்துவத்தையும் தயக்கமோ சலனமோ இல்லாமல் உறுதியோடு எடுத்தியம்புதல்.

**நற்சான்று வழங்குதல்:** இஸ்லாத்தின் கொள்கைகளுக்கும்

நடைமுறைகளுக்கும் எடுத்துக்காட்டாகவும் அதன் போதனைகளுக்கு வடிவம் கொடுக்கும் சான்றாகவும் இருத்தல்.

**உயிரை அர்ப்பணித்தல்:** இறுதியாக, தனது உயிரை தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக மனமுவந்து சமர்ப்பித்தல் இது ஷஹாதத்தின் அதிஉயர் நிலையாகும்.

இத்தனை கருத்துக்களையும் உள்ளடக்கிய ஷஹாதத்தை வெறும் வார்த்தைகளாகக் கருதுவது எங்கனம்? 'அஷ்ஹது...' 'நான் ஷஹாதத் கூறுகிறேன்...' என்று ஒரு முஸ்லிம் உரைக்கும்போது 'இத்தனை அம்சங்களையும் செயல்படுத்த நான் தயாராகிறேன்' என்ற பொறுப்பு அவர் மீது சுமத்தப்படுகிறது. இத்தகையதொரு பொறுப்பை உணராமல் ஒரு மனிதன் ஷஹாதத்தை மொழிந்தால் அவன் பொய்யுரைக்கிறான் என்பதே பொருளாகும்.

**ஷஹாதத்** ஒரு மகத்தான பொறுப்பு;
**ஷஹாதத்** ஓர் இலட்சிய வாழ்க்கை;
**ஷஹாதத்** மனிதனை சுபிட்சத்தின் பால் இட்டுச் செல்லும் பாதை

இந்தப் பொறுப்பை... சுமந்து வாழ்க்கை வாழ்ந்து... மனித சமுகத்தை சுபிட்சப் பாதையில் அழைத்துச் செல்வதற்காகவே உங்களை அல்லாஹ் ஒரு சமூகமாக்கினான் என்று அல்குர்ஆன் எடுத்துரைக்கிறது. ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் இந்தப் பொறுப்பை சுமந்து, வாழ்க்கை வாழ்ந்து உங்களை அந்த சுபிட்சத்தின் பாதையில் வழிநடாத்தியிருக்கிறார்கள்.

**"அவ்வாறே உங்களை நாம் நடுநிலையான சமூகமாக ஆக்கினோம். அல்லாஹ்வின் தூதர் உங்களுக்கு ஷாஹிதாக இருந்தது போல் நீங்கள் மனித சமுதாயத்துக்கு ஷாஹித்களாக இருக்க வேண்டுமென்பதற்காக"**

**(ஸூரதுல் பகரா: 143)**

# யூதர்களின் ஒற்றுமையும், முஸ்லிம்களின் பிளவும்

மஸ்ஜிதுல் அக்ஸா- எமது முதல் கிப்லா யூதச் சிறைக்குள் முடங்கிப் போய் அரை நூற்றாண்டாகிறது. உலகின் மூலை முடுக்கெங்கும் வாழுகின்ற கோடிக்கணக் கான முஸ்லிம்களால் அந்த இதயத்தை மீட்டெடுக்க முடியாது போயிருக்கிறது.

முஸ்லிம் உம்மத்தில் ஏற்பட்டிருக்கும் பாரிய சிதைவு மஸ்ஜிதுல் அக்ஸாவை இன்னும் இன்னும் அச்சுறுத்தல் நிலையி லேயே வைத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக முஸ்லிம்கள் மத்தியில் அக்ஸா விடயமாக ஒன்றுபட்டு முடிவொன்றினை எய்துவது இதுவரை காலமும் சாத்தியப் பட்டதாகவே இல்லை. ஆனால் யூதர்களின் கதை வேறு!

யஹூதிகள் குறிப்பாக அரசியல்வாதி கள் மதவாதிகளாக, மதச்சார்பற்றவர்களாக, வலதுசாரியாக, இடதுசாரியாக... பிரிந்து காணப்பட்டாலும் பைத்துல் மக்திஸின் பிரச்சினையில் தங்களது வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு கைகோர்த்து நிற்கின் றனர். அவர்கள் குத்ஸ் பிரதேசத்தை தங்களது சமூக, மார்க்க, அரசியல் விவகாரங்களில் ஒன்றுகூடும் மத்திய தலமாகக் கருதுகின்றனர். இவை வெறுமனே சிந்தனையில் உதித்து பேனா மையால் கொட்டப்படும் வார்த்தைகளல்ல; அன்று முதல் இன்றுவரை இஸ்ரேலில் பிரதமர்க ளாகப் பதவி வகித்தவர்களினால் உறுதிப் படுத்தப்பட்ட நிதர்சனங்கள்.

பிரதமர்களுள் ஒருவனான மோஷே தயான், 1968ம் ஆண்டின் பின்னர் குத்ஸ் பிரதேசத்தை ஆக்கிரமித்த விதத்தினை இப்படிக் கூறுகிறான்: "உடைந்து போயிருந்த குத்ஸினை நாங்கள் சிதறுண்டு போயிருந்த கிறிஸ்தவர்களின் தலைநகரமாக ஆக்கி யிருக்கிறோம். குத்ஸுக்கு எங்களது கண்ணியங்களையும், புண்ணியங்களையும் மீட்டுக் கொடுத்துள்ளோம். அதன் பக்கம் நாம் மீண்டும் வந்து விட்டோம். எனவே, அதனை இனி ஒருபோதும் விட்டுவிட மாட்டோம்."

யூதர்களிடத்தில் குத்ஸ் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தினை 1995ல் பிரதமராக இருந்த இஸ்ஹாக் ராபின் பின்வருமாறு கூறுகிறான்: "சிறந்த விடயங்களின் ஏணிப் படியில் எல்லாவற்றுக்கும் முதலாக குத்ஸ் பகுதியினை பாதுகாப்பதையும், அதன் தனித்துவத்தையும், கண்ணியத்தையும் உறுதிப்படுத்துவதனையும் முதல் நோக்காகக் கொண்டுள்ளேன்."

1996ம் ஆண்டு இஸ்ரேலின் பிரதமராக இருந்த ஷிமொன் பெரோஸ் குத்ஸ் பிரதேசம் அவர்களது சொத்து என்பதை இவ்வாறு கூறுகிறான்: "எனது அரசாங்கம் குத்ஸின் ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்து கிறது. அது அதனை ஒருபோதும் துண்டாட மாட்டாது. மேலும் பலஸ்தீன அரசின் தலைநகராக அது ஒரு நாளைக் கேனும் இருக்காது. அது எப்பொழுதும் யூதர்களின் தலைமைத்துவத்தின் கீழேயே இருக்கும்"

முன்னைய பிரதமர்களுள் ஒருவனான நெதன்யாஹு மஸ்ஜிதுல் அக்ஸாவைச் சூழ எண்ணிலடங்கா யூத குடியேற்றங் களை நிறுவினான். அதனை எஹூத் பராக் முன்னெடுத்துச் சென்றான்.

ஆனால், எந்த முஸ்லிம் பிரதமராவது, குறிப்பாக எந்த அரபுநாட்டு ஆட்சியாள ராவது தனது பதவிப் பிரமாணத்தின்போது வாயளவிலாது 'குத்ஸை மீட்பது எனது இலட்சியம்' என்று கூறியிருப்பாரா?

சத்தியத்தின் மடியில், முஸ்லிம்களின் இதயத்தில் அசத்தியத்தை நிலைநாட்ட, ஒரு தலைநகரை உருவாக்க எதிரிகள் தமக்கிடையேயுள்ள எல்லா முரண்பாடு களையும் மறந்து ஒன்றுபட்டு செயல்படும் இவ்வேளையில் முஸ்லிம்கள் தண்ட வாளங்களாகவே வாழ்கின்றனர்.

முஸ்லிம்களின் இப்புனித பூமியை யூதமயமாக்குவதில் இஸ்ரேலிய கட்சி களுக்கு முக்கிய பங்குண்டு. 1967ம் ஆண்டு இஸ்ரேலிய தொழிற்கட்சி குத்ஸ் பிரதேசத்தை ஆக்கிரமித்தது. 1980ம் ஆண்டு லிக்வுட் கட்சி குத்ஸ் பிரதேசத் தின் கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளில், 'என்றும் நிலையான தலைநகரமாக' குத்ஸ் பிரதேசத்தினை கொள்ள வேண்டும் என்று ஓர் அடிப்படையான சட்டத்தினை உருவாக்கியது. 1990-1993க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் தொழிற்கட்சி குத்ஸ் பகுதியில் மாத்திரம் 9,000 யூத குடியிருப்பு களை நிறுவியது. மீண்டும் ஆட்சிக்கு வந்த லிக்வுட் கட்சி அபூகனீம் மலையில் புதிய யூத குடியிருப்புகளை நிறுவ ஆரம்பித்தது. இதனை அடுத்து வந்த பராக் முன்னெடுத்துச் சென்றான். இப்போது ஏரியல் ஷெரோனின் முறை!

**முபீர் இப்னு சுபைர்**
**வெலம்பொடை**

**கேள்வி - பதில் :**

# இயக்கம் வளர்ப்பது சரியா?

**கேள்வி:**

**'இயக்கங்கள் இஸ்லாத்தை வளர்ப்பதாக இல்லை; இயக்கங்களை வளர்ப்பதே அவற்றின் நோக்கமாக உள்ளது' என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது. இயக்கங்களின் செயல்பாடுகளை அவதானிக்கும் போது இக் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாகவும் தோன்றுகிறது. நீங்கள் இதனை எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

**ரிம்ஸான், கற்பிட்டி**

**பதில் :**

ஏனைய இயக்கங்கள் பற்றிப் பேசுவதற்கு எமக்கு உரிமை இல்லை. 'இலங்கை ஜமாஅதே இஸ்லாமி' எனும் அமைப்பை பற்றி என்னால் கூற முடியும். உங்களது கேள்வியில் தொனிப்பது வெறும் நடைமுறைப் பிரச்சினையல்ல; அதிலே கொள்கைப் பிரச்சினையும் இருக்கிறது. இஸ்லாத்தை 'இகாமத்' செய்ய விரும்பும் ஓர் இயக்கம் அதற்கான தனது வழிமுறைகளை இஸ்லாத்தின் போதனைகளுக்கமைய வகுத்துக் கொள்ள வேண்டும். அப்போது நீங்கள் கூறும் பிரச்சினைகள் களத்தில் உருவாக மாட்டாது.[1]

இதற்கு மேலாக நீங்கள் ஒரு உண்மையை ஏற்றாக வேண்டும். இஸ்லாத்துக்கு இயக்கம் தேவை என்பதே அவ்வுண்மை. குர்ஆனும் சுன்னாவும் சீறாவும் இந்த உண்மையை வலியுறுத்தும் எண்ணற்ற ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன. (இது தொடர்பான ஒரு தலைப்பு அல்ஹஸனாத்தில் மிக விரைவில் வெளிவரும் இன்ஷா அல்லாஹ்)

குற்றச்சாட்டைப் பொறுத்தவரை அதனை உண்மைப்படுத்தும் காரணிகள் எதனையும் நீங்கள் ஜமாஅத்தில் காண முடியாது. காரணிகளைக் கூறுகிறேன். ஜமாஅத்தில் அவை இருந்தால் நீங்கள் அதனை சுட்டிக்காட்டலாம். நன்றியுடன் உங்களது அறிவுறுத்தலை நாம் ஏற்றுச் செயல்படுவோம்.

- ஏனைய இயக்கங்களின் செயல்பாடுகளுக்கு தடையாக இருத்தல்.
- ஏனைய இயக்கங்கள் பற்றிய அவதூறுகளையும் பொய்ப்பிரச்சாரங்களையும் பரப்புதல்.
- இயக்கங்களுக்கெதிரான மனப்பான்மைகளை வளர்த்து தமது கட்சிக்கு ஆள் திரட்டுதல்.
- மனிதர்கள் மீது வீண்பழி சுமத்தி அவர்களை விட்டு ஏனையோரை விரண்டோடச் செய்தல்.
- தமது இயக்கத்துக்கு ஆதரவான உலமாக்களை பெரிதுபடுத்தி ஏனைய உலமாக்களையும் அறிஞர்களையும் மட்டம் தட்டுதல்.
- தமது இயக்கத்தைச் சேர்ந்தவர்களை உயர்வாக மதித்து ஏனைய இயக்கங்களில் உள்ளவர்களை மடையர்களாகக் கருதுதல்.
- தங்களுக்குத் தெரிந்ததே இஸ்லாம் எனக் கூறி ஏனைய இயக்கத்தவரின் போதனைகளை ஏளனம் செய்தல்.

இந்த அநியாயங்கள் அனைத்தையும் இஸ்லாத்தின் பெயரால் அரங்கேற்றினால் இஸ்லாம் வளர்க்காமல் இயக்கம் வளர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை.

ஆனால் இலங்கை ஜமாஅதே இஸ்லாமி இத்தகைய இழிசெயல்களைத் தனக்குத்தானே ஹராமாக்கியிருக்கிறது. எமது அங்கத்தவர்கள் கட்டுப்பாட்டோடு செயல்படுகிறார்கள். எனினும் ஜமாஅதே இஸ்லாமியை ஆதரிப்பவர்கள் மனிதர்கள் என்ற வகையில் அவர்கள் இந்தத் தவறுகளைச் செய்யலாம். இத்தகைய தவறுகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தால் இடம் குறிப்பிட்டு, பெயர் குறிப்பிட்டு ஆதாரங்களுடன் எமக்கு அறியத் தாருங்கள். நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி 2:**

**இயக்கங்களுக்குப் பெயர் வைக்க வேண்டுமா?**

முஸ்லிம்கள் பல்வேறு இயக்கங்களாக செயல்படுவதே சரியா? தவறா? காலத்தின் தேவையா? என்பன போன்ற இன்னும் பல கேள்விகள் ஒரு புறம் இருக்க, இவ்வியக்கங்களுக்கு ஏன் பெயர்வைக்க வேண்டும்? என்றும் ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது.

முஸ்லிம் உம்மத்துக்கு ஒரு தலைமைத்துவம் இல்லாதவரை இயக்கங்கள் பெயர்களோடு இருப்பதுதான் சிறந்தது. இயக்கமே வேண்டாம் என்று கூறுபவர்களும் பெயர்கள் இல்லாதிருக்கக் கூடாது, பெயர் வேண்டாம் என்று கூறுபவர்களும் குர்ஆனிலிருந்தோ, சுன்னாவிலிருந்தோ ஒரு பெயரை தெரிவுசெய்து கொள்ள வேண்டும். பெயர் விடயத்தில் இந்த நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்குக் காரணம் இஸ்லாத்தை விளங்கிக் கொள்வதிலும், செயல்படுத்துவதிலும் சமுகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு முரண்பாடுகளும் தவறுகளுமாகும்.

விளக்கத்திலும் செயல்பாட்டிலும் முரண்பாடுகளும், தவறுகளும் இடம்பெறுமானால் அவற்றை இஸ்லாத்தின்மீது போட்டு விடாமல், குர்ஆனிலும், சுன்னாவிலும் அந்தப் பழியை போட்டுவிடாமல் தவறை செய்தவர்கள் தாமே அவற்றைப் பொறுப்பேற்க வேண்டும். முகவரியும் பெயரும் இல்லாதவர்கள் தாம் செய்த தவறுகளை இன்னுமொரு சாரார் மீது போட்டுவிடவும் முடியுமல்லவா?

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் அவர்கள் உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார்.

(1) இலங்கை ஜமாஅதே இஸ்லாமி தனது செயல்பாட்டுக்கான கொள்கைகளை தெளிவாக வகுத்துச் செயல்படுகிறது. அதன் காரணமாக அது இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கிறது. 'செப்டம்பர் 2000' இதழில் கேள்வி பதில் பகுதியை தயவுசெய்து பாருங்கள். அங்கே இதற்கான விளக்கம் தரப்பட்டிருக்கிறது.)

## பலஸ்தீன்

### ஷெரோனின் வெற்றி எமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும்

—காலித் மிஷ்அல்—





இஸ்ரேலின் அதிகாரம் வலதுசாரி யூத தீவிரவாதியான ஏரியல் ஷெரோனின் கைகளுக்கு சென்றுள்ளமை எமக்கு மேலும் உத்வேகத்தை கொடுக்கும். எமது இராணுவப் பிரிவான இஸ்ஸுத்தீன் அல் கஸ்ஸாமின் தற்கொலைத் தாக்குதல் அடுத்துவரும் காலப் பகுதியில் அதிகரிக்கும் என்பதாக ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவரான காலித் மிஷ்அல் அவர்கள் ராய்டர் செய்திக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

1967ம் ஆண்டு நடைபெற்ற பலஸ்தீன் ஆக்கிரமிப்பின்போது ஆயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொலைசெய்ததில் முக்கிய பங்காளியான இவர், 1977-1983 காலப் பகுதியில் 'மொனாசெம் பெகி'னின் அரசின் பாதுகாப்பமைச்சராக இருந்தபோதே 1982ல் லெபனான் ஆக்கிரமிக்கப்பட்டது. அதே ஆண்டு பலஸ்தீன அகதிகள் தங்கியிருந்த 'ஷப்ரா', "ஷதீலா' ஆகிய முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 2000 க்கும் அதிகமானோர் கொலைசெய்யப்பட்டனர். கார்ப்பிணிப் பெண்கள்கூட வயிறு கிழிக்கப் பட்டு கொடூரமாக கொலைசெய்யப்பட்டனர். 'புல்டோசர்' மற்றும் 'கசாப்புக் கடைக காரன் முதலிய பெயர்களால் அழைக்கப்பட்ட ஷெரோனின் காலப் பகுதியில் கொல்லப் பட்ட முஸ்லிம்களின் தொகை 17,000 ஆகும்.

பலஸ்தீன பேச்சுவார்த்தை நீண்ட இழுபறிக்கு மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் ஷெரோனின் வருகை, அரபாத் மற்றும் சமாதானப் பேச்சா ளர்களுக்கு பெரும் சவாலாக அமையும். தேர்தலில் வெற்றி பெற்றதும் தனது முதல் பேச்சின்போது, 'ஜெரூஸலம் யூதர்களின் தலைநகராக இருக்கும். அதில் எத்தகைய மாற்றங்களுக்கும் இடமில்லை' என ஷெரோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஹமாஸ் மற்றும் ஜிஹாத் அமைப்பின் போராட்டங்களின் எதிர்காலம் குறித்த கருத்துகள் ஐயப்பாட்டுடன் தெரிவிக் கப்படுகின்ற போதிலும், ஷெரோனின் எதிர்கால ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கு இஸ்லாமிய போராட்டக் குழுக்கள் பெரும் தலையிடியாக இருக்கப் போகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஷெரோனின் வெற்றி அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களில் நடைபெற்ற குண்டு வெடிப்பு இஸ்லாமிய போராட்டக் குழுக்களின் தயார் நிலையை எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(அல்முஜ்தமா/ Muslim Online)

## செச்னியா

### முஜாஹிதீன்களின் தாக்குதல்களினால் 52 ரஷ்யர்கள் பலி

செச்னியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பரவலாக இடம்பெற்ற முஜாஹிதீன்களின் தாக்குதல்களினால் 52 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 'உருஸ் மட்டான்' நகரில் இரண்டு மணித்தியாலங்கள் நடை பெற்ற சண்டையொன்றில் 25 ரஷ்யர்கள் கொல்லப்பட்டதுடன் 30 பேர் காயங்க ளுக்கு உள்ளானதாக முஜாஹிதீன்களின் Islamic படையணியின் தலைவர் 'ரம்சான் அகாடோவ்' தெரிவித்தார். Tnaghu Chu மற்றும் Prigoradnoe கிராமங்களில் ரஷ்யர்களை ஏற்றிக்கொண்டு வந்த பஸ் வண்டிகள் முஜாஹிதீன்களின் நிலக் கண்ணியில் சிக்கி 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.


ஜோர்டான் நாட்டவரும், தற்போது செச்னியாவின் தலைமை கமாண்டர்களில் ஒருவருமான 'அல்கத்தாப்' அவர்கள் Associated News Paper க்கு கொடுத்த செவ்வியில், 'மிகச் சிறிய நாடொன்றில் எதிரிகளுக்கெதிராக வெற்றிபெறும் முஸ்லிம்களாக செச்னியர்கள் காணப்படு கிறார்கள். எமது தாக்குதல்களுக்கு ரஷ்யர்கள் அதிக காலம் தாக்குப்பிடிக்க மாட்டார்கள்' என்றார். 'கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் 2000 ரஷ்ய காபிர்கள் இறந்துள்ளதுடன் எமது முஜாஹிதீன்கள் 30 பேர் மாத்திரமே ஷஹீதாகியுள்ளனர்' என அவர் மேலும் தெரிவித்தார். (AFP)

## மஸ்ஜிதுல் அக்ஸாவை தகர்க்க 5000 பேர் கொண்ட படை


முஸ்லிம்களின் புனித பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அக்ஸாவை தகர்ப்பதற்கென வும், அங்கு தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருப்போரை படுகொலை செய்வ தற்கெனவும் 5000 பேர் கொண்ட யூத தீவிரவாதிகள் தயாராகி வருவதாக இஸ்ரே லிய இராணுவத்தின் முன்னாள் இராணுவ ஜெனரல்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். இப்பயங்கர சதித்திட்டத்தில் இஸ்ரேலிய இராணுவத்தின் கையும் பின்னால் இருந்து செயல்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின் றன. இதன் மூலம் இஸ்ரேலில் குழப்பத்தை தூண்டி பலஸ்தீனர்களுக்கெதிராக நாடு தழுவிய படுகொலைகளை செய்வதற்கான திட்டமும் தீவிரவாத யூதர்களிடம் இருக்கிறது.

யூதர்களின் புனித கோயிலான 'மலைக் கோயில்' (Mountain Temple) முஸ்லிம்களின் மஸ்ஜிதுல் அக்ஸா உள்ள இடத்திலேயே அமைய வேண்டும் என யூதர்கள் குரல்கொடுத்து வருகின்றனர்.

இதற்கு முன்னரும் அல்மஸ்ஜிதுல் அக்ஸாவை உடைப்பதற்கு பல்வேறு முயற்சிகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதேபோன்று தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை பல சந்தப் பங்களில் யூதர்கள் படுகொலை செய்து முள்ளனர். 1969ல் 'மைக்கல் ரோஹான்' என்பவனால் அல்அக்ஸா தீமூட்டப்பட்டு மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் அது பாதுகாக்கப்பட்டது. மேலும், வரலாற்றுப் புகழ்மிக்க இப்பள்ளிவாயலின் கட்டிடத்தை ஆட்டங்காணச் செய்வதற்காக, அகழ்வாய்வு கள் என்ற பெயரில் பாரிய கிடங்குகள் தோண்டப்பட்டு வருகின்றன. 1967ல் மேற்குப்புறப் பகுதி இஸ்ரேலிய இராணுவத் தினரால் அபகரிக்கப்பட்டதுடன் 14 மீற்றர் ஆழமான கிடங்கு தோண்டப்பட்டது. 1969ல் இதேபோன்று முஸ்லிம்களின் குடியிருப்புப்



மஸ்ஜிதுல் அக்ஸா



குப்பதுஸ் ஸக்ரா

பகுதிகள் சேதமுறும் வகையில் 80 மீற்றர் தோண்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன பூமி இஸ்ரவேலர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு 1967-93 வரையுள்ள காலப்பகுதியில் குத்ஸ் நகரின் (ஜெரூ ஸலம்) 84% நிலப்பகுதி பறித்தெடுக்கப் பட்டுள்ளது. இதில் 39.5% அளவிலான நிலப்பகுதியில் யூதர்களுக்கான குடியிருப் புகள் கட்டப்பட்டுள்ளன. 1990-1993 வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் 510,635 யூதர்கள் இஸ்ரேல் முழுவதும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அதில் 37,697 குடும்பங்கள் மஸ்ஜிதுல் அக்ஸா உள்ள ஜெருஸலம் நகரில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (Muslim online)

## மியன்மார் (பர்மா)

### நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் படுகொலை



மேற்கு மியன்மார் முஸ்லிம்களுக்கெதிராக அந்நாட்டு பௌத்தர்கள் நடத்திய கொலை வெறியாட்டத்தில் 450 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1500 க்கும் அதிகமானோர் காயப்பட்டுள்ளதாக ராய்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

மியன்மாரில் முஸ்லிம்கள் Rohingiyas எனவும் பௌத்தர்கள் Rakhaines எனவும் அழைக்கப்படுகின்றனர். கடந்த பெப்ரவரி 4ம் திகதி பௌத்த பிக்குகள் போன்று காணப்பட்ட பலர் AKYAB நகருக்கு அண்மையில் உள்ள ஆறு கிராமங்களுக்குள் நுழைந்து முஸ்லிம்களைக் கொன்றும் முஸ்லிம்களின் வீடுகளுக்கு தீவைத்தும் உள்ளனர்.

தற்போது இராணுவத்தினர் குறிப்பிட்ட பகுதிக்கு அனுப்பப்பட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாகவும், அங்கு ஊரடங்கு அமுலில் இருப்பதாகவும் அரச பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

ARNO- Arakan Rohingya National Organization தனது அறிக்கையில், 'கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இக்கலவரம் வியாழன்வரை நடைபெற்றுக் கொண்டிருந்த போதும் இராணுவத்தினர் கைகட்டி பார்த்துக் கொண்டிருந்ததுடன் கலகக்காரர்களை தடுப்பதற்கு எவ்வித முயற்சியையும் எடுக்கவில்லை' என்று குற்றஞ் சாட்டியுள்ளது. இக்கலவரத்தினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் பலரின் நிலைமை குறித்து எவ்வித தகவல்களும் இல்லை. இவ்வாறு காணாமல் போனோர் அனைவரும் பெண்களும் குழந்தைகளுமாவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த நாடான மியன்மாரில் இராணுவ ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக நீண்ட காலமாக முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 1991-92 காலப் பகுதியில் மாத்திரம் சுமார் 250,000 முஸ்லிம்கள் அண்டை நாடான பங்களாதேஷ்க்குள் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் பாதுகாப்பு குறித்து மியன்மார் அரசு எவ்வித கருத்தும் வெளியிடாத நிலையில் ஐ.நா உயர்ஸ்தானிகர் மூலமாக பலர் தமது சொந்த இடம் திரும்பி யுள்ளனர். இருந்தும் இன்னும் 21,000 பேர் பங்களாதேஷின் 'கொக்ஸ் பஸார்' நகருக்கு அண்மையில் வசித்து வருகின்றனர்.

## ஆபிரிக்கா

### எயிட்ஸ் நோயினால் 12 மில்லியன் குழந்தைகள் அநாதைகளாகியுள்ளனர்

HIV நோய் ஆபிரிக்க நாடுகளில் 12 மில்லியன் குழந்தைகளை அநாதைகளாக்கியுள்ளது. ஆபிரிக்க நாடுகளில் எயிட்ஸ் நோயின் தாக்கம் குறித்து சிகாகோ நகரில் நடைபெற்ற மாநாடொன்றிலேயே இத்திடுக்கிடும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தொகை, அரசியல் அகதிகள் மற்றும் வேறு காரணங்களுக்காக இடம்பெயர்ந்த மக்களின் தொகையுடன் ஒப்பிடும் போது மூன்று மடங்காகும்.

நைரோபியில் உள்ள புள்ளிவிபரவியலாளரான டாக்டர் 'கெவின்டீ கொக்' குறிப்பிடும்போது, ''இப்பிரச்சினைக்கு தீர்வாக உலக நாடுகள் முன்னேற்றகரமான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதுவரை எயிட்ஸினால் அநாதைகளான குழந்தைகள் விடயத்தில் உலக நாடுகளிடம் எந்த தீர்வும் கிடையாது. ஆபிரிக்க நாடுகளிடமும் இவ்வளவு பெரிய தொகையை சுமக்கும் சக்தி கிடையாது'' என குறிப்பிட்டார். தற்போது ஆபிரிக்காவில் 25 மில்லியன் பேர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நாவின் எயிட்ஸ் நிகழ்ச்சி திட்டத்தின் (U.N.Aids Programme) ஆய்வின்படி, எயிட்ஸினால் அநாதைகளான குழந்தைகள் ஒன்றில் தாயை அல்லது பெற்றோரை இழந்தவர்களாவர். ஐ.நா.அகதிகள் நிறுவனத்தின் புள்ளிவிபரப்படி 1999ம் ஆண்டு முடியும் தறுவாயில் சுமார் 3.5 மில்லியன் பேர் அகதிகளாக்கப் பட்டும், இடம்பெயர்ந்தும் உள்ளனர். இத்தொகை வெளிநாடுகளில் புகலிடம் கோரி சென்றுள்ளவர்களின் தொகையுடன் சேர்த்தால் 6.5 மில்லியன்களாக உயரும் என தெரியவருகிறது.

உலகில் எயிட்ஸ் நோயினால் ஆபிரிக்க நாடுகளே கூடுதலாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. இந்நாடுகளில் இரத்தப் பரிசோதனை மற்றும் ஏனைய வைத்திய சேவைகள் மிகக் குறைவாக இருப்பதும் இது அதிகரிக்க முக்கிய காரணங்களாய் அமைகின்றன. நடாத்தப்பட்ட கணிப்பீடுகளின்படி இந்நாடுகளில் எயிட்ஸ் நோய் வளர்ச்சி வீதம் 20% இருக்கும் போது அமெரிக்காவில் அதன் தாக்கம் 1% மாத்திரமே. (Kilafa Magazine)

## கத்தார்:

### வரலாற்றில் முதல் இஸ்லாமிய செய்மதி

முஸ்லிம்களுக்கெதிரான மேற்கத்தைய நாடுகளின் தொடர்பூடக சவால்களுக்கு முகம்கொடுக்கும் வண்ணம் கத்தார் அரசு, முதல் இஸ்லாமிய செய்மதியை அடுத்த வருடம் விண்ணுக்கு ஏவ உள்ளது. இதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. உலக முஸ்லிம்கள் பேசும் அனைத்து மொழிகளையும் உள்ளடக்கியதான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிக்கும் பொறுப்பை கத்தாரிலுள்ள கல்வி, ஆய்வுகள், பயிற்றுவிப்பு மற்றும் விஞ்ஞானத் துறைக்கான இஸ்லாமிய நிறுவனம் (ISISCO) ஏற்றுக் கொண்டுள்ளது.

இதுபற்றி கருத்துத் தெரிவித்த கத்தாரின் மன்னர், 'இந்த செய்மதி ISISCO வின் கண்காணிப்பின்கீழ் இருப்பதுடன் அதன் நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் இஸ்லாமிய அடிப்படையில் அமையும்' எனத் தெரிவித்தார். அத்துடன், நாட்டின் தொலைக் காட்சி, மற்றும் தொலைபேசிச் சேவைகளுடன் தொடர்புபடாத வகையில் தனியான சேவையாக இது அமையும் எனவும் தெரிவித்தார்.

## கன்ஸா பின்த் அம்ர் (தொடர்ச்சி)

**படிப்பினைகள்:**

அன்னை கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வாழ்க்கையில் பல படிப்பினைகள் உள்ளன. குறிப்பாக ஏகத்துவக் கொள்கைக்கு முரணான சமூக அமைப்பில் பிறந்து அதன் தவறான நடைமுறைகளில் ஊறித் திளைத்து விட்டவர்களுக்கு நல்ல முன்மாதிரி உள்ளது

பாருங்கள்! அன்றைய அறியாமையால் சமூக அமைப்பு ஆண்டாண்டு காலமாக நடைமுறைப்படுத்தி வைத்திருந்த மௌட்டீகக் கொள்கைகளிலும் அனாச்சாரங்களிலும் கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் எவ்வளவுதான் பழகிப்போய் விட்டிருந்தாலும் இஸ்லாமிய அழைப்புப் பணி, சத்தியம் இதுதான் என்று அவர்களின் முன் தெளிவு படுத்திய போது எவ்வித தயக்கமுமின்றி அதனை ஏற்றுக் கொண்டார்கள். முதலில் ஏகத்துவக் கொள்கையை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தில் இணைந்தார்கள். பிறகு தம்மிடமிருந்து வந்த சில தவறான பழக்கங்களை இறை நம்பிக்கையின் வலிமை கொண்டு படிப்படியாக களைந்து தமது வாழ்க்கையைப் புனிதப் படுத்தி முழுமையாக சீர்திருத்தம் அடையத் தொடங்கினார்கள்.

இது பாரம்பரியமாக நாம் பின்பற்றி வரும் நம்முடைய மூதாதையின் பழக்கமாயிற்றே அதை நாம் விட்டுக்கொடுப்பதா என்னும் மனமாச்சரியத்துக்கு அவர்கள் ஆளாகவில்லை.

கன்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சொகுசு வாழ்க்கையைத் தேடி இஸ்லாத்திற்கு வரவில்லை. இஸ்லாத்தை ஏற்ற பிறகும் அவர்களின் வாழ்வில் கஷ்ட நஷ்டங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. ஆயினும் பொறுமையை மேற்கொண்டு மனதை சிறிது சிறிதாக தைரியப்படுத்தி, சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொண்டார்கள்.

இறுதிக் காலத்தில் இஸ்லாத்தின் வெற்றிக்காக தம் புதல்வர்கள் அனைவரையும் தியாகம் செய்த சந்தர்ப்பத்தை நினைத்துப பாருங்கள். போரில் அப்புதல்வர்கள் மரணம் அடைந்த சேதியைக் கேட்டு எவ்வித சஞ்சலத துக்கும் ஆளாகாமல் கொள்கைப் பிடிப்புடனும், நெஞ்சுரத்துடனும் அவர்கள் அளித்த பதில் இஸ்லாத்தை நேசிக்கும், அதன் உயர்வுக்காக உழைக்க விரும்பும் அனைவருக்கும் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இஸ்லாமிய சமுதாயம் காலமெல்லாம் அன்னை கன்ஸா அவர்களை நினைவு கூர்ந்து பெருமைப்பட்டு வருகின்றதெனில் அவர்கள் முற்றிலும் அதற்குத் தகுதியானவர்கள்தாம். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டு நற்கூலி வழங்குவானாக.

## வதந்தி ஒரு சமூகநோய் (தொடர்)

அபூ அய்யூப் அல்அன்சாரி (رضي الله عنه) தனது மனைவியிடம், ''ஆஇஷா சம்பந்தமாக முனாபிக்குகள் இட்டுக்கட்டிய வதந்தியைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?'' எனக் கேட்டார். அதற்கு அவர், 'ஆஇஷா என்னை விடச் சிறந்தவர். சப்வான் உம்மைவிடச் சிறந்தவர்'' என்று கூறினார்.

இவ்வாறுதான் மு.'.மின்கள் வதந்திகளை எதிர்கொண்டனர். அதன் இயல்புகளைக் கண்டு, அதன் உண்மை நிலையை உணர்ந்தனர். எல்லோரையும் நல்ல எண்ணத்துடனே அணுகினர். பிறர் பற்றிய கெட்ட எண்ணம் தோன்ற அவர்கள் இடம் வைக்கவில்லை. ஏதாவது ஒரு செய்தியை உறுதிப்படுத்த வேண்டுமாயின் சாட்சிகள் அவசியம் என்பதை இறைவன் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தான். இது வதந்தியை ஒழிக்க இறைவன் காட்டித் தந்த வழிமுறை. இதனடிப்படையில் செய்திகளின் உண்மைத் தன்மைகளை தெளிவாக அறிந்து கொள்ள முயற்சித்தனர்.

**''அவர்கள் நான்கு சாட்சிகளைக் கொண்டு வந்தால் (ஏற்றுக் கொள்ளுங்கள்) சாட்சிகளைக் கொண்டு வராவிடின் (ஏற்றுக் கொள்ள வேண்டாம்) இவர்கள் தான் அல்லாஹ்விடத்தில் பொய்யர்கள்.''**

முனாபிக்குகள் ஆஇஷா ரழியல்லாஹு அன்ஹா பற்றி பரப்பிய வதந்திகளை பூரணமாக ஒழித்துக்கட்ட அடுத்த கட்டம் எதுவென இவ்வாறு விளக்குகிறான்.

**''இது சம்பந்தமாக எங்களுக்குப் பேச எதுவும் இல்லை. இறைவனே நீ மிகத் தூய்மையானவன். நிச்சயமாக இது பாரிய பெரும் பொய்யாகும்''**

இதுபோன்ற வதந்திகளை செவியேற்பதை வெறுக்கும்படி அல்லாஹ் மு.'.மின்களுக்கு ஏவினான். அவற்றை செவியேற்பது இதனை வளர்ப்பதற்கு ஏதுவாக அமையும் எனக் கூறி அவற்றைத் தவிர்ந்து கொள்ளும்படி மு.'.மின்களுக்கு அறிவுறுத்தினான்.

**''நீங்கள் மு.:மின்களாக இருந்தால், இது போன்ற ஒன்றிற்கு இனி எப்போதும் மீளவேண்டாம். அல்லாஹ் உங்களுக்கு எச்சரிக்கின்றான்.''**

அடுத்துவரும் வசனம் ஒரு செய்தியை எவ்வாறு ஏற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது:

**''விசுவாசிகளே! ஒரு பாவி உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டுவந்தால் அறியாமையால் ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கிழைத்து விடாதிருப்பதற்காக தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். இல்லையெனில், பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக ஆகிவிடுவீர்கள்'' (ஹுஜுராத் : 6)**

இது பாவிகளுக்கு எனக் குறிப்பாகச் சொல்லப்பட்டாலும். எதுவெல்லாம் சந்தேகத்திற்கிடமான செய்தியாக இருக்குமோ அவற்றை ஆராய்வது மு.'.மின்கள் வதந்தி பரவுவதை தடுக்க மேற்கொள்ளும் வழிகளுள் ஒன்றாக இருக்கும்.

அவ்வாறே எந்த ஒன்றிலும் உறுதித் தன்மையை கடைப்பிடிக்க வேண்டும். இது பற்றிக் குறிப்பிடும் போது நபியவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

**''உறுதிப்படுத்திக் கொள்வது அல்லாஹ்விடமிருந்துள்ளது. அவசரப்படுவது ஷைத்தானிடமிருந்தும் உள்ளது''**

பொதுவாக பிறர் பற்றிய தப்பெண்ணங்கள், வீண் சச்சரவுகள் வரக் காரணமே அவசரப் புத்திதான். தீர விசாரித்து ஆய்வதில் பல முரண்பாடுகளை தவிர்ந்து கொள்ளலாம். எனவேதான் அல்லாஹ் இவ்வாறு குறிப்பிட்டான்:

**''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அதிக எண்ணங்களை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் சில எண்ணங்கள் பாவங்களாகவே இருக்கின்றன.''**

சிலபோது பலரைப் பற்றி எம் கணிப்பீட்டின் அடிப்படையில் பல வகையாக எண்ணிக் கொள்கிறோம். இதிலே ஏற்படும் விபரீதங்களைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை.

நபி (ﷺ) அவர்கள் கூறியதாக அபூதர்தா (رضي الله عنه) கூறுகிறார்கள்:

**''எவராவது ஒருவர் இன்னொருவரிடம் இல்லாத ஒன்றை குறைகூறுவதற்காக ஏதாவதொன்றைச் சொல்கிறாரோ, அவர் சொன்னதை கொண்டுவரும் வரை அவரை அல்லாஹ் நரகத்தில் போட்டு வைப்பான்.''**

ஷிர்க்கிற்கு அடுத்த பாவமாக பொய் பேசுதலை அல்லாஹ் குறிப்பிடுகிறான:

**''சிலைகளினால் பாவம் செய்வதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் பொய் பேசுவதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்.''**

எனவே பொய், வீணான எண்ணங்கள், தப்பபிப்பிராயம், அவசரப் புத்தி, பொறாமை, குரோதம், தன்னலம் என்பவை வதந்தி பரவுவதற்கு காரணிகளாய் அமைகின்றன. வதந்திகள் சமூகக் கட்டுக்கோப்பைக் குலைத்து விடுகின்றன. எனவே மேற்போந்த பண்புகளை தவிர்த்துக் கொள்வது இஸ்லாமிய சமூகம் நிலைத்திருக்க அடிகோலும் என்பதில் சந்தேகம் இல்லை.

## குற்றச்செயல்களைத் தூண்டும்...

(11ம் பக்கத் தொடர்)

என்ற நம்பிக்கை இல்லாதிருப்பதும்தான். இந்த உணர்வுகள் ஒருவனது உள்ளத்தில் மேலோங்கி இருக்கும் காலமெல்லாம் அவன் குற்றச் செயல்களின் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டான்.

எமது நாட்டின் சமூகவியல் நிபுணர்களின் கருத்துப்படி அதிகரித்துள்ள தொழிலின்மை, விரிந்து செல்லும் வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி, செல்வத்தை சேகரிப்பதற்காக பேணப்பட்டு வந்த நேர்மையான வழிமுறைகள் உடைந்துள்ளமை ஆகியன இலங்கையில் குற்றச் செயல்கள் பெருகுவதற்குக் காரணிகளாக அமைகின்றன. கொழும்புப் பல்கலைக்கழக சமூகவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் S.T. ஹெட்டிகே அவர்களின் கருத்தும் இங்கு குறிப்பிடத்தககது. அவர் கூறுகிறார்:

'தற்போதுள்ள பொருளாதார கட்டமைப்பானது மனிதனுள் எந்த விதத்திலாவது செல்வத்தைச் சேகரிக்க வேண்டும் என்ற வேட்கையை வளர்த்து விட்டுள்ளது; செல்வத்தை சம்பாதிப்பதிலும் அவற்றை விரியோகிப்பதிலும் தற்காலத்தில் பாரிய சீர்கேடுகள் நிகழ்கின்றன. எனவே, மக்கள் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளைப் பேணாது செல்வம் திரட்டிக் கொள்ள விளைகின்றனர்..."(IBID)

நுகர்வோரியல் மக்கள் உள்ளங்களில் வளர்த்து வைத்துள்ள பொருளாசை, அதே போல் அதனை எம்முறையிலாவது திரட்டி வாழ்க்கையின் அனைத்து இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற பேரவா ஆகியனதான் குற்றம் புரியத் தூண்டுகின்றன என்பதை பேராசிரியர் ஹெட்டிகே அவர்களின் கூற்றிலிருந்து நாம் விளங்கிக் கொள்கிறோம்.

நீதியமைச்சர் பட்டி வீரக்கோன் அவர்கள் முழுக்குற்றத்தையும் நாட்டின் பொலீஸ் துறைமேல் போடுகிறார். அதாவது, குற்றச் செயல்கள் பெருகுவதற்கு பொலீஸ்துறையினரின் வினைத்திறனற்ற செயற்பாடுகளே காரணம் என்பது அவரது வாதமாகும். அரசியல்வாதிகளின் கைகளுக்குள் சிக்குண்டு தவிக்கும் பொலிஸ் நிறுவனம் முழுமையாக மறுசீரமைக்கப்பட்ட வேண்டும், அப்போதுதான் குற்றச் செயல்களும் குறையும் என்பது அமைச்சரது அபிப்பிராயம்.

அமைச்சர் அவர்களின் இந்த அபிப்பிராயத்தை ஒரக்கண் பார்வை என்றுதான் குறிப்பிட வேண்டும். அவர் குறிப்பிடுவதைப் பார்த்தால் பொலிஸார் சரியான விதத்தில் சட்டத்தை அமுல்படுத்தினால் குற்றச் செயல்கள் தானாகவே பறந்து விடும் என வாதிடுகிறார் போன்று தெரிகிறது. அப்படி எனில் லண்டனிலும், நிவ்யோர்க்கிலும் குற்றச்செயல்கள் ஏன் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துச் செல்கின்றன என கௌரவ அமைச்சரைச் கேட்க வேண்டும்.

# ஜமாஅத்தின் நடமாடும் மருத்துவ முகாம்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் சமூகசேவைப் பகுதியின்கீழ் இயங்கும் நடமாடும் மருத்துவப் பிரிவினர் கடந்த மாதம் (ஜனவரி) வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு மத்தியில் வைத்திய சேவையை வழங்குவதற்காக இரண்டு முறை அப்பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டனர். இவை மருத்துவப் பகுதியின் 263, 264ம் விஜயங்கள் ஆகும்.

7,8,9ம் திகதிகளில் கிண்ணியா, தோப்பூர், ஆகிய இடங்களிலும், 10ம் திகதி ஜின்னா நகரிலும், இரண்டாவது விஜயத்தின்போது, 21ம் திகதி இறக்கக்கண்டியிலும் 22,23,24 ஆகிய திகதிகளில் புல்மோட்டையிலும் தமது வைத்திய சேவையை மேற்கொண்டனர். இவ்வைத்திய முகாம் மூலம் சுமார் 1750 நோயாளர்கள் பலனைப் பெற்றுக் கொண்டனர். இவ்விரு வைத்திய முகாம்களும் Dr. A.W.M. ஸமீம், Dr. T.M. அஸ்மி ஆகியோரின் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மருத்துவப் பிரிவின் 265வது வைத்திய சேவை 10.02.2001 அன்று எலபடகமையில் நடைபெற்றது. இச்சேவையின்போது சுமார் 250 நோயாளிகள் பயன்பெற்றனர்.

ஜமாஅத்தின் நடமாடும் வைத்தியப் பிரிவில் சிறந்த வைத்தியர்கள் தங்கள் சேவையை அர்ப்பணம் செய்வதோடு ECG, நீரிழிவுக்கான குளுக்கோஸ் பரிசோதனை, மற்றும் சிறுநீர் பரிசோதனை, கர்ப்பப் பரிசோதனை, தொய்வு நோயாளர்களுக்கான Nebulization, இரத்த பரிசோதனை, இரத்த அழுத்தம் பரிசோதித்தல் போன்றவற்றிற்கான உபகரணங்களுடன் விலைமதிப்பான மருந்துகளும் சேர்த்து நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

இரக்க சித்தமுள்ள கொழும்பு தனவந்தர்களின் நன்கொடைகளைக் கொண்டு கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் ஏழ்மை நிலையில், எவ்வித வைத்திய வசதியுமின்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு சென்றடையச் செய்வதில் ஜமாஅத் மிகக் கரிசனையுடன் செயற்படுகிறது.

கொடுக்கப்படும் மருந்துகளின் பெறுமதியை நோயாளிகள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பதிவத் தொகையாக ரூபா 20.00 அறவிடப்படுகிறது. வறுமை நிலையைப் பொறுத்து ஆலோசனைகளும், ஏனைய உதவிகளும் இலவசமாகவே அனைத்து வைத்திய வசதிகளும் வழங்கப்படுகின்றன.

அந்நாடுகளில் இடப்பட்ட சட்டங்களை அமுல் படுத்தத் தேவையான சுதந்திரமும் பூரண அதிகாரமும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, எவரின் தயவிலும் வாழத் தேவையற்றளவு தொழில் உறுதிப்பாடும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் குற்றச்செயல்கள் குறைந்தபாடில்லை.

சட்ட ஆணைக்குழுவின் ஆணையாளா கலாநிதி ஜெயதிஸ்ஸ டீ கொஸ்தா வேறு விதமான ஓர் அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளார். குற்றவாளிகள் பற்றி எமது சமூகம் கொண்டுள்ள அபிப்பிராயத்தையே அவர் சாடுகிறார்.

"....எமது நாட்டில் குற்றவாளிகள் தாம் குற்றமிழைத்த பின்னரும் சமூக நீரோட்டத்தில் எவ்வித தடையுமின்றி மீண்டும் வந்து இணைந்து கொள்கின்றனர். அவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என உணர்த்துவதற்கு சமூகம் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. எனவே அவர்கள் ஒரு குற்றத்தைச செய்து, சிறிது காலம் சிறைக்குச் சென்று திரும்பி' வந்ததும் மீண்டும் குற்றம் செய்யவே முனைகின்றனர்..."

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

## இலங்கை முஸ்லிம் சமூகம் (தொடர்)

**"ஆகவே உறவினர்களுக்கு அவர்கள் பாத்தியதையைக் கொடுத்து வருவீராக! அவ்வாறே ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் (அவரவருக்குரியதை கொடுத்து வருவீராக!) எவர்கள் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடுகிறார்களோ அவர்களுக்கு இது நன்மையுடையதாகும். அவர்கள்தாம் வெற்றியாளர்களாவர்"**

பொதுவாகக் கூறுவோமாயின் மனித வாழ்வை கூறுபோட்டு நோக்காத நிலையில் குர்ஆனின் பொருளாதாரம் பற்றிய கருத்துகள் உலகில் எல்லா சமூகங்களிலும நடைமுறைப்படுத்தப்படுமாயின் சுபீட்ச வாழ்வுக்கு அது வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)

**துணை நின்றவை**

1. இஸ்லாமிய வாழ்வியல் பிரச்சினைகளும் தீர்வுகளும்- எம்.ஐ.அப்துர் ரஸாக்
2. அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு முகம்மது ஜான் ட்ரஸ்ட்
3. இஸ்லாமிய சிந்தனை ஜாமியா நளீமியா வெளியீடு (மலர்: 14 இதழ் 1 (1991), மலர்: இதழ் 3 (1997)

## எழுத்தியல் வடிவம் மாறி...

அல்ஹஸனாத்தில் கட்டுரைகளும், இலக்கியமும் சிறுவர் - மகளிருக்கென தனித் தனிப் பகுதிகளும் இடம்பெற்று முழுமை வடிவத்தை அடைகின்றது. எனினும், இவை அனைத்தும் 'எழுத்தியல்' வடிவங்களே என்பதை ஏற்றுக் கொள்வீர்கள்.

'அழகியல்' உணர்வை வளர்க்கும் விதத்தில் 'கவிதை நெய்தல்' இடம் பெற்றாலும், அதன் வெளிப்பாடு எழுத்தியலாகவே அமைந்து விடுகிறது.

அழகியற் கலைகளில் 'ஓவியம்' வரையும் திறமையுள்ள வாசகர்களுக்கும் இடம் வழங்கப்படுமாயின் வரவேற்கத் தக்கது. எனினும், மனித உருவங்களை வரைவது தொடர்பாக காணப்படும் இழுபறி நிலையையும் கவனத்திற் கொண்டு 'அரபு எழுத்தணி' பகுதி ஒன்றை அறிமுகப்படுத்தலாம்.

ஆனாலும், இப்பகுதியை சிறுவர்களுக்கென வரைபடுத்தலை விண்ணப்பிக்கிறேன். அவ்வாறாயின் அரபு எழுத்தணி உசிதமாகாது அரபு எழுத்தணி சிறுவர்களை எந்த அளவு ஈர்க்குமென்பது சந்தேகமே. அதன் இறுக்கமான வளைவு-சுளிவுகள் சிறார்களின் கிரகிக்கும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்பதே எனது ஊகம்.

ஆகவே, பூந்தோட்டம், கடற்கரை, காலை - மாலைக் காட்சி போன்ற திறந்த தலைப்பிலோ அல்லது குறிப்பிட்ட ஒரு மலரை/மிருகத்தை/கட்டிடமொன்றை (அவர்கள் ஊரிலுள்ள பள்ளிவாயலை) வரைந்து அனுப்புவதாக இதனை அமைக்கலாம்.

கிடைக்கப் பெறும் ஓவியங்களுள் ஒன்றை (சாத்தியப்படுமாயின்) வண்ணத்தில் வெளியிடுவீர்களாயின் இன்ஷா அல்லாஹ் அல்ஹஸனாத் வாசகர் வட்டம் விரிவாகுதல் திண்ணம்.

ஹிஷாம் ஹுஸைன், புத்தளம்

## ஓவியங்களை வெளியிடுவீர்களா?

அல்ஹஸனாத் சிறுவர் பகுதி சிறப்பாக உள்ளது. எனது மகன் அருமையாக ஓவியம் வரைவான். ஒரு மனிதரையோ, ஒரு பொருளையோ பார்த்துக் கொண்டு உரித்து வைத்தாற்போல் வரைவான். அல்ஹம்துலில்லாஹ்.

அவன் வரையும் ஓவியங்களை அனுப்பி வைத்தால் சிறுவர் பகுதியில் வெளியிடுவீர்களா? எனது மகனுக்கென்று கோரினாலும் இதை இன்னும் எத்தனையோ தாய்மார்கள் வரவேற்பார்களென எதிர்பார்க்கிறேன்.

பின்து ஹனீபா, புத்தளம்

## அல்ஹஸனாத்தின் காந்த சக்தி

அல்ஹஸனாத் ஒருவகை காந்த சக்தியை (Magnetic Power), ஈர்க்கும் தன்மையை பெற்றிருக்கிறது. ஒரு புதுத் திருப்பத்துடன் செயல்படுவதை உணர முடிகிறது. "அல்லாஹ் அழகானவன் அவன் அழகை விரும்புகிறான்" என்ற நபி மொழிக்கொப்ப அல்ஹஸனாத்தின் அட்டைப் படங்களும் சஞ்சிகைக்கு மெருகூட்டுகின்றன. எதுவித பக்கச்சார்புமின்றி நடுநிலை விடயங்களை தாங்கி வரும் அதன் அரசியல், பொருளாதார, சமய கருத்துக்கள் சமூகத்தில் ஒரு சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

அல்ஹஸனாத் எமது சமூகத்திலுள்ள புத்திஜீவிகளை தனிமனிதர்களுடன் இணைக்க இயக்கங்கள் என்பனவற்றுடன் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகளையும் வாசகர்களுக்கு முன்வைக்க வேண்டும். இது சிறந்த பயனை நல்கக் கூடியதாக அமையும்.

மேலும் இன்றைய கணனி யுகத்தில் அநேக இஸ்லாமிய வெப் தளங்கள் சிறந்த பயனுள்ள பங்களிப்புக்களை நல்கிக் கொண்டிருக்கின்றன. எனவே Islamic Information Technology என்ற ஒரு பக்கத்தையும் ஆரம்பித்து Internet இன் நவீன இஸ்லாமிய தகவல்களை வாசகர் அறியும் வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

தொடர்ந்தும் புதுப்புது மாற்றங்களுடன் அல்ஹஸனாத் வளர்ந்து இலங்கை முஸ்லிம்களின் தினசரி தேசிய பத்திரிகையாக மிளிரவேண்டும் என்பதே எமது பேரவாவாகும். ஏனெனில் அது சர்வதேச முஸ்லிம் புத்திஜீவிகளுடன் அமைப்புக்களுடன் நெருங்கிய உறவு கொண்ட ஒரு ஸ்திரமான உறுதியான கொள்கையுடன் செயற்படுகிறது. அதற்காக அது சமூகத்தை அரவணைக்கின்ற தன்மை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அப்துல் மா்சூக் முஹம்மது சப்வான்
பேருவளை

**ஆசிரியர் குறிப்பு:**

சிறுவர் பகுதியில் ஷரீஅத் வரம்பிற்குட்பட்ட வகையில் ஓவியங்கள் பிரசுரிப்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம். எமக்குள்ள தடையாக இருப்பது ஓவியங்களை வண்ணத்தில் பிரசுரிப்பது தொடர்பானதாகும். எனினும் உங்களது ஆலோசனைகளை கருத்திற்கொண்டு எம்மாலான முயற்சியை மேற்கொள்கிறோம், இன்ஷா அல்லாஹ்.

## காலத்தின் தேவையை உணர்த்தும் கட்டுரை

ஜனவரி அல்ஹஸனாத் சஞ்சிகையில் வெளிவந்த த∴வா களம் பகுதியில் ஜமாஅத் அமீர் அவர்களின் 'ஊசிக்காதில் ஒட்டகம் நுழையும் வரை' என்ற கட்டுரை இன்றைய காலத்தின் தேவையை உணர்த்தும் வகையில் மிகப்பயனுள்ளதாக இருந்தது. மற்றும் 'புத்தாண்டே வருக', 'குழந்தைகளுடன் நீதமும் சமத்துவமும்', 'எமது சமூகம் பக்குவப்பட வேண்டும்', 'முஸ்லிம்கள் விழித்தெழுவது எப்போது?' 'நிம்மதி-சிறுகதை, பதாவா அந்நிஸா, மீடியா வொட்ச் என அனைத்தும் தரமாக இருந்தன. அதன் பணி மென்மேலும் வளர வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன்.

எஸ்.எம். ரமீஸா மரைக்கார்
கனுகெட்டிய

## எனது கண்களும்...

கடந்த ஜனவரி இதழில் வெளிவந்த சகோதரர் மரிக்கார் அவர்களின் 'நிம்மதி' சிறுகதை எனது நெஞ்சத்தின் ஆழத்தைத் தொடுவதாக இருந்தது. ஆம்! ஸாஜித், அஸ்லம் போன்றோரின் கண்ணீரோடு எனது கண்களும் கண்ணீர் மழை பொழியத் தயங்கவில்லை. அது அவர்களின் தர்மத்தை எண்ணியல்ல; எனது தவறை எண்ணிய் கண்ணீர்... ஆம்! பல ரூபாய்களை சினிமா பார்க்கவென்றே செலவழித்தேனே... அந்த நாட்களை எண்ணி எனது கண்கள் அவர்களது கண்களுடன்... அல்லாஹ் அந்த சகோதரரின் ஆற்றலை மேலோங்கச் செய்வானாக. எம் போன்ற இள நெஞ்சங்களை இலட்சியப் பாதையில் இட்டுச் செல்லும் 'அல்ஹஸனாத்' மென்மேலும் செழிப்படைய அல்லாஹ் அருள்புரிவானாக.

இப்னு நூர் முஹம்மத்
ரியாத் - சஊதி அரேபியா

# பூகம்பத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுங்கள்!

குஜராத் மாநில மக்கள் வரலாற்றின் படுமோசமான பூகம்பத்தால் பாதிக்கப்பட்டு உள்ளத்தையே உருக்கும் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். அநேக கிராமங்கள் இருந்த இடம் தெரியாது நாசமாகியுள்ளன. தண்ணீர், மின்சாரம் மற்றும் தொடர்பு சாதனங்கள் அனைத்துமே சீர்குலைந்துள்ளன. உணவுப் பண்டங்கள், மருத்துவ உதவி, பொருளுதவி ஆகியவை தேவைப்படுகின்றன. குஜராத் ஜமாஅதே இஸ்லாமியைச் சார்ந்த நிவாரணக் குழுவினர் சௌராஷ்ட்ரா, புஜ் மற்றும் அஹ்மதாபாத் போன்ற நகரங்களில் நிவாரணப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஜமாஅத்தின் மருத்துவக் குழுவினரும் தீவிரமாக பணிபுரிந்து வருகின்றனர். அவர்களது பணிக்கு ஒத்துழைக்கும் வகையில் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் சமூகசேவைப் பகுதி நிதியம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. அந்த நிதியத்திற்கு உங்களாலான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் அல்லலுற்றிருக்கும் மக்களுக்கு உதவுமாறு வேண்டுகிறோம்.

**1500 கிராமங்கள் அழிந்து விட்டன. இவற்றில்...**

**30% மானோர் முஸ்லிம்கள்**

**90% மான பள்ளிவாயல்கள் அழிக்கப்பட்டு விட்டன**

**குஜராத்தில் ஜமாஅத் 400க்கும் அதிகமான தொண்டர்களுடன் களமிறங்கியுள்ளது**

**நான்கு முகாம்களை அமைத்து நிவாரணப் பணிகளை மேற்கொள்கிறது**

**உங்கள் நன்கொடைகளைப் பணமாக அல்லது காசோலையாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்:**

SRI LANKA JAMA'ATH -E - ISLAMI
SOCIAL SERVICE DEPARTMENT
HABIB BANK AG ZURICH
A/C NO: 598751

சமூக சேவைப் பகுதி

**இலங்கை ஜமாஅதே இஸ்லாமி**

77, தெமடகொட வீதி, கொழும்பு 09. தொ.பே: 687091 பெக்ஸ் : 686030 email: islambks@slt.lk

# பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள்

## மதரஸா, ஹோட்டல், திருமண விருந்து

வைபவங்களுக்குத் தேவையான
உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட

# அலுமினியம் சட்டி (பானை)

## (4 கொத்து முதல் 65 கொத்து வரை)

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

பழைய பானைகளை திருத்திக் கொள்வதற்கு அல்லது
பழைய பானைகளுக்குப் பதிலாக (செம்பு, அலுமினியம்)
புதிய பானைகளைப் பெற்றுக் கொள்வதற்கு
இன்றே நாடுங்கள்

# ORCHID ALUMINIUM DISTRIBUTORS

**MANUFACTURES OF**
**ALUMINIUM, STAINLESS STEEL, HOTEL KITCHEN EQUIPMENTS**

**11 WEDA MAWATHA, WATALPOLA, HENAMULLA, PANADURA**
**Phone: 074-282057, Hot Line: 077-322896**
**(near the Multilac Industries)**

AJ PRINTS, 44, Station Road, Dehiwala. Telephone : 739765, 723205, 723209